ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ.வே. திருநாங்கூர்

ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஶதாப்தீ மஹோத்ஸவ நினைவு மலர்

acharya.org

ஸ்வாமி திருவாராதனபெருமாளுடன்

acharya.org

ஸ்ரீ :



ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீமத்$_3$ வரவரமுநயே நம :

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம்

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஶதாப்தீ மஹோத்ஸவ நினைவு மலர்

23-8-2013

பதிப்பாசிரியர்

ஸ்ரீ உ வே திருக்கண்ணபுரம்

ஶடகோபாசார்ய ஸ்வாமி

Not for sale

For private circulation
(free distribution) only

acharya.org

பொருளடக்கம்

1 திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் வைகுந்த விண்ணகரம் திருமாளிகை வர்த்தமான ஸ்வாமியின் மங்களாஶாஸநம் (5-6)

2 ப்ரஸ்தாவநா - பதிப்பாசிரியரின் முன்னுரை (8-9)
ஸ்ரீ உ வே திருக்கண்ணபுரம் ஶடகோபாசார்ய ஸ்வாமி

3 அடியேன் செய்யும் விண்ணப்பம் (9-13)
ஸ்ரீமுரளீதரஶர்மா

4 மஹநீயர்களைப் போற்றுவோம் (15-17)
ஸ்ரீ உ வே R ரகுராமன் (பாலாஜி) ஸ்வாமி

5 ஆண்டாள் கோயிலின் ஆஸ்தான வித்வான் (19-20)
(8-6-86 தினமணிகதிர் இதழில் வெளிவந்த கட்டுரை)

6 ரத்ந-சதுஷ்டயம் (21-27)
ஸ்ரீ உ வே வாகம்ருதவர்ஷீ வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி

7 ஸ்ரீவேணுகோபால மங்களம் (28-30)

8 திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் வைகுந்த விண்ணகரம் திருமாளிகை வைபவம் (31-35)
ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

9 திருநாங்கூர் (36)
ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

10 திருநாங்கூர் 11 கருடஸேவை உத்ஸவ விஶேஷம் (37-38)
ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

11 ஸ்ரீவைகுந்தநாதர் ஸ்தலபுராணம் (39-49)
தமிழாக்கம் = ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

12 திருமங்கை மன்னனும் திருநாங்கூர் திவ்யதேஶங்களும் (50-89)
ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

13 ஸ்வாமி எம்பெருமானாருடைய திருவவதார வைபவம் (91-96)
ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

14 ஸ்ரீதஶஶ்லோகீ (97-110)
ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

acharya.org

15 ஸித்தித்ரயத்தின் உட்பொருள் (111-118)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

16 ஸ்ரீபாஷ்ய ஸாரம் (119-122)

திருநாங்கூர் ஸ்ரீ உ வே ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

17 ஈஶ்வரலீலா ஜகத்ஸ்ருஷ்டி : (123-126)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

18 முக்தி பல விவரணம் (127-134)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

19 ஸ்ரீமணவாளமாமுநிகள் வைபவம் (136-144)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

20 திருவாய்மொழியும் கீதையும் (145-148)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

21 பரத்வம் (149-160)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

22 ஶாஸ்த்ர ஸாரம் (161-167)

திருநாங்கூர் ஸ்ரீ உ.வே.ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

23 தத்த்வத்ரய விவேகம் (168-171)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

24 அஷ்டாக்ஷர ஸம்ஸித்தியின் பலன் (172-175)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

25 ஸௌஶீல்யம் (176-179)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

26 வாத்ஸல்யம் (180-182)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

27 ஸ்தோத்ர ப்ரஸ்தாநம் (183-186)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

27 நம் ஸ்வாமியின் அமுதமொழிகள் (187-190)

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

acharya.org

ஸ்ரீ உ.வே. ப்ர.ப. பரகாலாசார்ய ஸ்வாமி
(வர்த்தமான சின்ன ஸ்வாமி)

acharya.org

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத்$_3$வரவரமுநயே நம:

ஸ்ரீமத்$_3$வாதி$_3$பீ$_4$கரகு$_3$ரவே நம:

நமது ஸ்வாமியின் மங்களாஶாஸநம்

ஸ்ரீவாதி$_3$பீ$_4$க்ருத்குலவாரிதீ$_4$ந்து$_3$ம்
க்ருஷ்ணார்ய ஸத்$_3$தே$_3$ஶிகபுத்ரரத்நம் |
வித்$_3$வத்வரிஷ்ட$_2$ம் ஸுகு$_3$ணாபி$_4$ராமம்
ஹஸ்த்யத்ரிஸம்ஜ்ஞம் கு$_3$ருவர்யமீடே$_3$ ||

ஶ்ரிய: பதியாய், ஸர்வஸ்வாமியான ஸர்வேஶ்வரன், நலமந்தமில்லதோர் நாட்டிலே, நித்யர்களாலும் முக்தர்களாலும் அநுபவிக்கப்படுபவனாய் எழுந்தருளியிராநிற்க, லீலாவிபூதியிலுள்ளார் அவர்களைப்போலே தன்னை அநுபவிக்கைக்கு ப்ராப்தியுண்டாய் இருக்க அத்தை இழந்து கிடக்கிறபடியைக்கண்டு மிகவருந்தி, மிகவும் கருணை கொண்டு அவயவவிஶேஷங்களையுடைய ஶரீரத்தையும் தன்னை அடைகைக்கீடாக வேதாதி ஶாஸ்த்ரங்களையும் கொடுத்தான். இருப்பினும், ஆற்றைக் கடக்கக் கொடுத்த படகைக் கொண்டு, ஆற்றுவழியே கடலிலே சென்றுமாள்வாரைப்போலே, ஶரீரத்தைக் கொண்டு புலன்-இன்பங்களிலே ஈடுபட்டு, உண்டியே உடையே உகந்தோடுவதைக் கண்டு இவர்களை திருத்துவதற்கு வழியேதோ? என ஆராய்ந்து, *மீளாவடிமை கேழல் அறிகுறளாய் முன்னுமிராமனாய் என்கிறபடியே பற்பல அவதாரங்களையெடுத்து திருத்த முயன்றான். இவ்வாறும் ஒருவரும் திருந்தக்காணாமையாலே, இவர்களில் ஒருவரைக் கொண்டே இவர்களை திருத்த வேணும் என அறுதியிட்டு, உலகநன்மையின பொருட்டு தனது செந்தாமரைக் கண்ணினால் கடாக்ஷிக்க மன்னுலகில் மனிசருய்ய திருவவதாரம் செய்தவர்தாம் எந்தையாரான நம் ஸ்வாமி.

acharya.org

உண்மைமிகு மறையொடு நற்கலைகள் நிறைபொறைகள் உதவுகொடு யென்றிவற்றின் ஒழிவில்லாப்பெரியவண்மைமிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர் வைகுந்த விண்ணகரத்து சிந்தாமணியாய், ஸகலஶாஸ்த்ரபாரங்கதராய், ஶிஷ்யர்களுக்கெல்லாம் ஶாஸ்த்ரார்த்தங்களை நன்கு உபதேஶித்து, அவர்களை அவற்றினபடியே நடக்கும்படி செய்து, தாமும் அவற்றின்படியே ஆசரித்த உத்தம ஆசார்யராய், எவ்வுயிர்களிடத்தும் அன்பு, அடக்கம், பொறுமை முதலான திருக்கல்யாணகுணங்கள் நிரம்பியவராய், அநேக க்ரந்தங்களின் மூலம் நமது விஶிஷ்டாத்வைத தர்ஶநத்தை வளர்த்தவராய், ஸ்ரீப்ருந்தா வநம் முதலான வடநாடு எங்கும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தைப் பரப்பியவராய், இவ்வாறு பலவகையாலே ஸ்ரீராமாநுஜ-தர்ஶநத்தை வளர்த்தவர்தாம் நம் ஸ்வாமியும், எந்தையாருமான கீர்த்திமூர்த்தி திருநாங்கூர் வைகுந்தவிண்ணகரம் வித்யாபூஷணம் ஸ்ரீமத் உபயவேதாந்த அண்ணங்கராசார்ய ஸ்வாமி என்பது ஸ்ரீவைஷ்ணவ உலகம் நன்கறிந்த ஒன்றே.

இத்தகு மேன்மை பொருந்திய நம் ஸ்வாமியின் ஶதாபிஷேக மஹோத்ஸவம் பாரெங்கும் தற்போது நடந்து வருவதும் நாம் நன்கறிந்ததே. இத்தகைய நம் ஸ்வாமியின் ஶதாப்தீ மஹோத்ஸவாங்கமாய், கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே. T.M. ஸ்ரீநிவாஸாசார்யருடைய திருக்குமாரர்களான ஸ்ரீமான் ரகுநாதன்(பாக்யநகர்)ஸ்வாமியும், ஸ்ரீமான் ராமாநுஜன் (மும்பை) ஸ்வாமியும், ஸ்ரீஸ்வாமியின் கட்டுரைகளையெல்லாம் தொகுத்து வெளியிடப் போவதை அறிந்து பெருமகிழ்ச்சி எய்தினோம். இவர்கள் இவ்வாறு மேன்மேலும் பல கைங்கர்யங்கள் செய்யவேணும் என்று வீதியார வருவான் திருவடித்தாமரைகளில் இறைஞ்சி மங்களங்களை ஆஶாஸிக்கிறோம்.

செல்வத்திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுக!

அடியேன் ஸ்ரீவைஷ்ணவதாஸன்,

ப்ர.ப.பரகாலாசார்ய ஸ்வாமி

(ஸ்ரீஸ்வாமியின திருக்குமாரர்)

acharya.org

ஸ்ரீ உ.வே. வித்வான் திருநாங்கூர்
ப்ர.ப. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

acharya.org

ப்ரஸ்தாவநா

ஸ்ரீ உ வே திருக்கண்ணபுரம் ஶடகோபாசார்ய ஸ்வாமி

கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் நூற்றுண்டு விழாவை ஒட்டி இந்த மலர் வெளிவந்திருக்க வேண்டும். தவிர்க்க முடியாத சில காரணங்களால் வெளியீடு தாமதமாகி இப்பொழுது வெளியிடப்படுகிறது.

இந்த ஸ்வாமியை நேரில் ஸேவிக்கும் பாக்யம் அடியேனுக்குக் கிட்டவில்லை. எழுபது ஸம்வத்ஸரங்களுக்கு முன்பு இந்த ஸ்வாமியின் திருத்தகப்பனுர் ஸ்ரீ உ வே க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி திருக்கண்ணபுரத்தில் நித்யவாஸமாக எழுந்தருளியிருந்தார். அந்த ஸமயத்தில் அடியேனுக்கும் திருக்கண்ணபுரத்தில் இருக்க வேண்டியிருந்தது. அந்த ஸ்வாமியின் திருவடி ஸம்பந்தியான அடியேனுடைய தமக்கையும் அப்போது அங்கு இருந்தார். தினமும் காலைவேளையில் ஸ்வாமியை தண்டன் ஸமர்ப்பித்து தீர்த்தம் வாங்கிக் கொண்டு வருவார். அந்த ஸ்வாமி அவருக்கு முமுக்ஷுப்படி காலக்ஷேபம் ஸாதித்தார். அடியேனும் கூடயிருந்து அந்வயித்தேன். ஸ்வாமியின் அநுக்ரஹத்தால் வித்வான்களான பல மஹநீயர்களுடன் ஸம்பந்தம் கிடைத்து ஸம்ஸ்க்ருதம் மற்றும் ஸம்ப்ரதாய விஷயங்களில் பரிசயம் ஏற்பட்டது. இது பூர்வ-ஜந்ம-ஸுக்ருதத்தினுல் என நினைக்கிறேன். இந்த ஸ்வாமி பரம ஸாத்விகர். சிந்தனையிலும் செயலிலும் பரமைகாந்தியாக இருந்தார்.

இவருடைய திருக்குமாரரான ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி குஜராத் மாநிலத்தில் ஸ்வாமி நாராயண ஸம்ஸ்க்ருத மஹாவித்யாலயத்தில் அத்யக்ஷராக இருந்தார். ஒன்றுன ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம் அண்ணு இயற்றிய வரவரமுநிஶதகத்துக்கு தமிழில் விளக்கவுரை எழுதியிருக்கிருர். இது ஸமீபத்தில் அடியேன் எழுதிய பதவுரையுடன் வெளியிடப் பட்டிருக்கிறது. ஸ்வாமி பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த ஸித்தித்ரயத்திற்கு ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு வ்யாக்யாநம் எழுதியிருக்கிருர். ஸ்வாமி எம்பெருமானுர் அருளிச்செய்த வேதாந்தஸாரத்துக்கு ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநமும் இவர் எழுதியிருக்கிருர். ஸ்ரீ உ வே அண்ணங்கராசார்யருடைய திருத்தம்பியரான ஸ்ரீ உ வே ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி(வாஸு ஸ்வாமி)யை ஸேவிக்கும் பாக்யம் அடியேனுக்குக் கிடைத்தது. இவரும் சிறந்த வித்வானுக இருந்தார். அடியேன் தாயாருடைய சரம கைங்கர்யத்தின்போது இயல்கோஷ்டியில் அந்வயித்து அநுக்ரஹ-பாஷணமும் செய்தார். பிற்காலத்தில் ஸ்ரீரங்க வாஸமாக இருந்தபோது இவரும் சிறிது காலம் அங்கேயிருந்து ஸுதர்ஶநர் ஸ்ரீ உ வே புத்தூர் க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமிக்கு உறுதுணையாய் அவருடைய க்ரந்த ப்ரகாஶந கைங்கர்யத்திலும் பங்கு கொண்டிருந்தபோதும் அவரை ஸேவித்திருக்கிறேன். அவரும் பரம ஸாத்விகர்.

இந்தத் திருமாளிகை வர்த்தமான ஸ்வாமியான ஸ்ரீ உ வே பரகாலன் ஸ்வாமியையும்

acharya.org

ஸ்ரீரங்கத்தில் ஸேவித்து ஓரளவு பழகியிருக்கிறேன். மேற்படி அநுபவங்களால் அடியேன் இந்த மலரின் பதிப்பாசிரியராக இருப்பதற்கு ஓரளவு தகுதி பெற்றிருப்பதாக நினைக் கிறேன். இனி இந்த மலரில் இடம் பெற்றிருக்கும் விஷயங்களைப் பற்றி ஓரிரண்டு வார்த்தை களைச் சொல்லி முடிக்கிறேன்.

இந்த மலரில் திருநாங்கூர் திவ்யதேஶங்களைப் பற்றி சுருக்கமாக ஒரு கட்டுரையும் 11 திவ்யதேஶங்களின் மங்கள ஶ்லோகங்களும் அவற்றின் தமிழாக்கமும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக இந்தத் திருமாளிகையுடன் ஸம்பந்தமுள்ள வைகுந்த விண்ணகரத்தின் ஸ்தலபுராணம் பாத்மபுராணத்தில் உள்ளபடி சேர்க்கப்பட்டிருக்கிறது. பின்னர் பல கட்டுரைகள் நம் ஸம்ப்ரதாயத்தின் வெவ்வேறு விஷயங்களைப் பற்றி ஸ்வாமியே எழுதியவை சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஸ்வாமி ஸம்ஸ்க்ருதத்தில் எழுதிய தஶஶ்லோகிக்கும், * ஈஶ்வர லீலா ஜகத்ஸ்ருஷ்டி : * என்னும் கட்டுரைக்கும் ஸ்வாமி யின் திருத்தம்பியார் ஸ்ரீ உ வே ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி செய்தருளிய தமிழ் மொழி பெயர்ப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அவரே எழுதிய ஸ்ரீபாஷ்யஸாரம் ஶாஸ்த்ர ஸாரம் என்னும் கட்டுரைகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

ஸ்ரீமத்₃ வரவரமுநயே நம :

ஸ்ரீவேங்கடகு₃ரவே நம :

அடியேன் செய்யும் விண்ணப்பம்

கீர்த்திமூர்த்தி ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி ஶதாப்தீ நினைவாக வெளியிடப்படும் மலரை வாசக அன்பர்களுக்கு ஸமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன். இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்வாமி யுடைய வைபவாநுபவபரமாக ஒருசில விஷயங்களை விண்ணப்பித்து ஸத்தை பெறலாம் என்று ஆரம்பிக்கிறேன். முதலில் நம் திருநாங்கூர் பெரியஸ்வாமியுடன் நெருங்கிய உறவு வைத்துக் கொண்டிருந்த இரு மஹான்களைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். முதலாமவர் கீர்த்திமூர்த்தி மஹாவித்வான் ஸ்ரீ உ வே வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி. மற்றொருவர் கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ வே கோயில் ஆத்தான் விஜயராகவன் ஸ்வாமி. இருவருமே ஸ்வாமியிடம் பெருமதிப்பு கொண்டிருந்தவர்கள். இருவருமே ஸ்வாமியுடைய விஶேஷ கடாக்ஷத்திற்கு இலக்கானவர்கள்.

acharya.org

சிறிதுகாலம் முன்பு வரையில் நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயத்தில் ஒரு வழக்கம் இருந்து வந்தது. அதாவது ஓரிடத்தில் ஶாஸ்த்ரம் ஸம்ப்ரதாயம் வல்ல பெரியவர் ஒருவர் எழுந்தருளி இருந்தால் அவருடைய திருவடி ஸம்பந்தத்தை விரும்பி அவரைப் போன்று வித்வானாக எழுந் தருளி இருக்கும் மற்றொரு வித்வான் அவரை ஆஶ்ரயித்து ஏதாவது ஓரிரண்டு க்ரந்தங்களைக் காலக்ஷேபம் பண்ணுவது வழக்கம். இந்த முறையில் அடியேன் அறிந்தவரையில் உபய ஸம்ப்ரதாயத்திலிருந்தும் பல வித்வான்கள் ஸ்ரீ உ வே காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி யுடைய திருவடி ஸம்பந்தத்தை விரும்பி அவரை ஆஶ்ரயித்திருந்தார்கள். ஸ்ரீ உ வே காரப் பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமியிடத்திலும் ஸ்ரீ உ வே காரப்பங்காடு தேஶிக வரதாசார்ய ஸ்வாமியிடத்திலும் அர்த்த-க்ரஹணம் பண்ணியவர் ஸ்ரீ உ வே காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி. வித்யாப்யாஸம் முடிந்தபிறகு அவர் இரண்டு வருஷங்கள் ஸ்ரீபெரும்பூதூர் பாடஶாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அக்காலத்தில் அங்கு எழுந்தருளியிருந்த ஸ்ரீ உ வே மஹாவித்வான் ஆசூரி பெரியராமாநுஜாசார்ய ஸ்வாமி திருவடி ஸம்பந்தத்தை ஆசைப்பட்டு அவரை ஆஶ்ரயித்து அவரிடம் ந்யாயபாஸ்கரம் என்னும் க்ரந்தத்தை அதிகரித்தார். இதைப் போன்று அவர் காலத்தில் ப்ரஸித்த ஶாஸ்த்ரஜ்ஞராக எழுந்தருளி இருந்த ஸ்ரீ உ வே உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி திருவடிவாரத்தில் ஸித்தித்ரயம் என்னும் க்ரந்தத்தை அதிகரித்தார். ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியிடமும் இரு ஸம்ப்ரதாயத்திலிருந்தும் பல மஹான்கள் ஸம்பந்தம் வைத்திருந்தனர். கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ வே திருக்கள்ளம் ந்ருஸிம்ஹராகவாசார்ய ஸ்வாமி ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியைப் போலவே வேதாந்தத்தில் அதிலும் குறிப்பாக கீதையில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தவர். அவர் ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியின் கீதாப்ரவசநம் நடைபெற்ற காலத்தில் அவர் திருவாக்கில் கீதார்த்தங்களைக் கேட்க ஆசைப்பட்டு அவ்வப்பொழுது தம்முடைய காலக்ஷேபங்களையும் ரத்து செய்துவிட்டு ஸ்வாமியின் ப்ரவசந கோஷ்டியில் அந்வயித் திருந்தார் என்று அடியேன் கேள்விப்பட்டிருக்கிறேன்.

கீர்த்திமூர்த்தி மஹாவித்வான் வாகம்ருதவர்ஷீ ஸ்ரீ உ வே வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி அடியேனுக்குத் தெய்வமாக விளங்குபவர். இவருக்குத் தனிப்பெருமைகள் பலவுண்டு. இவர் ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியுடைய ப்ரதாந ஶிஷ்யராய், அவருடைய திருவடிவாரத்தில் 12 வருஷங்கள் ஶாஸ்த்ர ஸம்ப்ரதாய க்ரந்தங்களை க்ரந்த-காலக்ஷேப-க்ரமத்தில் அதிகரித்தவர். இவர் ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியின் காலத்துக்குப் பிறகு அவருடைய ஸ்தாநத்தில் எழுந்தருளி இருந்தவர். எல்லாவிதத்திலும் ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியுடைய வழிகளையே பின்பற்றி வந்த ஸ்ரீவேளுக்குடி ஸ்வாமியும் நம் வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியுடைய திருவடி-ஸம்பந்தத்தை ஆசைப்பட்டு அவரிடம் சில க்ரந் தங்களை அதிகரித்தார். ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமி பரமபதித்த பிறகு அவ்வப்பொழுது தமக்கு ஶாஸ்த்ர ஸம்ப்ரதாய விஷயங்களில் ஏற்படும் ஸந்தேஹங்களைக் குறித்துக் கொண்டு திருநாங்கூர் பெரியஸ்வாமியிடம் சென்று விளக்கம் பெற்று ஸந்தோஷமடைவர் நம் ஸ்ரீவேளுக்குடி ஸ்வாமி.

ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியின் மூலம் காரப்பங்காடு வித்வத்-பரம்பரையில் வாழையடி வாழை

acharya.org

யாக உபதேஶிக்கப்பட்டு வந்த ஶாஸ்த்ர ஸம்ப்ரதாய அர்த்தவிஶேஷங்கள் எல்லாம் குடிகொண்ட கோயிலாக விளங்கி வந்தவர் நம் ஸ்ரீவேளுக்குடி ஸ்வாமி. அவர் மஹாவித்வான்களுக்கும் மஹாவித்வானுகவும் ஆத்மகுணபூர்ணராகவும் எழுந்தருளி இருந்தவர். இப்படிப்பட்ட வைபவம் பொருந்திய ஒரு மஹான் நம் திருநாங்கூர் பெரியஸ்வாமியின் திருவடி ஸம்பந்தத்தை ஆசைப்பட்டு அவரை ஆஶ்ரயித்து அவரிடம் சில க்ரந்தங்களை அதிகரித்தார் என்பதிலிருந்தே நாம் நம் திருநாங்கூர் பெரியஸ்வாமியின் வைதுஷ்ய-பூர்த்தியை ஒருவாறு அறியலாம். இது மட்டுமன்று. ஸ்ரீவேளுக்குடி ஸ்வாமி தம்முடைய ஷட்டியப்தபூர்த்தியின் போது ஸுதாரஸமஞ்ஜரி - *ஸ்ரீபாஷ்யஸாரம்* என்றும் *பகவத்விஷய ஸாரம்* என்றும் இரண்டு பாகங்கள் வெளியிட்டார். ஶாரீரகமீமாம்ஸா ஶாஸ்த்ரம் 16 பாதங்கள் கொண்டதால் ஒரு பாதத்திற்கு ஒரு கட்டுரை என்ற ரீதியில் 16 வித்வான்கள் எழுதிய 16 கட்டுரைகளின் தொகுப்பாக *ஸ்ரீபாஷ்யஸாரம்* அமைந்தது. இதைப்போன்று 10 பத்துக்களின் ஸாரார்த்தங்களை விளக்குவதாய் 10 வித்வான் களுடைய கட்டுரைகளைக் கொண்ட தொகுப்பாக *பகவத்விஷயஸாரம்* அமைந்தது. இவற்றில் நம் திருநாங்கூர் பெரியஸ்வாமி ஒருவரை மட்டும் இரண்டு பாகங்களுக்குமே கட்டுரைகள் அநுக்ரஹித்தருளுமாறு ஸ்ரீவேளுக்குடி ஸ்வாமி ப்ரார்த்தித்துக் கொண்டார். அதற்கிணங்கி நம் ஸ்வாமியும் *முக்திபலவிவரணம்* என்றும் *பரத்வம்* என்றும் இரண்டு கட்டுரைகளை எழுதிக் கொடுத்தார்.

ஸ்ரீவேளுக்குடிடி ஸ்வாமி தம்முடைய திருத்தகப்பனுர் ஸ்வாமி ஶதாப்தீ மஹோத்ஸவத்தின் ஒரு அங்கமாக திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி ஸந்நிதியில் ஸ்ரீவைஷ்ணவ கருத்தரங்கு ஏற்பாடு செய்திருந்தார். அதற்கு நம் திருநாங்கூர் பெரியஸ்வாமியையே தலைமை தாங்க எழுந்தருளுவித்தார். மேலும் நம் திருநாங்கூர் பெரியஸ்வாமியிடம் ஸ்ரீவேளுக்குடி ஸ்வாமி எவ்வளவு பெருமதிப்பு வைத்திருந்தார் என்பதற்கு இந்த நூலில் வெளியிடப்பட்டு உள்ள ரந்த-சதுஷ்டயம் என்னும் கட்டுரையும் சான்றுகும். இவ்விரு மஹான்களுமே இளைய தலைமுறை வித்வான்களுக்கு உதாரணபுருஷர்களாக விளங்குகிறுர்கள்.

வைதுஷ்யபூர்த்தி ஒரு பக்கம் இருக்கட்டும். வைதுஷ்யம் என்பது பலரிடத்தில் இருக்கலாம். ஆனுல் அத்துடன் விநயத்தையும் கொண்டிருப்பவனே உண்மையான வித்வானுவான். ஒரு வித்வானுக்கு அவனிடத்தில் உள்ள வைதுஷ்யத்தினுல் மட்டும் பெருமை சேராது. வைதுஷ்யம் மட்டும் அவனுக்கு ஆத்மநன்மையில் கார்யகரமாகாது. *வித்$_3$யா விநயஸம்பந்நே .... (கீதை 5-18) என்கிறுன் பகவான். தான் திருவுள்ளம் பற்றிய அதிகாரியினிடத்தில் வித்யை யையும் விநயத்தையும் ஒருசேர எடுக்கிறுன் பகவான். நம் வித்யாபூஷணம் ஸ்வாமி அத்தகைய அதிகாரிகளில் ஒருவர். ஒரு வித்வானிடத்தில் இருக்கும் வைதுஷ்யம் நிறம்பெற வேண்டும் என்றுல் அவனிடத்தில் அவஶ்யம் விநயம் இருக்க வேண்டும். நம்முடைய ஸம்ப்ரதாயத்திலே இந்த விநயத்திற்கு மிக்க ஏற்றம் கொடுப்பர்கள். ஸ்ரீவைஷ்ணவ விநயம் என்றே இதனை கௌர-வித்து வ்யஹவரிப்பர்கள். வித்யை விநயத்தில் பர்யவஸிக்க வேண்டும். அப்பொழுதுதான் அதற்கு மதிப்பு ஏற்றம் எல்லாம் அமையும்.

acharya.org

வித்யை விநயத்துடன் சேர்ந்தால்தான் அது அந்த வித்வானுக்கும் அவனை அண்டியிருக்கும் மற்றவர்களுக்கும் பயன்படும் - அதாவது அவர்களுக்கு ஆத்மநன்மையில் பர்யவஸிக்கும். ஒருவனிடத்தில் வைதுஷ்யம் விநயம் இரண்டும் சேர்ந்திருந்தால் அது பொன்மலர் மணம் பெற்றது போன்று மிகவும் சிறப்புடையதாக விளங்கும். நம் திருநாங்கூர் பெரியஸ்வாமி இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியவர்.

நம் திருநாங்கூர் பெரியஸ்வாமியின் திருமேனியை ஸேவித்தாலே அவர் ஒரு சிறந்த மஹான் - குணவான் என்பது விளங்கும். ஸ்வாமியுடைய எளிமை, அவருடைய ஸாத்விகமான ஸ்வபாவம், அவரிடத்தில் குடிகொண்டிருந்த ஶாந்தி, அவரிடத்தில் காணப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ விநயம் முதலானவை அவருடைய திருமேனியிலேயே - அதிலும் குறிப்பாக அவருடைய திருமுகமண்டலத்திலேயே ப்ரகாஶித்தது பலர் நேரில் கண்டு அநுபவித்த உண்மை. இப்படி வைதுஷ்யத்துக்கும் மேலே நம் ஸ்வாமி ஆத்மகுணபரிபூர்ணராய் எழுந்தருளி இருந்தது ஒரு பெரிய விஶேஷமாகும்.

அடியேனுக்கு பரமாப்தராய் அநுக்ரஹம் புரிந்து வந்த கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ வே கோயில் ஆத்தான் விஜயராகவன் ஸ்வாமிக்கு நம் திருநாங்கூர் பெரியஸ்வாமி சிறிய தகப்பனார் (சிறியதாயாரின் யஜமானர் - கணவர்) ஆவார். அடிக்கடி அடியேனிடம் *என்னுடைய சித்தியா, என்னுடைய சித்தியா* என்று பெருமிதம் தோற்ற நம் ஸ்வாமியைப் பற்றிக் குறிப்பிடுவார் ஸ்ரீஆத்தான் ஸ்வாமி. அவர் குறிப்பாகச் சொல்லி அடியேன் பலமுறை கேட்டிருப்பது நம் ஸ்வாமி வைராக்யநிதியாய் எழுந்தருளி இருந்ததைப் பற்றியாகும். இதற்குச் சான்றாக ஸ்ரீஆத்தான் ஸ்வாமி பல விஷயங்களைக் குறிப்பிடுவதுண்டு. நம் ஸ்வாமி உலக விஷயங்களில் பற்றில்லாமலேயே வாழ்ந்தவர். அவ்வப்பொழுது கைங்கர்யத்துக்காக ஸந்நிதிக்கு எழுந்தருளுவது மற்றும் அநுஷ்டான காலங்கள் தவிர ஸ்வாமி எப்போதும் தம் திருமாளிகையில் வாசல் திண்ணையிலேயே எழுந்தருளி இருப்பர். குடும்ப விஷயங்களிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள மாட்டார். திருமாளிகைக்கு யார் வந்தாலும் அவர்களை குசலம் விசாரித்துவிட்டு உள்ளே அனுப்பி விடுவர். அவர்களுடன் அதிகம் பேசமாட்டார். திண்ணையில் ஏதாவது ஒரு ஸ்ரீகோஶத்தை ஸேவித்துக் கொண்டே போதுபோக்குவர். அவர் தநவான் அல்லர். தற்போதய காலம் போல் அன்று அவருடைய காலம். அவர் காலத்தில் பணப்புழக்கம் அதிகம் கிடையாது. வருமானம் என்பது மிகவும் ஸ்வல்பம். இருப்பினும் ஸந்நிதியில் ஸேவார்த்திகள் எப்போது யார் வந்தாலும் அவர்களுக்கு திருமாளிகையில் ததீயாராதநம் நடைபெறும். யாரிடமும் தநம் கேட்பது என்பது கிடையாது. யாராவது ஏதாவது ஸ்வல்பம் கொடுத்தால் அது ஏற்றுக் கொள்ளப்படும். அதிலும் ஸ்வாமி பட்டுக்கொள்ள மாட்டார். இந்த கைங்கர்யம் இன்றும் யாரிடமும் எதையும் எதிர்பார்க்காமல் குறைவில்லாமல் நடந்து வருகிறது.

ஸ்வாமி மேற்கொண்டிருந்த வைராக்யம் அத்யாஶ்சர்யமானது. ஸ்வாமி சுமார் 25 ஆண்டுகள் குஜராத் மாநிலத்தில் வட்தால் என்னுமிடத்தில் ஸ்வாமி நாராயண ஸம்ப்ரதாயஸ்தர்கள் நடத்தி வரும் ஸம்ஸ்க்ருத மஹாவித்யாலயத்தில் ப்ரதாந ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு

acharya.org

பெற்றவர். ஏதோ காரணமாக அவருக்கு வரவேண்டிய பென்ஷன் வராமலேயே இருந்தது. அதற்காகக்கூட ஸ்வாமி எந்த முயற்சியும் மேற்கொள்ளாமல் கடைசி வரையில் அதில்லாமலேயே வாழ்ந்து வந்தார். இவரைப் போன்ற அதிகாரிகள் லோகத்தில் கிடைப்பது மிகவும் அரிது.

அடியேன் எழுதிய ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியின் வைபவபரமான நூலில் ஒரு வித்வான் காலக்ஷேபம் ஸாதிக்கும் காலத்தில் மேற்கொள்ள வேண்டிய வழிகள், க்ரமங்கள் போன்றவற்றைக் குறித்து எழுதியிருந்தேன். இது ஸம்பந்தமாக அடியேனுக்கும் ஸ்ரீஆத்தான் ஸ்வாமிக்கும் பெரிய வாக்குவாதம் நடந்தது. வாக்குவாதம் நடந்தாலும் எங்கள் இருவருக்கும் ஸௌஹ்ருத பங்கம் ஏற்பட்டதில்லை. அதற்கு ஸ்ரீஆத்தான் ஸ்வாமி அடியேனிடத்தில் வைத்திருந்த க்ருபையும் பரிவுமே காரணம். * நீர் குறிப்பிட்டுள்ள விஶேஷங்கள் எல்லா வித்வான்களிடமும் இருக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் இல்லை ; இவை ஸ்ரீகாரப்பங்காடு ஸ்வாமியிடம் இருந்தன என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளும் ; என்னுடைய சித்தியா - திருநாங்கூர் பெரியஸ்வாமி - மிகவும் எளிமையானவர் ; அவர் விஷயங்களை ஸாதிப்பதும் அவரைப்போன்று மிக எளிமையாகவே இருக்கும் ; அதுவே ஒரு பெரிய அநுபவமாக அமையும் * என்று ஸ்ரீஆத்தான் ஸ்வாமி ஸாதிப்பர். வைதுஷ்ய பூர்த்தி உடையவராக இருந்தாலும் ஸ்வாமியுடைய எளிமை அவருடைய வைதுஷ்யத்தையும் மிஞ்சியிருந்தது என்பது ஒரு பெரிய விஶேஷம். இதைக் காட்டுவதற்காகவே அடியேன் இங்கு இந்த விஷயத்தைக் குறிப்பிடுகிறேன்.

இப்படி நம் ஸ்வாமியுடைய ஜ்ஞாநப் பெருமை, அவருடைய எளிமை, அவருடைய வைராக்யம், அவரிடத்தில் குடிகொண்டிருந்த ஶாந்தி, அவரிடத்தில் காணப்பட்ட ஸ்ரீவைஷ்ணவ விநயம், அவருடைய பரமஸாத்விகமான ஸ்வபாவம், ததீயாராதந கைங்கர்யத்தில் அவருக்கிருந்த ஊற்றம் அனைத்தும் அவர் ஒரு சிறந்த மஹான் என்பதைக் காட்டுகின்றன. விரிவுக்கஞ்சி இத்துடன் அடியேனுடைய விண்ணப்பத்தை முடித்துக் கொள்கிறேன். மேல் கட்டுரைகளிலும் நாம் விரிவாக ஸ்வாமியுடைய குணவிஶேஷங்களை அநுபவிக்கலாம்.

இந்த இதழை நன்கு அமைத்து வெளியிட்ட ஸ்ரீ உ வே திருக்கண்ணபுரம் ஶடகோபாசார்ய ஸ்வாமியும் ஒரு வித்யா-விநய-ஸம்பந்நர். வாசக அன்பர்கள் சார்பில் அவருக்கு அடியேன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஜ்ஞாந-வயோ-வ்ருத்தரான இந்த ஸ்வாமி பல்லாண்டுகள் அரோக திடகாத்ரராய் எழுந்தருளியிருந்து ஸ்ரீவைஷ்ணவ உலகை மேலும் வாழ்விக்க வேணுமாய் அநுக்ரஹிக்கும்படி திவ்யதம்பதிகளை வேண்டி நிற்கிறேன்.

அடியேன் முரளீதரஶர்மா ராமாநுஜ தாஸன்.

acharya.org

ஸ்ரீ உ.வே. வித்வான் திருநாங்கூர் ப்ர.ப. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

acharya.org

மஹநீயர்களைப் போற்றுவோம்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி வைபவம்

ஸ்ரீ உ வே R ரகுராமன் (பாலாஜி) ஸ்வாமி
ஆசிரியர் - ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம்

எண்ணில்மிகுபெருஞ்செல்வத்துஎழில்விளங்குமறையும்
ஏழிசையும்கேள்விகளும்இயன்றபெருங்குணத்தோர் *
மண்ணில்மிகுமறையவர்கள்மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே * (பெரியதிருமொழி 3-9-2)

* மன்னுபுகழ்வேதியர்கள்மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே * (3-9-5)

* வண்மைமிகுமறையவர்கள்மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே * (3-9-6)

என்றெல்லாம் திருமங்கையாழ்வாரால் மங்களாஶாஸநம் செய்யப்பெற்ற ஸ்ரீவைகுந்த விண்ணகரம் என்கிற திவ்யதேஶம் - ஔதார்யம் (வண்மை) முதலான நற்குணங்களால் விளங்காநிற்கும் பெரும்புகழை உடைய வைதிகோத்தமர்களின் உறைவிடமாகத் திகழ்கிறது. இந்த திவ்யதேஶத்தில் ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம் அண்ணாவின் திருவம்ஶத்தில் உதித்த ஸ்ரீ உ வே ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் தம்மை அடிபணிந்தோர்க்கு பகவத்விஷயம் முதலான க்ரந்தங்களைக் காலக்ஷேபம் ஸாதித்து வந்தார். அவருடைய திருக்குமாரரான ப்ர.ப.க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி உபயவேதாந்தங்களை கசடறக்கற்று ஶமதமாதி குணங்கள் நிரம்பப் பெற்றவராய் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆதர்ஶ புருஷராய் விளங்கினார். அவருடைய திருக்குமாரராக இற்றைக்குச் சரியாக நூறு வருடங்களுக்கு முன்பாக ஆவணி மாதம் பூரட்டாதி நக்ஷத்ரத்தில் தோன்றியவர் வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே அண்ணங்கராசார்ய ஸ்வாமி.

நம் ஸ்வாமி பால்யத்தில் சென்னை காகுமானி ஆதிகேஶவலு செட்டியார் ஸம்ஸ்க்ருத பாடஶாலையில் வித்யாப்யாஸம் செய்துவரும்போது வித்யார்த்திகளுள் தலைசிறந்தவராய்த் திகழ்ந்தார். பின்னர் ஸ்ரீபெரும்பூதூர் மஹாவித்யாலயத்தில் பன்னிராண்டு காலம் ந்யாயம், வ்யாகரணம், மீமாம்ஸை, வேதாந்தம் என்னும் நான்கு ஶாஸ்த்ரங்களையும் பூர்ணமாக அத்யயநம் செய்தார். தம்முடைய திருத்தகப்பனார் ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீக்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் முமுக்ஷுப்படி, பகவத்விஷயம் முதலான க்ரந்தங்களைக் காலக்ஷேபம் செய்தார். ந்யாயத்தில் உத்தரவாதங்களையும் ஸ்ரீபாஷ்யம், ஶ்ருதப்ரகாஶிகை, ஸ்ரீவசநபூஷணம்

acharya.org

முதலிய க்ரந்தங்களையும் ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீ உ வே மஹாவித்வான் ஆஸூரி பெரிய ராமாநுஜாசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் அடிபணிந்து பயின்றார். பிறகு அந்த வித்யாலயத்திலேயே இரண்டு ஆண்டுகள் உபாத்யாயராகப் பணிபுரிந்தார். பிறகு கூர்ஜரதேஶத்தில் உள்ள வட்தால் என்னும் நகரத்தில் ஸ்ரீஸ்வாமிநாராயண ஸம்ஸ்க்ருத மஹாவித்யாலயத்தில் ப்ரதாநாசார்யராக இருபத்தைந்தாண்டுகள் இருந்து ந்யாய வேதாந்தங்களை ப்ரவசநம் செய்தார். பிறகு ஸ்ரீரங்கத்தில் குவளக்குடி சிங்கமையங்கார் ஸ்வாமி பாடஶாலையில் ஒன்றரை வருடகாலம் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் ஸாதித்தார். பிறகு அயோத்தியில் ஸ்ரீராமாநுஜ ஸம்ஸ்க்ருத மஹாவித்யாலயத்தில் இரண்டு ஆண்டுகள் ப்ரதாநாசார்யராக இருந்து ஸ்ரீபாஷ்யம் முதலான வேதாந்த க்ரந்தங்களை ப்ரவசநம் செய்து பலரை ஸ்ரீபாஷ்யாதிகாரிகளாக ஆக்கினார். பிறகு ப்ருந்தாவனத்தில் ஸ்ரீரங்கஜீ மந்த்ரத்தில் தேவஸ்தாந வித்வானாக மேற்படி தேவஸ்தாநாதிகாரிகளால் நியமிக்கப்பட்டு ஸ்ரீபாஷ்ய பகவத்விஷயாதி க்ரந்தங்களை ப்ரவசநம் செய்தார்.

பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த ஸித்தித்ரயத்திற்கும், ஸ்ரீநிவாஸாசார்யரின் யதீந்த்ரமததீபிகைக்கும் ஸம்ஸ்க்ருதத்தில் வ்யாக்யாநமும், மாநமேயப்ரகாஶிகா என்னும் ப்ரகரண க்ரந்தமும் நம் ஸ்வாமியினால் இயற்றப்பட்டவை. மேலும் ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம் அண்ணாவின் வரவரமுநிஶதகம், ஸ்ரீவேங்கடேஶ ஸுப்ரபாதம், ஸ்ரீரங்கராஜ ஸுப்ரபாதம் ஆகியவற்றுக்குத் தமிழில் உரை அருளியுள்ளார் நம் ஸ்வாமி. ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்துக்கு ஸ்ரீபராஶரபட்டர் அருளிச்செய்த பாஷ்யத்தை அநுஸரித்து வடமொழியில் ஓர் வ்ருத்தியும், ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த வேதாந்தஸாரத்துக்கு ஸம்ஸ்க்ருத வ்யாக்யாநமும், ஸம்ஸ்க்ருதத்தில் ஆத்ம தர்ப்பணம் என்னும் நூலும் நம் வித்யாபூஷணம் ஸ்வாமியால் இயற்றப் பெற்று இதுவரை அச்சிடப் பெறாமல் உள்ளன.

ஸ்வாமியின் தனியன்

श्रीवादिभीकृत्कुलवारिधीन्दुम् कृष्णार्य सद्देशिक पुत्ररत्नम् ।
विद्वद्वरिष्टम् सुगुणाभिरामम् हस्त्यद्रि संज्ञम् गुरुवर्यमीडे ॥

ஸ்ரீவாதி$_3$பீ$_4$க்ருத்குலவாரிதீ$_4$ந்து$_3$ம்
க்ருஷ்ணார்ய ஸத்$_3$தே$_3$ஶிக புத்ரரத்நம் |
வித்$_3$வத்$_3$வரிஷ்டம் ஸுகு$_3$ணாபி$_4$ராமம்
ஹஸ்த்யத்$_3$ரி ஸம்ஜ்ஞம் கு$_3$ருவர்யமீடே$_3$ ||

acharya.org

ஸ்வாமியின வாழித்திருநாமம்

சீரியலும் கிருஷ்ணார்யன் திருமகனார் வாழியே
சிங்கப்பூரட்டாதி செகத்துதித்தான் வாழியே
வாரியலும் வைகுந்த விண்ணகரோன் வாழியே
(சீ)வத்ஸகுல வளர்மதியாய் வளர்ந்த செல்வன் வாழியே
சீரிய நற்பீகரமாம் திருமரபோன் வாழியே
ஸித்தாஞ்சநம் செய்த திறலுடையோன் வாழியே
ஆரியனாய் வடநாட்டில் அறமுரைப்பபோன் வாழியே
அண்ணங்கராசார்யன் அடியிணைகள் வாழியே

ஸித்தித்ரயத்தின் ஸித்தாஞ்சநம் செய்து
முத்திக்கு வித்திட்ட மூதறிஞ - தித்திக்கும்
கன்னலுரை அண்ணங்கராரியனே! காசினியில்
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

வடநாட்டில் எண்ணற்ற வித்வான்களை உருவாக்கிய நம் ஸ்வாமி 2-5-86 சித்திரை க்ருஷ்ண பக்ஷ நவமியன்று ஆசார்யன் திருவடியடைந்தார். ஸ்வாமியின் ஸித்தித்ரய வ்யாக்யாநமொன்றே எந்நாளும் அவருடைய சதுஶ் ஶாஸ்த்ரப் புலமையைப் பறைசாற்றிக்கொண்டிருக்கப் போது மானது என்பர் பெரியோர். ஸ்வாமியின் பந்துக்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இருவர். ஸ்வாமியின் தமக்கையாரும், மூதறியும் அம்மனைமார் என வழங்கத் தக்கவருமான கண்ணம்மா அம்மங்கார் திவ்யதேஶங்களில் பற்பல திருப்பணிகள் செய்து வந்தார் என்பது ப்ரஸித்தம். ஸ்வாமியின் அநுஜரான வித்வான் ஸ்ரீ உ வே ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்ரீராமாநுஜ மிஷன் அகில இந்திய பொதுச் செயலாளராய் எம்பெருமானார் தர்ஶந ப்ரசார கைங்கர்யம் செய்து வந்தார். நம் ஸ்வாமியினால் இயற்றப்பட்டு அச்சிடப் பெறாமல் உள்ள நூல்களை ப்ரகாஶமடையும்படி செய்வதே நாம் அவருக்குச் செய்யக்கூடிய க்ருதஜ்ஞதையாக அமையும். ஆதலால் அந்நூல்களை வெளியிட்டு உபகரிக்கும்படி ஸ்வாமியின் திருவடி ஸம்பந்திகளை ப்ரார்த்திக்கிறோம்.

(ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் நந்தன ஆவணி - செப்டெம்பர் 2012 இதழில் வெளியானது)

acharya.org



ஸ்ரீ உ..வே. வித்வான் திருநாங்கூர் ப்ர.ப. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

acharya.org

ஆண்டாள் கோயிலின் ஆஸ்தான வித்வான்

(8-6-86 தினமணிகதிர் இதழில் வெளிவந்த கட்டுரை)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் தோன்றி உலகெங்கும் கிளை பரப்பிய இயக்கம் *ஸ்வாமி நாராயணன் இயக்கம்* ஆகும். பாமர மக்களைக் கவர்ந்து அவர்களிடம் குடிகொண்டிருந்த தீயசெயல்களை ஒழிப்பதற்குக் காரணமாக அமைந்தது அவ்வியக்கம். தென்னகத்தில் தோன்றிய ஸ்ரீராமானுஜர் நிலைநாட்டிய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை உள்ளடக்கிய அவ்வியக்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த குஜராத் மாநிலத்திற்கே சென்று, சாஸ்த்ர வேதாந்த கருத்துக்களையும் இறைபக்தியையும் தமது தொண்டினாலும் தொழிலினாலும் பல ஆண்டுகள் பரப்பியவர் ஸ்ரீ உ வே ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி.

ப்ரதிவாதிபயங்கரம் என்ற பட்டம் முதன்முதலில் பதினாறும் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வந்த ந்ருஸிம்ஹமிச்ரன் என்ற மாயாவாதியை தர்க்கவாதம் செய்து வென்ற *ஹஸ்ததிரிநாதரண்ணா* என்பவருக்குக் கிடைத்தது. அந்த வம்சத்தைச் சேர்ந்த யாவரும் அப்பட்டத்தைத் தங்கள் பெயருடன் சேர்த்து வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் நம் திருநாங்கூர் ஸ்வாமி பெயருக்கேற்றபடி பயங்கரமானவரும் இல்லை. ஆற்றல் பெற்றிருந்தும் வாதத்தில் யாரையும் வெல்ல வாய்ப்புப் பெற்றவரும் இல்லை.

தஞ்சை மாவட்டம் திருநாங்கூரில் ஸம்ஸ்க்ருத புலமை பெற்ற ஸ்ரீரங்காசார்யர் மகன் ஸ்ரீக்ருஷ்ணமாசார்யருக்கும், செண்பகவல்லி அம்மையாருக்கும் 1912ம் ஆண்டு மூன்று உடன்பிறப்புக்களிடையே பிறந்தார். இவரது சாஸ்த்ர கல்வி சென்னை காகுமானி ஆதிகேசவலுசெட்டி சாரிடீஸ் வேதபாடசாலையில் ஸம்ஸ்க்ருத மொழியில் *ப்ரவேசிகா* தேர்வில் வெற்றியுடன் துவங்கியது. பின்னர் *உபயவேதாந்த வர்த்திநீ* என்ற பெயரில் விளங்கும் ஸ்ரீபெரும்பூதூர் வடமொழிக்கல்லூரியில் தொடர்ந்தது. ந்யாயம், வ்யாகரணம், மீமாம்ஸை, வேதாந்தம் போன்ற சாஸ்த்ரங்களை அங்கு முழுமையாக 12 ஆண்டுகள் கற்றார். ந்யாயத்திலும் வ்யாகரணத்திலும் *சிரோமணி* பட்டத்தை சென்னைப் பல்கலைக்கழகத்தில் பெற்றார். ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், உபநிஷத் பாஷ்யம், ச்ருதப்ரகாசிகை, ஸ்ரீவசநபூஷணம், பகவத்விஷயம் போன்ற க்ரந்தங்களை தந்தையிடமும் ஆஸூரி பெரியராமானுஜாசார்ய ஸ்வாமியிடமும் கற்றார். தமிழக அரசின் கீழ்த்திசைச் சுவடிகள் நூல் நிலையத்தில் இரண்டு ஆண்டுகள் ந்யாய சாஸ்த்ர க்ரந்தங்களில் ஆராய்ச்சி செய்தார்.

ஸ்ரீரங்கத்தில் உள்ள குவளக்குடி சிங்கமையங்கார் ஸ்வாமி பாடசாலையில் வகுப்புகள்

acharya.org

நடத்தியும் பணிபுரிந்தார். தாம் கற்ற கல்லூரியிலேயே வ்யாகரண பண்டிதராகவும் பணியாற்றினுர். குஜராத் மாநிலத்தில் கைரா மாவட்டத்தில் உள்ள *வட்தால்* என்ற ஊரில் ஸ்வாமிநாராயணன் இயக்கம் நிறுவிய ஸம்ஸ்க்ருத மஹாவித்யாலயத்தில் ப்ரதாந ஆசிரியராகப் பணிபுரியும் வாய்ப்பும் இவரைத் தேடிவந்தது. அங்கே இவர் கால் நூற்ருண்டு காலம் அவ்வியக்கத்தின் ஸாதுக்களுக்கு வ்யாகரணம், ந்யாயம், வேதாந்தம் மற்றும் பல வைணவ ஸமய க்ரந்தங்களை விரிவாகக் கற்றுக் கொடுத்தார். இவரிடம் கற்ற பலர் காஶீ, கல்கத்தா போன்ற இடங்களில் அரசுப் பல்கலைக்கழகத் தேர்வில் முதன் மையாக வெற்றி பெற்றுப் பண்டிதர்கள் ஆனுர்கள்.

குஜராத் மாநிலத்தில் பணிபுரிய இவருக்கு உதவி புரிந்த ஸ்ரீரங்கம் எம்பார் க்ருஷ்ண மாசார்யரை இவர் நன்றியுடன் நினைவு கூர்கிருர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இவர் குஜராத் மாநிலத்தில் பணிபுரியச் சென்ற ஆறே மாதத்தில் குஜராத் மொழியைப் பழுதறக் கற்று அம்மொழியிலேயே போதிக்கும் ஆற்றல் பெற்ருர். முன்பே ஹிந்தி மொழியிலும் புலமை பெற்றிருந்த இவர் உத்தரப்ரதேஶத்தில் அயோத்தி மாநகரத்தில் உள்ள ஸ்ரீராமாநுஜ வேதாந்த வித்யாலயத்தில் ப்ரதாந ஆசிரியராகப் பணிபுரிந்தார். உத்தராதி ஸ்ரீவைணவர்கள் பலருக்கு ஶாஸ்த்ர க்ரந்தங்களைக் கற்றுக் கொடுத்தார். பின்னர் பகவான் கண்ணன் பிறந்த மதுராவை அடுத்த ப்ருந்தாவனத்தில் காஞ்சியைச் சேர்ந்த கோவர்த்தநம் ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி முயற்சியால் நூறு ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட *ஸ்ரீரங்கஜீ மந்திர்* என்ற ஸ்ரீஆண்டாள் (ரங்கமன்னுர்) கோயிலில் எட்டு ஆண்டுகள் ஆஸ்தாந வித்வானுகப் பணிபுரிந்தார். பல வித்வான்களை உருவாக்கியபின் தாயகத்திற்குத் திரும்பினுர்.

பரம்பரை ஆசார்ய பீடத்தைச் சேர்ந்த குடும்பத்தில் பிறந்து, நான்கு மகன்களுக்கும் ஒரு மகளுக்கும தந்தையான இவர் தமது 26 வயதிலிருந்தே தமிழ், ஹிந்தி, ஸம்ஸ்க்ருதம், குஜராத்தி முதலிய மொழிகளில் ஸ்ரீராமாயணம் ஸ்ரீபாகவதம் முதலான இதிஹாஸபுராணங்களைத் திறமையாக ப்ரவசநம் செய்யும ஆற்றல் பெற்று அயோத்தியில நடந்த வித்வத் ஸதஸ்ஸில் *வித்யாபூஷணம்* என்ற விருதையும் பெற்ருர். ஆந்திராவைச் சேர்ந்த ஸ்ரீமந்நாராயணஜீயரிடம் *உபயவேதாந்தாசார்யர்* என்ற பட்டத்தையும் பெற்ருர். ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்துள்ள *ஸித்தித்ரயம்* என்னும் க்ரந்தத்துக்கும், மற்றும் *யதீந்த்ரமததீபிகை* என்ற வேதாந்த ப்ரவேஶ க்ரந்தத்திற்கும் முதன்முறையாக வ்யாக்யாநம் எழுதி வெளியிட்டவர் இவர்தான்.

acharya.org

ரத்ந-சதுஷ்டயம்

ஸ்ரீ உ வே வாகம்ருதவர்ஷீ வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி

ரத்ந சதுஷ்டயமாவது நான்கு ரத்நங்கள். அவற்றைப் பற்றி சற்றே அநுபவிப்போம்.

மந்த்ர-ரத்நம்

மந்த்ராணும் பரமோ மந்த்ரோ கு$_3$ஹ்யாநாம் கு$_3$ஹ்யமுத்தமம் |
பவித்ரஞ்ச பவித்ராணும் மூலமந்த்ரஸ் ஸநாதந: ||
(நாரதீய கல்பம் அஷ்டாக்ஷர ப்ரஹ்மவித்யை 1-11)(மந்த்ரங்களுள் மேலான மந்த்ரமும் ரஹஸ்யங்களுள் மேலான ரஹஸ்யமும் பாவனங்களுள் பரமபாவனமும் பழையதான மூலமந்த்ரமேயாகும்)

என்று கொண்டாடப்படுகிற திருமந்த்ரம் மந்த்ர ராஜம் எனப்படுகிறது. இதுவே திருவெட்டெழுத்து, ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரம் என்று குலாவப்படுகிறது. இதற்கு விவரணமாயுள்ள த்வயம் மந்த்ரரத்நம் எனப்படுகிறது. திருமந்த்ரம் சுருக்கமாகவும் அஸ்பஷ்டமாகவும் உள்ளது. அதன் அர்த்தங்களை ஸுஸ்பஷ்டமாகவும் விஸ்தரமாகவும் கூறுகிறது த்வயம். ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே ஸ்ரீதேவிக்கு பகவானாலே உபதேசிக்கப்பட்ட த்வய மந்த்ரமே மந்த்ர ரத்நமாவது. ராஜா ரத்நத்தை விரும்புவன்; ரத்நம் அரசனை விரும்புவதில்லை. அதேபோல் மந்த்ர ராஜமான திருமந்த்ரம் ஸ்வார்த்த ப்ரகாசநத்தில் மந்த்ர ரத்நத்தை அபேக்ஷிக்கிறது. இதுபற்றியே மந்த்ர ராஜமான திருமந்த்ரத்தைக் காட்டிலும் மந்த்ர ரத்நமான த்வயத்துக்கு ஏற்றம் கூறப்படுகிறது. ஸ்ரீரங்கராஜ-யதிராஜ-ஸம்வாதமான சரணாகதி கத்யத்தில் -

*த்$_3$வயமர்த்த$_2$ாநுஸந்த$_4$ாநேந ஸஹ ஸதா$_3$ ஏவம் வக்தா
யாவச்ச$_2$ரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே$_3$ ஸுக$_2$மாஸ்ஸ்வ*
(நீர் எப்போதும் த்வயத்தினுடைய அர்த்தத்தை அநுஸந்தித்துக் கொண்டு அதுவே துணையாக ஸ்ரீரங்கத்திலே ஸுகமாக வாழ்ந்து கொண்டு இரும்) என்று திருவரங்கனுடைய திருவாக்கு.

மந்த்ரரத்நாநுஸந்த$_4$ாந ஸந்ததஸ்பு$_2$ரிதாத$_4$ரம் |
தத$_3$ர்த்த$_2$ தத்த்வ நித்$_4$யாந ஸந்நத்$_3$த$_4$புலகோத்$_3$க$_3$மம் ||
(பூர்வதிநசர்யா 9)(மந்த்ரங்களில் மிக உயர்ந்ததான த்வயத்தை மெல்ல உச்சரிப்பதனால் எப்போதும் சிறிதே அசைகிற உதடுகளை உடையவரும், அந்த த்வயமந்த்ரத்தின் அர்த்தத்தில் உள்ள உண்மைநிலையை நன்றாக த்யாநம் செய்வதனால் உண்டான மயிர்க்கூச்செறிதலை உடையவருமாகிய......) என்று ஸ்ரீமணவாளமாமுநிகள் திநசர்யையிலும் கூறப்பட்டுள்ளது.

acharya.org

* *வளங்கொள் மந்திரமும் மெய்ம்மைப் பெருவார்த்தையும் அருளிச் செய்த வாயாலே *த்$_3$வயவக்தா*, *த்$_3$வயமர்த்த$_2$ாநுஸந்த$_4$ாநேந ஸஹ* என்று இரண்டினேற்றமும் வெளியிடப்பட்டதிறே** என்று அருளிச்செயல் ரஹஸ்யத்தில் ஸ்ரீஅழகியமணவாளப்பெருமாள் நாயனாரும் அருளிச்செய்கிறார்.

ஏகம் த்$_3$வயம் த்ரயவயவம் ஸுக$_2$லப்$_4$யதுர்யம்
வ்யக்தார்த்த$_2$பஞ்சகம் உபாத்தஷடங்க$_3$யோக$_3$ம் |
ஸப்தார்ணவீ-மஹிமவத்$_3$விவ்ருதாஷ்ட-வர்ணம்
ரங்கே$_3$ ஸதாம்-இஹ ரஸம் நவமம் ப்ரஸூதே ||

(ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் த்வயாதிகாரம்)(ஒரே வாக்யமாகவும், *த்வயம்* என்ற பெயரை உடையதாகவும், மூன்று உட்பிரிவான வாக்யங்களை உடையதாகவும், புருஷார்த்தங்களில் நான்காவதான மோக்ஷத்தை எளிதில் பெற்றுத் தருவதாகவும், அர்த்தபஞ்சகத்தைத் தெரிவிப்பதாகவும், ஆறு அங்கங்களை உடைய ப்ரபத்தி யோகத்தை நடத்தித் தருவதாகவும், ஏழு கடல்களைப் போன்ற பெருமையை உடையதாகவும், திருவஷ்டாக்ஷரத்தை விவரிப்பதாகவும் உள்ள இந்த த்வயமந்த்ரமானது, திருவரங்கத்தில் உள்ளவர்களுக்கு ஒன்பதாவதாகிய ஶாந்தி என்னும் ரஸத்தை உண்டாக்குகிறது) என்று த்வயத்தின் வைபவத்தை தேசிகன் அருளிச் செய்கிறார்.

புராண-ரத்நம்

இதிஹாஸபுராணாப்$_4$யாம் வேத$_3$ம் ஸமுபப்$_3$ரும்ஹயேத் |
பிபே$_4$த்யல்பஶ்ருதாத்$_3$ வேத$_3$: மாமயம் ப்ரதரிஷ்யதி ||

(பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதி) (இதிஹாஸங்களையும் புராணங்களையும் கொண்டு வேதத்தை விவரித்து அறுதியிட வேண்டும்; வேதமானது அரைகுறைப் படிப்பாளியிடம் (வேதத்தின் கருத்தை அறியாமல் தனது புல்லறிவிற்கேற்பத் தனக்குத் தோன்றியவற்றையே வேதப் பொருள் என்று கூறுமவனிடம்) *ஐயோ! இவன் என்னை வஞ்சிக்கப் போகிறானே* என்று அஞ்சுகிறது)

என்கிறபடியே வேதாந்தார்த்தங்களை இதிஹாஸ புராணங்களின் துணைகொண்டே அறுதியிட வேண்டும் என்பர் பெரியோர். புராணங்கள் பதினெட்டாகும். ஸாத்விக ராஜஸ தாமஸ பேதேந மூவாறாகவுள்ளது புராணஜாதம். ஸாத்விக புராணங்கள் ஆறு. அவற்றுள் ஸ்ரீவிஷ்ணு புராணம் சாலச்சிறந்தது. பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் அதில் மிகவும் ஈடுபட்டு அதை *புராணரத்நம்* என்று கொண்டாடுகிறார்.

acharya.org

நிரமிமீத புராணரத்நம் உத$_3$ார: (ஸ்தோத்ர ரத்நம் 4)(புராணங்களுள் மேலான ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை அருளிச்செய்த உதாரர்) என்றிறே அவருடைய திருவாக்கு. ஸ்ரீமைத்ரேய பகவானுன ஸச்சிஷ்யனுக்கு ஸ்ரீபராஶர பகவானுன ஸதாசார்யன் உபதேஶித்தது புராணரத்நமான ஸ்ரீவிஷ்ணுபுராணம். *புலஸ்த்ய வஸிஷ்ட$_2$ வரப்ரத$_3$ாந லப்$_3$த$_4$ பரதே$_3$வதா பாரமார்த்$_2$யஜ்ஞாநவத: ப$_4$க$_3$வத: பராஶராத்* என்று ஸ்ரீபாஷ்யத்திலே ஸ்வாமி எம்பெருமானுர் ஸ்ரீவிஷ்ணுபுராண வைபவத்தை வக்த்ரு வைலக்ஷண்யமடியாக அருளிச்செய்தார். த்வைதாத்வைத விஶிஷ்டாத்வைத வாதார்த்தங்களைத் தெளிவிக்க வல்லது ஸ்ரீவிஷ்ணுபுராணம். ஜீவாத்வைதமான ப்ரகார-அத்வைதத்தையும் ப்ரஹ்மாத்வைதமான ப்ரகாரி-அத்வைதத்தையும் விவரிப்பது புராணரத்நம்.

ஸகல வைதிகரும் *தத்த்வவிவேக: விஷ்ணுபுராணுத்* என்பர். சிதசிதீஶ்வர தத்த்வத்ரயத்தையும் போக-அபவர்க-ரூப புருஷார்த்தங்களையும் தத்ப்ராப்தி-உபாயங்களையும் தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்கிறது புராணரத்நம். ஸ்ரீபராஶரபகவான் பரதத்த்வத்தைத் தாம் உள்ளபடி அறிந்ததோடு நில்லாமல் நாமும் அறியலாம்படி புராணரத்நத்தை அருளிச்செய்தபடியாலேயிறே அவரை *உதாரர்* என்று கொண்டாடுகிறுர் ஸ்ரீஆளவந்தார்.

நம்மாழ்வார் உயர்வற உயர்நலம் உடையவனுலே மயர்வற மதிநலம் அருளப்பெற்று நமக்கு மயர்வற மதிநலம் அருளுகிறுர். இதிறே இவருடைய வண்மை — வண்குருகூர்ச் சடகோபனிறே! இப்படியிறே பெரியோருடைய ஔதார்யம் இருப்பது. உதாரரான ஸ்ரீபராஶர பகவான் அருளிச்செய்த ஸ்ரீவிஷ்ணுபுராணமே புராணரத்நம்.

ஸ்தோத்ர-ரத்நம்

பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த பகவத் ஸ்தோத்ரம் ஸ்தோத்ர-ரத்நம் எனப்படுகிறது. *ஸ்தோத்ர-ரத்நமித$_3$ம் ந்யஸ்தம் ஆசார்ய ஸ்துதி ஸம்புடே நித$_3$ாநமிவ நிஸ்ஸீமம் நிர்விஶந்தி விபஶ்சித:* என்று ஸ்தோத்ர-ரத்ந பாஷ்யாரம்பத்தில் தேஶிகன் அருளிச்செய்துள்ளார். ஸ்தோத்ரத்தின் ஆதி-அந்தங்களில் ஆசார்ய ஸ்தோத்ரம் செய்கிறுர் ஸ்ரீஆளவந்தார். ஸ்ரீவிஷ்ணுபுராணுரம்பத்தில் உள்ள -

பராஶரம் முநிவரம் க்ருதபௌர்வாஹ்ணிகக்ரியம் |
மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்ய-அபி$_4$வாத்$_3$ய ச ||

(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-1-1)(ஸ்ரீமைத்ரேயர் தம்முடைய நித்யகர்மாநுஷ்டானங்கள் முடிந்த பின் ஸ்ரீபராஶரமுநிவரை அண்டி வணங்கி அவரது திருவடிகளைப் பிடித்துக் கொண்டு வினவினுர்) என்ற ஶ்லோகத்தை இவ்விஷயத்தில் ப்ரமாணமாகக் காட்டியருளுகிறுர் தேஶிகன்.

acharya.org

ஸ்வாமி எம்பெருமானர், ஸ்ரீகூரத்தாழ்வான், ஸ்ரீபராமரபட்டர் முதலான பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த பகவத் ஸ்தோத்ரங்களுக்கெல்லாம் மூலம் ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த ஸ்தோத்ர ரத்நமேயாகும். *அருள்பெற்ற நாதமுநி* என்கிறபடியே நம்மாழ்வாருடைய நிர்ஹேதுக ப்ரஸாதத்தாலே ஸகலார்த்த ஸாக்ஷாத்காரம் பெற்றவர் பெரியமுதலியாரான ஸ்ரீமந்நாதமுநிகள். அவராலே அபிமாநிக்கப்பட்டவரும் அவர்தம் பௌத்ரரும் ஆவார் ஸ்ரீஆளவந்தார். இவர் இளையாழ்வாரைக் காஞ்சியில் ஆமுதல்வன் என்று கடாக்ஷித்தவரும் விமிஷ்டாத்வைத ஸித்தாந்த விஜயத்வஜங்களான பல க்ரந்தங்களை அருளிச்செய்தவருமாவார்.

பரம் ப்$_3$ரஹ்மைவாஜ்ஞம் ப்$_4$ரமபரிக$_3$தம் ஸம்ஸரதி தத்
பரோபாத்$_4$யாலீட$_4$ம் விவமமமரூப$_4$ஸ்யாஸ்பத$_3$மிதி |
ம்ருதிந்யாயாபேதம் ஜக$_3$தி விததம் மோஹநமித$_3$ம்
தமோ யேநாபாஸ்தம் ஸ ஹி விஜயதே யாமுநமுநி: || || 2 ||

(பரப்$_3$ரஹ்மமே அஜ்ஞாநத்தையுடையது, ப்$_4$ரமத்தால் சூழப்பட்டது, ஸம்ஸரிக்கிறது; அது வேறான உப$_4$ாதியினால் கட்டப்பட்டுள்ளது, கர்மத்துக்கு வமப்பட்டுள்ளது; அமரூப$_4$த்துக்கு இருப்பிடமாயுள்ளது;

என்பவை முறையே மங்கர ப$_4$ாஸ்கர யாத$_3$வப்ரகாம மதங்கள். இப்படி அந்த மதங்களால் உண்டாக்கப்பட்டதாய், ப்ரமாணத்துக்கும் தர்க்கத்துக்கும் விருத்$_3$த$_4$மாய் உள்ளதாய், ஜக$_3$த்தில் வ்யாபித்துக் கிடப்பதாய், மோஹத்தை அடைவிக்கக்கூடியதாய் உள்ள தமஸ்ஸானது - இருட்டானது எவரால் துரத்தப்பட்டதோ அந்த யாமுநமுநியானவர் ஜயிக்கிறார் - விளங்குகிறார்) என்று எம்பெருமானார் வேதார்த்த ஸங்க்ரஹாரம்பத்தில் ஸ்ரீஆளவந்தாரைக் கொண்டாடுகிறார்.

மாநத்வம் ப$_4$க$_3$வந்-மதஸ்ய மஹத: பும்ஸஸ்தத$_2$ா நிர்ணய:
திஸ்ரஸ்ஸித்$_3$த$_4$ய ஆத்மஸம்வித$_3$கி$_2$லாதீ$_4$மாநதத்த்வாம்ரயா: |
கீ$_3$தார்த்த$_2$ஸ்ய ச ஸங்க்$_3$ரஹ: ஸ்துதியுக$_3$ம் ஸ்ரீஸ்ரீமயோரித்யமூந்
யத்$_3$க்$_3$ரந்த$_2$ாநநுஸந்த$_3$தே$_4$ யதிபதிஸ்தம் யாமுநேயம் நும: ||

(ஆகம ப்ராமாண்யம், மஹாபுருஷ நிர்ணயம், ஆத்ம, ஈம்வர, ஸம்வித்ஸித்திகள், கீதார்த்த ஸங்கரஹம், சது: ம்லோகீ, ஸ்தோத்ரரத்நம் என்கிற க்ரந்தங்கள் எந்த ஆசார்யரால் அருளிச்செய்யப்பட்டதாக ஸ்ரீபாஷ்யகாரர் அநுஸந்திக்கிறாரோ, பரமாசார்யராய் விளங்

acharya.org

கும் அந்த ஸ்ரீஆளவந்தாரை துதிக்கின்றோம்) (கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை) என்று தேசிகன் ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்துள்ள க்ரந்தங்களை அடைவுபடுத்தி அருளிச்செய்கிறார். ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்துள்ள க்ரந்தங்களுள் பகவத் ஸ்தோத்ரமான இது ஸ்தோத்ர-ரத்நம் என்று குலாவப்படுகிறது.

ஆக இவ்வளவால் த்வயம் மந்த்ரரத்நம் என்றும், ஸ்ரீவிஷ்ணுபுராணம் புராணரத்நம் என்றும் ஸ்ரீஆளவந்தாரருளிய பகவத் ஸ்தோத்ரம் ஸ்தோத்ரரத்நம் என்று மூன்று ரத்நங்களைப் பற்றி சிறிது அநுபவித்தோம்.

ஆசார்ய-ரத்நம்

இனி நான்காவது ரத்நம் நம் ஸ்வாமியான ஆசார்ய ரத்நம். இதுதன்னை ஈண்டு அநுபவிப்போம். ஸ்ரீவிஷ்ணுபுராண ப்ரோக்தமான பக்திமார்க்கமும் ஸ்தோத்ர ரத்ந ப்ரோக்தமான ந்யாஸ சரணவரண மார்க்கங்களும் த்வயத்தினுடைய பூர்வபக்ஷ ஸித்தாந்தார்த்தங்கள் என்பர் நம் பெரியோர். ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை, ஸ்ரீபிள்ளைலோகாசார்யர், ஸ்ரீஅழகியமணவாளப் பெருமாள் நாயனார், ஸ்ரீமணவாளமாமுநிகள் ஆகிய பூர்வர்களின் க்ரந்தங்களில் இது வ்யக்தம் என்று ஸ்ரீவசநபூஷணமீமாம்ஸா பாஷ்யத்திலே ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டுள்ளது. இதுதன்னைத் தெள்ளத் தெளிய கற்றறிந்த பெரியார் நம் ஸ்வாமி சதுஶ் ஶாஸ்த்ர வித்வான் வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி. இவரே ஆசார்ய-ரத்நம்.

மந்த்ர-ரத்நத்தையும், புராண-ரத்நத்தையும் ஸ்தோத்ர-ரத்நத்தையும் ஸார்த்தமாக உள்ளங்கை நெல்லிக்கனியாக ஸாக்ஷாத்கரித்தவர் நம் ஸ்வாமி. இவற்றைத் தாம் அறிந்ததோடு நில்லாமல் பல அதிகாரிகளுக்கு போதித்தவர். ஸ்ரீபராஶர பகவானையும், ஸ்ரீபராங்குஶ முநிவரையும், ஸ்ரீயாமுநாசார்யரையும் போலே இவரும் பரம-உதாரரே. இவர் பரமஶாந்தஶீலர். நம் ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யாரம்பத்திலே ஆசார்ய லக்ஷணம் கூறுங்கால் - *ஸத்-ஸந்தாந ப்ரஸூத ஸத$_3$ாசார நிஷ்ட$_2$ ஆத்ம கு$_3$ணோபேத வேத$_3$வித$_3$-ஆசார்ய* என்று அருளிச்செய்துள்ளார். *தமஸோ வா ஏஷ தம: ப்ரவிஶதியம் அவித்$_3$வாந் உபநயதே* என்றும் *தஸ்மிந் அபி$_4$ஜந வித்$_3$யா ஸமுதேத$_3$ம் ஸமாஹிதம் ஸம்ஸ்கர்த்தாரம் ஈப்ஸேத்* என்றும் *யஸ்மாத் த$_4$ர்மாந் ஆசிநோதி ஸ ஆசார்ய:* என்றும் *ஸ ஹி வித்$_3$யாத: தம் ஜநயதி தத் ஶ்ரேஷ்டம் ஜந்ம* என்றும் ஆபஸ்தம்பர் அருளிச் செய்துள்ளார். இதுதன்னை அடியொற்றியே ஸ்ரீபாஷ்யகாரரும் அருளிச் செய்துள்ளார் என்று ஶ்ருதப்ரகாஶிகையில் வ்யக்தம்.

acharya.org

ஆசார்யனுகிருன் ஸத்ஸந்தாந ப்ரஸூதனுயும் ஆசாரஶீலனுயும் ஆத்மகுணுேபேதனுயும் வேதார்த்தாபிஜ்ஞனுமாவான் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வளவும் பொருந்தியுள்ள ஸதாசார்ய ரத்நம் நம் ஸ்வாமி என்பது உலகமறிந்த உண்மை. உயர்ந்த குடிப்பிறப்பும் உயர்ந்த வேதார்த்த ஜ்ஞாநமும் இருப்பதே அரிது. அதுதன்னிலும் அரிது ஶாந்தியாகிற குணம். * அத அஷ்டெ$_2$ள ஆத்மகு$_3$ணா: * என்று கூறப்பட்டுள்ள குணங்கள் ஆத்ம குணங்கள். *ஆத்மகு$_3$ணா: அக்ரோத$_4$ாத$_3$ய: அநேந ஸமாஹித ஶப்$_3$த$_3$ார்த்த$_2$ உக்த: * என்று ஶ்ருதப்ரகாஶிகை.

ஸகல ஶாஸ்த்ர தாத்பர்யமே ஶாந்தியில்தான் உள்ளது. அது நம் ஸ்வாமியிடத்தில் பரிபூரணம். ஆசார்யன் தன்னை ஆசார்யனுக கருதுவது தகாது என்று ஸ்ரீவசநபூஷணம் கூறுகிறது. இதுதன்னை நாம் கண்கூடாகக் காண்பது நம் ஸ்வாமியிடத்திலே என்பது ஸத்யம். ஸ்வாமி எம்பெருமானுருடைய புநரவதாரபூதர் என்று உலகம் போற்றும் உத்தமரான ஸ்ரீ உ வே ஸ்ரீபெரும்பூதூர் ஆஸூரி பெரியராமாநுஜாசார்ய ஸ்வாமி திருவடிகளில் அந்தரங்க ஶிஷ்யராய் அடிபணிந்து ஸர்வார்த்த-க்ரஹணம் செய்தவர் நம் ஸ்வாமி.

ஸதாசார்ய ஸச்சிஷ்ய லக்ஷணங்களின் எல்லை நிலம் நம் கூரத்தாழ்வான் என்பர் பெரியோர். அவரே நம் ஸ்வாமியாகிய இவர் என்பது உண்மையிலும் உண்மை.

நம் ஸ்வாமியிடத்தில் வித்யா க்ரஹணம் செய்தவர் பலர். அடியேனும் 1969ம் வருஷத்தில் திருவரங்கத்தில் ஸ்ரீஸ்வாமி ஸந்நிதியில் ஆகம ப்ராமாண்யம், ஸித்தித்ரயம், ஸ்ரீபாஷ்யத்தில் சில ப்ரகரணங்கள் ஶிக்ஷிக்கப் பெற்றவன். நம் ஸ்வாமி பெருத்த ஶாஸ்த்ரார்த்தங்களையும் அவலீலையாக எடுத்துக் கொடுக்கும் பாங்கை அந்தரங்கர்களே அறிவர்.

உத்$_3$க்$_3$ருஹ்ணதீம்-உபநிஷத்ஸு நிகூ$_3$ட$_3$ம்-அர்த்த$_2$ம்
சித்தே நிவேஶயிதும்-அல்ப-தி$_4$யாம் ஸ்வயம் ந:|
பஶ்யேம லக்ஷ்மணமுநே: ப்ரதிபந்ந-ஹஸ்தாம்
உந்நித்$_3$ர-பத்$_3$ம-ஸுப$_4$க$_3$ாம்-உபதே$_3$ஶ-முத்$_3$ராம் ||

(அல்ப மதிகளான நம் மனதிலே உபநிஷத்துக்களின் ரஹஸ்யார்த்தங்களை நன்கு பதிய வைப்பதற்காக தானே மேலே எடுத்து வருவதாய்,
நம் ஸ்வாமி எம்பெருமானுருடைய திருக்கையில் பொருந்தியதாய்,
அலர்ந்த தாமரை மலர் போல் மிக அழகியதாய் இருப்பதான ஜ்ஞாந முத்ரையை ஸேவிப்போம்)

என்று தேஶிகன் யதிராஜ ஸப்ததியில்(25) அநுபவித்த ப்ரகாரத்திலே நம் ஸ்வாமியும் உபநிஷத்துக்களின் ரஹஸ்யார்த்தங்களை மந்தமதிகளான நாமும் அறியும்படி உபதேஶிக்கும் பாங்கை

acharya.org

உடையவர். அடியேனிடத்தில் ஸ்ரீஸ்வாமிக்கு அபாரமான கருணையென்பது ஆத்மஸாக்ஷிக மானதொன்று.

ஆர்வசனபூடணத்தின் ஆழ்பொருளெல்லாமறிவார்*
ஆரதுசொன்னேரிலனுட்டிப்பார்* ஓரொருவ
ருண்டாகில் அத்தனைகாணுள்ளமே* எல்லார்க்கும்
அண்டாததன்றோவது

(உபதேசரத்தினமாலை - 55) என்று ஸ்ரீமணவாளமாமுநிகள் திருவுள்ளம் உகக்கும்படி விளங்கிய அத்விதீயர் நம் ஸ்வாமி என்பது உண்மை. இத்தகைய வைதுஷ்யமும் இத்தகைய ஶாந்தியும் ஒருங்கே அமையப் பெற்றது பொற்றாமரை நறுமணமுடைத்ததைப் போலேயாகும்.

அடியேனுடைய தகப்பனார் ஶதாப்தீ மஹோத்ஸவம் க்ரோதந மீன ஶ்ரவணத்தில் நடந்தது. அதற்கு அங்கமாக, *கஜஸிம்ஹகதிவிசாரம்* என்றொரு கருத்தரங்கு திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸந்நிதி திருவாய்மொழி மண்டபத்தில் 9-3-86 அன்று நடைபெற்றது. பல வித்வான்களும் மஹநீயர்களும் ஆஸ்திகர்களும் பக்தர்களும் எழுந்தருளி இருந்தார்கள். ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீமத் பரமஹம்ஸ த்ரிதண்டி ஸ்ரீமந்நாராயணஜீயர் ஸ்வாமி விழாத் தலைவராக எழுந்தருளியிருந்து நடத்தி வைத்தருளினார். அவ்வமயம் அடியேனுடைய ப்ரார்த்தனைக்கு இணங்கி நம் ஸ்வாமி எழுந்தருளியிருந்து எல்லாரையும் குளிரக் கடாக்ஷித்தருளி கருத்தரங்குக்குத் தலைமை தாங்கி தொடக்கவுரையும் அநுக்ரஹித்தருளியது ஸ்ரீவைஷ்ணவ உலகமே மறக்க முடியாததொன்றாகும். பிறகு சில நாட்களுக்குள் நம் ஸ்வாமி திருநாட்டுக்கு எழுந்தருளியது நம்முடைய பரமதௌர்பாக்யமே. காசை இழந்தவனுக்கும் பொன்னை இழந்தவனுக்கும் ரத்நத்தையிழந்தவனுக்கும் து:க்கம் ஒத்திராது என்று ஈடு கூறுகிறது.

ஆயினும் அன்னாருடைய ஸ்தாநத்திலே திருமாளிகையின் சின்னஸ்வாமி ஸ்ரீ உ வே ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி எழுந்தருளியிருந்து திருமாளிகையையும் சிஷ்யகோடியையும நிர்வஹிக்க வல்லவரே என்று நாம் ஆறியிருக்கலாம்.

அன்னாருடைய திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடி நிற்கிறேன் அடியேன்.

acharya.org

ஸ்ரீவேணுகோபால மங்களம்

திருநாங்கூர் ஸ்ரீவைகுந்தவிண்ணகரம் ப்ரதிவாதிபயங்கரம்
திருமாளிகைத் திருவாராதந எம்பெருமான் வீதியார வருவான் -
ஸ்ரீவேணுகோபாலன் விஷயமாக ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம்
அண்ணா அநுஸந்தித்தது
ஸ்ரீ உ வே திருக்கண்ணபுரம் ஶடகோபாசார்ய ஸ்வாமி
எழுதிய பொழிப்புரையுடன்

अस्तु गोपालबालाय नित्यायपरमात्मने |
भक्तवात्सल्यनिधये नित्यभोग्याय मङ्गलम् || 1

அஸ்து கே$_3$ாபால-ப$_3$ாலாய நித்யாய-பரமாத்மநே |
ப$_4$க்த-வாத்ஸல்ய-நித$_4$யே நித்ய-பே$_4$ாக்$_3$யாய மங்க$_3$ளம் ||

ஆயர் சிறுவனாய் நித்யனாய் பக்தர்களுக்கு வாத்ஸல்யநிதியாய் எப்போதும் அநுபவிக்கத் தக்கவனான பரமாத்மாவுக்கு மங்களம்.

चित्तदृक्मोहनाङ्गाय श्रीमते नन्द सूनवे |
रुक्मणी सत्यभामाभ्यां नित्ययुक्ताय मङ्गलम् || 2

சித்தத்$_3$ருக்-மோஹநாங்க$_3$ாய ஸ்ரீமதே நந்த$_3$ ஸூநவே |
ருக்மணீ ஸத்யப$_4$ாமாப்$_4$யாம் நித்ய-யுக்தாய மங்க$_3$ளம் ||

மனதையும் கண்களையும் மயக்கும் வடிவுடையவனும் ருக்மணீ ஸத்யபாமையுடன் எப்போதும் கூடியிருக்குமவனுமான நந்தகுமாரனுக்கு மங்களம்.

इन्दुपुष्करिणितीरे विमानमधितिष्ठमे |
वेदा मोदाह्वयं चन्द्रपुरनाथाय मङ्गलम् || 3

இந்து$_3$-புஷ்கரிணிதீரே விமாநம்-அதி$_4$திஷ்ட$_2$மே |
வேத$_3$ா மோத$_3$ாஹ்வயம் சந்த்$_3$ரபுரநாத$_2$ாய மங்க$_3$ளம் ||

சந்த்ர புஷ்கரிணிக் கரையில் விமாநத்தில் வீற்றிருப்பவனும் வேதத்தில் ஆனந்தம் என்று சொல்லப்படுபவனுமான சந்த்ரபுரநாதனுக்கு மங்களம்.

acharya.org

वन्दारुजनबृन्दानां मन्दाराय महात्मने ।

नन्दात्मजाय हरये मम नाथाय मङ्गलम् ॥ 4

வந்த$_3$ாருஜந-ப்$_3$ருந்த$_3$ாநாம் மந்த$_3$ாராய மஹாத்மநே ।

நந்த$_3$ாத்மஜாய ஹரயே மம நாத$_2$ாய மங்க$_3$ளம் ॥

அடிபணியுமவர் கூட்டங்களுக்கு வேண்டியவற்றைத் தரும் மந்தார வ்ருக்ஷமாயும் நந்தகோபன் சிறுவனும் ஹரியுமான மஹாத்மாவுக்கு மங்களம்.

पारिजाततरोर्मूले फणीन्द्रफणमण्डिते ।

प्राप्तवासाय गोपीनां भाग्यरूपाय मङ्गलम् ॥ 5

பாரிஜாத-தரோர்-மூலே ப$_2$ணீந்த்$_3$ர-ப$_2$ணமண்டி$_3$தே ।

ப்ராப்தவாஸாய கோ$_3$பீநாம் ப$_4$ாக்$_3$யரூபாய மங்க$_3$ளம் ॥

பாரிஜாத மரத்தின் அடியையும் ஆதிசேஷன் படத்தின் கீழையும் இருப்பிடமாகக் கொண்டவனாய் கோபியரின் பாக்யமானவனுக்கு மங்களம்.

दिव्यरत्न किरीटाय श्रीमते पीतवाससे ।

भव्यश्री शङ्खचक्राय बालगोपाय मङ्गलम् ॥ 6

தி$_3$வ்யரத்ந கிரீடாய ஸ்ரீமதே பீதவாஸஸே ।

ப$_4$வ்யஸ்ரீ ஶங்க$_2$சக்ராய ப$_3$ாலகோ$_3$பாய மங்க$_3$ளம் ॥

திவ்ய-ரத்ந-கிரீடமும் பீதாம்பரமும் தரித்து தனக்கு அடங்கிய ஶங்கம் சக்ரம் இவற்றை உடையவனாய் பிராட்டியுடன் கூடியிருப்பவனுக்கு மங்களம்.

जीवातवे त्रिजगतां दिव्यज्ञानप्रधायिने ।

कृपाम्बु निधये नित्यं गीताचार्याय मङ्गलम् ॥ 7

ஜீவாதவே த்ரிஜக$_3$தாம் தி$_3$வ்யஜ்ஞாந-ப்ரத$_4$ாயிநே ।

க்ருபாம்பு$_3$ நித$_4$யே நித்யம் கீ$_3$தாசார்யாய மங்க$_3$ளம் ॥

முவுலகிற்கும் அருமருந்தானவனும் திவ்யஜ்ஞாநத்தை அளிப்பவனும் எப்போதும் க்ருபைக் கடலானவனுமான கீதாசார்யனுக்கு மங்களம்.

त्रिभङ्गि ललिताङ्गाय स्निग्ध नीलालकश्रिये ।
गोवर्धन धरायास्तु गोविन्दाय मङ्गलम् ॥ 8

த்ரிப$_4$ங்கி$_3$ லலிதாங்க$_3$ாய ஸ்நிக்$_3$த$_4$ நீலாலகஶ்ரியே |
கே$_3$ாவர்த்த$_4$ந த$_4$ராயாஸ்து கே$_3$ாவிந்த$_3$ாய மங்க$_3$ளம் ||

ஸாமுத்ரிகா லக்ஷணம் பொருந்திய அழகிய அங்கங்களையுடையவனும் அழகிய அடர்ந்த கருங் கூந்தலையுடையவனும் கோவர்த்தந மலையைத் தாங்கியவனுமான கோவிந்தனுக்கு மங்களம்.

श्रीवादि भीकरार्येण श्रीरम्यवरयोगिनः ।
लब्धाय गोपपालाय नित्यश्रीर्नित्यमङ्गलम् ॥ 9

ஸ்ரீவாதி$_3$ பீ$_4$கரார்யேண ஸ்ரீரம்யவரயோகி$_3$ந : |
லப்$_3$த$_4$ாய கே$_3$ாபபாலாய நித்யஸ்ரீ : நித்யமங்களம் ||

ஸ்ரீமணவாளமாமுநிகளிடமிருந்து அடைந்த ப்ரதிவாதி பயங்கரம் என்ற விருது பெற்றவரால் கோபாலனுக்கு புகழும் மங்களமும் எப்போதும் (இருக்கட்டும்).

मङ्गलाशासनपरैर्मदाचार्यपुरोगमैः ।
सर्वैश्च पूर्वैराचार्यैः सत्कृतायास्तु मङ्गलम् ॥ 10

மங்க$_3$ளாஶாஸநபரைர்-மத$_3$ாசார்யாய-புரோக$_3$மை : |
ஸர்வைஶ்ச பூர்வைராசார்யை : ஸத்க்ருதாயாஸ்து மங்க$_3$ளம் ||

மங்களாஶாஸநமே பொதுபோக்காக உள்ள அடியேனுடைய ஆசார்ய-ஶ்ரேஷ்டர்களாலும் எல்லா பூர்வாசார்யர்களாலும் வந்த உண்மை ஜ்ஞாநத்துக்கு மங்களம் உண்டாகட்டும்.

ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம் அண்ணா திருவடிகளே சரணம்

acharya.org

திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் வைகுந்தவிண்ணகரம் திருமாளிகை வைபவம்

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

ஸ்ரீமணவாளமாமுநிகள் நியமித்தருளிய அஷ்டதிக்கஜாசார்யர்களில் ஒருவராய் அவரால் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸநாதிபத்யத்தையும் ஸ்ரீவைஷ்ணவதாஸன் என்னும தாஸ்யநாமத்தையும் அருளப்பெற்று பெரும்புகழுடன் விளங்கியவர் ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம் அண்ணா. அவருடைய மூன்று திருக்குமாரர்களுடைய திருவம்ஶவ்ருக்ஷமும் ஶாகோபஶாகமாக வளர்ந்து நாற்றிசையிலும் விளங்கா நிற்கின்றது. அதில் மூத்த திருக்குமாரரான அண்ணன் அப்பாவின் வம்ஶ வ்ருக்ஷத்தின் ஒரு ஶாகை திருவிந்தளூரிலும் திருநாங்கூரிலும் பரந்திருக்கிறது. இந்த வம்ஶத்தில் அவதரித்த முன்னோர்கள் திருவரங்கம் திருக்குடந்தை முதலான திவ்யதேஶங்களில் வாழ்ந்து வந்தனர். ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம் அண்ணா தொடங்கி ஐந்தாவது தலைமுறையில் திருக்குடந்தை திருமலாசார்ய ஸ்வாமி ஆராவமுதன் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தார். இவருடைய திருப்பேரனாராகிய திருமலாசார்யர் ஸ்வாமிக்கு இரண்டு திருக்குமாரர்கள். ஜ்யேஷ்டர் ஆராவமுதாசார்யர். கநிஷ்டர் புருஷோத்தமாசார்யர். ஜ்யேஷ்ட பரம்பரையின் திருமாளிகை வைகுந்த விண்ணகர திருமாளிகையாம். கநிஷ்ட பரம்பரையின் திருமாளிகை வண்புருடோத்தம திருமாளிகையாம். ஜ்யேஷ்ட ஸந்ததியார் ஶிஷ்யபரிபாலநத்தையும், கநிஷ்ட ஸந்ததியார் திருநாங்கூர் திவ்யதேஶ பரிபாலநத்தையும் முக்யமாகக் கொண்டனர். இரு ஸந்ததியாரும் உபயவேதாந்தாசார்யர்களாய் வித்வந்மணிகளாய்த் திகழ்ந்து விளங்கினர். ஜ்யேஷ்டரான ஆராவமுதாசார்யருடைய ஸந்ததியில் ஏழாவது தலைமுறையில் திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி அவதரித்தருளினார். இவருடைய காலத்தில் ஸ்ரீவைகுந்தவிண்ணகரம் திருமாளிகை பெரும் புகழ் பெற்று விளங்கிற்று. இந்த ஸ்வாமி சதுஶ் ஶாஸ்த்ரங்களிலும் வல்லவராய், உபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்யராய், ஶிஷ்ய ஸம்பத்துடன் விளங்கி வந்தார். இந்த ஸ்வாமியே அடியோங்களுடைய (ப்ர.ப.அண்ணங்கராசார்யர், ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்யர்களுடைய) பிதாமஹர். இந்த ஸ்வாமியின கூடப் பிறந்த ஸஹோதரர்கள் (1) ஸ்ரீநிவாஸாசார்யர் (2) ஆராவமுதாசார்யர் (3) திருமலாசார்யர் என மூவர். பெரிய ஸ்வாமியின் நியமநத்தின் பேரில் ஹைதராபாத் ஸ்ரீபூர்ணமல்ஜீ கனேஷ்வாலா என்னும் ஸேட்டுகளின் ப்ரார்த்தனைக்கு இணங்கி புஷ்கரத்துக்கு எழுந்தருளி (அங்கு ஸ்ரீவேணுகோபாலன் ஸ்ரீரங்கநாதன் இவர்களுக்கு ஸந்நிதி கட்டி ப்ரதிஷ்டை செய்த) பெருமாள் கோவில் ப்ர.ப.ஆத்ய அநந்தாசார்ய ஸ்வாமிக்குப் பிறகு அவருக்கு அந்தரங்கரான திருநாங்கூர் ஸ்ரீநிவாஸாசார்யர் காதியில் அபிஷிக்தராய் ஆசார்யபதத்தை வஹித்து புஷ்கரம் ஸந்நிதி மர்யாதைகளையும பெற்று வந்தார்.

இவர் புஷ்கரத்தில் எழுந்தருளியிருக்கும் போதே பெருமாள்கோவிலில் தம் திருக்குமாரத்திக்கு ஒரு திருமாளிகை கட்டிக் கொடுத்து திருநாங்கூரில் ஸ்ரீவைகுந்தவிண்ணகரம் திருமாளிகையையும் பெரிதாகக் கட்டியருளினார். இவர்க்கு புத்ரஸந்ததி இல்லாமையால் இவர் தம்பியே இவருக்குப்பின் காதியில் அபிஷிக்தரானார். அவருக்கும் புத்ர ஸந்ததி இல்லாமையால் காதி க்ருஷ்ணமாசார்யரை ஸ்வீகாரம் செய்து கொண்டார். இந்த காதி க்ருஷ்ணமா-

acharya.org

சார்ய ஸ்வாமியின் திருக்குமாரரே ஜகத்குரு என்கிற பிருதுடன் மஹாவைபவசாலியாய் விளங்கிய காதி அநந்தாசார்யர் ஸ்வாமியாவார்.

மூன்றுவது ப்ராதாவான திருமலாசார்ய ஸ்வாமி திருநாங்கூரிலேயே திருத்தமையனார் ஸ்ரீரங்கா சார்யர் ஸ்வாமியுடன் வாழ்ந்து வந்தார். இவரது மூன்றுவது திருக்குமாரரான க்ருஷ்ணமா சார்ய ஸ்வாமி ஶாஸ்த்ரங்களில் வல்லவராய் ராஜஸ்தாநத்தில் தோடாவைப் பஹுமானமாகப் பெற்று சாற்றிக் கொண்டிருந்தமையால் தோடா க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி என்று ப்ரஸித்தி பெற்றிருந்தார். இவர் பெருமாள்கோவிலில் சில வருஷங்கள் எழுந்தருளியிருந்து ஶாஸ்த்ர ப்ரவசநங்கள் செய்து போந்தார்.

ப்ர.ப.ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி ஸந்நிதியில் கபிஸ்தலம் தி.அ.அநந்தாசார்ய ஸ்வாமியும் ஆடூர் ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியும் உபயவேதாந்த ரஹஸ்ய க்ரந்தங்களைக் கசடறக் கற்றறிந்தவர்கள். ஆடூர் ரங்கஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி பரிபூர்ணமாக ஸகல க்ரந்தங்களை யும் வரியடைவே காலக்ஷேபம் செய்தது ஸ்ரீரங்காசார்யர் ஸ்வாமி ஸந்நிதியிலேயே. ஆடூர் ஸ்வாமியும் எம்பார்ஜீயர் ஸ்வாமியும் (பூர்வாஶ்ரமத்தில் க்ருஷ்ணமாசார்யர் என்று திருநாமம் உடையவர்) திருநாங்கூரில் ஸ்ரீவைகுந்தவிண்ணகரம் திருமாளிகையில் ப்ர.ப. ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியுடன் *போதயந்த: பரஸ்பரம்* என்கிறபடியே வேதாந்த விசாரம் செய்துகொண்டு மகிழ்ந்திருந்தனர்.

ஆடூர் ஸ்வாமி ஸ்ரீபெரும்பூதூருக்கு எழுந்தருளி அங்கே பலகாலம் வஸித்து பகவத்விஷய காலக்ஷேபம் நடத்திப் பலரையும் வாழ்வித்தருளினுர். ஆடூர் ஸ்வாமி வாயிலாக திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீரங்காசார்யர் ஸ்வாமியின் பெருமை தொண்டை மண்டலத்திலும் பரவிற்று. இவ் வண்ணம் மஹநீயர்களான மஹாசார்யர்களின் ஸம்பந்தமுடையது வைகுந்த விண்ணகரம் திருமாளிகை.

ஸ்ரீ உ வே ப்ர.ப. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி வைபவம்

திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீரங்காசார்யர் ஸ்வாமியின் அத்விதீய குமாரராக ப்ர.ப.ஸ்ரீக்ருஷ்ண-மாசார்ய ஸ்வாமி பஹுதாந்ய ஆடி உத்தரட்டாதியில் அவதரித்தருளினுர். ஸ்வாமி அவதரிப் பதற்கு இரண்டு மாதங்கள் முன்பே பகுதாந்ய வைகாசியில் க்ருஷ்ண ஏகாதஶியில் ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமி திருநாடலங்கரித்து விட்டார். ஆகையால் ஸ்வாமியின் பரிபாலநம் திருத்தாயார், ஸஹோதரிகள், மாதுலரான (அம்மானுன) கபிஸ்தலம் தி.அ.அநந்தாசார்யர் ஸ்வாமி இவர்களுடையதாயிற்று. இவர்களின் பரிவுடன் கூடின பரிபாலநத்தில் ஸ்வாமி ஒரு குறைவுமின்றி வளர்மதி போல் வளர்ந்து வந்தார். உசித காலத்தில் உபநயந ப்ரஹ்மோ-பதேஶ ஸம்ஸ்காரம் செய்விக்கப் பெற்று சிறியதகப்பனுரான திருமலாசார்ய ஸ்வாமியால் பஞ்சஸம்ஸ்காரம் செய்விக்கப்பெற்று அவரிடமே ஸ்வரூபக்ரந்தங்களையும் அருளிச்செயல் களையும் அத்யயநம் செய்தார். உசித காலத்தில் தில்லைத்திருச்சித்திரக்கூடம் விஞ்சிமூர்

acharya.org

ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் (இன்ஸ்பெக்டர் சாமி அய்யங்கார் என்று ப்ரஸித்தமானவரின்) மூன்றுவது திருக்குமாரத்தியான செண்பகவல்லியம்மங்காரைத் திருமணம் புரிந்து இனிது இல்லறம் நடத்தி வந்தார். இன்ஸ்பெக்டர் சாமி அய்யங்கார் என்னும் விஞ்சிமூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி திருநாங்கூர் பதினோரு கருடஸேவை மஹோத்ஸவத்தை ஸ்தாபித்தவர். அந்த ஸ்வாமி தம் மங்களமான திருவுள்ளத்தால் ஆரம்பித்து வைத்த திருநாங்கூர் பதினோரு கருட ஸேவை உத்ஸவம் மேன்மேலும் சிறப்பாக ப்ரதிவருஷம் தை அமாவாஸ்யைக்கு மறுதினம் நடைபெற்று வருகிறது.

அம்மானுன கபிஸ்தலம் தி.அ.அநந்தாசார்யர் ஸ்வாமியிடம் கோயிலில் ஸ்வாமி திருமாளிகை யிலேயே இருந்துகொண்டு பகவத்விஷயம், ஸ்ரீவசநபூஷணம், ஆசார்ய ஹ்ருதயம் மற்றும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களைக் காலக்ஷேபம் கேட்டு ஸ்வாமியும் காலக்ஷேப ப்ரவசநங்கள் செய்ய வல்லவரானுர். இவ்விஷயம் *அம்புவியில் அநந்தார்யன் அருளுடையோன் வாழியே* என்று ஸ்வாமியின் வாழித்திருநாமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திருக்கண்ணபுரம் பட்டப்பா ஸ்வாமியிடம் ந்யாயமீமாம்ஸாதி ஸாமாந்ய ஶாஸ்த்ரங்களைக் கற்றுர். கோயிலில் எம்பார் ஸ்ரீக்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் கேட்டார். பால்யத்தில் (சிறுவயதில்) திருவெள்ளக்குளத்துக்கு (அண்ணங்கோவிலுக்கு) தெற்கே அரை மைலில் உள்ள அஞ்சாமனையில் ப்ரஸித்த வித்வத்வரிஷ்டராய் எழுந்தருளியிருந்த ஶௌரிப்பெருமாள் ஸ்வாமியிடம் ஸம்ஸ்க்ருத பாடம் ஶப்தம், அமரம், காவ்யம், நாடகம் முதலானவற்றைக் கற்றிருந்தார். ஸ்வாமியோடுகூட திருவெள்ளக்குளம் ப்ர.ப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும் ஸஹபாடியாக ஶௌரிப்பெருமாள் ஸ்வாமியிடம் பாடம் கேட்டவர். இவர் பரமரஸிகர். ஶௌரிப்பெருமாள் ஸ்வாமியும் பரம ரஸிகராம். நம் ஸ்வாமியும் திருவெள்ளக்குளம் ஸ்வாமியும் ரஸமாக வார்த்தையாடிக் கொள்வார்களாம். இது செவிவழிச் செய்தியாகும்.

ப்ர.ப.ஸ்ரீக்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி முதலில் காழிச்சீராம விண்ணகரத்தில் (தாடாளன் ஸந்நிதியில்) திருமந்த்ரார்த்த காலக்ஷேபம் ஸாதித்தார். சாற்றுமுறை தினம் ஸ்வாமியின் தனியன் ஏற்படுத்தப்பட்டு அநுஸந்திக்கப்பட்டது. சீர்காழி ஸம்ஸ்க்ருத பண்டிதர் க்ருஷ்ண-மாசார்யரால் தனியன் அநுஸந்திக்கப்பட்டது.

சுப்ரீம்கோர்ட ஜட்ஜ் ஸர் S.வரதாசார்யரின் அம்மான் ஸ்ரீ உ வே கோபாலஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி ப்ரார்த்திக்க, பேயாழ்வார் அவதார திவ்யதேஶமான சென்னை மயிலாப்பூர் கேஶவப் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளி, அங்கு ஸம்ப்ரதாய க்ரந்த காலக்ஷேபம் ஸாதித்து வந்தார். ஸ்ரீகவலக்கண்ணன்செட்டிசாரிடி ராமாநுஜம் செட்டியாருடைய ஆதரவினுல் சென்னகேஶவப் பெருமாள் ஸந்நிதியிலும் காலக்ஷேபம் ஸாதித்து வந்தார். திருநக்ஷத்ரம் முதிர்ந்த ஸமயம் சென்னையை விட்டு திருக்கண்ணபுரம், திருவிந்தளூர், சிறுபுலியூர், சோளஸிம்ஹபுரம் முதலான திவ்யதேஶங்களில் சில வருஷங்கள் எழுந்தருளியிருந்து ஸம்ப்ரதாய காலக்ஷேபம் ஸாதித்துப் பலரை உஜ்ஜீவிப்பித்தார். ஸ்வாமி தமது 69வது திருநக்ஷத்ரத்தில் திருநாங்கூர் திருமாளிகையில் ஸர்வஜித் மாசி ஶுக்ல ஸப்தமியில் திருநாடலங்கரித்தார். ஸ்வாமி

acharya.org

த₄ர்மாத்மா ஸத்யஶௌசாதி₃ கு₃ணாநாம்-ஆகர: பர: |
உபமாநமஶேஷாணாம் ஸாதூ₄நாம் யஸ் ஸத₃ாऽப₄வத் ||
(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-15-156) [தர்ம ஸ்வரூபியாயும் - தர்மமே வடிவெடுத்தவனாயும் - பரம தார்மிகனாயும் ஸத்யம் ஆசாரம் முதலான குணங்களுக்கு புதையல் ஸ்தாநமாயும் அப்படியே ஸாதுக்கள் - நல்லோர்கள் அனைவர்க்கும் எப்போதும் உதாஹரண புருஷனாயும் எந்தவொரு ப்ரஹ்லாதாழ்வான் இருந்தானோ (அவனைப் பெற்றாள்)]

என்று போற்றப்பட்ட ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் போலே பரமஸாதுவாய், பரமை காந்தியாய், ஶமதமாதி குணநிதியாய், தம்மை ஆஶ்ரயித்தவர்களுக்கு ப்ரிய ஹித வசநங்களை உபதேஶித்துக் கொண்டு ஸதா பகவத்-பாகவத-ஆசார்ய குணானுபவபரராய் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீ உ வே ப்ர. ப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி வைபவம்

தற்போது ஶதாப்தீ உத்ஸவம் கண்டருளும் ஸ்ரீ உ வே ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியுடைய வைபவங்களை நாம் பலவாறாக கீழே அநுபவிக்கப் பெற்றோம். அவருடைய திருத்தம்பியரான ஸ்ரீ உ வே ப்ர. ப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி திருநாங்கூர் வைகுந்த விண்ணகரம் திருமாளிகை ப்ர. ப. ஸ்ரீக்ருஷ்ணமாசார்ய ஸ்வாமிக்கும் செண்பகவல்லி அம்மங்காருக்கும் மூன்றாவது திருக்குமாரராக 1915 இல் ராக்ஷஸ வருஷம் ஆனி மாதம் ரோஹிணி நக்ஷத்ரத்தில் அவதரித்தார். இவரையே வாஸு ஸ்வாமி என்று பலரும் குறிப்பிடுவர்.

ஸ்ரீநிவாஸாசார்யர் திருநாங்கூர் ஆரம்பப்பள்ளியிலே படித்துக்கொண்டிருந்தபோதே திருத்தகப்பனாரிடம் ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் ஸேவித்தார்.

பிறகு சென்னை காகுமானி சாரிடி ஸம்ஸ்க்ருத பாடஶாலையில் ஆரம்பகாலப் படிப்பை முடித்த இவர் வ்யாகரண ஶிரோமணி பட்டமும் பெற்றார். திருத்தகப்பனாரிடத்திலேயே பகவத்விஷய ரஹஸ்ய க்ரந்தகாலக்ஷேபமும், ஸ்ரீ உ வே ஆஸூரி பெரியராமாநுஜாசார்ய ஸ்வாமியிடம் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபமும் செய்தவர். ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமந்நாராயணஜீயர் ஸ்வாமி ஸ்தாபித்த உபயவேதாந்த ஆசார்யபீடம் மூலமாக *ஸ்ரீமதுபயவேதாந்தாசார்ய* என்ற விருதுடன் தங்கப் பதக்கமும் பெற்றார்.

சென்னை காகுமானி சாரிடி ஸம்ஸ்க்ருத பாடசாலையில் 13 ஆண்டுகள் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். தமிழ்வித்வான் பட்டம் பெற்ற இவர் தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவக் கல்லூரியில் மருத்துவ சரித்ர ஆராய்ச்சிப் பகுதியில் 12 ஆண்டுகள் தமிழ் பண்டிதராகப் பணிபுரிந்தார். 6 ஆண்டுகள் ஸ்ரீரங்கம் குவளக்குடி சிங்கமய்யங்கார் பாடசாலையில் ஸம்ஸ்க்ருத ஆசிரியராகவும், ஸ்ரீரங்கம் நெகமம் சாரிடி சார்பில் உபந்யாஸகராகவும் இருந்தார்.

acharya.org

9-7-1956 அன்று நிறுவப்பட்ட ஸ்ரீராமாநுஜ மிஷனுக்கு அகில இந்திய பொதுச்செயலாள ராக இருந்து எம்பெருமானார் தர்ஸந ப்ரசாரத்தில் ஈடுபட்டார். மிஷன் மூலமாக ஆழ்வார் திருநகரியில் *மாறன் செந்தமிழ் மாநாடு*ம், திருவாலியில் *பரகாலன் பைந்தமிழ் மாநாடு*ம், திருநாராயணபுரத்தில் *எம்பெருமானார் தர்ஸந மாநாடு*ம், ப்ரயாகையில் தாராகஞ்ச் என்ற இடத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்மேளநத்துடன் *அகில பாரத ஸ்ரீவைஷ்ணவ மாநாடு*ம் நடத்தினர். மேலும் மிஷன் மூலமே 21 முறைகள் திவ்யதேஸ யாத்ரைகளை சிறப்புற நடத்தினர். ஸ்ரீராமாநுஜ மிஷன் (இந்தியா) வெள்ளிவிழாவும் 1981 ஜூலை மாதம் விமரிசையாக நடத்தப்பட்டது. பல இடங்களிலும் வித்வத்ஸதஸ் நடத்தி ராமாநுஜ மிஷன் வெளியீடுகளாகப் பல புத்தகங்கள் வெளியிட்டார்.

திருச்சி புத்தூரில் வெளியிடப்பட்டு வந்த *ஸ்ரீவைஷ்ணவஸுதர்ஸநம்* ஆசிரியர் ஸ்ரீ உ வே க்ருஷ்ணஸ்வாமி அய்யங்காருக்கு உசாத்துணையாக இருந்து சுமார் பத்து ஆண்டுகள் அவரது புத்தக வெளியீடுகளுக்கு உதவி வந்தார்.

பாரத தேஸமெங்கும் ப்ரஸித்தி பெற்ற வித்வத்வரேண்யராயிருந்த தமது திருத்தமயனார் ஸ்ரீ உ வே அண்ணங்கராசார்யரைப் போலவே ஜ்ஞாந-அநுஷ்டானங்களில் மட்டுமின்றி ஸமதமாதி குணபரிபூர்ணராய், ஆசார்ய லக்ஷணபூர்த்தி உடையவராய்த் திகழ்ந்தார். இனிமையும் எளிமையும் பொருந்திய உபந்யாஸங்களும் செய்து வந்தார்.

திருநாங்கூரில் பழுதடைந்திருந்த ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம் அண்ணா ஸந்நிதியை தம் பெரு முயற்சியால் பங்களூர் ப்ர.ப.அண்ணா ஸபையின் உதவியோடும் திருமாளிகை ஶிஷ்யர் களுடைய ஸஹாயத்தோடும் ஜீர்ணோத்தாரணம் செய்து ஸம்ப்ரோக்ஷணையும் நடத்தி நித்ய திருவாராதநத்துக்கும் வழிவகுத்து வைத்தார்.

தென்னாசார்ய ஸத்ஸம்ப்ரதாயத்திற்கும் தமது ஶிஷ்யர்களுக்கும் பலவகைகளில் ஊன்று கோலாய் இருந்த ஸ்வாமி தம் 80வது திருநக்ஷத்ரத்தில் (27-12-94) திருநாடு அலங்கரித் தார்.

acharya.org

திருநாங்கூர்

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

சீரே தருங்கதியிற் சேருகைக்கு நானுன்னை
நேரே வணங்கினே னெஞ்சேநீ — பாரில்
அணிமாடம க்கோயி லரங்கனூர் நாங்கூர்
மணிமாடக் கோயில வணங்கு.

வணங்கேன் பிறதெய்வ மாலடியா ரல்லாக்
குணங்கேடர் தங்களுடன் கூடே — னிணங்கிநின்று
வைகுந்த விண்ணகரம் வாழ்த்தவே னீனதன்றோ
வைகுந்த விண்ணகர வாழ்வு. (நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி 31, 32)

திருநாங்கூர், சீர்காழிக்குத் தென்கிழக்கே 11 கிலோமீட்டர் தூரத்திலுள்ளது. பதினொரு திவ்யதேசங்களைத் தன்னகத்தே கொண்டது. திருமங்கையாழ்வார் அவதரித்தருளின திருக்குறையலூரும், அவர் தற்போது அர்ச்சையில் எழுந்தருளியுள்ள திருவாலிதிருநகரியும் இதன் ஸமீபம் உள்ளன. ப்ரதி வருஷமும் திருமங்கையாழ்வார் தை அமாவாஸ்யை திநம் மஞ்சள் குளி உத்ஸவம் கண்டருளி, 11 எம்பெருமான்களையும் மங்களாஸாஸநம் செய்தருளும் அழகும், மறுநாள் 11 கருடஸேவை உத்ஸவ அழகும் அவரவர்கள் அநுபவித்தே அறிந்து கொள்ள வேண்டியவையாகும். 11 ஸ்ரீவிஷ்ணு விமாநங்கள் உள்ள க்ஷேத்ரம் ஸ்வயம்வ்யக்த க்ஷேத்ரத்தை ஒக்கும்.

மறந்தும் புறம்தொழாமாந்தரான மெய்யடியார்களுடன் கலந்து ஸ்ரீவைகுந்தநாதனுடைய குண விபூதிகளைப் பாடி வாழ்த்துமதான வாழ்வு - மன்னுபுகழ் வேதியர்கள் மகிழ்வெய்து நாங்கூர் வைகுந்தவிண்ணகர் வாழ்வுதான். இதன் ஸமீபமுள்ளதால் இத்திருமாளிகை வைகுந்த விண்ணகரம் திருமாளிகை என்று ப்ரஸித்தி பெற்றது.

ரயில் மார்க்கமாகச் செல்வோர் சீர்காழியில் இறங்கி பஸ் பிடித்து நாங்கூர் செல்ல வேண்டும். சீர்காழியிலிருந்து டவுன் பஸ் நாங்கூர் வழியே செல்கிறது. அதைத் தவிர நாகப்பட்டினம், பொறையார் செல்லும் ரூட் பஸ்களில் போய் அண்ணன் பெருமாள் கோவிலில் இறங்கி நடந்து செல்லலாம். மயிலாடுதுறை எனப்படும் மாயவரத்திலிருந்தும் டவுன் பஸ் பூம்புகார் வருகிறது. அதில் பயணம் செய்து பூம்புகாரிலிருந்து திருநாங்கூர் வரலாம்.

acharya.org

திருநாங்கூர் 11 கருடஸேவை உத்ஸவ விஶேஷம்

ஸ்ரீ உ. வே. திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

திருமங்கையாழ்வார் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதன் திருக்கோயிலில் மண்டபம், மதிள், கோபுரம் முதலான திருப்பணிகள் செய்தார். ஒரு கார்த்திகையில் கார்த்திகை அன்று ஸ்ரீரங்கநாதன் திருமுன்பே திருநெடுந்தாண்டகத்தை உள்ளங்கரைந்து இனிமை ததும்பப் பாடினார். ஸ்ரீரங்கநாதன் மிக விரும்பிக் கேட்டு இன்பமுற்று *உமது விருப்பத்தைச் சொல்லும்; அதை நிறைவேற்றித் தருகிறேன்* என்று சொன்னான். ஆழ்வார், *நீர் மார்க்கஶீர்ஷ (மார்கழி) ஶுக்ல ஏகாதஶி முதல் 10 திநங்கள் வேதகோஷத்தைக் கேட்பதைப் போல் திருவாய்மொழியையும் தமிழ்வேதம் என வேதஸாம்யம் கொடுத்துத் திருச்செவி சாற்றியருள வேணும்* என்று வேண்டினார். ஸ்ரீரங்கநாதனும், *அப்படியே ஆகுக* என்றான். திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரை ஆழ்வார்திருநகரியிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து 10 திநங்கள் திருவாய்மொழியைக் கேட்கச் செய்து, முடிவில் ஆழ்வார் நம்பெருமாள் திருவடிகளைத் தொழுமாறு செய்து மீண்டும் ஆழ்வாரை திருநகரியில் எழுந்தருளப் பண்ணி விட்டுத் திரும்பி ஸ்ரீரங்கம் வந்தார். வந்த நாள் தை அமாவாஸ்யை அன்று ஸ்ரீரங்கநாதன் திருமஞ்சனக் காவேரியில் மஞ்சள்குளி உத்ஸவம் கண்டருளினான். மார்கழி ஶுக்ல ஏகாதஶி முதல் 10 திநங்கள் நடைபெற்ற அத்யயந உத்ஸவப் பூர்த்தியின் ஸந்தோஷ நினைவாக இந்த மஞ்சள் நீராட்டு என்னும் மஞ்சள்குளி உத்ஸவம் நடைபெற்றது. ஸ்ரீரங்கநாதன் திருமங்கைாழ்வாருக்கு அத்யயந உத்ஸவத்தைச் சிறப்பாக நடத்தி வைத்ததற்கு பஹுமாநமாக *இந்த உத்ஸவத்தை நீர் உமது ஊரில் உற்றார் உறவினருடன் ஸந்தோஷமாகக் கொண்டாடிக் கொள்ளும்* என்று அனுக்ரஹித்தருளினான். திருமங்கையாழ்வாரும் தமது ஊருக்கு ஸமீபம் திருநாங்கூரில் பெருகும் திருக்காவேரி நதியின் பிரிவான மணிகர்ணிகையில் இவ்வுத்ஸவத்தை நன்றாகக் கொண்டாடினார். அன்று முதல் பிரதிவருஷமும் இந்த உத்ஸவம் நன்கு நடைபெற்று வருகிறது. திருமங்கையாழ்வார் அர்ச்சா திருமேனியுடன் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருநகரியிலிருந்து தை அமாவாஸ்யை விடியற்காலை தமது தர்மபத்நியான குமுதவல்லித் தாயாருடனும் திருவாராதந எம்பெருமானான சிந்தனைக்கினியானுடனும் திருப்பல்லக்கில் திருநாங்கூரில் பெருகும் மணிகர்ணிகைக்கு எழுந்தருளி மஞ்சள்குளி உத்ஸவம் திருமஞ்சனம் தீர்த்தவாரி கண்டருளுகிறார். சுமார் 100 வருஷங்களுக்கு முன் சித்ரகூடம் (சிதம்பரம்) விஞ்சிமூர் ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸாசார்ய (இன்ஸ்பெக்டர் சாமி அய்யங்கார்) ஸ்வாமி ஸ்கூல் இன்ஸ்பெக்டராக திருநெல்வேலி ஜில்லா ஆழ்வார்திருநகரிக்குச் சென்றிருந்தபோது நம்மாழ்வார் கண்டருளும் நவதிருப்பதி கருடஸேவை உத்ஸவத்தை ஸேவித்து இதைப்போன்று திருமங்கையாழ்வாருக்கும் திருநாங்கூர் 11 திருப்பதி கருடஸேவை உத்ஸவம் கண்டருளப் பண்ண வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார். அந்த நல்ல திருவுள்ளம் நல்ல முகூர்த்தத்தில் தோன்றி தொடர்ந்து இன்றளவும் சிறப்பாக இவ்வுத்ஸவம் நடைபெற்று வருகிறது. தை அமாவாஸ்யை, அதற்கு மறுநாள், அதற்கு மறுநாள் என மூன்று நாட்கள் உத்ஸவம் இராப்பகல் முழுவதும் நடைபெறும்.

acharya.org

உத்ஸவ விவரம் :- தை அமாவாஸ்யை விடியற்காலை திருமங்கைமன்னன் திருநகரியில் இருந்து பல்லக்கில் புறப்பட்டு திருக்குறையலூர், திருமங்கைமடம், திருக்காவளம்பாடி, திருமணிக்கூடம், திருப்பார்த்தன்பள்ளி ஆகிய திவ்யதேச எம்பெருமான்களை மங்களாசாஸநம் செய்தருளி பகல் 12மணி சுமாருக்கு மஞ்சள்குளி மண்டபம் எழுந்தருளுகிறார். அங்கு திருவரங்கம் ஸ்ரீஅழகியமணவாளனையும் திருநறையூர் (நாச்சியார்கோயில்) எம்பெருமானை யும் மங்களாசாஸநம் செய்கிறார். பிறகு திருமஞ்சனம், திருப்பாவை சாற்றுமுறை, ததீயாரா தநம் நடைபெறுகிறது. மாலையில் திருமங்கையாழ்வார் திருநாங்கூருக்கு எழுந்தருளி மணி மாடக்கோயில், வண்புருடோத்தமம், வைகுந்தவிண்ணகரம், செம்பொன்செய்கோயில், திருத்தெற்றியம்பலம், அரிமேயவிண்ணகரம் ஆகிய திவ்யதேச எம்பெருமான்களை மங்களா-ஸாஸநம் செய்தருளி இரவு மணிமாடக்கோயில் எழுந்தருளுகிறார் தை அமாவாஸைக்கு மறுநாள் பகலில் 11 எம்பெருமான்களும் ஒரே ஸமயத்தில் மணிமாடக்கோயில் வாசலில் அமைந்த பந்தலில் எழுந்தருளியிருக்க அவர்களை திருமங்கையாழ்வார் -

நந்த$_3$ாதீ$_3$ப க$_4$டப்ரணர்த்தக மஹாகாருண்ய ரக்தாம்ப$_4$க
ஸ்ரீநாராயண புருஷோத்தமபதி ஸ்ரீரத்நகூடாதி$_3$பதி : |
வைகுண்டே$_2$ஶ்வர மாத$_4$வௌச கமலாநாத$_2$ம் ச கே$_3$ாபீபதிம்
நௌம்யேகாத$_3$ஶம் நாக$_3$புர்யதி$_4$பதீந் ஸார்த்த$_4$ம் கலித்$_4$வம்ஸிநா ||

என்ற க்ரமத்தில் மங்களாசாஸநம் செய்கிறார். அப்போது அந்தந்த திவ்யதேச எம்பெருமான் கள் பற்றிய முதற்பாசுரம் ஸேவிக்கப்படுகிறது. பிறகு ஸ்ரீவண்புருடோத்தமன் ஸந்நிதி மணவாள மாமுநிகள் திருமங்கையாழ்வாரை நாள் பாட்டு, வடிவழகு சூர்ணிகை முதலிய பாசுரங்களால் மங்களாசாஸநம் செய்கிறார். பிறகு மண்டபம் சேர்ந்து மாலையில் எல்லாருக்கும் திருமஞ்ச னம் நடைபெறுகிறது. இரவில் எல்லா எம்பெருமான்களுக்கும் கருடஸேவையும் திருமங்கை ஆழ்வாருக்கு ஹம்ஸவாஹனமும் ஸ்ரீமணவாளமாமுநிகள் புறப்பாடும் நடைபெறுகிறது. அதற்கு மறுநாள் திரும்புகையில் திருமங்கையாழ்வார் திருவெள்ளக்குளம், திருத்தேவனார் தொகை, திருவாலி ஆகிய திவ்யதேசங்களை மங்களாசாஸநம் செய்தருளி திருநகரி எழுந் தருளுகிறார். திருவாலி மற்றும் திருநகரி எழுந்தருளும் போது அங்கு கருடஸேவை நடை பெறுகிறது. இவ்வாறு கருடஸேவை உத்ஸவம் ஏற்பட்டு 100வது ஆண்டுவிழா 1994ம் ஆண்டு வெகு விமரிசையாக நடைபெற்றது. அமாவாஸ்யை முதல்நாள் வந்து மறுநாள் பிச்சம் இருந்தால் அமாவாஸ்யையில் ஆழ்வார் புறப்படாமல் மறுநாள் பிச்ச அமாவாஸ்யை நாளில் புறப்படுவார். கனுபாரிவேட்டை ஸமயம் தை அமாவாஸ்யை வந்தால் உத்ஸவ திநம் வேறுபடும். உத்ஸவத்திற்கு வருபவர்கள் இதை நினைவில் கொள்ள வேணும்.

acharya.org

ஸ்ரீவைகுந்தவிண்ணகரம் ஸ்தலபுராணம்

ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ர.ப.ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

முகவுரை

சோழமண்டல மண்டனமயமான திருநாங்கூர் திவ்யதேசத்தில் பதினொரு திருப்பதிகள் திருமங்கைமன்னனால் மங்களாசாஸநம் செய்யப்பெற்று பெரும் புகழையுடைத்தனவாய் விளங்குகின்றன. பதினொரு விஷ்ணு விமானங்கள் உள்ள க்ஷேத்ரம் ஸ்வயம்வ்யக்த க்ஷேத்ரத்தை ஒக்கும் என்பதை ஆகம நூலைக் கற்றறிந்த பெரியோர் பணிப்பர். இந்த திவ்யதேசத்தின் ஸ்தலபுராணத்தில் ஏகாதச (பதினொரு) ருத்ரர்களுக்கு ஸ்ரிய : பதியான ஸர்வேச்வரன் தன்னுடைய ஆதியஞ்சோதியுருவை ஏகாதச ரூபமாகப் பண்ணிக் கொண்டு ஸேவை ஸாதித்தான் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இந்த பதினொரு திவ்யதேசத்து எம்பெருமான்களுக்கும் உபரிசரவஸு என்னும் பரம பாகவதனான அரசன் ப்ரஹ்மோத்ஸவங்களை நடத்தியும் கொடிமதில்கள் மாளிகை கோபுரங்கள் துன்னுமணி மண்டபங்கள் சாலைகள் முதலிய அறப்பெரும் தொண்டுகளைச் செய்தும் உய்ந்து போனான் என்று ஸ்தலபுராணத்தால் தெரிய வருகிறது.

திருநாங்கூர் பதினொரு திவ்யதேசங்களையும் திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம் செய்து அருளினார். ஆழ்வாருக்கு (நம்மாழ்வார்) *உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்* என்கிறபடியே ஸ்ரிய : பதியான ஸர்வேச்வரனுடைய திவ்ய குணாநுபவமே தாரக போஷக போக்யமானவோபாதியும் திருமங்கைமன்னனுக்கு *திருநறையூர்த்தேனை கடல்மல்லைக் கிடந்த கரும்பை திருமாலிருஞ்சோலையங்கட்டியை இன்னமுத வெள்ளத்தை இந்தளூர் அந்தணனை என்று உகந்தருளின நிலத்தின் எம்பெருமான்களே தாரக போஷக போக்யங்களானவோபாதியும் இந்த திவ்யதேசத்து எம்பெருமான்களுக்கும் திருமங்கையாழ்வாருடைய பாலோடு அமுதென்ன கவிதைப் பனுவல்களே தாரகபோஷக போக்யங்களாயின. அதனால் மிக்க வலிவுடையராய் பதியே பரவித்தொழும் தொண்டர் தமக்குக் கதியாய் அடியவர்கட்கு என்றும் அருள்புரிந்து இவ்வேழுலகத்தவர் பணிய இத் திவ்யதேசத்தில் நாடோறும் மகிழ்ந்து இனிது மருவி உறைகின்றனர் போலும்!

அவனுகந்த திவ்யதேசத்தைப் பணிவதொழிய இவ்வாத்மாவுக்கு வேறு உய்யும் வகை இல்லை என்று அறுதியிட்டருளின இவ்வாழ்வார் கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர்மல்லை என்று எம்பெருமான் உகந்து அருளின திருப்பதிகள் தோறும் சென்று பாடியாடித் திரிவர். இவர் த்ரேதாயுகத்தில் உபரிசரவஸுவாக இருந்ததாக ஸ்தலபுராணம் தெரிவிக்கிறது. ஆகையால் திருமங்கையாழ்வாருக்கு இத்திவ்யதேச ப்ராவண்யாதிசயம் இப்போதாக வந்ததன்று ; அது பூர்வஜந்ம ஸித்தமென்று கொள்க.

திவ்யதேசத்து எம்பெருமானைக் காட்டிலும் திவ்யதேசத்திலே இவ்வாழ்வாருக்குண்டான ப்ராவண்யாதிசயம் *மணிமாடக்கோயில் வணங்கு என்மனனே* *வைகுந்த விண்ண

acharya.org

கரம் வணங்கு மடநேஞ்சே *   * அரிமேய விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே *   என்று இப்படியான இவருடைய திருமொழிகளினால் நன்கு விளங்கா நின்றது. உகந்தருளின நிலங்களையே ப்ராபகமும் ப்ராப்யமுமாக அறுதியிட்டருளினார் இவ்வாழ்வார். ஸ்ரீவைஷ்ணவர்கள் உகந்தருளின நிலங்களில் அகமகிழும் தொண்டர்களோடு கூடி உள்ளே இருக்கிறவனுடைய திருக்கல்யாணகுணங்களையும் திவ்யசேஷ்டிதங்களையும் அநுபவித்தால் அவர்களுக்கு இங்கேயே வைகுந்தமாநகரின் வாழ்வு கைகூடும். இந்த கருத்தையே நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதியில தெய்வகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் வைகுந்தவிண்ணகரம் விஷயமான பாசுரத்தில் வெளியிட்டார்.

இவ்விபூதியிலேயே வைகுந்த நாட்டில் ஏக ஸிம்ஹாஸநத்தில் ஸ்ரீபூமிநீளைகளோடு திருவநந்தாழ்வான் மடியில் வீற்றிருக்கும் இருப்பை ஸ்ரீவைகுண்டநாதன் நெடுங்காலம் கடுந்தவம் புரிந்த ஶிவபெருமானுக்கும் ஶ்வேதகேது என்னும் அரசனுக்கும் காட்டியருளினான். அவர்கள் ஸேவித்து நித்யமாய் இங்கே இப்படியே ஸேவை ஸாதித்தருள வேண்டும் என்று ப்ரார்த்திக்க, அதற்கு இணங்கி இன்றும் அப்படியே இந்த திவ்யதேஶத்தில் மூலவரும் உத்ஸவரும் ஸேவை ஸாதித்தருளுகிறார்கள்.

ஸ்ரீவைகுந்த விண்ணகர ஸ்தலபுராணம்

இந்த ஸ்தலபுராணம் வைகுந்த விண்ணகரம் திருமாளிகையில் அடியேனுடைய பிதாமஹர் மஹாவித்வான் திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியால் தாளபத்ரங்களில் நன்கு ஏறியருளப்பட்டது. அது அடியேன் அறிந்தவளவில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது. பாத்ம புராணத்தின் உபரிதந பாகத்தில் தீர்த்த ப்ரஶம்ஸா கட்டத்தில் பலாஶவந-மாஹாத்ம்யம் என்ற பிரிவில் 5வது அத்யாயத்தில் இத்திவ்யதேஶ வைபவம் கூறப்படுகிறது.

अगस्त्य :--
अत: परं प्रवक्ष्यामि वैकुण्ठनगरं शुभम् |
यस्य श्रवणमात्रेण नरो याति परां गतिम् || 1

அகஸ்திய மஹாமுநி ராஜா உபரிசரவஸுவைக் குறித்துச் சொல்லுகிறார் - நான் வைகுண்ட நகரத்தின் வைபவத்தை நன்றாக விளம்புகிறேன். இந்த வைபவத்தைக் கேட்பதினாலேயே கேட்கிறவன் உயர்ந்த கதியை அடைகிறான்.

मणिमाडमहारङ्गात् उत्तरे अत्यद्भुतं महत् |
वैकुण्ठनगरं नाम वर्तते भुवि दुर्लभं || 2

acharya.org

இந்த பூலோகத்தில் மணிமாடக்கோயிலுக்கு வடதிசையில் கிடைத்தற்கரியதும் மிக உயர்ந்ததும் மிக வியப்பை உண்டு பண்ணுவதுமான வைகுந்தவிண்ணகரம் என்று ப்ரஸித்தமான திவ்யதேசம் இருக்கிறது.

इन्द्रादीनां तु देवानां सान्निध्यं ब्रह्मणस्तथा |
यस्मिन् क्षेत्रे सदा राजन् तत्कथं वर्ण्यते मया || 3

எந்த திவ்யதேசத்தில் ப்ரஹ்மா இந்த்ரன் முதலிய தேவர்கள் நித்யம் வஸித்து வருகிறார்களோ அந்த திவ்யதேசத்தின் பெருமையை உள்ளபடி எப்படி விளம்ப இயலும்!

तथाऽपि संप्रवक्ष्यामि यथामति तव प्रभो |
इक्ष्वाकुवम्श संभूत: श्वेतकेतुरिति प्रभु: || 4

ஆனாலும் புத்திக்கெட்டின வரையில் இந்த திவ்யதேசத்தின் பெருமையை உனக்குச் சொல்லுகிறேன். இக்ஷ்வாகு குலத்தில் ஶ்வேதகேது என்றொரு அரசன் தோன்றினான்.

पूर्वं तपश्चकारात्र श्रीवैकुण्ठजिगीषया |
जिताहारो जितक्रोध: त्यक्त सर्व परिग्रह: || 5

அவன் முன்னொரு ஸமயம் ஸ்ரீவைகுண்டம் எனப்படும் ஸ்ரீவிஷ்ணுலோகத்திற்குப் போக வேண்டும் என்னும் ஆசையினாலே ஆஹாரத்தை ஒடுக்கிக் கோபத்தை அடக்கி ஆசையை ஒழித்து தவம் புரியலானான்.

इन्द्रियाणि निगृह्याशु मनस्सम्स्थाप्य चात्मनि |
अग्नि: प्रज्वाल्य पार्श्वेषु बद्ध दृष्टिश्च संस्थित: || 6

அடக்குவதற்கு அரிதான ஐந்து புலன்களையும் அடக்கி பரமபுருஷனிடத்தில் மநோவ்ருத்தியை ஒருப்படுத்தி ஸூர்ய மண்டலத்தை இமையாத கண்களால் பார்த்துக்கொண்டு பஞ்சாக்நியின் நடுவில் இருந்து கொண்டு அரும்பெரும் தவம் புரிந்தான்.

भार्यया वश्यया साकं दमयन्त्या (मदयन्त्या) नृपोत्तम |
एवं कृत्वा तपस्तीव्रं त्यक्त्वा चात्र कलेबरम् || 7

தன்னோடொத்த தன்மையளாய் நல்லொழுக்கமுடைய தர்மபத்நியான தமயந்தியுடன் அந்த

acharya.org

அரச ஸ்ரேஷ்டன் இப்படிக் கடுந்தவம் புரிந்து உடலைத் துறந்தான்.

राजा तु भार्यया साकं विष्णुलोकं जगामह |
गत्वा विष्णुपदं राजा तत्र विष्णुं न दृष्ट्वान् || 8

தன்னுடைய பார்யையோடு ஸ்ரீவிஷ்ணுலோகத்திற்குச் சென்றான். ஸ்ரீவிஷ்ணுலோகத்தை அடைந்ததும் அங்கு ஸ்ரீவைகுண்டநாதனைக் காணவில்லை.

क्षुधया पीडितोऽत्यर्थं निवृत्तः पुनरेव ह |
मार्गमध्ये ददर्शाथ नारदं भगवत्परम् || 9

ஸ்ரீவைகுண்டலோகத்தை அடைந்தும் அங்கு ஸ்ரீவைகுண்டநாதனை ஸேவிக்கப் பெறாமலும் பசியினால் மிகவும் பீடிக்கப்பட்டவனாகவும் அந்த லோகத்தில் இருக்கமாட்டாமல் திரும்பி வரும் பொழுது வழியில் எம்பெருமானுடைய அந்தரங்க பக்தரான ஸ்ரீநாரதபகவானைக் கண்டான்.

दृष्ट्वा तं मुनिशार्दूलं नमस्कृत्य सभार्यया |
पप्रच्छ कारणं सर्वं राजा विगतसाध्वसः || 10

முநிஸ்ரேஷ்டரான ஸ்ரீநாரதரைக் கண்ட ராஜா தன்னுடைய பத்நியோடு அவரை வணங்கினான். ஸ்ரீவிஷ்ணுலோகத்தில் எம்பெருமானை ஸேவிக்கப் பெறாமைக்கும் பசிதாகத்தினால் பீடிக்கப்படு வதற்கும் காரணத்தை வினவினான்.

अहमुग्रं तपः कृत्वा विष्णुलोकं गतो मुने |
तत्र विष्णुर्न दृष्टोऽसौ क्षुधया च प्रपीडितः || 11

முநிவர் பெருமானே! நான் கடுந்தவம் புரிந்து ஸ்ரீவிஷ்ணுலோகத்தை அடைந்தேன். இருப்பினும் அங்கு ஸ்ரீவைகுண்டநாதனை ஸேவிக்கப் பெற்றிலேன். பசி தாகங்களால் மிகவும் வருத்தமுற்றேன்.

विष्णुलोकं गतानां तु क्षुत्तृष्णा नास्ति वै मुने |
इति श्रुतं मया पूर्वं कथं यत्प्रतिभाति मे || 12

முநிவர் பெருமானே! ஸ்ரீவிஷ்ணுலோகத்தை அடைந்தவர்களுக்கு பசி தாகங்கள் உண்டாகா

acharya.org

என்று முன்பு நான் கேட்டிருக்கிறேன். ஆனால் அந்த மர்யாதை மாறிவிட்டதாகத் தெரிகிறது.

श्वेतकेतोर्वच श्रुत्वा नारदो मुनिसत्तमः।
ध्यात्वा मुहूर्तमात्रं तु जगाद वचनं शुभम्॥ 13

ஶ்வேதகேதுவினுடைய இந்த வசநத்தைக் கேட்டு முநிவர் தலைவரான ஸ்ரீநாரதபகவான் த்யாநத்தில் அமர்ந்து விஷயத்தை அறிந்து இனிதாக உரைக்கலானார்.

राजन् पूर्वं त्वया किञ्चित् न दत्तं ब्राह्मणाय वै।
नाग्नौ हुतं च भवता केवलोदरपोषणं॥ 14

அரசனே! பூர்வ-ஜந்மத்தில் அந்தணர்களுக்கு உங்களால் சிறிதளவும் தாநம் செய்யப்பட வில்லை. முறையாக மறைவேள்வியில் ஹோமமும் செய்யப்படவில்லை.

कृतं युवाभ्यां राजेन्द्र यत्कृतं तत्प्रभुज्यते।
तेनायमपकारेण न हृष्टो भगवान् हरिः॥ 15

அவரவர்கள் செய்த நல்வினை தீவினைப் பலன்களை அவரவர்கள் அநுபவித்தேயாக வேண்டும் என்னும் கட்டளைப்படி தவத்தினால் ஸ்ரீவிஷ்ணுலோகத்தை அடைந்தும் ஸ்ரீவைகுண்டநாதனுடைய ஸேவை உங்களுக்குக் கிடைக்கவில்லை.

पलाश विपिनं नाम श्वेतारण्यस्य पश्चिमे।
कावेरीतीरमाश्रित्य वर्तते भुवि सांप्रदं॥ 16

ஸ்ரீவைகுண்டநாதனுடைய ஸேவை கிடைப்பதற்குரிய நல்வழியை உங்களுக்குச் சொல்லுகிறேன். ஶ்வேதாரண்யத்திற்கு மேற்கில் திருக்காவேரியாற்றின் கரையை ஒட்டி பலாஶ வநம் என்றொரு க்ஷேத்ரம் இக்காலத்திலிருக்கிறது.

तस्य दक्षिणभागे तु गजारण्यमिति श्रुतम्।
तत्र गत्वा तपः कुर्वन् तपस्सिद्धिं गमिष्यसि॥ 17

அதன் தென்பாகத்தில் கஜாரண்யம் என்னும் ஸ்தலமிருக்கிறது. நீ அங்கு சென்று தவம் புரிந்து ஸித்தியை அடைவாய்!

acharya.org

तत्र ते भगवान् विष्णुः वैकुण्ठं दर्शयिष्यति।
आत्मानं च ददात्येव भगवान् भक्तवत्सलः॥ 18

அங்கே பகவான் ஸ்ரீவிஷ்ணு (உனக்கு) ஸ்ரீவைகுண்டத்தை காட்டிருள்வன். பக்தர்களிடம் மிகவும் அன்பு பூண்ட ஸ்ரீவைகுண்டநாதன் அவர்களுக்கு தன்னையே தந்தருள்வன்.

एवमुक्त्वा चान्तरधात् नारदो ब्रह्मणः सुतः।
एवं श्रुत्वा मुनेर्वाक्यं नारदस्य महात्मनः॥ 19
जगाम भार्यया सार्धं पलाशवनमद्भुतम्।
स्नात्वा कवेरकन्यायां गजारण्यमवाप ह॥ 20

ப்ரஹ்மாவுடைய திருக்குமாரரான ஸ்ரீநாரதர் இவ்வண்ணம் அரசனுக்கு சொல்லி மறைந்தார். மஹாத்மாவான ஸ்ரீநாரதமுநியின் மொழியைக் கேட்டபின் அவ்வரசன் பார்யையோடு வியக்கத் தக்கதான பலாஶ வநத்தைக் குறித்துப் போகலுற்றான். பலாஶ வநத்தை அடைந்து திருக்காவேரியில் நீராடி கஜாரண்ய ஸ்தலத்தை அடைந்தான்.

ऐरावतेन तु पुरा पूजितं तत्र शङ्करम्।
दृष्ट्वा तं पूजयामास स्वपापस्य निवृत्तये॥ 21

அங்கே ஐராவதம் என்னும் கஜராஜனால் முற்காலத்தில் பூஜிக்கப்பட்டு அதனால் ஐராவதேஶ்வரன் என்று பெயர் பெற்ற மஹாதேவனை தர்ஶித்து தன்னுடைய பாவம் தொலைவதற்காக அவனை பூஜிக்கலானான்.

तेन सम्पूजितो देवः प्रत्यक्षमगमत् तदा।
प्रोवाच तु महाभागं राजानं भगवत्स्पृहम्॥ 22

அவ்வரசனால் நன்கு பூஜிக்கப்பட்ட ஐராவதேஶ்வரன் அவனுக்கு ப்ரத்யக்ஷமானான். பிறகு அரசனால் துதிக்கப்பட்டு ப்ரஸந்ந முகமுடையவனாய் மஹாதேவன் மஹாபாக்யமுடையவனாய் ஸ்ரீவைகுண்டநாதனைப் பெறவேண்டும் என்னும் அவாவோடு கூடின அவ்வரசனைக் குறித்து கூறலானான்.

त्वमहं राजशार्दूल तपः कृत्वा हरिं प्रति।

acharya.org

सर्वपाप विनिर्मुक्तौ गमिष्याव: कृतार्थकौ || 23

வாராய் அரசஸ்ரேஷ்டனே! நானும் நீயும் ஸ்ரீவைகுண்டநாதனைக் குறித்து அரும்பெரும் தவம் புரிந்து ஸகல பாபங்களும் கழியுண்டு க்ருதார்த்தர்களாக ஆவோம்.

इति तौ भूपते देव राजानौ भगवत्परौ |
सहश्रसम्वत्सरान्तं ध्यायन्तौ नृपशङ्करौ || 24
समाधि भेदैर्विविधै: यमैश्च नियमैस्तदा |
तपोभिर्विविधैश्चापि तोषयामासतुर्हरिम् || 25

இவ்வண்ணம் மஹாதேவன் கூற அரசனும் அதற்கு இணங்கினன். இப்படி ஸ்ரீவைகுண்ட நாதனைக் காண வேணுமென்கிற மிக்க அவாவுடைய மஹாதேவனும் ஶ்வேதகேதுவும் ஆயிரம் வருஷங்கள் ஸ்ரீவைகுண்டநாதனின் முகோல்லாஸத்தையே பலமாகக்கருதி யம-நியமங்களோடு பொருந்தியவர்களாய் பலவிதமான தபஸ்ஸுக்களாலும் த்யாந யோகமார்க்கங்களாலும் ஸ்ரீவைகுண்டநாதனை ஆராதித்தார்கள்.

तयो: प्रसन्नो भगवान् मुकुन्दो वैकुण्ठनाथो हरिरप्रमेय:|
विमानमारुह्य सहस्रकोटि समप्रभं कुण्डलमण्डिताङ्गम् || 26
ब्रह्मेन्द्रमुख्यै रुपगीयमानस्त्वनन्तसिम्हासन सन्निविष्ट:|
नीलामहीपद्मभवासमेतस्तत्राविरासीत् हरराजमध्ये || 27

இத்தால் மிகவும் திருவுள்ளமுகந்த முகுந்தனை ஹரியான அப்ரமேயனை பகவான் ஸ்ரீவை-குண்டநாதன் மின்னுமணி (மஹா) குண்டலங்கள் முதலான ஒளிமிக்க எண்ணிறந்த அணிகலன்களால் மிகவும் விளங்குபவனாய் அமலங்களாக விழிக்கும் திருக்கண்களால் ஆஶ்ரிதர்களுடைய தீவினைகளை நஶிப்பிக்குமவனாய் தன் தாள் அடைந்தார்க்கு வைகுந்தம் கொடுக்கும் பிரானாய் ஸ்ரீபூமிநீளா ஸமேதனாய் திருவநந்தாழ்வானாகிற சீரிய சிங்காஸனத்தில் வீற்றிருந்து ப்ரஹ்மாதி தேவர்கள் சூழ்ந்து துதிக்க ஆயிரங்கோடி ஸூர்யன் உதித்தாற்போல் ப்ரகாஶிக்கிற தேஜோமயமான ஆநந்தவர்த்திநீ என்னும் திருநாமத்தையுடைய திவ்யவிமாநத் தில் ஹராவதேஶ்வரனுக்கும் ஶ்வேதகேதுவுக்கும் ப்ரத்யக்ஷமானான்.

दृष्ट्वा तं च देवदेवं प्रणम्य च पुन: पुन:|
प्रार्थयामासतुस्तत्र श्वेतकेतुहरावुभौ || 28

அப்போது தேவாதிதேவனை ஸ்ரீவைகுண்டநாதனை அவ்வரசனும் மஹாதேவனும் கண்ணாரக்

acharya.org

நீங்கள் எப்போதும் இந்த திவ்யதேசத்திலேயே என்னுடைய திவ்யாஜ்ஞையை பரிபாலித்துக் கொண்டிருக்க கடவீர்கள்! ஶங்கரரே! இந்த கஜாரண்யத்திலிருந்து கொண்டு நீர் என்னை வழிபடுவீராக!

उदङ्गमुनिवर्यस्त्वं कावेरीतीरमाश्रित:|
श्रद्धाभक्तिसमायुक्त: पूजयस्व च मां सदा || 34

முநிவர் பெருமானுன உதங்கரே! நீர் திருக்காவேரிக் கரையில் உம்முடைய ஆஶ்ரமத்திலிருந்து கொண்டு எப்போதும் ஶ்ரத்தையோடும் பக்தியோடும் என்னை ஆராதித்து வரக்கடவீர்!

अत्रैव राजन् त्वं स्थित्वा भार्यया सहवश्यया|
अन्नदानं कुरु सदा ब्राह्मणेभ्यो विशेषत: || 35

ராஜா ஶ்வேதகேதுவே! நீயும் உன்னுடைய தர்மபத்நியுடன் இந்த க்ஷேத்ரத்திலே இருந்து கொண்டு எப்போதும் ப்ராஹ்மணோத்தமர்களுக்கு ததீயாராதந கைங்கர்யத்தை சிறப்பாக நடத்தி வரக்கடவாய்!

मुक्तिं तव प्रदास्यामि युगान्ते तपसा त्वहम्|
इत्युक्त्वा भगवान् विष्णु: अप्रमेय पराक्रम: || 36

இந்த யுகத்தின் முடிவில் உனக்கு நான் மோக்ஷத்தை(பரமபதத்தை)த் தருவேன் என்று அப்ரமேயனுன மஹாபராக்ரமஶாலியான பகவான் ஸ்ரீவிஷ்ணு திருவாய் மலர்ந்தருளினுன்.

तूष्णीमास्ते जगन्नाथ: हरिर्वैकुण्ठनायक:|
अगस्त्य : -- इत्येतत्ते समाख्यातं राजन् हरिकथामृतं || 37

ஜகந்நாதனுன ஹரியான ஸ்ரீவைகுண்டநாதன் இவ்வண்ணம் அவர்களுக்கு இரங்கியருளி பிறகு அர்ச்சாவதார ஸமாதியில் மௌனமானுன். அகஸ்த்ய முநிவர் உபரிசரவஸுவைக் குறித்துச் சொல்லலானுர் — அரசனே! இவ்வண்ணமாக ஸ்ரீவைகுண்டநாதனுடைய அமுதம் போன்ற திவ்ய சரித்ரத்தை நான் நன்ருகக் கூறினேன்.

य इदं श्रुणुयान्नित्यं वैकुण्ठनगरस्य च|
वैभवं सर्वपापघ्नं मोक्षं प्राप्नोति स ध्रुवम् || 38

acharya.org

எல்லாத் தீவினைகளையும் போக்கவல்ல இந்த ஸ்ரீவைகுண்ட திவ்யநகர வைபவத்தை, யாவனொருவன் பக்தி ஶ்ரத்தையோடு நித்யம் கேட்கிறானோ அவன் மரணமடைந்த பிறகு பரமபதத்தை அடையக்கடவன். இதில் ஐயமொன்றுமில்லை.

पुत्रकामो लभेत् पुत्रं धनकामो लभेद्धनम् |
राज्यकामो लभेद्राज्यं सर्वान् कामान वाप्नुयात् || 39

புத்ரனை விரும்புமவன் புத்ரனையும், தநத்தை விரும்புமவன் தநத்தையும், ராஜ்யத்தை விரும்புமவன் ராஜ்யத்தையும (இந்த ஸ்தல-மஹாத்ம்யத்தை கேட்பதனால்) பெறக்கடவன். தாம் விரும்பும் ஸகலவிதமான பலன்களையும் ஸ்ரீவைகுண்டநாதன் இன்னருளால் அவரவர்கள் பெறக்கடவர்கள்.

इति श्रीपाद्मपुराणे उपरितन भागे तीर्थप्रशंसा नाम पलाशवन माहात्म्ये वैकुण्ठदिव्यनगर वैभववर्णनं नाम पञ्चमोध्याय:

பாத்மபுராணத்தில் மேல் பாகத்தில் பலாஶ-வந-மாஹாத்ம்யத்தில் ஸ்ரீவைகுண்ட திவ்யதேஶ வைபவ வர்ணநம் என்னும் ஐந்தாவது அத்யாயம் முற்றிற்று

ஸ்ரீவைகுந்த விண்ணகர எம்பெருமான் விஷயமான த்யாந ஶ்லோகம்

सव्यंपादं प्रसार्यश्रितदुरितहरं दक्षिणं कुञ्चयित्वा
जानुन्याधायसव्ये तरमितरभुजंनागभोगे निधाय |
पश्चात् बाहूत्वयेन प्रतिभटशमने धारयन्शङ्खचक्रे
देवी भूषादिजुष्टो जनयतुजगतां शर्मवैकुण्ठनाथ: ||

ஸ்வயம்-பாத$_3$ம் ப்ரஸார்யஶ்ரிதது$_3$ரிதஹரம் த$_3$க்ஷிணம் குஞ்சயித்வா
ஜாநுந்யாத$_4$ாயஸவ்யே தரமிதரபு$_4$ஜம்நாக$_3$பே$_4$ாகே$_3$ நித$_4$ாய |
பஶ்சாத் ப$_3$ாஹூத்வயேந ப்ரதிப$_4$டஶமநே த$_4$ாரயந்ஶங்கு$_2$சக்ரே
தே$_3$வீ பூஷாதிஜுஷ்டோ ஜநயதுஜக$_3$தாம் ஶர்மவைகுண்ட$_2$நாத$_2$: ||

[இடது திருவடியை நீட்டிக்கொண்டும் வலது(திருவடியை) மடக்கியும் வலது திருக்கரத்தை முழங்காலில் வைத்தும் மற்றொரு திருக்கரத்தை பாம்பணையில் வைத்தும் பின்புறத்து இரு

acharya.org

திருக்கரங்களிலும் எதிர்ப்பவர்களை அழிப்பதற்கு உறுப்பாக ஶங்கசக்ரங்களை வைத்துக் கொண்டும் இரு தேவியருடன் எல்லா திருவாபரணங்களையும் தரித்தவனுகவும் விளங்கும் ஸ்ரீவைகுந்தநாதன் ஜகத்திற்கு க்ஷேமத்தை உண்டாக்கட்டும்!]

ப்ரஹ்ம நாரதீய புராண ஶ்லோகம்

श्रीवैकुण्ठ नव : पुरेतु भगवान्वैकुण्ठनामाहरि :
देवीतस्यददौह्युतङ्ग वरदस्तीर्थं ह्युताङ्गाश्रयं ।
तत्रा नन्द विवर्द्धनाह्वय वसत्तत्व्योमयानेस्थित :
साक्षान्मन्मथसुन्दरस्सुरगणैरासी नरूपोवसन् ॥

ஸ்ரீவைகுண்ட$_2$ நவ$_3$: புரேது ப$_4$க$_3$வாந்-வைகுண்ட$_2$நாமாஹரி :
தே$_3$வீதஸ்யத$_3$தெள$_3$ாஹ்யுதங்க$_3$ வரத$_3$ஸ்தீர்த்த$_2$ம் ஹ்யுதங்க$_3$ாஶ்ரயம் |
தத்ரா நந்த$_3$ விவர்த்த$_2$நாஹ்வய வஸத்தத்வ்யோமயாநேஸ்தி$_2$த
ஸாக்ஷாந்மந்மத$_3$ஸுந்த$_3$ரஸ்ஸுரக$_3$ணைராஸீ நரூபோவஸந் ||

(ஸ்ரீவைகுந்தவிண்ணகரம் என்கிற புதிய நகரத்தில் ஸ்ரீவைகுந்தநாதன் என்ற திருநாமத்தை உடையவனை பகவான் ஹரி இருதேவிமார்களுடன் கூடி உதங்கவரதனுக உதங்கருக்குப் புகலிடமான தீர்த்தத்தை அருளினுன். அங்கு ஆநந்தத்தை வளர்க்கிற ஸ்ரீவைகுந்த விண்ணகரத்தில் இருந்துகொண்டு மன்மதனை விஞ்சிய அழகனுக வீற்றிருந்த திருக்கோலத்தில் ஸேவை ஸாதிக்கிறுன்)

பெருமாள் — ஸ்ரீவைகுந்தநாதன்
தாயார் — பெரியபிராட்டியார் வைகுந்தவல்லி
விமாநம் — ஆநந்த வர்த்திநீ விமாநம்
புஷ்கரிணீ — லக்ஷ்மீ புஷ்கரிணீ உதங்கதீர்த்தம்
திருக்கோலம் — வீற்றிருந்த திருக்கோலம்
திருமுக மண்டலம் — கிழக்கே திருமுக மண்டலம்
மங்களாஶாஸநம் — திருமங்கையாழ்வார்
ப்ரத்யக்ஷம் — உதங்க ரிஷிக்கு ப்ரத்யக்ஷம்

acharya.org

திருமங்கைமன்னனும் திருநாங்கூர் திவ்யதேஶங்களும்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

உகந்தருளின் நிலங்களேயே பரமப்ராப்யமாகத் திருவுள்ளம் பற்றிய திருமங்கையாழ்வார், தம் திருவுள்ளத்தைக் குறித்து -

நாங்கூர் மணிமாடக்கோயில் வணங்குஎன்மனனே(பெரியதிருமொழி 3-8)
வைகுந்த விண்ணகரம் வணங்குமடநெஞ்சே(3-9)
அரிமேயவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே(3-10)

என்று இப்படிப் பலகாலும் உபதேஶித்தருளுவர். இவ்விருள் தருமா ஞாலத்திலும் திருமால் விரும்பி வர்த்திக்கும் திவ்யதேஶங்கள் உண்டாகப் பெறுவதே என்று வியந்து,

மாதவன்தான்உறையுமிடம் வயல்நாங்கை வரிவண்டு
தேதெனவென்றுஇசைபாடும் திருத்தேவனூர்தொகையே (4-1-1)
வம்புலாம்கமுகோங்கியநாங்கூர் வண்புருடோத்தமமே(4-2-1)

என்று இவ்வண்ணம் உகந்தருளிச் செய்வர். *பார்த்தன் பள்ளிபாடுவாளே* (4-8) என்கிறபடியே உகந்தருளின நிலங்களைப் பாடுவதே இவர்க்குப் பணியாயிற்று.

உகந்தருளின நிலங்களில் வர்த்திக்கிறவன்தான் வேதவேதாந்தவேத்யனுய், ஸ்ரீபூமிநீளா நாயகனுய், ஸர்வஸ்மாத்பரனுய், ஸர்வஜகத்காரணபூதனுய், ஸர்வாந்தராத்மாவாய், ஸர்வ ஸமாஶ்ரயணீயனுய், மேன்மைக்கும் நீர்மைக்கும் ஏகாந்தமான திருக்கல்யாணகுணங்களை யும் திருவவதார திவ்யசேஷ்டிதங்களையும் தன்னடியார்களுக்குக் காட்டியருளுமவனுய், பேரருளாளனுய் நிற்கிறபடியை உள்ளபடி கண்டநுபவித்து -

திருத்தெற்றியம்பலத்துஎன்செங்கண்மாலே(4-5)
*எங்கும்
தேம்பொழில்கமழும்நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே*(4-5-1)

என்று தம்முடைய அநுபவ-ப்ரகாரத்தை எல்லாரும் அறிந்துய்யும் வண்ணம் பதிகங்கள் பாடியருளினுர்.

வேதாந்தவேத்யமாய், சேதநர்களுக்கு ஸ்வரூபப்ராப்தமாய், அநிஷ்ட நிவ்ருத்திக்கும் இஷ்ட ப்ராப்திக்கும் தப்பாத உபாயமாய், ஸர்வஜ்ஞமாய், ஸர்வஶக்தமாய், பரமகாருணிகமாய்,

acharya.org

ராமோ விக்$_3$ரஹவாந் த$_4$ர்ம: ஸாது$_4$: ஸத்யபராக்ரம: |
ராஜா ஸர்வஸ்ய லோகஸ்ய தே$_3$வாநாம் மக$_4$வாநிவ ||
(ஸ்ரீராமாயணம் ஆரண்ய காண்டம் 37-13)(ராமன் தர்மமே உருவெடுத்தவன்; நல்லொழுக்கம் உடையவன்; உண்மை வீரன்; தேவர்களுக்கு இந்த்ரனைப் போலே எல்லா உலகத்திற்கும் இவன் அரசனாகிறான்) என்றும்,

யே ச வேத$_3$விதே$_3$ா விப்ரா: யே சாத்$_4$யாத்மவிதே$_3$ா ஜநா: |
தே வித$_3$ந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் த$_4$ர்மம் ஸநாதநம் ||
(மஹாபாரதம் - ஆரண்ய பர்வம் 71-123(வேதமறிந்த வேதியர்களும் வேதாந்தம் உணர்ந்த வித்தகர்களும் மஹாபுருஷனான க்ருஷ்ணனையே பழமையான தர்மஸ்வரூபி என்று சொல்கிறார்கள்)

என்றும் போற்றப்படும் ஸாக்ஷாத் தர்மமான இவனை இவர், திருக்காவளம்பாடியிலே -

* கண்ணனே! களைகண்நீயே * (4-6-1)

என்று சரணம் புகுந்து, திருவெள்ளக்குளத்தில் அண்ணன் ஸந்நிதியில் -

* அடியேனிடரைக்களையாயே * (4-7-1, 2)
* பாடாவருவேன் வினையாயின பாற்றே * (4-7-5)
* ஆவா! அடியான் இவனென்றுஅருளாயே * (4-7-9)

என்றிப்படி அவித்யாதிகளையும தத்கார்யமான ஸகலஸாம்ஸாரிக துன்ப இன்ப வினைகளையும் போக்கியருள வேணும் என்று ப்ரார்த்தித்துப் போந்தார். இங்கிருக்கும் நாட்களிலே பரமபதத்தில் அநுபவத்தோடு ஒரு கோவையாம்படியான பகவதநுபவத்தை அவன் அருளத் தாம் பெற்று வாழ்ந்தபடியை —

* சீரணிமாடநாங்கைநன்னடுவுள் செம்பொன்செய்கோயிலினுள்ளே
காரணிமேகம்நின்றதொப்பானைக் கண்டுகொண்டுஉய்ந்தொழிந்தேனே * (4-3-1)
* அல்லிமாமலராள்தன்னொடும்அடியேன்
கண்டுகொண்டுஅல்லல் தீர்ந்தேனே * (4-3-6)
* வளங்கொள்பேரின்பம்மன்னிநின்றானை
வணங்கிநான்வாழ்ந்தொழிந்தேனே * (4-3-9)

acharya.org

என்று பேசி இனியரானுர்.

திருநாங்கூர்ப் பதினெரு திவ்யதேசத்து எம்பெருமான்கள் திறத்திலும் நம் திருமங்கை மன்னனுக்குண்டான ப்ராவண்யம் அதிசயிதமானது. இவ்வாழ்வாரே முன் யுகத்தில் உபரிசரவஸு மன்னரானவன் என்று பெரியோர் பணிப்பர். இவன் திருநாங்கூர் திவ்யதேசத்து எம்பெருமான்களுக்கு ப்ரஹ்மோத்ஸவம் முதலிய பல வைபவங்களை நடத்திப் போந்தான் என்று ஸ்தலபுராண வரலாறு கூறுகிறது. ஆகவே பூர்வ-ஜந்ம-ஸித்தமாம். அர்ச்சாவதாரத்திலும் இவ்வாழ்வார் ப்ரதி வருஷமும் தை அமாவாஸ்யை அன்று திருவாலி திருநகரியில் இருந்து திருநாங்கூருக்கு எழுந்தருளி மங்களாசாஸநம் செய்தருளுகிறபடியால் இதுதான் ப்ரத்யக்ஷ ஸித்தமாயிருக்கும். ஆழ்வார் 11 திவ்யதேசங்களுக்கும் 11 பதிகங்கள் பாடியருளினுர்.

நந்த$_3$ாதீ$_3$ப க$_4$டப்ரணர்த்தக மஹாகாருண்ய ரக்தாம்ப$_4$க
ஸ்ரீநாராயண புருஷோத்தமபதி ஸ்ரீரத்நகூடாதி$_3$பதி : |
வைகுண்டே$_2$ஶ்வர மாத$_4$வௌச கமலாநாத$_2$ம் ச கே$_3$ாபீபதிம்
நௌம்யேகாத$_3$ஶம் நாக$_3$புர்யதி$_4$பதீந் ஸார்த்த$_4$ம் கலித்$_4$வம்ஸிநா ||

என்பது 11 எம்பெருமான்களையும ஆழ்வாரையும் சேர்த்து அநுஸந்திக்கிற ஶ்லோகமாகும்.

ஸ்ரீமத$_3$ாலி ஸ்ரீநக$_3$ரீ நாத$_2$ாய கலிவைரிணே |
சதுஷ்கவி ப்ரத$_4$ாநாய பரகாலாய மங்க$_3$ளம் ||

திருமங்கையாழ்வார் திருவடிகளே ஶரணம்

acharya.org

ஸ்ரீ புண்டரீகவல்லி ஸமேத ஸ்ரீ நாராயணப்பெருமாள்
- திருமணிமாடக்கோயில்

acharya.org

திருமணிமாடக்கோயில் ஸ்ரீநாராயணப்பெருமாள் மங்களாஶாஸநம்

நந்தாவிளக்கே! அளத்தற்கு அரியாய்!
    நரநாரணனே! கருமாமுகில்போல்
எந்தாய்! * எமக்கேஅருளாயெனநின்று
    இமையோர்பரவும்இடம் * எத்திசையும்
கந்தாரம்அந்தேன்இசைபாட மாடே
    களிவண்டுமிழற்றநிழல்துதைந்து *
மந்தாரம்நின்றுமணமல்குநாங்கூர்
    மணிமாடக்கோயில்வணங்குஎன்மனனே!

(பெரியதிருமொழி 3.8.1)

* * ப்ரஹ்மா, ஶிவன், இந்த்ரன் முதலான தேவர்கள் * எங்கள் அபிமதத்தைச் செய்தருள வேணும் * என்று ப்ரார்த்திக்கும் இடமாய், ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளியிருக்கும திரு நாங்கூரில் திகழும் மணிமாடக்கோயிலே வணங்கு * * என்று ஆழ்வார் தமக்கு பவ்யமான தம் மனதைக் குறித்து உபதேஶிக்கிறார். முன் அடிகளால் இமையோர் பரவும்படியை அருளிச் செய்கிறார். வேதாந்தத்தில் -

ஸத்யம் ஜ்ஞாநம்-அநந்தம் ப்$_3$ரஹ்ம

(தை-ஆந 1-2)(விகாரம் அற்றிருப்பதால் ஸத்யமாகவும், ஜ்ஞாநமாகவும், அளவற்றதாய் இருப்பதால் அநந்தமாயும் இருக்கும் ப்ரஹ்மம்) என்று ஓதப்படும் பரமபுருஷனுடைய ஸ்வயம்ப்ரகாஶத்வாதி தர்மங்களை *நந்தாவிளக்கே அளத்தற்கரியாய்* என்று அருளிச் செய்கிறார்.

* * என்றும் அணையாத விளக்கைப்போலே ஸ்வயம்ப்ரகாஶ ஜ்ஞாந ஸ்வபாவனாய்,

திவ்யாத்மஸ்வரூபகுணவிபூதிகளை ஒருபடியாலும் பரிச்சேதிக்க ஒண்ணாதபடி ஸகல ப்ரகாரத்தாலும் பரிபூர்ணனாய்,

இப்படி இருக்கும் தன் ஸ்வரூபத்தை நரநாராயணனாய்த் திருவவதரித்துத் திருமந்த்ர முகத்தாலே வெளியிட்டருளினவனாய்,

ஸேவித்தவர்களுடைய கண்கள் குளிரும்படி கருத்த மஹாமேகம் போன்ற திருமேனியை உடையவனாய்,

இப்படியிருக்கும் தன் ஸ்வரூப வைலக்ஷண்யத்தை எங்களுக்கு உபகரித்தருளுமவனான எங்கள் நாதனே! தேவர்களுக்கும் தாநவர்களுக்கும ஸாதாரணமாக நிற்கும் நிலையைத் தவிர்ந்து உனக்கு அநுகூலராய் உன்னையே ஶரணமாகப் பற்றியிருக்கும் எமக்கே அருள வேணும் * என்று இமையோர் பரவுமிடமாம் திருமணிமாடக்கோயில். மற்றவர்கள் நெஞ்சி

acharya.org

லும் வ்யாவ்ருத்தமான என் நெஞ்சே! நீ இத்திவ்யதேஶத்தை வணங்கு * * என்று தம் திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்தபடி. பின்னடிகளில் பொழில் (சோலை) வளத்தை உடைய திவ்யதேஶாநுபவமாகச் செல்கிறது. மற்றுள்ள ஆழ்வார்களுக்குப் பகவத்குணாநுபவம் ப்ரதாநமாயிருக்க இவருக்குத் திவ்யதேஶ குணாநுபவமே ப்ரதாநமாய் நடக்குமதாயிற்று. பார்த்த இடமெங்கும் அழகிய வண்டுகள் மதுபானம் பண்ணி தேவகாந்தாரி ராகத்தைப் பாட, அதன் முடிவிலே களவியிலே களித்து வர்த்திக்கிற இவைகளுக்கு வஸிப்பதற்கு யோக்யமாம்படி மந்தார வ்ருக்ஷங்கள் நிழலைச் செறிந்து மிக்க மணத்தை அளியா நின்றன. இப்படி வண்டார் பொழில் சூழ்ந்த அழகிய நாங்கூர் மணிமாடக்கோயிலை வணங்கு என்றபடி. மேலிரண்டு பாசுரங்களால் கஜேந்த்ர மோக்ஷத்தையும், ஒரு பாட்டால் பெரியதிருவடியின் மேல் ஏறிச் சென்று இலங்கையில மாலி முதலானோரை நிரஸித்தருளினபடியையும், ஐந்து பாசுரங்களால் ஸ்ரீக்ருஷ்ணாவதார திவ்யபாலலீலா சேஷ்டிதங்களையும் அநுபவித்து இனியராகிறார். ஸத்யத்வ ஜ்ஞாநத்வ அநந்தத்வங்கள் புறவிதழென்னும்படி அந்தரங்க நிரூபகமான ஶ்ரிய: பதித்வத்தை மூன்றாம் பாட்டில் *கொங்குஆர் இலைப்புண்டரீகத்தவளின்பம் அன்போடு அணைந்திட்டஅம்மானிடம்* என்று அநுஸந்திக்கிறார்.

உபக்ரமத்தில் போலே உபஸம்ஹாரத்திலும் ஒன்பதாம் பாட்டில் இமையோர் பரவும்படியை அநுஸந்திக்கிறார். இப்பாட்டில் நப்பின்னைப் பிராட்டி(நீளா)யோட்டை அவன் ஸம்ஶ்லேஷித்த படியையும் அவனுக்கு அஸாதாரண லக்ஷணமான ஆழ்வார்களோட்டை சேர்த்தியழகையும் அநுபவிக்கிறார். இத்திவ்யதேஶத்தில் *விரோதி நிரஸநத்துக்காக திருவாழிதிருச்சங்குகளைத் தரித்திருக்கும் எம்பெருமானைத் தேவர்கள், தங்கள் அநிஷ்டநிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்குமாக ஆஶ்ரயித்துத் தங்கள் அபிமதம் பெறுமாப் போலே என் மனமே! நீயும் இத்திவ்ய தேஶத்தை வணங்கி உன் அபிமதம் பெறப் பாராய்! * என்று ஆழ்வார் உபதேஶித்தபடி. பத்தாம்பாட்டு பலஶ்ருதி. இதில் *என்றும் தொண்டாய தொல்சீர் வயல் மங்கையர் கோன் கலியன்* என்று ஆழ்வார் தாம் திருமணிமாடக்கோயில் நெடுமாலுக்கு நித்ய கைங்கர்யம் பண்ணி ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடு விளங்கும் படியை அநுஸந்திக்கிறார். இப் பதிகம் கற்று வல்லவர்களாய் இருப்பவர் பெறும் பலம் ஸார்வபௌம பதம் என்கிறார். ஐஶ்வர்யம் த்யாஜ்யமன்றோ! என்னில் பகவத்-பாகவத-ஆசார்ய கைங்கர்யத்துக்கு விநி-யோகப்படுமாகில் ஐஶ்வர்யமும் புருஷார்த்தமாகக் குறையில்லை என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம். ஐஶ்வர்யத்தைப் புருஷார்த்தமாகச் சொல்லுவதேன் என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க ஈஶ்வரனேயாகிலும் ஒருக்கால் பிறந்து அபிஷேகம் பண்ணவமையும் பாகவதஶேஷமாக்கலாமாகில் என்று காணும் திருமங்கையாழ்வார் இருப்பது என்றருளிச் செய்தார்.

மணிமாட$_3$மஹாரங்க$_3$ நிலயாயாப்ரகாஶிநே |
நாராயணாயாமேயாய நந்த$_3$ாதீ$_3$பாய மங்க$_3$ளம் ||

(திருமணிமாடக்கோயிலில் ப்ரகாஶிக்கிற அளவிடமுயாத பெருமையை உடைய நந்தா விளக்காகிற நாராயணனுக்கு மங்களம்!)

acharya.org

ஸ்ரீ வைகுந்தவல்லி ஸமேத ஸ்ரீ வைகுந்தநாதன்
- திருவைகுந்தவிண்ணகரம்

acharya.org

ஸ்ரீவைகுந்தவிண்ணகரம் ஸ்ரீவைகுந்தநாதன் மங்களாஶாஸநம்

சலம்கொண்டஇரணியனதுஅகல்மார்வம்கீண்டு
தடங்கடலைக்கடைந்துஅமுதம்கொண்டுகந்தகாளை
நலங்கொண்டகருமுகில்போல்திருமேனிஅம்மான்
நாள்தோறும்மகிழ்ந்துஇனிதுமருவியுறைகோயில்
சலம்கொண்டுமலர்சொரியும்மல்லிகைஒண்செருந்தி
(செ)சண்பகங்கள்மணநாறும்வண்பொழிலினூடே
வலங்கொண்டுகயலோடிவிளையாடுநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே (பெரியதிருமொழி 3.9.1)

காளை = யுவா ; *யௌவநத்தை உடையவன்* என்பதற்கு *மிடுக்கை உடையவன்* என்று இவ்விடத்தில் தாத்பர்யம். முதலில் ஸ்ரீவைகுந்தவிண்ணரகத்திலே மிகவுகந்து எழுந்தருளி இருக்கும் இவனுடைய மிடுக்கையும், பிறகு அங்கே வர்த்திக்கும் மீன்களுடைய மிடுக்கையும் ராஸிக்ய பூர்த்தியுடன் அநுபவிக்கிறுர் ஆழ்வார். *இவனுக்குண்டானது சலம்கொண்ட (ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே சீற்றத்தைக் கொண்ட) ஹிரண்யன் பக்கல் தன்னுடைய சீற்றத்தைக் காட்டி அவனது அகல்மார்பைக் கிழித்த மிடுக்கு ; இவனுக்குண்டானது தடம் (பெரிய திருப்பாற்)கடலைக் கடைந்து அமுதம் கொண்டு தேவர்களுக்கு உபகரித்து உகந்த மிடுக்கு* என்று அநுபவித்தபடி. ஸ்ரீவைகுந்தநாதன் ஸ்ரீபூமிநீளைகளோடு ஏகாஸநத்தில் வீற்றிருந்து (வீறுடைமையுடன்) ஸேவை ஸாதிப்பவனுகையாலே அவனுடைய மிடுக்கிலே தம் திருவுள்ளத்தைப் பறிகொடுத்த ஆழ்வார் அதையே முதலில் பாசுரம் பாடி அநுபவிக்கிறுர். ஹிரண்ய வதம் அம்ருத மதநம் என்னும் திவ்யசேஷ்டிதங்களையும் பகவான் வீற்றிருந்து வீறுடைமையுடன் செய்தருளினுன் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆயுதத்துக்கு இலக்காகாத வளை நகத்திற்கு இலக்காக்கின மிடுக்கு. ஸ்ரீவைகுந்தநாதன் சீற்றமே வடிவேடுத்தாற்போலே இருக்கிற இரணியனது அகன்ற மார்பத்தை கிழித்த மிடுக்கன். இந்த சரித்ரம் பரத்வஸூசகம் என்பதை -

நரஸிம்ஹதநுரகெ$_3$ளணீ ஸமஸமயஸமுத்$_3$ப$_4$வஶ்ச ப$_3$க்தகி$_3$ர : |
ஸ்தம்பே$_4$ ச ஸம்ப$_4$வஸ் தே பிஶுநயதி பரேஶதாம் வரத$_3$ ||

(வரதராஜஸ்தவம் 71)(பேரருளாளனே! திவ்யமான உன்னுடைய ந்ருஸிம்ஹாவதார திருக் கோலமும் ப்க்தனுன ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய வார்த்தையை ஸத்யமாக்கிக் கொண்டு உடனே தோன்றியதும் ஒரு தூணில் தோன்றியதும் உன்னுடைய ப்ரமேஶ்வரத்வத்தை உணர்த்துகிறது) என்று ஆழ்வான் அருளிச்செய்தார்.

சதுர்புஜங்களால் அமுதச்சாறுபடக் கடலைக் கடைந்தது ஆயிரம் தோள்களால் அலைகடலைக்

acharya.org

கடைந்தாப் போலே இருக்கிறது என்று அவன் மிடுக்கை அநுபவக்கிறுர். அடுத்ததாக அவன் திவ்யமங்களவிக்ரஹ ஸௌந்தர்யத்தை உடையவன் என்பதை *நலங் கொண்டகருமுகில் போல்திருமேனிஅம்மான் என்று பாடி அநுபவிக்கிறுர். கண்டவர் கண்கள் குளிரும்படி நலங்கொண்ட கருமுகில் போன்றதாயுள்ள திருமேனியை உடைய ஸ்ரீவைகுந்தநாதன் என்றபடி. தேவர்களுக்குப் போக்யமான அம்ருதமும் விஷமென்னும்படி அமுதிலும் மாற்றவினிதாய் ஆஶ்ரிதர்களுக்குப் பரமபோக்யமான திருமேனி படைத்தவன். தன் திருமேனி அழகாலே *அம்மான்* (இவனே ஸர்வேஶ்வரன்) என்று தோற்றும்படி விளங்குபவன் என்றபடி.

அம்மான் நாள்தோறும்மகிழ்ந்துஇனிதுமருவியுறைகோயில் = ஸர்வேஶ்வரனை ஸ்ரீவைகுந்தநாதன் ப்ரதி திநமும் மிகவும் ஸந்தோஷத்தை உடையவனுய் நித்யவாஸம் பண்ணுகையாலே அவனை ஆஶ்ரயித்தவர்களுக்கு மிக இனியதாய் இருக்கும் ஸ்ரீவைகுந்த விண்ணகரம் என்று இந்த திவ்யதேஶத்தின் வைபவம் இருக்கும்படி. ஸ்ரீவைகுந்தநாதன் ஆஶ்ரிதர்களுக்கு மிகவும் இனியனுய் இருப்பதையே ப்ரயோஜநமாகக் கொண்டு நித்யவாஸம் பண்ணுகிற தேஶம் என்றும் கொள்ளலாம். ஆஶ்ரித-ரக்ஷணத்துக்குப் பாங்கான தேஶம் என்று பகவான் உகந்து பரமபதத்தில் போலே இனியனுய் நித்யவாஸம் பண்ணியருளும் கோயிலாம் ஸ்ரீவைகுந்த விண்ணகரம். பரமபதத்தின் அநுபவத்தை இங்கேயே பண்ணித்தர வல்லது இத்திவ்யதேஶம் என்று கருத்து.

ஆக இதுவரை ஸ்ரீவைகுந்தநாதனுடைய மிடுக்கு அழகு இனிமை என்னும் மூன்றையும் அநுபவித்த ஆழ்வார் இனி இம்மூன்றும் ஸ்ரீவைகுந்தவிண்ணகரம் வாழ் மீன்களுக்கும் உண்டு என்று அருளிச்செய்திருப்பது ஒரு ஆஶ்சர்யமான அநுபவம். ஸ்ரீவைகுந்தவிண்ணகரம் சோலைகள் நிறைந்த திவ்யதேஶம். எங்கும் மல்லிகை செண்பகம் செருந்தி முதலான புஷ்பங்கள் நிறைந்து நறுமணத்தை வீசுகின்றன. ஸாதாரணமாக நீரிலே இருந்து அத்தால் மிடுக்கைப் பெற்று வாழும் அழகிய மீன்கள் நீரை விட்டு இந்த நறுமணங்களையே நுகர்ந்து அத்தாலே மிடுக்கை உடையனவாய்க் கொண்டு துள்ளிக் குதித்து அழகாக விளையாடுவது கண்கொள்ளாக் காட்சியாக - மிக இனிமையாக - ஆழ்வாருக்கு அநுபாவ்யமாகிறது. இந்த அநுபவம் பகவானுக்கும் அவன் மிக உகந்து இந்த திவ்யதேஶத்தில் பொருந்தி விளங்குவதற்கு ஒரு காரணமாகையாலே, அவன் தான் பெறும் இந்த அநுபவத்தை ஆழ்வாருக்கும் காட்டித் தர ஆழ்வாரும் அதை அநுபவித்து -

சலம்கொண்டுமலர்சொரியும்மல்லிகையொண்செருந்தி
(செ)சண்பகங்கள்மணநாறும்வண்பொழிலினூடே
வலங்கொண்டுகயலோடிவிளையாடுநாங்கூர்

என்று பாசுரம் பாடி மகிழ்கிறுர். *வைகுந்தவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே* – *எனக்கு பவ்யமான நெஞ்சே! இப்படிப்பட்ட வைபவம் பொருந்திய ஸ்ரீவைகுந்த

acharya.org

விண்ணகரத்தை வணங்கு! * என்கிறார்.

இரண்டாவது பாசுரத்தில் பகவான் ஸ்ரீந்ருஸிம்ஹனாய்த் தோன்றி ஹிரண்யனை வதம் செய்த ப்ரகாரத்தை விரிவாக வர்ணிக்கிறார். இப்படித் தன்னுடைய ஈஶ்வரத்வத்தை நிலைநிறுத்திய பகவான் மிகவுகந்து கோயில் கொண்டருளும் திவ்யதேஶம் ஸ்ரீவைகுந்தவிண்ணகரம். மேலும் அளவற்றதாய் நித்யத்வம் அபௌருஷேயத்வம் நிர்தோஷத்வம் முதலான தலைசிறந்த பெருமைகளைப் பெற்ற வேதத்தில் வல்லவர்களாய் ஸப்தஸ்வரங்களை அறிந்தவர்களாய் வேத வேதாந்தார்த்த ஶ்ரவணத்தில் நிலைபெற்றவர்களாய் ஆத்மகுணங்கள் தலையெடுத்தவர்களாய் நிலத்தேவர்களில் சிறந்தவர்களாய் விளங்கும் ப்ராஹ்மணர்கள் நிறைந்திருக்கப் பெற்ற ஸ்ரீவைகுந்த விண்ணரகத்தை வணங்கும்படி தம் நெஞ்சைக் குறித்து அருளிச்செய்கிறார்.

பக்தனான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு ஸம்ரக்ஷணத்தைப் பண்ணியருளியது மாத்ரமன்று ; அத்ரதிகரணத்தில் ஸகலசராசரபக்ஷயித்ருத்வத்தை ஜகத்காரணத்வ-ஸ்தாபகமாக நிஶ்சயிக்கிறார் ஸ்ரீவேதவ்யாஸபகவான். *அண்டமும்இவ்வுலகடலும்அவனிகளுமெல்லாம் அமுதுசெய்த திருவயிற்றன்* என்று இங்கே ஆழ்வார் பாசுரம். மேலும் உலகங்களுக்கு ஈஶ்வரன் என்று மஹாபிமாநியாய் திரிந்துபோருபவனுக்கும் வந்த ப்ரம்ஹ கபாலரூபமான மஹத்தான ஆபத்தைப் போக்கி ரக்ஷித்த முதல்வன் மகிழ்ந்து இனிதே வர்த்திக்கும் இடம் இந்த திவ்யதேஶம் என்கிறார் மூன்றும் பாட்டில். முதற்பாட்டில் *அம்மான்* என்பதற்கு *ஸர்வேஶ்வரன்* என்றும், இந்தப் பாட்டில *முதல்வன்* என்பதற்கு *ஸர்வநியந்தா* என்றும் அர்த்தம் அருளிச்செய்திருக்கிறார் ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை.

ஸ்ரீராமாவதாரத்தில் தனக்கு அந்தரங்க பூதையான பிராட்டிக்கு வந்த இடர்களைப் போக்கியருள அவன் செய்த கார்யங்களை மேலிரண்டு பாட்டுக்களால் அநுபவிக்கிறார். ஶூர்ப்பணகையின் செவியோடு மூக்கை அறுத்தும் பிராட்டியைப் பிரித்துவைத்த ராவணனுடைய பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் துணித்தும் தனி வீரம் படைத்த தடந்தோளான் மிக மகிழ்ந்து வர்த்திக்கும் இடம் ஸ்ரீவைகுந்தவிண்ணகரம் என்கிறார். ஓடாத தோள்வலியரான இவர் அவனுடைய தோள்வலியிலே ஈடுபடுகிறார்.

ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரப$_3$லார்த$_3$ந: |
மாம் நயேத் யதி$_3$ காகுத்ஸ்த$_2$: தத் தஸ்ய ஸத்$_3$ருஶம் ப$_4$வேத் ||

(ஸுந்தர காண்டம் 39-30)(ஶத்ருக்களின் பலத்தை ஒழிப்பவரான ஸ்ரீராமபிரான் லங்கையை பாணங்களாலே கலங்கச் செய்து என்னை அழைத்துப் போவாராகில் அப்படிச் செய்வது அவருக்கே தகுந்ததாகும்) என்ற பிராட்டியின் திருவுள்ளத்தின்படியே பெருமாள் செய்தருளினார் என்பதை *அன்று மின் அனைய நுண்மருங்குல் மெல்லியற்கா* என்று அநுபவிக்கிறார். மேல் மூன்று பாட்டுக்களில் ஸ்ரீக்ருஷ்ணாவதார திவ்யசேஷ்டிதங்களை அநுபவிக்கிறார். தன்னை முடிக்க வந்த பூதனையையும் ஶகடத்தையும் மருத மரங்களையும் முடித்து

ப்ராஜ்ஞேப்$_3$ரம்ஹ கம்ப்$_3$ரம்ஹ க$_2$ம்ப்$_3$ரம்ஹ (சாந் 4-10+5) என்றும் *ஒருயிரேயோவுலகங்கட்கெல்லாம்* என்றும் சொல்லுகிறபடியே உயிர்களுக்கு உயிரான தன்னை ரக்ஷித்துக்கொண்டு உலகத்துக்கு உபகரித்தருளினபடியை அநுஸந்திக்கிறார். *பெண்மை மிகு வடிவுகொடு வந்தவளைப் பெரிய பேயினது வுருவுகொடு மாள வுயிருண்டதும்*வேல்நெடுங்க ணாய்ச்சியர்கள்வைத்ததயிர் வெண்ணெய் உளங்குளிர வமுதுசெய்ததும் இவ்வுலகையுண்டதும் அவனுடைய திருமேனி இளகிப் பதிக்கைக்கு உறுப்பாமித்தனை. இத்தைத் திருவுள்ளம் பற்றி *இவ்வுலகுண்டகாளை* என்கிறார்.

எட்டாம் பாட்டில் நரகனை நிரஸித்தருளின வீரச்செயலை அநுபவித்து அத்தோடு *அலர் மகட்கும் அமரர்க்கும் கூறுகக் கொடுத்தருளும் திருவுடம்பன்* என்று அவனுடைய நிரவதிக ஸௌஶீல்யத்தையும் அநுபவிக்கிறார். இந்த ஸௌஶீல்யம் நிறம்பெறும்படியான அவனுடைய பரத்வத்தை *இமையோர் குலமுதல்வன்* என்று அநுபவிக்கிறார். விபவாவதாரங்களை இங்ஙனே அநுபவித்து அவற்றுக்கு மூலமான க்ஷீராப்தி நாதனாகவும் இத்திவ்யதேஶத்து எம்பெருமானை அநுபவிக்கிறார் ஒன்பதாம் பாட்டில். நிகமத்தில் வியூஹத்துக்கும மூலமான பரத்வத்தை இந்த எம்பெருமானிடம் அநுபவித்துத் தலைக்கட்டுகிறார். *தமஸ: பரமோ த$_4$ாதா ஶங்க$_2$சக்ரக$_3$த$_3$ாத$_4$ர:* (யுத்தகாண்டம் 114வது ஸர்க்கம்) என்றுகாணும் பரத்வமிருப்பது. பரத்வஸூசகமான புண்டரீகாக்ஷத்வத்தை *சங்கு மலிதண்டு முதல் சக்கிரமுனேந்தும் தாமரைக் கண்நெடியபிரான்* என்று அநுபவிக்கிறார். பகவானை சிதசித்விஶிஷ்டனாகவும் விபூதிவிஶிஷ்டனாகவும் ஸ்வரூபத்தோடும் மூன்றுபடி உபாஸிக்கக்கடவன் என்று காணும் விதியுள்ளது. அப்படியே இவ்வாழ்வார் திவ்யதேஶத்தை ஆஶ்ரயிப்பதுவும் மூன்றுபடியாயிருக்கும். *பெரியவண்மை மிகுமறையவர்கள் மலிவெய்துநாங்கூர்* என்று மங்களாஶாஸந பரர்களான ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியுக்தமாகவும், *வளங்கொண்ட பெருஞ்செல்வம் வளருமணி நாங்கூர்* என்று கைங்கர்ய உபயுக்த ஐஶ்வர்யப் பெருக்கையுடையதாகவும், *தனி முதல்வன் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்* என்று அவனை இட்டும் இத்திவ்யதேஶத்தை ஆஶ்ரயிக்கிறார். இப்பதிகம் கற்று வல்லார் பெறும் பலம் உபயவிபூதி ஐஶ்வர்யமாம். இப்பதிகத்தின் பெருமைக்குத் தக்க பலம் இதுவேயாகக் கடவது.

த$_3$ளிதாஷ்டாபதாக்$_2$ய வக்ஷஸே அம்ருதத$_3$ாயிநே |
லக்ஷ்மீநாத$_2$ாக்$_2$ய தே பூ$_4$யாத் வைகுண்டே$_2$ஶாய மங்களம் ||

[ஶரபத்தை அழித்த திருமார்பை உடையவனும் அம்ருதத்தை(மோக்ஷத்தை) அளிப்பவனும் லக்ஷ்மீநாதனுமான ஸ்ரீவேங்கடேஶனுக்கு மங்களம் உண்டாகுக!]

(அஷ்டாபத = ஶரபம்)

acharya.org

ஸ்ரீ அம்ருதகடவல்லி ஸமேத ஸ்ரீ குடமாடுகூத்தர்
- திருஅரிமேயவிண்ணகரம்

acharya.org

அரிமேய விண்ணகரம் குடமாடுகூத்தன்
மங்களாஶாஸநம்

திருமடந்தைமண்மடந்தைஇருபாலும்திகழத்
தீவினைகள்போயகலஅடியவர்கட்குஎன்றும்
அருள்நடந்து * இவ்வேழுலகத்தவர்பணிய வானோர்
அமர்ந்தேத்தஇருந்தஇடம் * பெரும்புகழ்வேதியர்வாழ்
தரும்இடங்கள்மலர்கள்மிகுகைதைகள்செங்கழுநீர்
தாமரைகள்தடங்கள்தொறும் இடங்கள்தொறும்திகழ *
அருவிடங்கள்பொழில்தழுவிஎழில்திகழும்நாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே!

(பெரியதிருமொழி 3-10-1)

ரக்ஷகனுக்கு ரக்ஷிக்கும்போது பொறுமையும் கருணையும் வேண்டும். ஸர்வேஶ்வரனை சில சேதநர் பாக்யவஶாத்தால் ஆஶ்ரயித்தாலும் இவர்கள் அநாதிகாலமாகப் பண்ணிப் போந்த அபராதங்களைப் பார்த்து அவன் இவர்கள் திறத்தில் சீற்றம் கொண்டால் ரக்ஷிக்க ப்ரஸக்தி இராது. உபயவிபூதி ஐஶ்வர்யத்தால் ஸ்வாதந்த்ரியமே தலைதூக்கி நிற்கும் ஸர்வேஶ்வரனுக்கு ஆஶ்ரிதர்களை ரக்ஷிக்குமிடத்தில் வேண்டும் இவ்விரு குணங்களையும் பெறப் பிராட்டிமார் பக்கல் குருகுலவாஸம் பண்ண வேண்டும். திருமகளும் மணமகளும் இரண்டு பக்கத்திலும் எப்போதும் திகழ்வதால் இத்திவ்யதேஶத்து எம்பெருமானுக்கு ஸ்வாதந்த்ரியம் தலையெடுக்காமல் ரக்ஷணோபயோகியான இக்குணங்கள் இரண்டும் என்றும் தலையெடுத்திருக்கும். ஆகையால் இங்கு எப்போதும் அருளே நடந்து செல்லுமாயிற்று. பிராட்டிமார் ஸந்நிதி உண்டாயிருக்கையால் அவன் ரக்ஷிக்கக் குறையில்லையென்று துணிந்து ஏழுலகத்தவர்களும் இவ்விடத்திலே எம்பெருமானை அடிபணிந்து நிற்பர். நித்யஸூரிகளும் இக்குணங்களை அநுபவிக்க இத்திவ்யதேஶத்துக்கு வருவார்கள்.

திருநாங்கூரில் திகழும் இத்திவ்யதேஶத்துக்கு *அப்பரமேய விண்ணகரம்* என்னும் திருநாமம் *அரிமேய விண்ணகரம்* என்று திரிந்து கிடக்கிறது. (* *அரிமேயவிண்ணகரம் = *ஹரிர் ஹரதி பாபாநி* என்கிறபடியே அடியவர்களின் பாபங்களைப் போக்குவதனாலே ஹரி எனப்படுகிற எம்பெருமான் நித்யவாஸம் பண்ணப்பெற்ற திவ்ய ஸ்தலம் என்கை * * என்பது ஸ்ரீ உ வே மஹாவித்வான் ப்ரதிவாதிபயங்கரம் காஞ்சீ அண்ணங்கராசார்ய ஸ்வாமியுடைய நிர்வாஹம்)

acharya.org

இத்திவ்யதேஶத்தில் வாழும் அந்தணர்கள் இந்த எம்பெருமானுடைய குணாநுபவ கைங்கர்யங்களே யாத்ரையாகப் போருமவர்கள். இவர்கள் பண்ணும் திருவாராதநத்துக்கு உபயோகிகளான தாமரை, செங்கழுநீர், தாழை முதலான புஷ்பங்களை உடைய தடங்களையும் பொழில்களையும் உடைய இத்தலம் மிக்க எழிலுடன் திகழ்கிறதாம். இப்படி விளங்கும் திருநாங்கூரில் அரிமேய விண்ணகரத்தை தம் நெஞ்சைக் குறித்து *நெஞ்சே! நீ வணங்கு!* என்கிறார்.

ரக்ஷிக்கையாவது விரோதியைப் போக்குகையும் அபேக்ஷிதத்தைக் கொடுக்கையுமாம். நரகன் முதலானோரால் நலிவுற்றுத் தன்னை ஶரணம் அடைந்த விண்ணவர்களுக்கு விரோதியான நரகாஸுரனை நிரஸித்தும், பாற்கடலைக் கடைந்து அவர்களுக்கு அம்ருத ப்ரதாநம் பண்ணியும் ரக்ஷணத்தைப் பண்ணியவன் இத்திவ்யதேஶத்து எம்பெருமான் என்கிறார் இரண்டாம் பாட்டில். இவனை *குருமணி என்னாரமுதம்* என்று அநுபவிக்கிறார். எல்லாரும் மேல் விழுந்து விரும்பும்படியான ஸ்ப்ருஹணீயதையையும், நிரதிஶய போக்யதையையும் அநுபவித்தபடி. விண்ணவர்கள் ஸ்வார்த்தபரராகையால் அவர்களுக்கு உப்புச்சாறே அமையுமாயிற்று. இவர் அநந்யப்ரயோஜநராகையால் எம்பெருமானே ஆராவமுதமானான்.

ப்ரளய காலத்தில் லோகங்களை தன் வயிற்றில் வைத்து ரக்ஷித்தபடியையும், கம்ஸநிரஸநம் பண்ணியபடியையும், உலகங்கட்கெல்லாம் ஓர் உயிரான தன்னைத் தந்தருளி ஆயர்களை மகிழ்வித்தபடியையும் மூன்றாம்பாட்டில் அநுபவிக்கிறார். மேல் மூன்று பாசுரங்களில் (4, 5, 6) அடைவே ஸ்ரீநரஸிம்ஹ ஸ்ரீவாமந ஸ்ரீராமவதார திவ்யசேஷ்டிதங்களை அநுபவிக்கிறார். *தாள்நெடுந்திண் சிலை வளைத்த தயரதன்சேய் என்தன் தனிச்சரண் வானவர்க்கரசு* என்று பெருமாளுடைய தனிவீரத்தையும், ஶரண்யத்வத்தையும், தேவாதிதேவத்வத்தையும் அருளிச்செய்கிறார். மேல் பாசுரங்களில் ஸ்ரீக்ருஷ்ணாவதார சரித்ரங்களை அநுபவிக்கிறார்.

ஸாக்ஷாந் மந்மத மந்மத: என்னும்படி அழகனாய் காம ஜநகனாயிறே இவன் இருப்பது! அத்தை *காமனைத்தான்பயந்தகருமேனியுடையம்மான்* என்று அநுபவிக்கிறார். *அழகில் வந்தால் காமனுக்கும் உத்பாதகனா(யும்)ய் அவ்வளவல்லாதபடி ஶ்ரமஹரமான திருமேனியை உடையவனா(யும்)ய் இருக்கிற ஸர்வேஶ்வரன்* என்று வ்யாக்யாநம். ஸர்வலோகஸுந்தரனான மந்மதனை (ப்ரத்யும்நனை) புத்ரனாகப் பெற்றவன் என்றபடி.

நாமனத்தால்மந்திரங்கள்நால்வேதம்ஐந்து
வேள்வியோடுஆறங்கம்நவின்றுகலைபயின்று* அங்கு

acharya.org

ஆமனத்துமறையவர்கள்பயிலும்மணிநாங்கூர்

அரிமேயவிண்ணகரம்வணங்குமடநெஞ்சே!

(3-10-7) (நாவாலும் மனஸ்ஸாலும் பகவந்-மந்த்ரங்களேயும் நான்கு வேதங்களேயும் பஞ்ச மஹாயஜ்ஞங்களேயும் ஆறு அங்கங்களேயும் அப்யஸித்து மற்றுமுண்டான ஶாஸ்த்ரங்களேயும் கற்று பகவத்விஷயத்துக்குத் தகுதியான பரிஶுத்தமான மனஸ்ஸை உடையவர்களான வைதிகர் நெருங்குகையிளுல் வந்த அழகையுடைய நாங்கூர் அரிமேய விண்ணகரத்தை வணங்குவாய் நெஞ்சே!) என்று தம் நெஞ்சைக் குறித்து அருளிச்செய்கிருர்.

கன்றதனுல் விளவெறிந்து கனியுதிர்த்தகாளே என்கிருர். கன்ருய் நின்ற வத்ஸாஸுரனேக்கொண்டு (அவனே எறிந்து) விளாம்பழமாய் நின்ற மற்றெருு அஸுரனேயும் கொன்று லீலாரஸம் அநுபவித்த காளே (செல்வப்பிள்ளே). *காலிகள்முன்காப்பான் குன்றதனுல்மழைதடுத்துக்குடமாடுகூத்தன்* என்று குன்றமேந்திக் குளிர்மழையைத் தடுத்து திருவாய்ப்பாடியைக் காத்தருளின ஹர்ஷத்துக்குப் போக்குவீடாகக் குடக்கூத்தாடின படியைக் அருளிச்செய்கிருர். இத்திவ்யதேஶத்து எம்பெருமானுக்கு *குடமாடுகூத்தன்* என்ற திருநாமமே ப்ரஸித்தமானது. அடுத்ததான ஒன்பதாவது பாசுரத்தில் - *வாய்த்த தயிருண்டுவெண்ணெயமுதுண்டு* என்று ஆஶ்ரிதகரஸ்பர்ஶமுள்ள த்ரவ்யம் ஒழியத் தனக்குச் செல்லாதபடியான அவன் ஸ்வபாவத்தை அருளிச்செய்கிருர்.

பகவத்ஶாஸ்த்ரம் ஸ்ரீபூமிநீளாயோகத்தை பரமபுருஷனுக்கு லக்ஷணமாகப் பேசிப்போந்த படியை அநுஸரித்தது இப்பதிகம். முதற்பாசுரத்தில் பகவான் ஸ்ரீபூமிகளோடே கூடியிருந்த-மையை அநுஸந்தித்தார். அவன் ஸ்ரீநீளாதேவிகளுடன் கூடியிருப்பதை பத்தாம் பாசுரத்தில்- *பின்னே செவ்வித்தோள் புணர்ந்து உகந்த* (நப்பின்னேப் பிராட்டியுடைய அழகிய தோளோடே ஸம்ஶ்லேஷித்து ஸந்தோஷித்த) *திருமால்* (ஶ்ரிய : பதி) என்கிருர்.

அர்ச்சாவதார பரமான முதற்பாசுரம், ஸ்ரீக்ருஷ்ணுவதார பரமான ஐந்து பாசுரங்கள், ஸ்ரீநர-ஸிம்ஹாவதார பரமான மூன்று பாசுரங்கள், பலஶ்ருதியான பத்தாவது பாசுரம் என அமைந் துள்ள இப்பதிகத்தைக் கற்று வல்லவராயிருப்பார் இந்த லோகத்திலே ஸ்ரீவைஷ்ணவர் களுக்குத் தலேவராகவும் பிறகு நித்யஸூரிகளோடே ஒரு கோவையுமாகவும் விளங்குவார்கள் என்று பேசித் தலேக்கட்டுகிருர்.

ஸ்ரீமந்நாக₃புரீஶாய ஸ்ரீபூ₄மிஸஹிதாய ச |

அமேயபுரிவாஸாய க₄டந்ருத்தாய மங்க₃ளம் ||

(ஸ்ரீபூமிப்பிராட்டியோடு கூடிய திருநாங்கூர் அரிமேயவிண்ணகரத்து எம்பெருமான் குடமாடு கூத்தனுக்கு மங்களம்!)

acharya.org

ஸ்ரீ கடல்மகள் நாச்சியார் ஸமேத ஸ்ரீ தெய்வநாயகன்
- திருத்தேவனார்த்தொகை

acharya.org

திருத்தேவனார்தொகை மாதவப்பெருமாள் மங்களாஶாஸநம்

போதலர்ந்தபொழிற்சோலைப்புறமெங்கும்பொருதிரைகள்
தாதுதிரவந்தலைக்கும் தடமண்ணித்தென்கரைமேல்
மாதவன்தான்உறையுமிடம் வயல்நாங்கை வரிவண்டு
தேதெனவென்றுஇசைபாடும் திருத்தேவனார்தொகையே

(பெரியதிருமொழி 4-1-1)

திருப்பாற்கடலிலிருந்து அம்ருதமதநத்தின்போது ப்ராதுர்பவித்த பிராட்டியை தேவகோஷ்டியில் எம்பெருமான் திருமணம் புரிந்த மஹோத்ஸவத்தை ஸேவிக்க வேண்டி மஹாமுநிவரான வஶிஷ்டர் இத்தலத்தில் நெடுங்காலம் கடுந்தவம் புரிய, அவருக்குப் பகவான் தேவ கோஷ்டியோடு திருமணக்கோலத்தை ஸேவை ஸாதித்தருளினான் என்னும் இந்த திவ்ய தேஶத்து ஸ்தலபுராணத்தை ஆழ்வாரும் *மாதவன்தான் உறையுமிடம் வயல் நாங்கை .... திருத்தேவனார்தொகையே* என்று அருளிச்செய்கிறார். ஊருக்குச் சிறப்பு நதியாலேயாகும். மண்ணியாறு உண்டாகப்பெற்ற ஏற்றம் இத்திவ்யதேஶத்துக்கு உள்ளதொன்றாகும். தெற்கே திருக்காவேரியும் வடக்கே மண்ணியாறும் இத்திருநாங்கூர் திவ்யதேஶத்தில் திகழாநின்றன. பிராட்டியும் தாமுமாய் பெருமாள் அழகியதான திருச்-சித்திரகூட மலைகளின் தாழ்வரைகளிலே விளையாடி வர்த்தித்தாப்போலே இங்கும் பூக்களின் தாதுக்கள் உதிரும்படியாக ஒன்றோடொன்று பொரா நின்ற அலைகள் வந்து எறியா நின்ற பரந்த மண்ணியென்னும் ஆற்றினுடைய தெற்குக் கரையின்மேல் மாதவனானவன் பிராட்டியும் தானுமாய் மகிழ்ந்து வர்த்திக்கிறான் என்று அநுபவிக்கிறார்.

இரண்டாம் பாட்டில் ஸர்வசேதநாசேதநங்களையும் தனக்கு ப்ரகாரமாய் உடையவனாகவும், அழகு பெருந்திய வேதங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட வஸ்துக்களை ப்ரகாரமாக உடையவனாகவும், ஸ்ருஷ்டி ஸம்ஹார கர்த்தாக்களான ப்ரஹ்ம ருத்ரர்களுக்கு அந்தர்யாமியாகவும், அவர்கள் நடுவே ஸ்திதி கர்த்தாவான விஷ்ணுவாகவும், ப்ரஹ்மருத்ரர்களுக்குக் காரணபூதனாகவும் இப்படி காரணத்வ ப்ரயுக்த ப்ராதாந்யத்துடன் விளங்குபவனான ஸர்வேஶ்வரன் பொருந்தி நித்யவாஸம் பண்ணும் திவ்யதேஶம் திருத்தேவனார்தொகை என்று அருளிச்செய்கிறார்.

நித்யவிபூதியில் உள்ளவர்களும், லீலாவிபூதியில் உள்ளவர்களும் தானே என்னும்படி அவர்களுக்கு நிர்வாஹகனாய் நிற்கிற தலைவன் உறையும் இடம் இது என்கிறார் மூன்றாம் பாட்டில். *மற்றுள்ள பல்லுயிரும் தானாயவெம்பெருமான்* என்கிற ஸாமாநாதிகரண்யம் நிர்வாஹ்ய நிர்வாஹக பாவநிபந்தநம் என்கிறார்.

அநந்யப்ரயோஜநர்களை ரக்ஷிக்குமளவன்றிக்கே ப்ரயோஜநாந்தரபரரான ப்ரம்ஹ ருத்ர இந்த்ர

acharya.org

சந்த்ராதி தேவர்களும், முநிவர்களும் *எந்தை எமக்கருள்* என்று ப்ரார்த்திக்க ரக்ஷ்யா-பேக்ஷியான இவன் அவர்களையும ரக்ஷித்தருளுகிறுன் இங்கே என்கிறுர் நான்காம் பாட்டில்.

அர்த்திக்காத போதிலும் ப்ரளயகாலம் வந்தவாறே இவர்களுடைய ஆபத்தையே பற்றுசாகக் கொண்டு தேவர்களோடு கூடின உலகை எல்லாம் தன் வயிற்றில் வைத்து ரக்ஷித்தருளும் உபகாரகன் வர்த்திக்கும் தேசம் இது என்கிறுர் ஐந்தாவது பாசுரத்தில்.

ப்ரளயத்தில் எல்லா லோகங்களையும் ஶிஶுவான தன் வயிற்றில் வைத்துக்கொண்டு ஆலிலை யில் பள்ளிகொண்ட பரமாத்புதத்தை அநுபவிக்கிறுர் ஆறும் பாட்டில். *பாலகனுய் ஆலிலையில் பள்ளிகொள்ளும் பரமன் இடம்*என்பதை இங்கே அநுஸந்திப்பது.

ஸ்ரீநரஸிம்ஹாவதாரத்தில் பகவான் வெளிப்படுத்திய ஆபத்ஸகத்வத்தை அநுபவிக்கிறுர் ஏழாம் பாட்டில். ஸ்ரீராமாவதாரத்தில் ஸ்ரீஜநகராஜன் திருமகளான மைதிலியைத் திருமணம் புரிவதற் காக த்ருடமான வில்லை முறித்த அத்விதீயமான யௌவநப் பருவத்தை உடைய சக்ரவர்த்தி திருமகன் திருவுள்ளம் உகந்து வர்த்திக்கும் ஸ்தாநம் திருத்தேவனுர்தொகை என்கிறுர் எட்டா வது பாசுரத்தில்.

பெருத்த மஸ்தகத்தை உடையதாய் கொழுப்பேறி இருக்கிற குவலயாபீடமானது தன்னுடைய பாகனுடன் நடுங்கி விழும்படி அதனுடைய தந்தத்தைப் பிடுங்கி வீசிப்பொகட்ட அழகிய திவ்ய சேஷ்டிதங்களை உடைய க்ருஷ்ணன் மகிழ்ந்து உறையும் இடம் இது என்கிறுர் ஒன்பதாம் பாட்டில். பின்னடிகளில் இத்திவ்யதேஶத்தில் வாழும் அந்தணர்களின் செல்வப்பெருமையை அநுபவித்து இனியராகிறுர்.

பத்தாவது பாசுரம் இப்பதிகம் கற்றவர் பெறும் பேற்றைச் சொல்லுகிறது. மேகத்தையொத்த திவ்யமங்களவிக்ரஹத்தை உடைய க்ருஷ்ணன் பொருந்தி வர்த்திக்கிற திவ்யதேஶமாய் எழில் நிறைந்த சோலைகளை உடைய திருநாங்கூரில் உள்ளதான திருத்தேவனுய்தொகை விஷய மாக கூர்மைமிக்க வேலாயுதத்தை உடைய திருமங்கைமன்னன் அருளிச்செய்த இப்பதிகத்தை கற்றவர்கள் நன்மைமிக்க ஸ்ரீவைகுண்டத்தில் நித்யஸூரிகளுடன்கூடி நித்யவாஸம் பண்ணு வர்கள்.

ஸ்ரீமந்நாக$_3$புரீஶாய ஸ்ரீதே$_3$வநக$_3$ரௌக$_4$ஸே |
சித$_3$சித்$_3$வபுஷேநித்யம் மாத$_4$வாயாஸ்து மங்க$_3$ளம் ||

(திருநாங்கூர் திருத்தேவனுர்தொகையில் சேதநாசேதந ஶரீரகனுன மாதவனுக்கு எப்போதும் மங்களம் இருப்பதாக!)

acharya.org

acharya.org

திருவண்புருடோத்தமம் புருஷோத்தமன்
மங்களாஶாஸநம்

கம்பமாகடலடைத்துஇலங்கைக்குமன் கதிர்முடியவைபத்தும்
அம்பினலறுத்து* அரசுஅவன்தம்பிக்கு அளித்தவனுறைகோயில்*
செம்பலாநிரைசெண்பகம்மாதவி சூதகம்வாழைகள்சூழ்*
வம்புலாம்கமுகோங்கியநாங்கூர் வண்புருடோத்தமமே
(பெரியதிருமொழி 4.2.1)

இத்திவ்யதேஶத்து எம்பெருமான் புருஷோத்தமன் என்னும் திருநாமத்தோடு விளங்குகின்ற னன். அலைகளை உடைய பெரிய ஸமுத்ரத்தை அணைகட்டி, லங்கா நகரத்துக்கு ஸ்வாமியான ராவணனுடைய துர்-அபிமானம் உடைய பத்துத் தலைகளையும் பாணங்களினுல் அறுத்து, அவனுடைய தம்பியான ஸ்ரீவிபீஷணழ்வானுக்கு லங்கா ராஜ்யத்தை க்ருபை செய்த சக்ர-வர்த்தித் திருமகன் பொருந்தி வர்த்திக்கும் திவ்யதேஶம் திருநாங்கூர் வண்புருடோத்தமம் என்று கொண்டாடுகிறுர் ஆழ்வார். பின்னடிகளில் திவ்யதேஶ குணநுபவமாய்ச் செல்லுகிறது. பலா மரங்களுடைய சிறந்த வரிசைகளும், செண்பக மரங்களும், குருகத்தியும், மாமரங்களும், வாழை மரங்களும் ஆகிய இவற்றல் சூழப்பட்டதாய், பரிமளம் வீசுகின்ற பாக்கு மரங்கள் உயர்ந்திருப்பதான திருநாங்கூர் திருவண்புருடோத்தமம் என்று இந்த திவ்ய தேஶம் இருக்கும்படியை வர்ணிக்கிறுர்.

தளிரும் பூவுமாய்த் தழைத்ததாய் இருக்கும் கடம்பம் என்னும் மரத்தில் ஏறி காளியனுடைய படங்களாகிற அரங்கத்தில் குதித்து அருமையான நர்த்தநம் ஆடிய தேவாதிநாதனுனவன் மகிழ்ந்து உறையும் கோயில் என்றும், அக்நி-த்ரயம் நான்கு வகைப்பட்ட வேதம் பஞ்சமஹா யஜ்ஞங்கள் ஆறு அங்கங்கள் இவற்றைத் தாங்கள் வருந்தி அநுஷ்டிப்பது மட்டுமல்லாமல் பிறரையும் அநுஷ்டிப்பிக்க வல்ல ப்ராஹ்மணர்கள் வர்த்திக்கிற தேஶம் திருநாங்கூர் திருவண் புருடோத்தமம் என்றும் அருளிச்செய்கிறுர் இரண்டாம் பாட்டில்.

அபிமாநிகளின் அபிமாநத்தைப் பங்கம் பண்ணுவதே இவன் பணியாயிற்று. இந்த்ரனுடைய அபிமாநத்தைப் பங்கம் பண்ணினபடியை மூன்றும் பாட்டில் அநுஸந்திக்கிறுர். இடையர்கள் இந்த்ரனுக்குப் பலி இடவேண்டும் என்று சமைத்த சோற்றை முழுவதும் தான் அமுது செய்து பஶுக்கூட்டங்களை மேயச்செய்து அப்பஶுக்களை ரக்ஷித்த கண்ணன் ஸந்தோஷித்து இனிமையுடன் உறையும் கோயில் திருநாங்கூர் திருவண்புருடோத்தமம் என்கிறுர்.

பெரிய துதிக்கையை உடைய குவலயாபீடம் என்னும் யானையை அதன் கொம்பை முறித்து முடித்து, அதனுடைய பாகனையும் அழித்து, சாணூரன் முஷ்டிகன் முதலான மல்லர்களையும் அழித்து, பிறகு உள்ளே சென்று கம்ஸனை அவன் தலைமுடியைப் பிடித்து இழுத்து அவன் முகம் தரையிலே படும்படித் தள்ளித் தன் திருவடிகளால் உதைத்து நிரஸித்த க்ருஷ்ணன்

acharya.org

இப்படிப்பட்ட விரோதி நிரஸந கார்யங்களைப் பண்ணுவதற்காக நித்யவாஸம் பண்ணுகிற தேசம் திருநாங்கூர் திருவண்புருடோத்தமம் என்கிறார் நான்காம் பாட்டில்.

பகடாஸுரன் தூரத்திலே போய் விழுந்து முடியும்படியாகத் தன் திருவடிகளை நீட்டி உதைத்தவனும், ருத்ரன் தன்னுடைய ஸேனைகளோடும் பரிவாரங்களோடும் தோற்று ஓடும்படி செய்தவனும், பாணாஸுரனுடைய ஆயிரம் தோள்களையும் வெட்டிப் பொகட்டவனுமான க்ருஷ்ணன் உறையும் கோயில் திருநாங்கூர் வண்புருடோத்தமம் என்று ஐந்தாம் பாசுரத்தில் அநுபவிக்கிறார்.

மூன்றடி நிலத்துக்காக அழகிய திருக்கைகளினால் தாந ஜலத்தை வாங்கி பின்பு ப்ரஹ்மாவானவர் புஷ்பங்களை ஸம்பாதித்துக் கொண்டு ஆஶ்ரயித்து ஸ்தோத்ரம் பண்ணும்படியாகவும், கங்கா நதியானது புறப்படும்படியாகவும் திருவடிகளை நீட்டின ஸர்வேஶ்வரன் ஆஶ்ரிதர்களை ரக்ஷித்தருளும் பொருட்டு வந்து உறையும் கோயில் என்கிறார் ஆறாம் பாட்டில். ஓங்கி உலகளந்தவனே புருஷோத்தமனாவது.

ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு பெற்ற தகப்பனே விரோதியாகி நலியப்புக, அவனுக்கு நிருபாதிக பிதாவான தான் ஸ்ரீநரஸிம்ஹனாய்த் தோன்றி ஹிரண்யனை நிரஸித்தவனும், குதிரையாய் வந்த கேஶியைக் கிழித்துப் பொகட்டவனுமான உபகாரகன் வர்த்திக்கும் இடம் திருவண்புரு டோத்தமம் என்கிறார் ஏழாம் பாட்டில். ருத்ரனுக்கு ப்ரஹ்மகபாலமோக்ஷம் உண்டாகும்படி உபகரித் தருளின ஸர்வேஶ்வரன் உறையும் கோயில் என்கிறார் எட்டாம் பாட்டில். ப்ரஹ்மாவுக்கு உத்பத்தி ஸ்தாநமாக நாபீ கமலத்தையுடைய பத்மநாபனான புருஷோத்தமன் உகந்து இனிதே உறையும் கோயில் இத்திவ்யதேஶம் என்கிறார் ஒன்பதாம் பாட்டில். நிகமத்தில் –

மண்ணுளார்புகழ்வேதியர்நாங்கூர் வண்புருடோத்தமத்துள்

அண்ணல்சேவடிக்கீழடைந்துஉய்ந்தவன் ஆலிமன்அருள்மாரி

என்று இந்த திவ்யதேஶத்து எம்பெருமானை ஆஶ்ரயித்து தாம் உஜ்ஜீவநத்தைப் பெற்றதாக ஆழ்வாருடைய அநுஸந்தானம் இருக்கிறபடி. இப்பதிகம் கற்றவர்களுக்குப் பயன் இவ்வுலகில் எண்ணிலாத பேரின்பமெய்தி பிறகு அந்தமில் பேரின்பத்து அடியரோடு கூடப்பெறுவதாம்.

ஸ்ரீமந்நாக$_3$புரீஶாய ஸ்துதாயகலிவித்$_3$விஷா |

புருஷோத்தமநாத$_2$ாய புஷ்கராக்ஷாய மங்க$_3$ளம் ||

(திருமங்கையாழ்வாரால் ஸ்துதி செய்யப்பட்டவனும் தாமரை மலர் போன்ற திருக்கண்களை உடையவனுமான திருநாங்கூர் வண்புருஷோத்தமநாதனுக்கு மங்களம்!)

acharya.org

ஸ்ரீ அல்லிமாமலர் நாச்சியார் ஸமேத ஸ்ரீ பேரருளாளன்
- திருசெம்பொன்செய்கோயில்

acharya.org

செம்பொன்செய்கோயில் பேரருளாளன்

மங்களாஶாஸநம்

பேரணிந்துஉலகத்தவர்தொழுதேத்தும் பேரருளாளன்எம்பிரானை *
வாரணிமுலையாள்மலர்மகளோடு மண்மகளும்உடன்நிற்ப *
சீரணிமாடநாங்கைநன்னடுவுள் செம்பொன்செய்கோயிலினுள்ளே *
காரணிமேகம்நின்றதொப்பானைக் கண்டுகொண்டுஉய்ந்தொழிந்தேனே

(பெரியதிருமொழி 4.3.1)

பிராட்டிமார்கள் ஸந்நிதியாலே தலையெடுத்திருக்கும் திருக்கல்யாணகுணங்களை இட்டுப் *பேரருளாளன்* என்று அவனை நிருபிக்கிறார். இவனுடைய பேரருளின் பெருமையை உணர்ந்த உலகினர் அனைவரும் பெருங்கூட்டமாகக்கூடி இவன் திருவடிகளிலே விழுந்து திருநாமங்களைச் சொல்லி ஆஶ்ரயிப்பார்களாம். *பேரருளாளன்* = இவர்கள் திறத்தில் நிரவதிகமான க்ருபையைப் பண்ணுமவன். அதாவது இவர்கள் பண்ணின ஆஶ்ரயண-ப்ரகாரத்தின் அளவன்றிக்கே இவர்கள் திறத்தில் பேரருளைப் பண்ணுமவன். மழை காலத்தில் உண்டானதாய் அழகியதாய் இருக்கிற மேகத்தோடு ஸத்ருஶமாய் இருக்கும் இவன் *எம்பிரான்* (எனக்கு உபகாரகன்). இவன்தான் நாங்கை நன்னடுவுள் செம்பொன்செய் கோயிலில் நிற்கிற எம்பெருமான் என்கிறார்.

அஸந்நேவ ஸ ப$_4$வதி அஸத்$_3$ ப்$_3$ரஹ்மேதி வேத$_3$ சேத் |
அஸ்தி ப்$_3$ரஹ்மேதி சேத்$_3$ வேத$_3$ ஸந்தமேநம் ததோ விது$_3$: ||

[ஆநந்தவல்லி 6] [ஜீவாத்மாவுக்கு ஸத்ப$_4$ாவம் (உளனான தன்மை) ப்ரஹ்ம ஜ்ஞாநத்தாலே. பரமாத்மாவைப் பற்றிய ஜ்ஞாநம் உடையவனே உண்மையில் இருப்பவனாகிறான். பரமாத்மாவைப் பற்றிய ஜ்ஞாநம் ஒருவனுக்கு இல்லை என்றால் அவன் இருந்தும் இல்லாதவனாகவே ஆவான்]

என்று வேதாந்தம். *கண்டுகொண்டு உய்ந்தொழிந்தேனே* = இவனைக் கண்டு உஜ்ஜீவநத்தை (அதாவது *அஸந்நேவ* என்கிற நிலை தீர்ந்து *ஸந்தமேநம்* என்கிற நிலையை) பெற்றுப் போனேன் என்கிறார். இவ்வூரில் செல்வத்துக்கு ஸூசகங்கள் சீரணிமாடங்கள்.

நிகிலஹேயப்ரத்யநீகத்வமும், நித்யநிரதிஶயாநந்தயோகமும் எம்பெருமானுக்கு ஸ்வரூப நிருபகதர்மங்களிறே! அவற்றை அநுஸந்திக்கிறார் - *பிறப்பொடு மூப்பொன்றில்லவன் தன்னைப்பேதியாவின்பவெள்ளத்தை* - என்று இரண்டாம் பாட்டில். எல்லா சேதநாசேதநங்களும் தானே என்னலாம்படி அவற்றுக்குள்ளே உறையும் ஸர்வாந்தர்யாமித்வத்தை மூன்றாம் பாட்டில் அநுபவிக்கிறார்.

acharya.org

நான்காவது பாசுரத்தில் விபவத்தையும் அதற்கு மூலமான வ்யூஹத்தையும் அநுபவிக்கிறார். தோஷம் அற்ற வாமநனாய்க் கொண்டு மஹாபலியினுடைய யாகத்தில் பூமியை அளந்தவனாய் அசைவு அற்ற நித்யஸூரிகள் திருப்பாதங்களை ஆச்ரயித்து அடிமை செய்யும்படியாக திருப்பாற்கடலில் கண் வளர்ந்தருளின உபகாரகனாய் மாணிக்கங்கள் இழைத்த மகுடத்தை அணிந்து எழுந்தருளி இருக்கிறவனை திருநாங்கூர் செம்பொன்செய்கோயிலுள்ளே கண்டு கொண்டு உய்ந்தொழிந்தேன் என்கிறார். மேல் இரண்டு பாசுரங்களில் சக்ரவர்த்தித் திருமகன் படியை அநுபவிக்கிறார். *கருணைகாகுத்ஸ்த* என்னும்படி க்ருபையேயாயிற்று சக்ரவர்த்தித் திருமகனுக்கு நிரூபகம்! அதைத் திருவுள்ளம் பற்றி *தாய்மனத்துஇரங்கி அருளினைக் கொடுக்கும் தயரதன் மதலையை* என்று அருளிச்செய்கிறார். மற்றப் பிராட்டிமார்கள் அவயவபூதைகளாய்ப் பெரியபிராட்டியாரே ப்ரதாந மஹிஷியாய் இருப்பது! லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசா: தே$_3$வ்யா காருண்யரூபயா | ரக்ஷகஸ் ஸர்வ ஸித்$_3$தா$_4$ந்தே வேதா$_3$ந்தேஷு ச கீ$_3$யதே || (லக்ஷ்மீதந்த்ரம் 28-14) (காருண்யமே வடிவெடுத்த பிராட்டியுடன் கூடியே பகவான் ரக்ஷகனாகிறான் என்று எல்லா ஸித்தாந்தங்களிலும் வேதாந்தங்களிலும் புகழப்படுகிறான்) என்கிறபடியே இவளோடு கூடியிறே அவனும் அருளுவது! இதைத் திருவுள்ளம் பற்றி *அல்லிமாமலராள்தன்னொடும் அடியேன் கண்டுகொண்டு அல்லல் தீர்ந்தேனே* என்கிறார். மேலிரண்டு பாசுரங்களில் ஸ்ரீக்ருஷ்ணாவதார வ்ருத்தாந்தங்களை அநுபவிக்கிறார்.

இத்திவ்யதேசத்து எம்பெருமானை விபவத்தில் சக்ரவர்த்தித் திருமகன் ஆராதித்து செம்பொன்னினால் விமான மண்டபாதிகளை செய்ததாக ஸ்தலபுராணம் கூறுகிறது. ஆகையால் இவ்வெம்பெருமான் பக்கல் பெரியபெருமாள் படியுண்டு. இவனை *மின்திகழ் குடுமி வேங்கடமலைமேல் மேவிய வேத நல்விளக்கை* என்று திருவேங்கடமுடையானாக மங்களாசாஸநம் பண்ணுகிறார். ஒன்பதாவது பாசுரத்தில் *வளங்கொள் பேரின்பம் மன்னி நின்றானை வணங்கி நான் வாழ்ந்தொழிந்தேனே* என்று அவனுடைய ஆநந்தமயத்வத்தை அநுபவிக்கிறார். உபக்ரமத்தில் *பேரருளாளன்* என்றும் நிகமத்தில் *வானவர்கோனை* என்றும் அருளிச்செய்கையால் தேவப்பெருமாள் படியும் இவனுக்கு உண்டு. *மான வெண்குடைக்கீழ் வையகமாண்டு வானவராகுவர் மகிழ்ந்தே* என்று இத்திருமொழியைக் கற்று வல்லவர்களுக்கு பலன் சொல்கிறார்.

ஸ்ரீமந்நாக$_3$புரீ மத்$_4$யே ஹேம ரங்க$_3$நிவாஸிநே |
ஸ்ரீராமாராதி$_4$த மஹாகாருண்யாயாஸ்து மங்க$_3$ளம் ||

(திருநாங்கூர் செம்பொன்செய்கோயிலில் எழுந்தருளி இருப்பவனும், ஸ்ரீராமபிரானால் ஆராதிக்கப்பட்டவனுமான பேரருளாளனுக்கு மங்களம்!)

acharya.org

ஸ்ரீ செங்கமலவல்லி ஸமேத ஸ்ரீ செங்கண்மால் - திருத்தெற்றியம்பலம்

acharya.org

திருத்தெற்றியம்பலம் செங்கண்மால்
மங்களாஶாஸநம்

மாற்றரசர்மணிமுடியும்திறலும்தேசும்
மற்றவர்தம்காதலிமார்குழையும்* தந்தை
கால்தளையும்உடன்கழலவந்துதோன்றிக்
கதநாகம்காத்தளித்தகண்ணர்கண்டீர் *
நூற்றிதழ்கொளரவிந்தம்நுழைந்தபள்ளத்து
இளங்கமுகின்முதுபாளைபகுவாய்நண்டின் *
சேற்றளையில்வெண்முத்தம்சிந்தும்நாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்துஎன்செங்கண்மாலே

(பெரியதிருமொழி 4.4.1)

தாம் அநுபவித்த வண்ணம் உலகினரும் அநுபவித்து உய்யவேணும் என்னும் இன்னருளா லே அவர்களை நோக்கி *திருத்தெற்றியம்பலத்தில் எம்பெருமான் கண்ணன் கண்டீர்* என்று அருளிச்செய்கிறார். *பிறந்தவாறும் வளர்ந்தவாறும்..... என்று நம்மாழ்வார் ஈடுபட்டபடியே இவரும் ஈடுபட்டு அவ்விரண்டு படிகளையும் மூன்று பாசுரங்களால் ஸப்ரகார மாக அநுபவிக்கிறார். அதில் பிறந்தபடியைப் பேசுகிறார் முதற்பாசுரத்தின் முன்னடிகளிலே. சத்ருக்களான துர்யோதநாதிகளுடைய மணிமகுடமும் பலமும் மதிப்பும் அவர்களுடைய மனைவிகளின் ஸௌபாக்யசிஹ்நங்களான காதணிகளோடு கூடிய மங்களஸூத்ராதிகளும் தந்தையான வாஸுதேவருடைய கால்களிலே கட்டப்பட்ட விலங்கும் ஏககாலத்தில் கழன்று விழும்படியாக பரமபதத்திலிருந்து வந்து திருவவதரித்தவன். கர்ப்பவாஸ ப்ரயுக்தமான தோஷம் இவனுக்கு தட்டாது என்பதற்காக -

ததோऽகி$_2$லஜக$_3$த்பத்$_3$மபோ$_3$தா$_4$யாச்யுதபா$_4$நுநா |
தே$_3$வகீபூர்வஸந்த்$_4$யாயாம்-ஆவிர்பூ$_4$தம் மஹாத்மநா ||

(ஶ்ரீவிஷ்ணுபுராணம் 5-3-2)(தத: = தேவகிப்பிராட்டி கர்ப்பம் தரித்த பின்பு; அகில ஜகத் பத்ம போதாய = எல்லா உலகங்களாகிற தாமரையை அலர்த்துவதற்காக; தேவகீபூர்வ ஸந்த்யாயாம் = தேவகியாகிற கிழக்குத் திக்கில்; மஹாத்மநா = மிக்க தேஜஸ்ஸை உடைய; அச்யுதபாநுநா = க்ருஷ்ணனாகிற ஸூர்யனால்; ஆவிர்பூதம் = உதிக்கப்படுகை)

என்று ரிஷி சொன்னபடியே இவரும் *வந்து தோன்றி* என்று அருளிச்செய்கிறார். இப்படி தந்தை காலில் பெருவிலங்கு கழல வந்து தோன்றின கண்ணனே ஶ்ரீகஜேந்த்ராழ் வானை ரக்ஷித்து க்ருபை பண்ணியவன் என்கிறார். இவனே திருத்தெற்றியம்பலத்தில்

acharya.org

ஸேவை ஸாதித்தருளுகிறுன். இத்திவ்யதேஶத்துக்கு *லக்ஷ்மீரங்கம்* என்று வடமொழித் திருநாமம். மேட்டிடத்தைத் *தெற்றியம்பலம்* என்பர் தமிழர். ரங்கபூமி மேட்டிடமாய் இருக்கும். *திரு* என்று லக்ஷ்மிக்குப் பெயர். ஆகவே லக்ஷ்மி நர்த்தநம் செய்யும் மேடை *திருத்தெற்றியம்பலம்* எனப்படும். நிரபிமானராய் நல்ல அன்பை உடைய மெய்யடியார் திறத்து வாத்ஸல்ய மிகுதியால் திருமாலுடைய திருக்கண்கள் செந்தாமரை போல் சிவந்திருக்கும். ஐஶ்வர்ய செருக்காலும் சிவந்திருக்கும். ஆகவே *திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே* என்று அருளிச்செய்கிறுர். *மால்* என்னும் சொல் வ்யாமோஹத்தையும் மேன்மையையும் காட்டுமிறே! பின்னடிகளில் திவ்யதேஶ-அநுபவமாகச் செல்லுகிறது. பள்ளத்திலே உண்டான அநேக இதழ்களை உடைய தாமரைப் பூக்களில் நுழைந்த பெரிய வாயையுடைய நண்டுகளின் சேற்றளையில் இளையதான பாக்கு மரங்களின் முதிர்ந்த பாளையானது வெண்முத்தங்களைச் சிந்துமாம். *இப்படியுள்ள திருநாங்கூர் திருத்தெற்றியம்பலத்தில் எனக்கு ஸேவை தந்தருளுபவன் செங்கண்மாலான ஸ்ரீக்ருஷ்ணன்! நீங்களும் அவனை அநுபவிக்கப் பாருங்கோள்!* என்று லோகத்தார்களைக் குறித்தும் உபதேஶித்தருளுகிறுர்.

இரண்டாம் பாட்டில் பூதநா நிரஸநத்தை அநுஸந்திக்கிறுர். ஆத்மகுணஸம்பந்நையான யசோதையினுடைய ரூபத்தை பரிக்ரஹித்துக் கொண்டு வந்தவளாய் துஷ்டையாய் க்ரூர ஹ்ருதயையான பூதனை முலைகொடுக்க இவனும் பிள்ளைத்தனத்தில் குறைபாடில்லாமல் விஷம் கலந்த ஸ்தந்யத்தைச் சுவைத்து உகந்தான்.

மூன்றுவது பாசுரத்தில் - தட்டியை அடைத்து வைத்த சிறிய குடிசைகளில் ப்ரவேஶித்து அப்போது கடைந்த வெண்ணெயை பக்வமாக அமுது செய்தவனுய் வேல் போன்று தீக்ஷ்ணமான கண்களை உடையவர்களான இடைச்சிகளுடைய முன்றுனையைப் பிடித்து இழுத்து அலமாப்பை பண்ணி இடைச்சேரி எங்கும் திரியா நின்றவனுன ஸ்வாமியைப் பாருங்கோள் என்கிறுர்.

ஒரு பிறப்பில் இரு குலத்து மைந்தனுக வளர்ந்தருளினதற்கு ப்ரயோஜநம் ஸ்ரீநப்பின்னைப் பிராட்டியையும் ஸ்ரீருக்மணிப் பிராட்டியையும மணம் புரிவதாம். இதை அடைவே மேல் இரண்டு பாசுரங்களிலே அநுபவிக்கிறுர்.

ராக$_4$வத்வேடப$_4$வத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி | (ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-9-144) (ராக$_4$வனுனபோது ஸீதையாகவும் ஸ்ரீக்ருஷ்ணுவதாரத்தில் ருக்மிணியாகவும் ஆனுள்) என்கிறபடியே முந்தினதான ஸ்ரீராமாவதாரத்தில் இவளே ஸ்ரீஜநகராஜன் திருமகளாக திருவவதரித்தவளாகையாலே முந்தின திருவவதாரத்தில் நெஞ்சு சென்று, *இலங்கைக்கு மன்னன் நானன்றே* என்று மஹாபிமாநியாய் பெருமாளிடமிருந்து பிராட்டியைப் பிரித்துக் கொண்டுபோய் இலங்கையில சிறையில் வைத்த ராவணனுடைய இருபது தோள்களையும் ஒரே ஸமயத்தில் அறுத்துப் பொகட்ட அத்விதீயனுன சக்ரவர்த்தித் திருமகனை அநுபவிக்கிறுர் ஆறும் பாட்டில்.

acharya.org

பிராட்டியின் நிவாஸஸ்தாநமான திருமார்பை க்ருஷ்ணாஜிநத்தாலே மறைத்துக் கொண்டு இரந்தது பெற்றலல்லது மீளாத ஸுந்தரமான வாமந வேஷத்தை உடையவனாய் மஹாபலியினுடைய வேள்வியில் சென்று தனக்குக் குறையாய் இருந்த பூமியை யாசித்த பாலன் திருத்தெற்றியம்பலத்தின் எம்பெருமான் என்கிறார் ஏழாவது பாசுரத்தில். *தன்னை அழியமாறியும் ஆஸ்ரிதர்களின் கார்யத்தைத் தலைக்கட்டிக் கொடுக்கும் தன்மையனாதலால் நீங்களும் அவனை ஆஸ்ரயித்து உய்யப் பாருங்கோள்! * என்று உலகத்தாரைக் குறித்து உபதேசிப்பதில் நோக்கு. முந்தின திருவதாரங்களின் திவ்யசேஷ்டிதங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி திருவுள்ளத்தை ஆழங்காற்படுத்த இவர் வாமநாவதாரத்துக்கு முந்தினதான ஸ்ரீவராஹவதார சேஷ்டிதத்தில் ஈடுபட்டு அத்தை அநுபவிக்கிறார் எட்டாவது பாசுரத்தில். *சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரியமேரு திருக்குளம்பில் கணகணப்ப * என்று அருளிச்செய்கிறார். மிகவும் உயர்ந்து பெருத்திருக்கிற மஹாமேருவும் ஸ்ரீவராஹநாயனாரின் திருக்குளம்பின் ஏகதேசத்தில் அடங்கிவிட்டதாம். *ஸப்த த்வீபங்களிலும் பர்யந்த பர்வங்களை உடைய மலைகளிலும் எல்லா ப்ரதேசங்களிலும் ஏறிப் பாய்ந்து எட்டுத் திக்குக்களிலும் ப்ரஹ்மாண்டத்திலும் அதிசயித்து மோழை கிளம்பி ஸமுத்ரமானது பொங்கி வாராநின்ற ப்ரளய காலத்தின் வெள்ளத்தை முற்காலத்தில் தன் திருவுதரத்தில் அடக்கின எங்கள் ஸ்வாமியைக் காணுங்கோள்! * என்கிறார் ஒன்பதாவது பாசுரத்தில்.

சீரணிந்தமணிமாடம்திகழுநாங்கூர்த்
திருத்தெற்றியம்பலத்துஎன்செங்கண்மாலை *
கூரணிந்தவேல்வலவன் ஆலிநாடன்
கொடிமாடமங்கையர்கோன்குறையலாளி *
பாரணிந்ததொல்புகழான்கலியன்சொன்ன
பாமாலைஇவையைந்துமைந்தும்வல்லார் *
சீரணிந்தஉலகத்துமன்னராகிச்
சேண்விசும்பில்வானவராய்த்திகழ்வர்தாமே

என்று பத்தாவது பாசுரம் பலஸ்ருதியாய் அமைந்துள்ளது.

ஸ்ரீமந்நாக$_3$புரிஸாய ஸ்ரீஸாய நாக$_3$ஸாயிநே |
லக்ஷ்மீரங்க$_3$நிவாஸாய ரக்தநேத்ராய மங்க$_3$ளம் ||

(திருநாங்கூர் திருத்தெற்றியம்பலத்தில் லக்ஷ்மீபதியாய், பாம்பணையில் பள்ளிகொண்ட செங்கண்மாலுக்கு மங்களம்!)

acharya.org

ஸ்ரீ திருமாமகள் நாச்சியார் ஸமேத
ஸ்ரீ மணிக்கூடநாயகன் - திருமணிக்கூடம்

acharya.org

திருமணிக்கூடம் ஸ்ரீவரதராஜப்பெருமாள் மங்களாஶாஸநம்

தூம்புடைப்பனைக்கைவேழம் துயர்கெடுத்தருளி* மன்னு
காம்புடைக்குன்றமேந்திக் கடுமழைகாத்தஎந்தை*
பூம்புனற்பொன்னிமுற்றும்புகுந்து பொன்வரண்ட* எங்கும்
தேம்பொழில்கமழும்நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே
(பெரியதிருமொழி 4.5.1)

திருமணிக்கூடத்து எம்பெருமானை கஜேந்த்ரவரதனாக அநுபவிக்கிறார். இந்த வ்ருத்தாந்தம் பரதத்த்வம் இன்னது என்பதை நிரூபித்துக் கொடுக்க வல்லது. *ஆதிமூலமே! * என்று கதறின ஆனைக்கு முகம் கொடுக்க கடுக ஓடிவந்தருளினவனன்றோ இவன்! துளைகளை உடைய-தாய் பனைமரம் போலே பெருத்திருக்கிற துதிக்கையை உடைய ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய (கையிலுள்ள பூவைத் திருமால் திருவடிகளில் ஸமர்ப்பிக்க முடியவில்லையே) என்னும் துன்பத்தைப் போக்கடித்து அவனுக்கு அருளியவன் திருமணிக்கூடத்து எம்பெருமான் என்கிறார். ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு ஆபத்திலே உதவியதைப் போன்று தன்னை ஶரணமடைந்த ஆயர்குலத்தை மூங்கில்வேர் பாய்ந்து எடுக்க அரிதான கோவர்த்தநகிரியைக் குடையாக ஏந்தி கடுமழையைத் தடுத்து ரக்ஷித்த என்னுடைய ஸ்வாமி இவன் என்கிறார்.

பகவான் ஒருவனுக்குச் செய்தருளிய உபகாரத்தை தமக்குச் செய்ததாகக் கருதி உகப்பர் பாகவதர்கள். அவர்களில் தலைவரானவர் இவராகையாலே ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கும் கோகுலத்துக்கும் அவன் உபகரித்தமையை தமக்கு உபகரித்ததாக அநுஸந்தித்து *கடுமழை காத்த வெந்தை* என்கிறார் என்னவுமாம். அழகிய நீரையுடைய திருக்காவேரியானது எல்லா இடங்களிலும் பாய்ந்து அங்குள்ள பொன்னைத் தள்ளிக் கொண்டு வர, எங்கும் நீர் நிறைந்த சோலைகள் மணம் வீசும் திருநாங்கூர் திருமணிக்கூடம் என்று திவ்யதேஶாநுபவம் பண்ணு கிறார்.

பிறர்களுடைய ஆபத்துக்களைப் போக்கியது மட்டுமல்லாமல் தனக்குப் பூதனையால் வந்த ஆபத் தையும், தன் தேவியான வைதேஹிக்கு ராவணனால் வந்த இடரையும் போக்கி இருவருமான சேர்த்தியை தமக்கு அநுபாவ்யமாக உபகரித்தருளினவன் திருமணிக்கூடத்தான் என்கிறார் இரண்டாவது பாசுரத்தில். தனக்கும் நப்பின்னைப் பிராட்டிக்கும் நடுவிலுண்டான விரோதம் அனைத்தையும் போக்கி அச்சேர்த்தியைத் தமக்கு அநுபாவ்யமாக்கி உபகரித்தவன் நிற்கிற இடம் திருமணிக்கூடம் என்கிறார் மூன்றாவது பாசுரத்தில்.

குவலயாபீடத்தின் தந்தத்தை முறித்தும், பூத்திருக்கிற குருந்த மரத்தை முறித்தும், பகாஸுரனுடைய வாயைக் கிழித்தும் ருஷபங்களை நெருக்கி ஸம்ஹரித்தவனுமான தம்முடைய ஸ்வாமி திருமணிக்கூடத்தான் என்கிறார் நான்காவது பாசுரத்தில். ஶூர்ப்பணகையின்

acharya.org

செவிமூக்குகளை வாளினால் அறுத்துப் போகட்டவன் ஸ்ரீபூமிகளோடு திருமணிக்கூடத்தில் ஸேவை ஸாதித்தருளுகிறான் என்கிறார் ஐந்தாவது பாசுரத்தில். *கெண்டையும் குறளும் புள்ளும் கேழலும் அரியுமாவும்* என்று மத்ஸ்யமும் வாமநனும் பக்ஷியான ஹம்ஸமும் வராஹமும் நரஸிம்ஹமும் ஹயக்ரீவனும் ஆகிய இந்தத் திருவவதாரங்களை உடையவனும், *அண்டமும் சுடருமல்லா ஆற்றலுமாய வெந்தை* என்று ப்ரஹ்மாண்டமும் ஸூர்ய சந்த்ரர்களும் மற்றுமுண்டான ஶ்ரேஷ்ட வஸ்துக்களும் தனக்கு ப்ரகாரமாகும்படி எழுந்தருளி இருப்பவனுமான திருமணிக்கூடத்தான் தமக்கு ஸ்வாமி என்கிறார் ஆறாவது பாசுரத்தில். ஏழாவது பாசுரத்திலும் விபூத்யநுபவமாய்ச் செல்லுகிறது.

ஸம்ஶயம் நிஶ்சயம் அஸத்யம் ஸத்யம் இந்தபூமியை ரக்ஷிப்பதான மேகம் மற்றுமுண்டான வஸ்துக்கள் அனைத்தையும் நியமிக்க வல்லவனான ஸ்வாமி திருமணிக்கூடத்தான் என்கிறார் எட்டாவது பாசுரத்திலே.

புண்யபாபங்களும் அவைகளின் பலமான இன்பதுன்பங்களும் அவற்றுக்குக் காரணமான ராகத்வேஷங்களும் மோக்ஷமும் மோக்ஷஸாதநமான ஆத்மகுணங்களும் எல்லாம் அவன்-அதீநம் என்கிறார் ஒன்பதாவது பாசுரத்தில்.

மூவரில்எங்கள்மூர்த்தி இவனெனமுனிவரோடு
தேவர்வந்திறைஞ்சும்நாங்கூர்த் திருமணிக்கூடத்தானே

என்று திருமணிக்கூடத்து எம்பெருமானைப் பரிபூர்ணமாக அநுபவித்து இனியராய் இவனே எல்லாவிதமாகவும் தமக்கு அருள் புரிந்தவன் என்று க்ருதஜ்ஞதாநுஸந்தாநத்தோடே தலைக் கட்டுகிறார்.

ஸவிபூதிகுணகனான திருமணிக்கூடத்து எம்பெருமானைக் குறித்து ஆழ்வார் அருளிச்செய்த இப்பதிகம் வல்லவர்கள் பகவத்விபூதிகளான மண்ணுலகையும் விண்ணுலகையும் தங்கள் இஷ்டப்படி ஆண்டு முடிவில் ஸூர்யமண்டலத்தைப் பேதித்துப் புறப்பட்டுப் போய் முக்தராய் விளங்குவார்கள் என்பது பலஶ்ருதி.

ஸ்ரீமந்நாக$_3$புரீஶாய ரத்நகூட நிவாஸிநே |
ஸ்ரீபூ$_4$மிப்$_4$யாம் ஸமேதாய வரத$_3$யாஸ்து மங்க$_3$ளம் ||

(திருநாங்கூர் திருமணிக்கூடத்தில் ஸ்ரீதேவிபூதேவியுடன் நித்யவாஸம் செய்யும் ஸ்ரீவரதராஜனுக்கு மங்களம்!)

acharya.org

ஸ்ரீ செங்கமல நாச்சியார் ஸமேத ஸ்ரீ கோபாலகிருஷ்ணன்
- திருக்காவளம்பாடி

acharya.org

திருக்காவளம்பாடி கண்ணன்
மங்களாஶாஸநம்

தாவளந்துஉலகமுற்றும் தடமலர்ப்பொய்கைபுக்கு *
நாவளம்நவின்றங்கேத்த நாகத்தின்நடுக்கம்தீர்த்தாய் *
மாவளம்பெருகி மன்னுமறையவர்வாழும்நாங்கை *
காவளம்பாடிமேய கண்ணனே! களைகண்நீயே!

(பெரியதிருமொழி 4.7.1)

* மாமேகம் ஶரணம் வ்ரஜ * என்று ஶரணாகதியை உபதேஶித்தவன் கண்ணனன்றோ! அவன்தான் நித்யவாஸம் பண்ணுமிடம் திருக்காவளம்பாடியாய் இருக்குமே! ஆகையால் ஆழ்வார் இங்கே ஶரணம் புகுகிறார். * களைகண் நீயே * என்று ஏவகாரம் உள்ளது.

அஹமஸ்ம்யபராத$_4$நாமாலயோऽகிஞ்சநோऽக$_3$தி: |
த்வமேவோபாயபூ$_4$தோ மே ப$_4$வேதி ப்ரார்த்த$_2$நாமதி: ||
ஶரணாக$_3$திரித்யுக்தா ஸா தே$_3$வேஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ||
[அஹிர்பு$_3$த்$_4$ந்ய ஸம்ஹிதை 36-38] [*நான் குற்றங்களுக்கெல்லாம் கொள்கலமாய் இருப்பவன். (உன்னைத்தவிர) வேறு உபாயம் அற்றவன். (உன்னைத்தவிர) வேறு உபேயமும் அற்றவன். நீயே எனக்கு உபாயமாக ஆவாயாக* என்று ப்ரார்த்திக்கும் அறிவே *ஶரணா-கதி* எனப்படுகிறது. அது இந்தத் தேவனிடத்தில் செய்யப்படட்டும்]

என்று ஶாஸ்த்ர வசநம். *ஸ்ரீகஜேந்த்ராழ்வான் ஒரு மலர் காணாமையால் பூமிப் பரப்படங்கத் தாவித் திரிந்து பின்பு ஓரிடத்திலே பெரிய மலரை உடையதொரு பொய்கையைக் கண்டு அதிலே முதலை உண்டு என்று அறியாதே போய்ப்புக்கு முதலை வாயில் பட்டு அநந்யகதியாய் ஸ்வப்ரவ்ருத்தியில் நின்றும் கைவாங்கி நாவுக்கு அலங்காரமான ஸர்வேஶ்வரனுடைய திரு நாமத்தைச் சொல்லிக் கூப்பிட, அங்கே எழுந்தருளி அதன் நடுக்கத்தைத் தீர்த்த கண்ணா! நீயே எனக்குக்கதி! * என்கிறார் முதற்பாட்டில்.

இவன்தான் தன்னையழியமாறியும் ஆஶ்ரிதர்களின் கார்யம் செய்யும் தன்மையன் என்கிறார் இரண்டாவது பாசுரத்தில். அவன் தன்மையை அறிந்து அவன் திருவடிகளையே ஶரணமாகப் பற்றுகிறார். வ்ருத்தியடைகின்ற கோபத்தை உடையவனான வாலியை ஒரே பாணத்தாலே கொன்று ஸ்ரீஸுக்ரீவ மஹாராஜருக்கு க்ரீடத்தையும் ராஜ்யத்தையும் க்ருபை பண்ணி அருளியவன் என்கிறார் மூன்றாவது பாசுரத்தில். ஶரணாகதனான ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு அருள் செய்து உகந்தவன் இவன் என்கிறார் நான்காவது பாசுரத்தில்.

acharya.org

*(விரிக்கப்பட்ட) படங்களை உடைய காளியனுடைய ஶிரஸ்ஸில் குதித்து பலவிதமான நர்த்தநங்களைப் பண்ணியவனும் நித்யயௌவநமுடைய பெரியபிராட்டியை திருமார்பில் நித்யமாக வைத்தவனுமான எம்பெருமானே! * என்று அவனை விளிக்கிறார் ஐந்தாவது பாசுரத்தில். எல்லாவற்றையும் பொறுக்க வல்லவளான ஸ்ரீபூமிப்பிராட்டியே அஸுரர்கள் மலிந்திருப்பதனால் பூ-பாரம் பொறுக்க முடியாமல் ஶரணம்புக, அவளுக்காக ஸ்ரீக்ருஷ்ணனாய்த் திருவவதாரம் பண்ணியருளியவன் எம்பெருமான். *சாணூராதி மல்லர்களை யுத்தம் பண்ணி முடித்தும், கம்ஸனை எதிரிட்டு ஸம்ஹரித்தும், அநேக க்ஷத்ரியர்கள் அழியும்படியாக மஹாபாரதப் போரை நடத்தியும் போந்தவனே! நீயே எனக்குத் தஞ்சம்! *என்கிறார் ஆறாவது பாசுரத்தில். ஆஶ்ரிதர்களுக்கு(பாண்டவர்களுக்கு) பரதந்த்ரனாய் இருந்து அவர்கள் ஏவியதைச் செய்து ரக்ஷித்தவன் என்கிறார் ஏழாவது பாசுரத்தில். பாரிஜாத புஷ்ப-அபஹரண முகத்தாலே ஸத்யபாமைப் பிராட்டிக்கு உதவினபடியை அநுஸந்திக்கிறார் எட்டாவது பாசுரத்தில்.

இப்புடைகளால் அவனுக்கு ஆஶ்ரிதர்களுடைய கார்யங்களை செய்து தலைக்கட்டுகைக்கு வேண்டிய ஜ்ஞாந ஶக்த்யாதிகளில் ஒரு குறையுமில்லை. ஆஶ்ரயண-ஸௌகர்ய-ஆபாதகங்களாயும் ஆஶ்ரித-கார்ய-ஆபாதகங்களுமான திருக்கல்யாணகுணங்களால் பரிபூர்ணன் இவன் என்று அநுஸந்தித்தாராயிற்று. ஶரணாகதிக்கு விஷயநியமமே உள்ளது. குணபூர்த்தி உள்ளதும் அர்ச்சாவதாரத்திலே. ஶரணாகதிக்கு உபயுக்தமான ஶரண்யனுடைய குணங்களை அநுஸந்தித்துப் போந்து திருக்காவளம்பாடி நாயனாரை ஶரணமாகப் பற்றுகிறார் ஒன்பதாம் பாட்டில்.

*சந்தஸ்ஸுக்கு நியாமகனாய், (அந்த சந்தஸ்ஸுக்களுடைய ஆறெழுத்து எட்டெழுத்து என்கிற) வ்யவஸ்தைக்கு நியாமகனாய், வ்யவஸ்த்தித ஸ்வபாவங்களான பஞ்சபூதங்களுக்கு நியாமகனாய், லயத்துக்குக் காரணபூதனாய், ஸ்ருஷ்டிக்குக் காரணபூதனாய், இவ்வர்த்தங்களை ப்ரதிபாதிக்கிற (ஆனால்) அர்த்தங்களை அறிவதற்கு அரிதாய் இருக்கிற வேதங்களுக்கு நிர்வாஹகனாய் இருக்கிறவனே! காவளம்பாடியாய் களைகண் நீயே! என்கிறார் நிகமத்தில். *பாவளம் பத்தும் வல்லார் பார்மிசை யரசராகிக் கோவிளமன்னர் தாழக் குடை நிழல் பொலிவர்தாமே* என்று பலஶ்ருதி. ஐஶ்வர்யார்த்தியாய் இழிந்தாலும் இப்பதிகத்தின் அந்வயமே இவர்களைப் பரமபுருஷார்த்தத்திலே கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும் என்று ஆழ்வார் திருவுள்ளம் இருக்கும்படி. இத்திவ்யதேஶத்தில் ராஜகோபாலனிறே ஸேவை ஸாதித்தருளுகிறான்!

ஸ்ரீமந்நாக₃புரீஶாய ஸ்ரீதாளவநவாஸிதே |
சித்த த்₃ருங்மோஹநாங்க₃ாய கே₃ாபலாயாஸ்து மங்க₃ளம் ||

(திருநாங்கூர் பனை வளமாகிற திருக்காவளம்பாடியில் கண்களையும் மனத்தையும் மோஹிக்கச் செய்யும் திருமேனியை உடைய கோபாலனுக்கு மங்களம்!

acharya.org

acharya.org

திருவெள்ளக்குளம் அண்ணன் பெருமாள் மங்களாஶாஸநம்

கண்ணார்கடல்போல் திருமேனிகரியாய்! *
நண்ணார்முனை வென்றிகொள்வார்மன்னுநாங்கூர் *
திண்ணார்மதிள்சூழ் திருவெள்ளக்குளத்துள் -
அண்ணா! * அடியேன் இடரைக்களையாயே

(பெரியதிருமொழி 4.7.1)

* கலௌவேங்கடநாயக : * என்று போற்றப்படும் திருவேங்கடமுடையானே திருவெள்ளக்குளத்தில் ஸேவை ஸாதித்தருளுவதாக ஆழ்வாருடைய அநுஸந்தானம் இருக்கிறபடி. அண்ணன் ஸந்நிதியிலே * அடியேன் இடரைக் களையாயே * * எனவல்வினை தீர்த்தருளாயே * * ஆவா! அடியான் இவனென்று அருளாயே * என்று ஸாம்ஸாரிகமான துன்பங்களையும் அவற்றின் மூலமான வல்வினைகளையும் நிஶ்ஶேஷமாகப் போக்கியருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறார். * அண்ணன் * என்னும் சொல் நிருபாதிக பந்துவான பகவானைக் குறிக்கும். * இடமுடைத்தான ஸமுத்ரம் போன்ற (அழகையும் காம்பீர்யத்தையும் உடைய) திவ்ய மங்களவிக்ரஹத்தை உடையவனான கண்ணனே! சத்ருக்களுடைய யுத்தத்திலே (அவர்களை) ஜயிக்க வல்லரான ப்ராஹ்மணோத்தமர்கள் வாஸம் பண்ணுகிற திருநாங்கூரில் த்ருடமான ப்ரகாரங்களாலே சூழப்பட்ட திருவெள்ளக்குளம் என்கிற திவ்யதேஶத்தில் எழுந்தருளி இருப்பவனே! அநந்யகதியான அடியேனுடைய து:க்கங்களை (ப்ரக்ருதி ஸம்பந்தத்தை நீ) அறுத்துத் தரவேணும்! * என்று ப்ரார்த்திக்கிறார்.

வயல்களும் பொழில்களும் திவ்யதேஶத்து அணியாய் இருந்த போதிலும் ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸம்ருத்தியே மிகவும் ஶோபாவஹமாவது. இப்பதிகத்தில் பாசுரந்தோறும் நல்ல வேதியர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸம்ருத்தியை அநுஸந்தித்து இனியராகிறார். அநந்யப்ரயோஜநரான ஸ்ரீபாகவதர்களின் மங்களாஶாஸநமே திவ்யதேஶத்துக்கு திண்ணிய மதிளாம். *திண்ணார் மதிள்சூழ் திருவெள்ளக்குளம் * என்று கல்-அரண் இருப்பதை அநுஸந்திக்கிறார் என்றும் கொள்ளலாம்.

அடுத்த பாசுரத்தில் *கொந்தார் துளவ மலர் கொண்டணிவானே * என்கிறார். * பூங்கொத்துக்கள் நிறைந்திருக்கிற திருத்துழாய் மாலையை (திருமுடியில்) சாத்தியருள்பவனே! * என்று அர்த்தம். *குன்றால் குளிர் மாரி தடுத்துகந்தானே * என்கிறார் மூன்றாவது பாசுரத்தில். தன்னையே தஞ்சமாகப் பற்றி இருக்கும் ஆய்ப்பாடியிலுள்ளார் அனைவரையும் அவர்களுடைய ஆர்த்தியையே பற்றாசாகக் கொண்டு கல்மாரியை கோவர்த்தந மலையைக் குடையாக ஏந்தித் தடுத்து ரக்ஷித்தவன் இவன் என்றபடி.

நான்காவது பாசுரத்திலே *கானார் கரிகொம்பது ஒசித்தகளிறே * (காட்டிலே பருவம்

நிரம்பி இருக்கிற குவலயாபீடத்தினுடைய கொம்பை முறித்த மத்தஜகமே) என்கிறார்.

வேடார்திருவேங்கடம் மேயவிளக்கே! *
நாடார்புகழ் வேதியர்மன்னியநாங்கூர் *
சேடார்பொழில்சூழ் திருவெள்ளக்குளத்தாய்! *
பாடாவருவேன் வினையாயினபாற்றே

என்று ஐந்தாவது பாசுரம். * பின்புள்ளாரையும் ரக்ஷிப்பதற்காகவன்றோ திருவேங்கடத்திலும் திருவெள்ளக்குளத்திலும் தேவரீர் ஸந்நிதி பண்ணியருளுகிறது! ஆகையால் அடியேன் வினைகளைப் போக்கியருளவேணும்! * என்றபடி. ஆனாலும் * உம்முடைய பழவினைகளைப் போக்கடிப்பது துஷ்கரம் காணும் * என்று அவனுக்குத் திருவுள்ளமாக, * கல்லால் கடலை அணைகட்டி உகந்தாய் * என்கிறார். * ஜலத்தில் ஆழக்கடவதான பெருங்கற்களை மிதக்கப் பண்ணி கடலில் அணை கட்டி உகந்த தேவரீருக்கு துஷ்கரமாவதொன்றுண்டோ * என்றபடி. * ஆனாலும் எம்முடைய மேன்மையையும் உம்முடைய தண்மையையும் நோக்கில் உமக்குக் கார்யம் செய்வது நமக்கு இழுக்காகும் காண் * என்ன, * கோலால் நிரைமேய்த்த எங் கோவலர் கோவே * என்கிறார். * உமக்கு வந்த துயர் என்ன? ஏன் பதறுகிறீர்? * என்ன, * வாராகமதாகி இம்மண்ணை யிடந்தாய் * என்கிறார். * ப்ரளயம் கொண்ட பூமியை உத்தரிப்பித்து அருளினாப் போலே ஸம்ஸார ப்ரளயம் கொண்ட அடியேனையும் தேவரீர் அறிந்த ஸம்பந்தமே ஹேதுவாக உத்தரிப்பித்தருளவேணும் * என்றபடி. பிராட்டியை முன்னிட்டால் அன்றி அவன் க்ருபை செய்தருளான் என்னும் நினைவாலே -

பூவார்திருமாமகள் புல்கியமார்பா! *
நாவார்புகழ் வேதியர்மன்னியநாங்கூர் *
தேவா! திருவெள்ளக்குளத்துஉறைவானே! *
ஆவா! அடியான் இவனென்றுஅருளாயே

என்று பிராட்டி முன்னிலையில் * எல்லா இடர்களும் கெடுமாறு அருள வேணும் * என்று ப்ரார்த்தித்துத் தலைக்கட்டுகிறார். * ஶ்ரத்$_3$த$_4$யா தே$_3$வோ தே$_3$வத்வம்-அஶ்நுதே * என்ற ஶ்ருதியின் அர்த்தத்தை * திருமாமகள் புல்கிய மார்பா! .. தேவா! * என்று அநுஸந்தித்தாராயிற்று. அண்ணன் பெருமாள் ஸந்நிதியில் ஆழ்வார் ப்ரார்த்தித்துப் பெற்ற பலமே இப்பதிகம் வல்லவர்கட்கும் பலனாகக்கடவது.

பலாஶவநவாஸாய பங்கஜாக்ஷாய ஶார்ங்கி$_3$ணே |
ஶ்வேதாபீ$_4$ஷ்டப$_2$லப்ரத$_3$ாயாஸ்து வேங்கடேஶாய மங்க$_3$ளம் ||
(பூவரஶ வநத்தை இருப்பிடமாகக் கொண்டவனும், செந்தாமரைக் கண்ணனும், ஶார்ங்கம் என்னும் வில்லை ஏந்தியவனும், வேண்டியதையெல்லாம் தந்து அருள்பவனுமான வேங்கடேஶனுக்கு மங்களம்!)

acharya.org



ஸ்ரீ தாமரை நாயகி ஸமேத ஸ்ரீ தாமரையாள்கேள்வன் - திருப்பார்த்தான்பள்ளி

acharya.org

ஸ்ரீபார்த்தன்பள்ளி தாமரையாள்கேள்வன் மங்களாஶாஸநம்

கவளயானைகொம்பொசித்த கண்ணனென்றும்* காமருசீர்க்
குவளைமேகமன்னமேனி கொண்டகோன்என்னானையென்றும்*
தவளமாடநீடுநாங்கைத் தாமரையாள்கேள்வனென்றும்*
பவளவாயாள்என்மடந்தை பார்த்தன்பள்ளிபாடுவாளே

(பெரியதிருமொழி 4.8.1)

திருப்பார்த்தன்பள்ளி செங்கண்மால் திறத்துத் தமக்குண்டான ப்ரேமாதிஶயத்தை வெளியிடுகிறார் இப்பதிகத்தில். **ஜ்ஞாநத்தில் தன்பேச்சு, ப்ரேமத்தில் பெண்பேச்சு* என்கிறபடியே திருமாலைக் கலந்து பிரிந்த தலைமகள் அபிநிவேஶாதிஶயத்தாலே தலைமகனுடைய ரூபகுணாதிகளுக்கு வாசகங்களான திருநாமங்களைச் சொல்லி அவன் ஊரையும் வாய்வெருவா நின்றாள்* என்று திருத்தாயார் பாசுரமாகச் செல்லுகிறது இப்பதிகம்.

ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் ஈடுபட்டாள் என் பெண் என்கிறாள். முதற்பாசுரத்தில் *கவளயானை கொம்பொசித்த கண்ணன்* என்றும், ஒன்பதாம் பாசுரத்தில் *கண்ணன்* என்றும் தன் பெண்பிள்ளை வாய்வெருவுவதாகக் கூறுகிறாள் திருத்தாயார். பரகாலநாயகி அகப்பட்ட சுழல்களைத் தாயார் ஒன்பது பாசுரங்களில் கூறுகிறாள். அதிகமாக பக்ஷிக்கவல்ல குவளயாபீடத்தினுடைய தந்தங்களை அநாயாஸேந முறித்த வீரன் இவன். ஆசைப்படத் தகுந்த அழகை உடையதாய் கருநெய்தலை ஒத்ததும் மேகத்தோடு ஒத்ததுமான திவ்யமங்களவிக்ரஹத்தை பரிக்ரஹித்த ஸ்வாமி இவன். அவனோடு நில்லாது அவன் உகந்திருக்கும் திருப்பார்த்தன் பள்ளியையும இவள் வாய்வெருவிப் பாடுபவள் ஆனாள் என்கிறாள் திருத்தாயார்.

வஞ்ச மேவி வந்த பேயினுயிரையுண்டமாயன் என்றும், *ஆயர் மாதர் கொங்கைபுல்கு செண்டன்* என்றும் திருவாய்ப்பாடியில் சிறுமியர்களை மகிழச்செய்த செயல்களையும் அவர்களோடு ஒரு தத்த்வம் என்னலாம்படி இவன் கலந்தபடியையும் இவள் வாய்வெருவா நின்றாள் என்கிறாள் திருத்தாயார்.

மல்லைமுந்நீர் தட்டிலங்கை கட்டழித்தமாயன் (ஸம்ருத்தமாய் பழையதான ஜலத்தையுடைய ஸமுத்ரத்தை அணையால் தடுத்து லங்கையை கட்டுக்குலயப் பண்ணிய ஆஶ்சர்யபூதன்) என்றும், *அரக்கராவி மாளவன்று ஆழ்கடல்சூழ் இலங்கை செற்ற குரக்கரசன்* (ராக்ஷஸர்களுடைய ப்ராணன்கள் நஶிக்கும்படியாக ஆழ்கடலாலே சூழப்பட்ட லங்கையை அழித்த வானரர்களுக்கு ஸ்வாமியானவன்) என்றும், *கோலவில்லி* (தர்ஶநீயமான தநுஸ்ஸை உடையவன்) என்றும் வாய்வெருவா நின்றாள் என்கிறாள் திருத்தாயார். ஒரு பெண்பிள்ளை (பிராட்டி)க்காகச் செய்த செயலைத் தமக்குச் செய்ததாக அநுஸந்தித்து வாய்வெருவுகிறபடி.

acharya.org

அவனுடைய ஆபத்ஸகத்வம் ஸ்வாமித்வம் ஆகிய திருக்கல்யாணகுணங்களில் ஈடுபட்டு *ஞாலமுற்றும் உண்டு உமிழ்ந்த நாதன்* என்கிருள் பரகால நாயகி.

உகலமேத்தும் ஒருவன் என்றும்
(லோகங்கள் எல்லாம் ஸ்தோத்ரம் பண்ணும் அத்விதீயன் என்றும்)

நேசன் என்றும்
(ஆஶ்ரிதர்களிடம் ஸ்நேஹம் உடையவன் என்றும்)

*கண்ணனென்றும் வானவர்கள் காதலித்து மலர்கள் தூவும்
எண்ணனென்று மின்பனென்று மேழுலகுக்கு ஆதியென்றும்*
(ஸ்ரீக்ருஷ்ணன் என்றும், தேவர்கள் ஸ்நேஹத்தை உடையவர்களாய் புஷ்பத்தை ஸமர்ப்பிக்கும்படியாய் அவர்களுடைய எண்ணத்திலே வஸிக்குமவன் என்றும், ஸுகப்ரதன் என்றும் ஸப்த லோகங்களுக்கும் காரணபூதன் என்றும்)

இப்படி வாய்வெருவுவதாய் இருக்கிறது இப்பெண்பிள்ளையின் ஈடுபாடு என்கிருள் திருத்தாயார்.

இப்பெண்பிள்ளையானவள் இப்படி அவனுடைய திருக்கல்யாணகுணங்களைக் கூறி அவன் ஊரையும் பாடுவது ஸாதநமானுல் அது குற்றமாகும். ஆனுல் அவனுடைய நிர்ஹேதுக க்ருபையடியாகவும் ப்ராப்யருசியின் கார்யமாகவும் அவனுடைய முகோல்லாஸத்துக்கு உறுப்பாகவும் இது அமைந்திருக்கிறபடியாய் இந்த ப்ராவண்யம் அடிக்கழஞ்சு பெறும்.

இப்பதிகம் கற்று வல்லார் பெறும் பயன் அவனைப் பிரிந்து வாய்வெருவ வேண்டாதபடியான தேஶவிஶேஷத்தில் நித்யாநுபவம் பண்ணி இன்பம் எய்துகையாம்.

பலாஶவநநாத$_2$ாய பார்த்த$_2$ஶய்யா நிவாஸிநே |
பார்த்த$_2$ஸாரத$_2$யே துப்$_4$யம் பத்$_3$மேஶாயாஸ்து மங்க$_3$ளம் ||
(பூவரஶவநநாதனும், ஸ்ரீபார்த்தன்பள்ளியில் நித்யவாஸம் செய்பவனும், தாமரையாள் கேள்வனுமான ஸ்ரீபார்த்தஸாரதிக்கு மங்களம்!)

acharya.org

ஸ்ரீராமானுஜர் - ஸ்ரீபெரும்பூதூர்

acharya.org

ஸ்வாமி எம்பெருமானுருடைய திருவவதார வைபவம்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஶ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

(தமிழாக்கம் ஶ்ரீமதி ஸுந்தரவல்லி அம்மாள் - திருமாளிகை ஶிஷ்யர்)

ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் யதிராஜோ ஜக$_3$த்$_3$கு$_3$ரு : |
ஸ ஏவ ஸர்வலோகாநாம் உத்$_3$த$_4$ர்த்தா நாத்ர ஸம்ஶய : ||

(ஶ்ரீராமாநுஜருடைய நேர் ஶிஷ்யர்களில் ஒருவரான கணியனூர்ச்சிறியாத்தான் அருளிச் செய்தது)(முக்காலும் ஸத்யம் செய்து கூறுகிறேன் ; யதிராஜரே ஜகத்குரு ஆவார்! எல்லா லோகங்களையும் உய்விக்கக் கூடியவர் அவரே!) என்கிறபடியே ஜகதாசார்யரான நம் ஸ்வாமி எம்பெருமானுருடைய பெருமை எல்லையற்றது ; அது வாசாம்-அகோசரம் (அதை வாக்கினுல் சொல்லமுடியாது) என்பது ஸத்யம். ஶ்ரீராமாநுஜர் ஶ்ரீவேதவ்யாஸர் அருளிச்செய்த ஶாரீரக மீமாம்ஸா ஶாஸ்த்ரத்துக்கு -

ஸூத்ரார்த்தே$_2$ா வர்ண்யதே யத்ர வாக்யை : ஸூத்ராநுசாரிபி$_4$: |
ஸ்வபத$_3$ாநி ச வர்ண்யந்தே ப$_4$ாஷ்யம் ப$_4$ாஷ்யவிதே$_3$ா விது$_3$: ||

(ஸூத்ரத்தை அநுஸரித்த வாக்யங்களால் ஸூத்ரத்தின் அர்த்தமானது எந்த க்ரந்தத்தில் வர்ணிக் கப்படுகின்றதோ, தன்னுடைய பதங்களும் எதில் வர்ணிக்கப்படுகின்றனவோ, அந்த க்ரந்தமானது பாஷ்யம் என்று பாஷ்யத்தின் லக்ஷணம் அறிந்தவர்கள் அறிகிறுர்கள்)

என்ற க்ரமத்தில் பாஷ்யம் அருளிச்செய்து ஶ்ரீஸரஸ்வதி தேவியால் ஶ்ரீபாஷ்யகாரர் என்று போற்றப்பட்டவர். திருநாராயணபுரம் செல்வப்பிள்ளைக்கு தந்தையாகையால் ஶ்ரீமந் நாராயணனுக்கே தந்தை என்னும் பெருமை பெற்றவர். அவருடைய திருவவதார வைபவத் தைச் சிறிது அநுபவிப்போம். ஶ்ரீராமாநுஜர் ஹாரீத குலத்தில் கேஶவஸோமயாஜிக்கும் காந்திமதிக்கும் பிங்கள வருஷம் 1017இல் சித்திரை மாதத்தில் பதிமூன்றும் தேதி ஶுக்ல பக்ஷ பஞ்சமி திதியில் திருவாதிரை திருநக்ஷத்ரத்தில் வியாழக்கிழமையன்று ஸிம்ஹ லக்நத் தில் பிற்பகலில் ஶ்ரீபெரும்பூதூரில் திருவவதரித்தவர்.

திருமலையில் நித்யவாஸம் செய்து வந்த அவர்தம் மாதுலரான பெரியதிருமலைநம்பி தம் மருமகனின் திருவவதாரத்தை அறிந்து அங்கு வந்து குழந்தையின திவ்ய-லக்ஷணங்களை ஸாக்ஷாத்கரித்து *லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந : * என்பதைப் போன்று பவிஷ்யத்தில்

acharya.org

கைங்கர்யஸ்ரீயோடு விளங்குவார் என்பதை ஜ்ஞாந த்ருஷ்டியால் அறிந்து *இளையாழ்வார்* என்று திருநாமம் சாற்றினர்.

அஷ்டவர்ஷம் ப்$_3$ராஹ்மணமுபநயீத ; தமத்$_4$யாபயேத்
[(கர்ப்ப வாஸத்திலிருந்து) எட்டு வயதுள்ள அந்தண சிறுவனுக்கு உபநயநம் செய்து வேதத்தைக் கற்பிக்க வேண்டும்]

என்ற வேதவிதிப்படி இளையாழ்வார் திருத்தகப்பனரால் உபநயநம் செய்விக்கப்பட்டார். வேத-அத்யயநம் செய்தபின் மேற்கொண்டு வேதாந்த விசாரம் செய்வதற்கு விஷ்ணுகாஞ்சியில் உள்ள யாதவப்ரகாசனிடம் சென்றார். யாதவப்ரகாசன் சில வேதாந்த வாக்யங்களுக்கு அபார்த்தங்களை சொல்ல அவற்றைக் கேட்டு மிகவும் வருந்தினர். அக்காலத்தில் ஸ்ரீரங்கத்திலிருந்து காஞ்சீ நகருக்கு தன் சிஷ்யர்களுடன் எழுந்தருளின ஸ்ரீஆளவந்தார் யாதவப்ரகாசனுடைய கோஷ்டியில் எழுந்தருளி இருந்த இளையாழ்வாரை கருணையுடன் கடாக்ஷித்தார். *இவரது திருமேனியே இவருடைய மஹத்வத்தை வெளியிடுகிறது! பரம வைதிகமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை எங்கும் பரப்பக்கூடிய மஹாபுருஷர் இவரே!* என்று தீர்மானித்தார். அவருடன் நேரில் பேசும் வாய்ப்பு ஸ்ரீஆளவந்தாருக்குக் கிட்டவில்லை.

யஸ்யப்ரஸாத$_3$கலயா ப$_3$தி$_4$ரஶ் ஶ்ருணோதி
பங்கு$_3$: ப்ரத$_4$ாவதி ஜவேந ச வக்தி மூக: |
அந்த$_4$: ப்ரபஶ்யதி ஸுதம் லப$_4$தே ச வந்த்$_4$யா
தம் தே$_3$வமேவ வரத$_3$ம் சரணங்க$_3$தோऽஸ்மி ||
(ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்த முக்தக ஶ்லோகம்) (எந்தப் பேரருளாளனுடைய அநுக்ரஹலேசத்தினலேயே செவிடன் கேட்கும் சக்தியை உடையவனுகிறனே, கால் இல்லாதவன் வேகமாக நடக்க வல்லவனுகிறனே, ஊமை பேச வல்லவனுகிறனே, குருடன் காண வல்லவனுகிறனே, மலடியும் பிள்ளை பெறுகிறளோ, தேவாதிராஜனை அந்த வரதனை சரணமடைகிறேன்)

என்கிறபடியே - பேரருளாளனே யாதவப்ரகாசனுடைய கோஷ்டியிலிருந்து இளையாழ்வாரை விடுவித்து அவர் நம் ஸம்ப்ரதாயத்திற்கு வருவதற்கான உபாயங்களைச் செய்ய வேணும் என்று அவரிடம் சரணம் அடைந்து ப்ரார்த்தித்து திருவரங்கம் திரும்பினர். இளையாழ்வாருக்கு இந்த விசேஷ கடாக்ஷமே காலப்போக்கில் அவர் யதிபதியாகவும் ஸ்ரீபாஷ்யகாரராகவும் ஜகத் குருவாகவும் ப்ரஸித்தி பெறக் காரணமாயிற்று.

திருவடிகளில் வணங்கி மிகவும் ஆதரத்துடன் கேட்டபோது, க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யரான இவரும் கலியுகத்தில் அநந்தனுடைய திருவவதாரமாகத் தோன்றிய அந்த ஒருவர் தாமே என்று மிகவும் ரஹஸ்யமான அந்த விஷயத்தை வெளியிட்டார்.

மேலும் மைசூரில் ஜைந,பௌத்தர்கள் ஶாஸ்த்ரார்த்த நிர்ணய வேளையில் ஒரே ஸமயத்தில் அனைவரும்கூடி ஆயிரம் தர்க்கங்களை எழுப்ப, ஸ்ரீராமாநுஜமுநியும் தம் எதிரில் திரையை வைத்து, திரையை விலக்குபவர்கள் மடிந்து போவார்கள் என்று ஆணையிட்டு, திரைக்குப் பின் தம்முடைய ஶேஷரூபத்துடன் நின்று தம் ஆயிரம் திருமுகங்களாலும் ஆயிரம் கேள்விகளுக்கும் ஒரே ஸமயத்தில் உத்தரம் சொல்லி, அனைத்து துர்வாதங்களையும் நிரஸித்து, நம் ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தார். அந்த ஸமயத்தில் சில அல்பர்கள் எப்படி ஒருவரால் இத்தனை கேள்விகளுக்கும் ஒரே ஸமயத்தில் பதிலளிக்க முடியும் என்று ஐயுற்று திரையை நீக்கிப் பார்க்க திருவநந்தாழ்வான் திருமுகமண்டலத்திலிருந்து வெளிப்பட்ட அக்நி ஜ்வாலையில் எரித்து சாம்பலாகினர். இதனால் பலர் ஸ்ரீராமாநுஜருடைய திருவவதார ரஹஸ்யத்தை அறிந்து, அவர் திருவடிகளை ஆஶ்ரயிதது ஸமாஶ்ரயண பூர்வமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆனார்கள். மேலும் -

ப்$_3$ரஹ்மந் கலியுகே$_3$ ப்ராப்தே த$_4$ர்ம நஷ்டே ஶ்ருதீரிதே
மத்$_3$ப$_4$க்தஸ்ஸர்வ த$_4$ர்மஜ்ஞஸ்தவகே$_3$ாத்ர ஸமுத்$_3$ப$_4$வ: |
ஶாரீரக மஹாப$_4$ாஷ்ய க்$_3$ரந்த$_2$கர்த்தா ஜிதேந்த்$_3$ரிய:
தஸ்ய ஸம்ப$_3$ந்தி$_4$ந: ஶிஷ்யா: க$_3$மிஷ்யந்தி பராம் க$_3$திம் ||

(ஹரீதரே! கலியுகத்தில் வேதார்த்தங்கள் நஷ்டமாகும்போது ஸர்வ தர்மங்களையும் அறிந்த என்னுடைய பக்தன் உம்முடைய திருக்குலத்தில் அவதரித்து, ப்ரஹ்மஸூத்ரத்திற்கு பாஷ்யம் முதலான க்ரந்தங்களைச் செய்வான். இந்த்ரியங்களை வென்ற அவனுடைய ஸம்பந்த மாத்ரத்தாலேயே ஶிஷ்யர்களுக்கும் அவர்கள் பரம்பரையினர்களுக்கும் பரமபதம் ப்ராப்தமாகும்) என்று ஸ்ரீஹாரீத-ஸ்ம்ருதியில் ஹரீதரிடத்து பகவான் அருளிச்செய்தான்.

ஹாரீதகே$_3$ாத்ர ஏவாவதரத்$_3$ஸ: ஸமஜாயத: |
ஶேஷோ ராமாநுஜோ பூ$_4$த்வா ஜகத்$_3$ஸம்ரக்ஷ்ணுயஹீ ||

(உலகை ரக்ஷிப்பதற்காக திருவநந்தாழ்வானே ராமாநுஜராக ஹாரீத குலத்தில் அவதரித்துள்ளான் என்பது புலனாகிறது) என்று ப்ரபந்நாம்ருதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் —

சதுஷ்டய ஸஹஸ்ராந்தே வத்ஸராணாம் கலௌயுகே$_3$ |
ஶேஷோராமாநுஜோ பூ$_4$த்வா பூ$_4$ம்யாமவதரிஷ்யதி ||
(கலியுகத்தில் நாலாயிரம் வருடம் கழிந்த பிறகு ஆதிஶேஷன் ராமாநுஜமுநியாக நிலவுலகில் அவதரிப்பார்) என்னும் அபியுக்த வசநத்தாலும் இது தெளிவாகிறது.

திருவரங்கத்தமுதனார் ப்ரபந்ந-காயத்ரீ என்று போற்றப்படும் 108 பாசுரங்களைக் கொண்ட இராமாநுசநூற்றந்தாதியில் எம்பெருமானாரை பகவானுடைய பஞ்சாயுதங்களின் அவதாரம் என்று போற்றுகிறார். ஸ்ரீராமாநுஜ சது: ஶ்லோகீயிலே பெரியவாச்சான்பிள்ளையுடைய திருக்குமாரரான நாயனாராச்சான்பிள்ளை —

புரா ஸூத்ரைர் வ்யாஸ: ஶ்ருதிஶதஶிரோரர்த்த$_2$ம் க்$_3$ரதி$_2$தவாந்
விவவ்ரே தம் ஶ்ராவ்யம் வகுளத$_4$ரதாம் ஏத்ய ஸ புந: |
உப$_4$ாவேதத்$_3$ க்$_3$ரந்தை$_2$ள க$_4$டயிதுமலம் யுக்திபி$_4$ரஸௌ
புநர் ஜஜ்ஞே ராமாநுஜ இதி பரப்$_3$ரஹ்மமுகுர: ||
(முன்னொரு காலத்தில் ஸ்ரீவேதவ்யாஸர் ப்ரஹ்மஸூத்ரங்களைக் கொண்டு பல வேத வாக்யங்களின் பொருளை விவரித்தருளினார். அவரே (கலியின் ஆதியில்) மறுபடியும் நாட்கமழ் மகிழ்மாலை மார்பினரான ஶடகோபராகி வேதவாக்யங்களுடைய பொருளை செவிக்கினிய செஞ்சொற்களாலே தமிழ்வேதங்களில் விவரித்தார். ப்ரஹ்மஸூத்ரங்களையும், தமிழ் வேதங்களையும் யுக்திகளாலே நன்கு பொருந்தவைப்பதற்காக அவரே மறுபடியும் ஸ்ரீராமாநுஜராக திருவவதரித்தார். அவர் ப்ரஹ்மத்துக்கு கண்ணாடி போன்றவரன்றோ!) என்று அருளிச்செய்துள்ளதும் இவ்விடத்தில் அநுஸந்தேயம். வேதாந்தாசார்யரும் யதிராஜஸப்ததியில் ஸ்வாமியை

ப்ரத$_2$யந் விமதேஷு தீக்ஷ்ணப$_4$ாவம்
ப்ரபு$_4$ரஸ்மத்பரிரக்ஷணே யதீந்த்$_3$ர: |
அப்ருத$_2$க்ப்ரதிபந்நயந்மயத்$_3$வை:
வ்ருதே$_4$ பஞ்சபி$_4$ராயுதை$_4$ர்முராரே: ||
(12) குத்ருஷ்டிகளாகிற எதிரிகளை அழிப்பதற்கும் நம் போன்ற சேதநர்களை ரக்ஷிப்பதற்கும் பஞ்சாயுதங்கள் இந்நிலத்தே ஸ்ரீராமாநுஜமுநியாயின) என்று பஞ்சாயுதங்களின் அவதாரமாகவும்

விஶ்வம் த்ராதும் விஷயநியதம் வ்யஞ்ஜி தாநு க்ரஹஸ்ஸந் |

விஷ்வக்ஸேநோ யதிபதிரபூ$_4$த்$_3$வேத்ர ஸாரஸ்த்ரி த$_3$ண்ட$_3$: ||

(32)(ஶப்தாதி விஷயங்களில் மண்டியிருக்கும் சேதநர்களை உயர்த்தியருளவே த்ரிதண்டமுடைய ராமாநுஜமுநியாக ஸ்ரீவிஷ்வக்ஸேநர் அவதரித்தார்) என்று விஷ்வக்ஸேநருடைய அவதாரமாகவும் அருளிச்செய்துள்ளார். மேலும் அவரே -

காஷாயேண க்$_3$ருஹீதபீதவஸநா த$_3$ண்டை$_3$: த்ரிபி$_4$ர் மண்டி$_3$தா |
ஸா மூர்த்திர்முரமர்த$_3$நஸ்ய ஜயதி த்ரைய்யந்த ஸம்ரக்ஷிணீ ||
யத்ப்ரக்$_2$யாபித-தீர்த்த$_2$-வர்தி$_4$த-தி$_4$யாமப்$_4$யஸ்யதாம் யத்$_3$கு$_3$ணைந் |
ஆஸிந்தே$_4$ாரநித$_3$ம்-ப்ரதே$_3$ஶ-நியதா கீர்த்தி : ப்ரஜாக$_3$ர்தி ந : ||

(63) என்று தத்தாத்தரேயரான எம்பெருமானே வேதாந்தார்த்தங்களை ரக்ஷிப்பதற்காக ஸ்ரீராமா- நுஜராகத் திருவவதரித்துள்ளான் என்றும் அருளிச்செய்திருக்கிறார்.

ஜக$_3$த் ஸம்ரக்ஷணார்த்த$_2$ாய விஷ்வக்ஸேநோ ஜக$_3$த்பதி :
ஜாதோ ராமாநுஜபூ$_4$ம்யாம் பூ$_4$தபுர்யாம் ப$_3$பூ$_4$வ ஸ : |
ஏஷ ராமாநுஜ ஸ்ரீமாந் லீலாமாநுஷ விக்$_3$ரஹ :
ப்ரத$_4$ாநோ நித்யஸூரீணாம் அவதீர்ணோது$_4$நா பு$_4$வி ||

(ஜகத்தை ரக்ஷிப்பதற்காக ஜகத்பதியான ஸ்ரீவிஷ்வக்ஸேநர் பூதபுரியில் ராமாநுஜராக அவதரித்தார். நித்யஸூரிகளில் ப்ரதாநரான விஷ்வக்ஸேநரே மானிட உருக்கொண்டு லீலா விபூதியில் அவதரித்தார்) என்னும் அபியுக்தர் வசநமும் இங்கு காணத்தக்கது.

இப்படி ஸ்ரீராமாநுஜருடைய திருவவதாரமானது திவ்யமானது என்றும், அது பல வைபவங்களைக் கொண்டது என்றும் நாம் அறியலாம்.

ஸ்ரீமந் மஹாபூ$_4$தபுரே ஸ்ரீமத் கேஶவயஜ்வந : |
காந்திமத்யாம் ப்ரஸூத$_3$ாய யதிராஜாய மங்க$_3$ளம் ||

acharya.org

ஸ்ரீதஶஶ்லோகீ

(ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளிச்செய்த *தஶஶ்லோகீ* என்னும் க்ரந்தம் *ஸுபோதிநீ* என்னும் அதன் தமிழாக்கத்துடன் ஸ்வாமியுடைய திருத்தம்பியரான ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியினுல் வெளியிடப்பட்டது)

ப்ரணம்ய ஸ்ரீரங்க$_3$நாத$_2$ம் ஸ்வாசார்யம் ச யத$_2$ாமதி |
வ்யாகுர்வே ஸ்ரீத$_3$ஶஶ்லோகீம் பே$_3$ாத$_4$ார்த்த$_2$ம் லோகப$_4$ாஷயா ||

ஶ்ரிய : பதியான ஸர்வேஶ்வரன் ஸம்ஸாரிகளான நம்மை உய்விக்க வேண்டிப் பல முயற்சி களை மேற்கொள்கிறுன். அதற்குக் காரணம் உலகுக்கெல்லாம் தான் எல்லா உறவு முறையாக இருப்பதும், இயல்வான பெருங்கருணை உடையவனுய் இருப்பதுமேயாகும். அவனுல் உய்விக்கப்பெறும் நாம் அவனை அறியாமல் இருக்கும் காலத்திலும் தன் பேரருளாலும் ஒழிக்கவொழியாத உறவுமுறையாலும் நம்மை ரக்ஷிக்கிறுன். ஸதாசார்ய உபதேஶ மூலமாக நாம் அவனை அறிந்த காலத்தில் நெடுங்காலம் பண்ணின தன் க்ருஷி (முயற்சி) பலித்தது கண்டு உகப்புடன் நம்மைப் பரிவோடு காப்பாற்றுகிறுன். இழந்த பொருளை மீண்டும் பெற்ற வன் மகிழ்வது போல் மகிழ்கிறுன். இவ்வுலகில் நம் கண்களுக்குத் தோற்றி நின்று நம்மை ஸதாசார்யனேடு தொடர்புடையவர்களாக ஆக்கி இங்கேயே ஆட்கொள்ளும் எம்பெருமான் நம் திருமகள்சேர் மார்பனுய் நம்முடைய ஆவியான ஸ்ரீரங்கநாதனே. ஸதாசார்ய பரம்பரையில் முதல்வனுன தான் முடிவிலான மணவாளமாமுநிகளை ஆசார்யனுக வரித்து பகவத்விஷயத் தைக் கேட்டு சாற்றுமுறை தினம் ஆசார்யோபஹாரமாக (குருகாணிக்கையாக)

ஸ்ரீஶைலேஶத$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணூர்ணவம் |
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ||

என்ற தனியனை அநுஸந்தித்து *ஜகந்நாதனுன என் நிலையான ஶாஸநம் (நியமநம்) நான் அநுஸந்தித்த இத்தனியனை முதலில் அநுஸந்தித்த பிறகே யாவரும் என் கைங்கர்யங்களைத் தொடங்கவேண்டும்* என்று ஸேனைமுதலியார் மூலம் உலகெங்கும் பரப்பினுன். இப்படி ஸதாசார்யனைக் காட்டி நம்மை அவரோடு தொடர்புடையவர்களாக ஆக்கினுன் ஆகவே நாம் முதன்முதலில் நன்றியுடன் ஸ்ரீரங்கநாதனையும் ஸ்வாசார்யனையும் வணங்க வேண்டியது கடமையாகும் இதைப்பற்றி *பரணம்ய ஸ்ரீரங்க$_3$நாத$_2$ம் ஸ்வாசார்யம் ச* என்கிறது.

ஸ்ரீமணவாளமாமுநிகளுடைய அந்தரங்க ஶிஷ்யராய் ப்ரதிவாதிகளின் கோஷ்டியில் பயங்கரராய் ஸ்ரீவைஷ்ணவகோஷ்டியில் தாஸராய் மாமுநிகள் ஏற்படுத்தின அஷ்டதிக்கஜங்களில் ஒரு வராய் விளங்கும் ஸ்ரீவத்ஸகுலதிலகரான ஹஸ்திகிரிநாதரண்ணுவின் திருவம்ஶத்தில்

திருநாங்கூர் திவ்யதேஶம் வைகுந்தவிண்ணகரம் ஸந்நிதிக்கு அருகிலுள்ள திருநாங்கூர் வைகுந்த விண்ணகரம் ப்ரதிவாதிபயங்கரம் திருமாளிகையில் ஸ்ரீ உ வே க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமிக்குத் திருக்குமாரராய் அவதரித்த ஸ்ரீ உ வே வித்வான் வித்யாபூஷணம் அண்ணங் கராசார்ய ஸ்வாமி — தமது வித்யாகுருவான ஸ்ரீபெரும்பூதூர் ஆஸூரி மஹாவித்வான் ஸ்ரீ உ வே பெரிய ராமாநுஜாசார்ய ஸ்வாமியின் அநுக்ரஹ விஶேஷத்தால் பெற்ற தமது ஸம்ப்ரதாய ஸாரார்த்த விஶேஷ ஜ்ஞாநத்தை உலகுக்குப் பயனுறச் செய்யும் வகையில் அறிவும் ஶக்தியும் குறைந்த நாம் எளிதில் ஸம்ப்ரதாய ஸாரார்த்தத்தைத் தெரிந்து கொள்ளுமாறு பத்து ஶ்லோகங் களில் சுருக்கமாகவும் தெளிவாகவும் உறுதியாகவும் ஸ்ரீதஶஶ்லோகீ என்னும் வடமொழிநூலை அருளியுள்ளார். அதற்கு அவரது அநுஜரான (தம்பியான) அடியேன் (ஸ்ரீநிவாஸாசார்யன்) அனைவரும் புரிந்து கொள்ளும்படி தமிழ்மொழியில் எளிமையாக ஸுபோதிநீ என்னும் உரையை அறிந்தளவு எழுதுகிறேன். இதைக் குறிக்கிறது — யத$_2$ாமதி வ்யாகுர்வே ஸ்ரீத$_3$ஶஶ்லோகீம் பே$_3$ாத$_4$ார்த்த$_2$ம் லோகப$_4$ாஷயா - என்று

1 விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயர்த்தங்களை அறியவிரும்பும் நம் மிடம் ஹிதபுத்தியால் ஸ்ரீதஶஶ்லோகீ என்னும் பெயரில் க்ரந்தமொன்று அருளிச்செய்யத் தொடங்கி அது விக்நமின்றி நிறைவு பெறவும் உலகில் நன்கு ப்ரசாரமடையவும் வேண்டி

ப்ரணம்ய ஸ்ரீபதிம் சாத்$_3$யம் கு$_3$ரும் ராமாநுஜம் முநிம் |
விஶிஷ்டாத்$_3$வைத ஸித்$_3$த$_4$ாந்தே த$_3$ஶஶ்லோகீ விதந்யதே || 1

என்று மங்களாசரணம் செய்கிறார்.

1. *பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து*
(பெரியாழ்வார் திருமொழி 5-2-8) என்கிறபடியே ஸம்ப்ரதாய குருபரம்பரையில் முதல் குருவானவன் ஸ்ரீபதியான ஸர்வேஶ்வரன்(திருவரங்கநாதன்).

மண்மிசை யோனிகள்தோறும்பிறந்து * எங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலும் காணகில்லா * உலகோர்களெல்லாம்
அண்ணலிராமானுசன்வந்துதோன்றிய அப்பொழுதே
நண்ணருஞானம்தலைக்கொண்டு * நாரணற்காயினரே

(இராமானுச நூற்றந்தாதி - 41) என்கிறபடியே ஆசார்ய அவதாரமாய் ஸர்வோத்தாரகராய் தயா-ஸாகரராய் வீடளிப்பவர் ஸ்வாமி எம்பெருமானார். இவ்விருவரையும் வணங்கின பிறகு விஶிஷ்டாத்வைத விஷயமாய் ஸ்ரீதஶஶ்லோகீ என்னும் க்ரந்தம் அடியேனால் இயற்றப்படுகிறது. *விஶிஷ்டாத்வைதம்* என்னும் சொல்லுக்குப் பலவகையாகப் பொருள் கொள்வர் சான்

acharya.org

றேர். அதைச் சிறிது விவரிக்கிறேன். முதலில் *தத்த்வம்* என்றால் என்னவென்பதைக் காண்போம். எது என்றும் உளதாயிருக்கும் தன்மையதாய் இருப்பதில் ஒருபடிப்பட்டதாய் (நித்யமாய்) உள்ளதோ அது *தத்த்வம்* (உண்மைப் பொருள்) எனப்படும். பரமாத்மா, ஜீவாத்மா, அசேதநம் என்று தத்த்வங்கள் மூன்று. இம்மூன்றும் நாம் அவற்றை அறிந்தாலும் அறியாவிட்டாலும் உண்மையாய் எப்போதும் உள்ளவை. *விஶிஷ்டம்* என்னும் சொல் *சிறப்புடையது* (கூடியது)என்னும் பொருளைக் குறிக்கும். *அத்வைதம்* என்னும் சொல் *இரண்டு இல்லை* (ஒன்று) என்னும் பொருளைக் குறிக்கும். எந்த எந்த சிறப்புகள் உண்டோ அந்த அந்த சிறப்புகள் எல்லாவற்றையும் உடையதாய் இரண்டில்லாத ஒரே தத்த்வம் பரமாத்ம தத்த்வமாகும். இரண்டு பரமாத்ம தத்த்வங்கள் உண்டாகில் ஒன்றைக் குறித்து மற்றொன்று பரமம் (தன்னிலும் மேலானதில்லை) என்று சொல்ல முடியாததாகையால் ஒன்றையொன்று அழித்துக் கொண்டு பரமாத்ம தத்த்வமே இல்லாததாகி விடும். ஆகவே, பரமாத்ம தத்த்வம் ஒன்றுதான் இருக்கமுடியும். அது *இதற்கு மேல் உயர்வில்லை* என்னும்படி உயர்ந்த எல்லாச் சிறப்புகளும் உடையது என்றால், மற்ற இரண்டு தத்த்வங்களும் அவ்வளவு சிறப்புடையனவை அன்று என்பதும், அவைகள் பரமாத்ம தத்த்வத்திலும் அவர (தாழ்ந்த) தத்த்வங்கள் என்பதும் தானே புலப்படும்.

5. பரமாத்ம தத்த்வம் உலக முழுமுதற்காரணம் என்று மறைநூல்கள் கூறுகின்றன. ப்ரளய காலத்தில் ஜீவாத்ம தத்த்வமும் அசேதந தத்த்வமும் உருவம் பெயர் இல்லாதவையாய், தனியாக (உள்ளவையாக) அறியமுடியாதபடி அதிஸூக்ஷ்மமாய் பரமாத்ம தத்த்வத்தில் ஒன்றியுள்ளன. அந்நிலையில் ஸூக்ஷ்ம சேதநாசேதந விஶிஷ்டமான பரமாத்ம தத்த்வம் ஜகத்காரணமாகிறது என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன. அந்தப் பரமாத்ம தத்த்வம் ஒரு ஸமயம் தன்னிடம் ஒன்றி உள்ள மற்ற இரண்டு தத்த்வங்களையும் உருவம் பெயர் உடையனவையாய் ஸ்தூலமாக்கி, அவற்றுள் தான் புகுந்து நின்று ரக்ஷிக்கிறது. இந்நிலையில் அப்பரமாத்ம தத்த்வம் ஸ்தூல சேதநாசேதந விஶிஷ்டமாய் கார்யமாகிறது என்று வேதநூல்கள் கூறுகின்றன. இவ்வாறு காரணமானதும் கார்யமானதுமான பரப்ரஹ்மமான பரமாத்ம தத்த்வம் ஒன்றே என்பதும் விஶிஷ்டாத்வைதம் என்னும் பதத்தின் பொருளாகும்.

6. ஶ்ரிய: பதியாய், ஜகதேக காரணனாய், உலகுய்ய அறநூல் விரித்தவனாய், தேவாதி தேவனான பரமாத்மாவை ஶரணமடைவதே ஸுலபமான மோக்ஷ நெறி என்பதை நாம் அறிய வேண்டும். வேதபுருஷன் -

யோ ப்$_3$ரஹ்மாணம் வித$_3$த$_4$ாதி பூர்வம்
யோ வை வேத$_3$ாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை |
தம் ஹ தே$_3$வம்-ஆத்மபு$_3$த்$_3$தி$_4$ப்ரஸாத$_3$ம்
முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்$_3$யே ||

acharya.org

(ஶ்வே 6-18) (எவன் ப்ரஹ்மாவை முன் படைத்தானோ, எவன் வேதங்களையும் அவனுக்கு உபதேஶித்தானோ, அப்படிப்பட்ட தேவனும், தன் விஷயமான ஜ்ஞாநத்தை ப்ரகாஶிப்பிப் பவனுமான பரமபுருஷனை மோக்ஷமடைய விரும்பும் நான் ஶரணம் அடைகிறேன்) என்று கூறுகிறான்.

தன் அநுக்ரஹ மூலமான முயற்சியின் ப$_2$லமான நமது ஶரணாகதியோடு சேர்ந்த அநுக்ரஹ விஶிஷ்டனான பரமாத்மா உபாயம். அவனால் அவனை அடைந்து அநுபவித்து அதன் முதிர்ச்சி யில் ப்ரீதியுடன் நாம் செய்யும் கைங்கர்யங்களை ஏற்று மிகுந்த ப்ரீதி விஶிஷ்டனாய் இருக்கக் கூடிய அவன் உபேயம் - ப்ராப்யம். ஆகவே அநுக்ரஹ விஶிஷ்டமான உபாயமும் ப்ரீதி விஶிஷ்டமான உபேயமும் (இரண்டில்லை) ஒன்றே என்பதும் *விஶிஷ்டாத்வைதம்* என்னும் சொல்லுக்கு அர்த்தமாகக் கொள்ளலாம். இப்படி விஶிஷ்டாத்வைத ஶப்தத்திற்கு மூன்று வகையாகப் பொருள் கொள்வது சான்றோர்களின் நூல்களில் தெளிவு. இந்த விஶிஷ்டாத் வைத ஸித்தாந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை நம் ஸ்வாமி எம்பெருமானார் நன்கு வளர்த்தார். ஆனது பற்றியே நம்பெருமாள் இதற்கு *எம்பெருமானார் தர்ஶநம்* என்று பேரிட்டு நாட்டி வைத்தார். மேல் இரண்டு ஶ்லோகங்களில் தாம் இந்த நூலைச் செய்யக் காரணத்தைக் கூறி இதில் ஸம்ப்ரதாய ஸாரார்த்தம் சுருக்கமாகவும் தெளிவாகவும் நிரூபிக்கப்படுகிறது என்று ப்ரதிஜ்ஞை பண்ணுகிறார்.

ஸ்ரீநாக$_3$புர்யபி$_4$ஜந : ஸ்ரீமத்$_3$ப்$_3$ருந்த$_3$ாவநஸ்தி$_2$த : |
அண்ணங்க$_3$ரார்ய : குருதே த$_3$யாஶ்லோகீம் து கௌதுகாத் || 2
விஶிஷ்டாத்$_3$வைதஸாரார்த்த$_2$: வைஷ்ணவாநாம் முதே$_3$ மயா |
ப்ரஸ்தூயதே த$_3$யாஶ்லோக்யா ச$_2$ாத்ரப்$_3$ருந்த$_3$ார்த்தி$_2$தேந வை || 3

திருநாங்கூரில் அவதரித்தவராய் ஸ்ரீப்ருந்தாவநத்தில் வஸிப்பவரான அண்ணங்கராசார்யர் குதூஹலத்தோடு *தயாஶ்லோகீ* என்னும் க்ரந்தத்தை இயற்றுகிறார். தம்மிடம் கல்வி கற்கும் வித்யார்த்திகளின் வேண்டுகோளுக்கு இணங்கி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் இன்பம் உண்டாகும்படி விஶிஷ்டாத்வைத ஸாரார்த்தம் இந்த நூலில் தெரிவிக்கப்படுகிறது. அத்வைத மத ஸாரார்த்தமாக *பு$_4$ஜங்க$_3$ப்ரயாதம்* என்னும் வ்ருத்தத்தில் *தயாஶ்லோகீ* என்னும் நூல் ஒன்று உளளது. அதே வ்ருத்தத்தில் அண்ணங்கராசார்யர் விஶிஷ்டாத்வைத ஸாரார்த்த மாக *தயாஶ்லோகீ* என்னும் இந்த க்ரந்தத்தை இயற்றியருளுகிறார். *குதூஹலத்தோடு* என்பதால் விஶிஷ்டாத்வைத ஸிந்தாந்தத்தில் தமக்குள்ள ஊற்றமும், *வைஷ்ணவாநாம் முதே* என்பதால் ஸாத்விகர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய உகப்பே இந்த நூலுக்குப் பயன் என்னும் விஷயமும் தெரிவிக்கப்படுகின்றன.

acharya.org

7. *ஆத்ம-ஜ்ஞாநம் மோக்ஷஸாதநம்* என்பது எல்லா வைதிக மதஸ்தர்களும் இசைந்தது. ஆத்மா இன்னது என்பதை அறிவதில்தான் மதங்கள் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. *பொய்யைச்சுரக்கும் பொருளைத்துரந்து இந்தப்பூதலத்தே மெய்யைப்புரக்கும் இராமானுசன் (இராமானுச நூற்றந்தாதி 79) *ஆத்ம தத்த்வம் ஜ்ஞாந வடிவமானது ; அனைத்தையும் புலப்படுத்தும் ஜ்ஞாநத்தைத் தன்மையாக உடையது* என்று உறுதிப்படுத்தினர். இதுவே உண்மை. ஆத்மாவும் ஜீவாத்மா, பரமாத்மா என இருவகைப்படும். ஜீவாத்மாவுக்கு அனைத்தையும் புலப்படுத்தும் ஜ்ஞாநமாகிற ஸ்வபாவத்தை (தன்மையை) தர்மபூதஜ்ஞாநம் என்பர். இது நெடுங்காலமாக ஜீவாத்மாக்கள் பண்ணிய புண்யபாபரூப இருவினைப் பயனால் சுருங்கியும் விரிந்தும் அவர்களிடம் பல்வேறு வகையாய் உள்ளது. இத்தால் ஜீவர்கள் அளவற்றவர்கள் என்றும் பரமாத்மாவிலும் வேறுபட்டவர்கள் என்றும் தெளிவாகிறது. ஜீவர்கள் ஆசார்ய ஸமாஶ்ரயண மூலமாக எம்பெருமானை ஶரணமடைந்து வினைகள் நீங்கப் பெறுகிறார்கள். மரணமானால் இப்பூதவுடல் நீங்கப்பெற்று அர்ச்சிராதி வழியாக விரஜா நதியை அடைகிறார்கள். அதில் மூழ்கி ஸூக்ஷ்ம உடலையும் விட்டு அக்கரையேறி ஸ்ரீவைகுண்டத்தை அடைகிறார்கள். தர்மபூதஜ்ஞாநம் சுருங்கவும் விரியவும் காரணமான வினைகள் நீங்கியதால் எங்கும் வ்யாபிக்கிறது. அந்நிலையில் அவர்கள் பகவானை அநுபவித்து எல்லையற்ற இன்பம் உடையவர்களாகிறார்கள். இதுவே மோக்ஷம் எனப்படும்.

எப்போதும் அனைத்தையும் பொதுவாகவும் தனித்தனியாகவும் ஒரே ஸமயத்தில் நேராகக் காணும் ஜ்ஞாந-ஒளியை உடைய நந்தா விளக்கானவன் பரமாத்மா. அவனே தனிமுதல் நாயகன். அவன் ஸங்கல்பம் (எண்ணமும் விருப்பமும்) இன்றேல் உலகம் அனைத்தும் இல்லை. அவன் இச்சையாலே உலகம் அனைத்தும் உள்ளன. ஜீவர்களின் தங்கள் ஶரீரத்தைப் பற்றிய தான ஆட்கொள்ளும் தன்மையான ஸ்வாதந்த்ர்யம் பரமாத்மா இட்ட வழக்கேயாகும். *நித்யரான ஜீவர்கள் நன்மை தீமைகளை அறியும் ஜ்ஞாநத்தை உடையவர்களாதலால் தத்தம் விருப்பப்படி செயல்புரியட்டும்* என்று எம்பெருமான் ஸங்கல்பித்துள்ளான். இந்த ஸங்கல்பமடியாக ஜீவர்கள் இயல்பாகவே முதன்முதலில் அந்தந்த வினைகளில் முயல்கின்றனர். இது தான் எம்பெருமான் ஜீவர்களுக்கு அமைத்துக் கொடுத்த ஸ்வாதந்த்ர்யம். இப்படி பகவான் அவரவர்களுடைய முதல்முயற்சியில் உதாஸீநனாய் இருக்கிறான். அடுத்துச் செய்வதில் அநுமதியுடன் இருக்கிறான். ஆகவே, *ஸ்வதந்த்ரனாய், தயாளுவான பகவான் ஏன் ஜீவர்களைப் பாபவினைகளிலும் தூண்டுகிறான்?* என்னும் கேள்விக்கு இடமில்லை. இதை நடாதூரம்மாள் *ஆத$_3$ாவீஶ்வரத$_3$த்தயைவ புருஷ: ஸ்வாதந்த்ர்யஶக்த்யா ஸ்வயம்* என்று அருளிச்செய்தார். இப்படி எம்பெருமான் ஸங்கல்பத்தால் ஜ்ஞாந இச்சா ப்ரயத்நங்களை உடையராய், அணுக்களாய், நித்யர்களான ஜீவர்களின் ஸ்வரூபத்தை மேலே காண்போம்.

ந தே$_3$ஹோ ந ப$_3$ாஹ்யாநி காந்யாந்தரம் நோ
ந ச ப்ராணபு$_3$த்$_3$தி$_4$ர் ந தே$_3$வோ நரோ நோ |

acharya.org

ந ஓ்லாதோ ம்ருதோ நோ ஹ்யஸங்க$_4$ாதப$_4$ாவாத்
சிதே$_3$கஸ்வப$_4$ாவாத் ஸமோ வைஷ்ணவோऽஹம் || 4

8. ஜீவர்கள் ஜ்ஞாந வடிவினர். ஜ்ஞாந குணமுடையவர்கள். அசேதநமான (அறிவற்றதான) ஶரீரத்திலிருந்து வேறுபட்டவர்கள். ஶரீரத்தோடு நெருங்கிய தொடர்புடைமை பற்றி தேவ ஶரீரத்தோடு கூடிய ஜீவர்கள் தேவர்கள் என்றும் மநுஷ்ய ஶரீரத்தோடு கூடிய ஜீவர்கள் மநுஷ்யர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர். உண்மையில் தேவர் , மநுஷ்யர் முதலான பெயர்கள் அவர்களுக்கு இல்லை. அந்தந்த ஶரீரத்தோடு சேர்வது ஜநநம் என்றும் பிரிவது மரணம் என்றும் கூறப்படுகிறது. நித்யமான ஜீவர்களுக்கு ஜநந மரணம் என்பதே கிடையாது. தேஹம் பல அங்கங்களின் (உறுப்புக்களின்) கூட்டாய் ஸ்தூலமானதாய்இருக்கும். அதிலிருந்து வேறு-பட்டவர்கள் அணுவான ஜீவர்கள். ஒவ்வொரு தேஹத்திலும் இவர்கள் தத்தம் வினைப்பயன்களான ஸுகது : க்கானுபவங்களால் வேறுபட்டவர்களாயினும் ஜ்ஞாந ஸ்வரூபர்கள் என்னும் ஆகாரத்தில் ஸமமானவர்கள். ப்ராக்ருத ஶரீரத்தில் இருக்கும்போதும் , அது நீங்கி ஸ்வரூபம் விளங்கும் மோக்ஷநிலையிலும் ஜீவர்கள் *அஹம்* (நான்) என்னும் உணர்வாகவே இருக்கின்றனர். இதுவே இவர்களுடைய நிலை. இவர்கள் விஷ்ணுவான பரமாத்மா இட்ட வழக்காய் அவனுக்குப் பரதந்த்ரர்களாய் இருக்க வேண்டியவர்கள். இதை அறிவதே இவர்களுடைய உஜ்ஜீவநத்துக்குக் காரணமாகும். ஸ்ரீஆளவந்தார் ஆத்மஸித்தியில் (ஶ்லோகம் 3) -

தே$_3$ஹேந்த்$_3$ரியமந : ப்ராணதீ$_4$ப்$_4$யோऽந்யோऽநந்யஸாத$_4$ந : |
நித்யோ வ்யாபீ ப்ரதிக்ஷேத்ரமாத்மா பி$_4$ந்ந : ஸ்வதஸ்ஸுகீ$_2$ ||

(தேஹம் இந்த்ரியம் மனஸ் ப்ராணன் புத்தி ஆகியவற்றைக் காட்டிலும் ஆத்மா வேறானவன். இன்னொரு ஜ்ஞாநத்தால் அறியத் தேவையில்லாதபடி தானே *நான்* *நான்* என்று தோற்றக்கூடிய ஸ்வயம்ப்ரகாஶ வஸ்து. நித்யன். ஶரீரம் முழுவதும் தன்னுடைய ஜ்ஞாநத்தால் பரவி இருப்பவன். ஒவ்வொரு ஶரீரத்திலும் தனித்தனியாக இருப்பவன். இயற்கையில் ஸுகியானவன்) என்று அருளிச்செய்துள்ளது இங்கு சுருக்கமாக விளக்கப்பட்டது.

9. ஜீவாத்மாக்கள் தத்தம் வினைப்பயனுக அந்தந்த ஶரீரங்களோடு கூடியிருக்கும்போது ஶாஸ்த்ரங்களில் கூறப்படும் *இதைச் செய் , இதைச் செய்யாதே* என்னும் விதி-நிஷேதங்களுக்கு இலக்காகிறுர்கள். மோக்ஷ-தஶையில் கர்மங்கள் நீங்கி பரமாத்மாவுக்கு ஶேஷபூதர்களாய் அவன் இட்ட வழக்காய் இருப்பவர்களாய் ஆனந்திக்கிறுர்கள்.

விதி$_4$ர்வா நிஷேதே$_4$ா விஶிஷ்டாதி$_4$காரி -
வ்யபேக்ஷ : ஶரீராணி லோகாம்ச பே$_4$ாக$_3$ா : |
ப$_4$வந்த்யேவ கர்மக்ரமாத் கர்மநாஶாத்
விஶிஷ்டோऽவிஶிஷ்டோऽப$_4$வோ வைஷ்ணவோऽஹம் || 5

புண்யபாபரூப கர்மங்கள் மாறிமாறி வரும்போது அவற்றுக்கேற்ற ஶரீரங்களை ஸம்ஸாரி ஜீவாத்மாக்கள் பெறுகிறார்கள். ஸ்வர்க்க-நரக லோகங்களில் ஸுக-து:க்கங்களை அநுபவிக் கிறார்கள். மோக்ஷ நிலையில் கர்மங்கள் அடியோடு நீங்கினவாறே ஸம்ஸாரபந்தம் விடுபட்டவர் களாகி,

*ய ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யு: விஶோக:
விஜிக$_4$த்ஸ: அபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: *

(சாந்தோக்யம் 8-7-1)(இந்த ஜீவாத்மா பாபமற்றவன்; கிழத்தனம் அற்றவன்; மரணம் அற்றவன்; வருத்தமற்றவன்; பசியற்றவன்; தாகமற்றவன்; தடையற்ற விருப்பங்களை உடையவன்; வீணாகாத ஸங்கல்பங்களை உடையவன்) என்றும்,

*ஏஷ ஸம்ப்ரஸாதே$_3$ாऽஸ்மாச் ச$_2$ரீராத் ஸமுத்த$_2$ாய பரம்
ஜ்யோதிருபஸம்பத்$_3$ய ஸ்வேந ரூபேணாபி$_4$நிஷ்பத்$_3$யதே*

(சாந் 8-12-2) (இந்த ஜீவாத்மா இந்த ஶரீரத்திலிருந்து கிளம்பி பரஞ்சோதியான நாராய ணனை அடைந்து ஸ்வரூப மலர்ச்சி பெறுகிறான்)

என்றும் உள்ள ஶாஸ்த்ர வசநங்களின்படி தங்களுக்கு இயல்பான பாபம் நீங்கினமை முதலாய் ஸத்யமான ஸங்கல்பமுடைமை ஈறான எட்டு குணங்களோடு கூடினவர்களாகிறார்கள். இதை ஸ்வரூப ஆவிர்ப்பாவம் என்பர். இவர்கள் இந்த நிலையில் ப்ராக்ருதமான, அழிவதான ஶரீரம் இல்லாதவர்கள். இவர்கள் பரமாத்மாவான விஷ்ணுவின் தாஸர்களாய் ஆநந்த ஸ்வரூபர் கள். ஆக இவர்கள் ஸம்ஸார தஶையில் தத்தம் கர்மங்களுக்கு வஶப்பட்டவர்களாகவும், ஶரீர விஶிஷ்டர்களாகவும் கர்மம் நீங்கியபோது ஸ்வரூபம் நிறம் பெற்றவர்களாகவும் உள்ளவர்கள் என்று அறிந்தோம். இனி *ஜீவாத்மாக்களுக்கு பரமாத்மாவே அபாயமில்லாத இயல்பான எல்லா உறவாகவும் இருப்பவன் என்பதையும் மற்றவர்கள் கர்மமடியாக உறவினர்களாய் வந்து நீங்குபவர்கள்* என்பதையும் காண்போம்.

ந மாதா பிதா வா ந சாப்யந்யப$_3$ந்து$_4$:
ருதே வாஸுதே$_3$வாத் ந்ருணாமஸ்தி முக்$_2$ய: |
ஸ த$_4$ாதா வித$_4$ாதா மமாத்மா பராத்மா
ததே$_3$காஸ்ரயத்வாத் ஸுகீ$_2$ வைஷ்ணவோऽஹம் || 6

10 .

மாதா பிதா ப்$_4$ராதா நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத் க$_3$திர் நாராயண:

(ஸுபாலோபநிஷத் 6)(நாராயணனே தாயாகவும் , தந்தையாகவும் , உடன் பிறந்தவனாக வும் , தங்குமிடமாகவும் , மோக்ஷோபாயமாகவும் , நண்பனாகவும் , மோக்ஷத்தில் அடையப் படுபவனாகவும் இருப்பவன்) என்று உபநிஷத்தும் ,

சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையும் அவரே இனியாவாரே (திருவாய்மொழி 5-1-8)

என்று தமிழ்மறையும் எம்பெருமானே எல்லா உறவுமுறையும் என்று முழங்கினவன்றோ! * *ஈஶ்வரனையொழிந்தவர்கள் ரக்ஷகரல்லர்* என்னுமிடம் ப்ரபந்நபரித்ராணத்திலே சொன்னோம்* * என்று பிள்ளைலோகாசார்யர் முமுக்ஷுப்படியில் அருளிச்செய்துள்ளார். அவனே விஶ்வரூபியாய் உலகைத் தாங்குபவன். அவனே உலகைப் படைப்பவன். அவனே அனைத்திலும் உள்ளும் புறமும் நிறைந்து நிற்பவன். அவனே அனைத்திலும் அந்தர்யாமி யாய் உயிராய் இருந்து உடலான அனைத்தையும் நியமிப்பவன். அனைத்துப் பொருள்களையும் உண்டாக்கி , போஷித்து வளர்த்து , ப்ரளயத்தில் உண்டு ரக்ஷித்து , ஸ்ருஷ்டி காலத்தில் மீண் டும் உருக்குலையாமல் வெளியிட்டு எல்லாவிதப் பற்றுக்கோடாகவும் உள்ளவன். *அவனை ஆஶ்ரயித்து நான் து:க்கமற்றுக் ஸுகமாய் இருக்கிறேன் ; எல்லாரும் அப்படியே ஆகவேணும்* என்னும் அருளால் *ததே₃காஶ்ரயத்வாத் ஸுகீ₂ வைஷ்ணவோSஹம்* என்று ஸ்வாநுபவத்தை வெளியிடுகிறார். இந்த உணர்வு நமக்கு ஏற்படுவது ப்ரமாணங் களாலேயே! உண்மையான அறிவு ப்ரமாணங்களாலேயே ஏற்படும் என்பதை மேலே அருளிச்செய்கிறார்.

ஸயோக₃ம் ச ஸாங்க்₂யம் மதம் கௌ₃தமீயம்
    புராணுதி₃ வேத₃ாவிரோதி₄ ப்ரமாணம் |
ப்ரமாணம் ப்ரமாதா ப்ரமா சேதி ஸத்யம்
    ப்ரமாணாஶ்ரயத்வாத் ஸுதீ₄ர் வைஷ்ணவோSஹம் || 7

11. *கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமும் சொற்பொருள் தானும் மற்றை நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினால் அருள் செய்து* (பெரியதிருமொழி 2-8-5) என்றும் , *மாநம் ப்ரதீ₃மிவ காருணிகோ த₃த₃ாதி* (ஸ்ரீரங்கராஜஸ்தவம்) என்றும் சொல்லுகிற படியே எம்பெருமான் நம்மிடம் பேரருள் கொண்டு நாம் உண்மையறிவு பெற்று உய்யும் வகையாக பதினெட்டு வித்யாஸ்தாநங்கள் முதலான கலைகளை வெளியிட்டருளினான். வேதமே முதன்மையான ப்ரமாணமாகும்.

அதற்கு விரோதமில்லாமலேயே மற்ற வித்யா ஸ்தாநங்கள் பொருள்களை விளக்கி ஸம்ஸாரி

acharya.org

கள் உய்ய வகை செய்கின்றன. எம்பெருமானுடையவும் ஆசார்யனுடையவும் அருளாலேயே ஶாஸ்த்ரங்களில் யதார்த்த ஜ்ஞாநம் ஏற்படும். * நல்ல விஷயங்களில் முயற்சி மேற்கொள்ள (ஜ்ஞாந ஶக்த்யாதிகளை இயல்பாகவுடையதாக) ஆத்மதத்த்வம் ஆகுக * என்று எம்பெருமான் ஸங்கல்பித்துள்ளான். ஆத்மாவுக்கு அறிவை உண்டாக்கும் ப்ரமாண நூல்களையும் வெளியிட்டான். ஆயினும் ஸம்ஸாரிகள் தம் இயல்பான ஜ்ஞாந ஶக்த்யாதிகளைக் கொண்டு தீய விஷயங்களிலேயே மிகவும் முயல்கின்றனர். பொருள்களைக் காண ஏற்றின விளக்கின் வெளிச்சத்தைக் காணக் கூசிக் கண் நோய் உற்றவன் கண்ணை மூடிக்கொண்டு இருட்டைத் தேடுவதைப் போலவும், பழம் என்று நினைத்து விளக்கில் விழுந்து இறகுகள் உதிர்ந்து உயிர் மாயும் விட்டில்பூச்சி போலவும், அறியாமையினாலும் ஒன்றை மற்றொன்றாக அறியும் விபரீத ஜ்ஞாநத்தாலும் ஸம்ஸாரி ஜீவாத்மாக்கள் வீணாக அழிகின்றனர். இதில் எம்பெருமானுக்கு ஒரு தொடர்பும் இல்லை. ஸம்ஸாரிகளின் ஸ்வாதந்த்ரியமே அவர்கள் மேன்மேலும் தாழவிழக் காரணமாகிறது.

இப்படிக் காலம் செல்லும்போது இயற்கையாக ஒரு நாள் ஸாதுக்களோடு ஸமாகமம் (சேர்க்கை) ஏற்பட்டு, அவர்கள் காட்டின ஸதாசார்யனை ஆஶ்ரயித்து, அவன் இவனுக்குப் பல உபதேஶங்கள் செய்து திருத்தும்போது இவன் திருந்தி உண்மையை அறிபவனாகிறான். இதைப் பற்றாசாகக் கொண்டு ஸர்வவித பந்துவான எம்பெருமான் இவனை மேன்மேலே உயர்த்திக் கொண்டு போய் தன் தாளின் கீழ்ச்சேர்த்துச் சேமம் செய்கிறான். அப்போதே அவன் ப்ரமாணங்களை முதலில் வெளிப்படுத்தினதன் பலனைப் பெறுகிறான். ஜீவாத்ம ஸ்வரூபத்துக்குச் சேர்ந்ததான ஶாஸ்த்ர ஸாரமான ஸித்தோபாயத்தை விளக்கும் பாஞ்சராத்ர ஶாஸ்த்ரத்தை முழுவதும் எம்பெருமானே உபதேஶித்தான். வேதார்த்த விரோதமொன்றும் அதில் இல்லை. எம்பெருமானார் மதத்தில் ப்ரமாணம், ப்ரமேயம், ப்ரமாதா அனைத்துமே ஸத்யம். ஆகவே ஸ்ரீபாஷ்யம் * ஸத்யைகாலம்பி$_3$ ப$_4$ாஷ்யம் * (அதிகரண-ஸாராவளீ) என்று கொண்டாடப்பட்டது.

ப்ரமாணம் து ஶாஸ்த்ரம் த்ரிகாலேஷ்வப$_3$ாத்$_4$யம்
ப்ரமேயம் த்வசிச்சித்பரேஶாநதத்த்வம் |
ஸமாதே$_3$ர்நிஷேத$_4$ாத் ஸத$_3$த்$_3$வைதமேகம்
ஶ்ருதம் ப்$_3$ரஹ்ம தஸ்யாம் ஶதோவைஷ்ணவோऽஹம் || 8

12. * ஸத் * என்னும் சொல்லால் சொல்லப்படும் ப்ரஹ்மம் ஒன்றே தத்த்வம் என்று வேதம் கூறுவது அதற்கு ஸமமானதோ மேற்பட்டதோ வேறொரு தத்த்வம் இல்லை என்பதைக் கூறுவதற்காகவே தவிர அதன் செல்வமான அசித் சித் என்னும் தத்த்வங்கள் இல்லை என்று கூறுவதற்காக அன்று. லோகஸித்தமாய்த் தெளிவாகப் புலப்படும் அசித் சித் தத்த்வங்கள் பரப்ரஹ்மமான ஈஶ்வர தத்த்வத்துக்கு உடலாய், பரதந்த்ரமாய் அது இட்ட வழக்காய், அதை விட்டுப் பிரியாததாய் இருப்பவை என்பதை நாம் அறிய வேண்டும். பரப்ரஹ்மத்துக்கு

acharya.org

இவை அம்ஶமாய் உள்ளன. *ஸூக்ஷ்ம சேதநாசேதந விஶிஷ்ட ப்ரஹ்மம் காரணம் ; ஸ்தூல சேதநாசேதந விஶிஷ்ட ப்ரஹ்மம் கார்யம் ; இரண்டும் ஒன்றே* என்று கொள்ளும் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தமே ஶாஸ்த்ர ஸம்மதமாகும். இதிலேயே பேதஶ்ருதி, அபேத ஶ்ருதி, கடகஶ்ருதி, நிர்க்குணஶ்ருதி, ஸகுண ஶ்ருதி முதலான எல்லா வேதவாக்யங்களும் ஸமந்வயமாகின்றன. ஆகையால் விஶிஷ்டாத்வைத மதமே சிறந்ததாகும். மற்ற மதங்களில் பல வேதவாக்யங்கள் கௌணமாகின்றன.

கீழ் ஶ்லோகத்தில் ஒன்றுக்கொன்று விருத்தம் போலத் தோன்றும் வேதவாக்யங்களை ஸமந்வயப்படுத்தியதைப் போன்று ஒன்பதாவது ஶ்லோகத்தில் நிர்குண-ஸகுண அரூப-ஸுரூப அஜந்ம-பஹு ஜந்மங்களை ப்ரஹ்மத்துக்குக் கூறும் வேதவாக்யங்களை ஸமந்வயப்படுத்தும் வகைகளைக் கூறி வேத மங்கையை அழகுறச் செய்கிறார்.

குணீ நிர்குணஶ்ச ஶ்ருதோ விஶ்வரூப:
ஹ்யரூபஸ்ஸுரூபஸ்த்வஜந்மோருஜந்மா |
அவத்யப்ரஹாணாத் விசித்ராநுபாவாத்
ததீயாபிமத்யா ஸ்திதோ வைஷ்ணவோ஽ஹம் || 9

13. *குணீ* என்பதற்கு திருக்கல்யாணகுணங்கள் நிறைந்தவன் என்றும், *நிர்க்குண:* என்பதற்குத் தாழ்ந்த குணங்கள் அற்றவன் என்றும் பொருள் கொள்வதே தக்கது. வேதாந்தமானது *அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யு: விஶோகோ விஜிகத்ஸ: அபிபாஸ: என்று கெட்ட குணமின்மையைச் சொல்லி, *ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:* என்று நல்ல குணமுடைமையையும் சொல்லி இவ்விஷயத்தைத் தெளிவுபடுத்திற்று. புருஷஸூக்தத்தில் எம்பெருமானுடைய விஶ்வரூபம் வர்ணிக்கப்படுகிறது. ஈஶாவாஸ்யோபநிஷத் *அவ்ரணம் அஸ்நாவிரம்* (ப்ராக்ருதமான ரக்தமாம்ஸாதிகள் நிறைந்த ஶரீரம் எம்பெருமானுக்கு இல்லை) என்றும், *தத் தே ரூபம் கல்யாணதமம் தத்தே பஶ்யாமி* (அப்ராக்ருதமாய், பஞ்சோபநிஷந் மயமாய்) *சோதி வெள்ளத்தினுள்ளே எழுவதோருரு* (திருவாய்மொழி 5-5-10) என்னும்படியான ஒளிவடிவமான திவ்யமங்கள விக்ரஹவிஶிஷ்டன் எம்பெருமான் என்று கூறிற்று. நம்மைப் போன்று கர்மமடியான பிறவியில்லாதவனாய் அநுக்ரஹ மூலமாய்ப் பல பிறவிகள் எடுப்பவன் எம்பெருமான். ஆகவேதான் அவன் பிறவி பரார்த்தமாய் ஒளி விடுகிறது. இதை -

அஜாயமானோ பஹுதா விஜாயதே,
ஸ உ ஶ்ரேயாந் பவதி ஜாயமாந:,
பிறப்பில் பல்பிறவிப் பெருமானை,
பல பிறப்பாய் ஒளிவரும்

acharya.org

என்று ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதாந்தங்கள் இரண்டும் கூறுகின்றன. அவனுடைய திருவவதார திவ்யமங்களவிக்ரஹம் காண்பவர் மனங்களேயும் கண்களேயும் கவரவல்லது. அதில் ஈடுபட்டவர்கள் அவனுடையதும் அவனடியார்களுடையதுமான அபிமாநத்துக்கு விஷய மாகிருர்கள்.

14. அடுத்தபடியாக *பேதநிஷேத ஶ்ருதிகள் - ப்ரஹ்மத்துக்கு ஸஜாதீயமானதோடு பேத மும், அதற்கு விஜாயதீயமானதோடு பேதமும், அதனிடம் உள்ளதாகத் தோன்றும் குணதி களோடு பேதமும் இல்லே என்னும் உண்மையைத் தெரிவிக்கின்றன. நிர்விஶேஷ சிந்மாத்ர ப்ரஹ்மமே பரமார்த்தம்* என்று வாதிடுபவர்களுக்கு பேதநிஷேத ஶ்ருதிகளுக்கு கருத்து என்னவென்பதைத் தெளிவுபடுத்தி முக்தியில் ஜீவனுக்கு ப்ரஹ்மத்தோடு ஐக்யத்தைக் கூறும் ஶ்ருதியின் தாத்பர்யத்தைதயும் விளக்குகிருர்.

ந பே$_4$த$_3$ம் ருணத்$_3$தி$_4$ ஶ்ருதிர்மாநஸித்$_3$த$_4$ம்
நிஷேதே$_4$ாக்திரர்த்த்$_2$யா ஶ்ருதௌ வை பரஸ்மிந் |
விஜாதீயப$_4$ாவாத் பரிச்சி$_2$த்யப$_4$ாவாத்
ஸமத்வாத$_3$பே$_4$தீ$_3$ப$_4$வத்$_3$வைஷ்ணவோऽஹம் || 10

லோகத்ருஷ்டியில் காணும் விரோதம் லோகவிலக்ஷணுன பரமாத்மாவிடம் சொல்ல முடி யாது. எவ்வளவு சொல்லியும் பூர்த்தியாக அளவிடமுடியாத மஹிமையுடைய பரப்ரஹ்மத்திடம் *சொன்ன இவ்வளவு மட்டும் உண்டு* என்று நினேத்துவிடாதே; மேலும் பல சிறப்புகள் அதற்கு உண்டு* என்றுதான் *நேதி நேதி* என்னும் வேதவாக்யம் கூறுகிறதே தவிர *கீழ்ச் சொன்னவை ஒன்றுமில்லே* என்று சொல்லவில்லே. முக்திநிலேயில் பரமாத்மாவோடு மிகவும் ஒத்திருப்பவன் என்னும் காரணத்தாலே முக்தனும் பரனும் ஒன்றுகக் கூறப்படுகிருர் கள். இத்தால் ஜீவன் ப்ரஹ்மமே ஆகிவிடுகிருன் என்பதாகாது. *சோழ அரசன் அத்விதீ- யன்* (இரண்டாமவன் இல்லாதவன்) என்று கூறிஞல் அவனுக்கு நிகரான வேறெரு அரசன் இல்லே என்றுதான் பொருள்படுமே தவிர, அவனுக்கு மனேவி, மக்கள், ஸேனே, மந்திரி, குடிமக்கள் யாரும் இல்லே; அவன் ஒருவனே இருக்கிருன் என்று பொருளாக மாட்டாது. அது அரசனுக்குப் புகழாகவும் ஆகாது. அப்படி யாராவது கூறிஞல் உடனே ராஜதண்டனேயல்ல வா ஏற்படும். முக்தியிலும் ஜீவபரமாத்ம பேதம் தெளிவாக வேதத்தில் கூறப்பட்டுள்ளது. *ஜீவாத்மா ஸ்ரீவிஷ்ணுவுக்கு தாஸபூதன், ஸ்ரீவிஷ்ணு ஶேஷீ* (தலேவன்) என்னும் அவரவருக்குரிய பெருமை எப்போதும் உள்ளது. *உனக்கு உஜ்ஜீவநத்தில் விருப்பம் இருந்து நீ உளகை விரும்பிஞயாகில் உன்னுடைய அடிமைத்தன்மையையும் ஹரியின் தலேமையையும் எப்போதும் நினே* என்றும், *பந்தமோக்ஷங்கள் இரண்டிலும் ஆத்மாவுக்குச் சொத்தாயிருக்கும் தன்மையும் பரப்ரஹ்மமான ஹரிக்கு ஸ்வாமியாய் இருக்கும் தன்மையும் உள்ளன; இருவருக்கும் வேறு லக்ஷணம் கிடையாது* என்றும் வேதம் வல்ல ரிஷிகள் அறுதியிட்டார்கள். இத்தால் ஜீவாத்ம பரமாத்ம பேதம் நிலேநாட்டப்பட்டதாகிறது.

acharya.org

அஜ: ஶங்கர: ஸ்கந்த$_3$ இந்த்$_3$ராத$_3$யோऽந்யே
யதௌ வை ப்ரஜாதா: ஶ்ருதா ரக்ஷிதாஶ்ச |
ஸ விஷ்ணு: பரம் ப்$_3$ரஹ்ம வாக்யைககண்ட்$_2$யாத்
ஶிவஶ்ஶாஶ்வதஸ் தம் ப$_4$ஜந் வைஷ்ணவோऽஹம் || 11

15. இனி அடுத்தபடியாக நாம் காண வேண்டியது - ஸர்வஸ்வாமியான பகவான் விஷ்ணுவே பரப்ரஹ்மம். அவனாலே பிரமன் உருத்திரன் இந்திரன் முதலான தேவர்கள் உண்டாக்கப்பட்டும் ஆபத்துக் காலங்களிலே ரக்ஷிக்கப்பட்டும் அவன் கொடுத்த பதவிகளை வஹித்து வருபவர்களாகையால் இவர்களுக்கு பரத்வம் கிடையாது - என்னும் உண்மை. வேதத்தில் ஜகத்காரண வாக்யங்களில் ஸத், ப்ரஹ்ம, ஆத்ம, நாராயணாதி பதங்களாலே ஜகத்காரணவஸ்து குறிக்கப்படுகிறது. இவற்றில் ஒரு பதத்தாலே குறிக்கப்படுபவன்தான் மற்ற பதங்களாலும் குறிக்கப்படுகிறான் என்று கொள்ள வேண்டும். நாராயணபதமொன்றே ஒரு தேவதா விஶேஷத்தைக் காட்டுகிறபடியால் அதை முக்யமாகக் கொண்டு மற்ற ஸத் முத லான பதங்களை நாராயணனைக் குறிக்குமவையாகக் கொள்ள வேண்டும். நாராயணன் அஸத் விலக்ஷணன், மிகப்பெரியவன், அசேதந விலக்ஷணன் என்பனவற்றை முறையே ஸத் ப்ரஹ்ம ஆத்ம ஶப்தங்கள் குறிப்பிடுகின்றன. இதை ஸாமாந்ய விஶேஷ ந்யாயம் என்று ஶாஸ்த்ரஜ்ஞர் கூறுவர். பிரமன் முதலானோர் அனைவரும் நாராயணனால் அந்தர்யாமியாய் வ்யாபிக்கப்பட்டிருப்பதால் அந்தந்தப் பதங்களாலே முக்யமாக நாராயணனே கூறப்படு கிறான். ஶிவன் என்னும் பதம் மங்களமானது என்னும் பொருளைக் காட்டும். * மங்களாநாம் ச மங்களம் * என்று நிலையான பரம மங்களமானவன் நாராயணன். ஶிவ ஶப்தத்தால் அவனே அழைக்கப்படுகிறான். நாராயணாநுவாகத்தில் * ஶாஶ்வதம் ஶிவமச்யுதம் * என்றும், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் * ஸர்வ: ஶர்வ: ஶிவ: ஸ்தாணு: * என்று ஶிவ ஶப்தத்தால் நாராயணனே அழைக்கப்படுகிறான்.

இப்படி கீழ் ஶ்லோகங்களில் சித் அசித் ஈஶ்வரன் என்னும் தத்த்வத்ரயத்தின் ஸ்வரூப ஸ்வ-பாவங்களை நன்கு விளக்கினார். பரம்பொருளான ஸ்ரீமந்நாராயணனை அடைவதே பரம புருஷார்த்தம் என்று மேல் ஶ்லோகத்தில் சொல்கிறார். அதைப் பெற ஶாஸ்த்ரங்களில் காட்டப் பட்ட உபாயங்களையும் அவற்றிலும் பரமைகாந்திகளின் உபாய நிஷ்டையே மிகச் சிறந்தது என்பதால் அதையே எல்லாரும் கைக்கொள்ள வேண்டும் என்பதையும் சொல்கிறார்.

க்ரியா ஜ்ஞாநயோகௌ$_3$ தத$_2$ா த்$_4$யாநப$_4$க்தீ
பரப்ராப்த்யுபாயா: ஶ்ருதௌ சோதி$_3$தா வை |
பரஸ்வஸ்வப$_4$ாவாநுஸந்த$_4$ாநயோக$_3$ாத்
ததீ$_3$யாநுகம்பாபரோ வைஷ்ணவோऽஹம் || 12

acharya.org

16. பரனுன எம்பெருமானை அடைவதாகிற மோக்ஷபலத்துக்கு உபாயங்களாக வேதத்திலும், வேதத்தின் பொருளை விளக்கவந்த இதிஹாஸாதிகளிலும் பலபல விதிக்கப்பட்டுள்ளன. அவைகள் தனித்தனியாகவும் மோக்ஷ ஸாதநங்களாகலாம்; ஒன்றுக்கொன்று உபகாரகமாய்க் கொண்டும் மோக்ஷ ஸாதநமாகலாம். முமுக்ஷுப்படி சரமஶ்லோக ப்ரகரணத்தில் தர்ம ஶப்தத்துக்குப் பொருள் அருளிச்செய்யும்போது பிள்ளைலோகாசார்யர் —

** அவையாவன - கர்ம ஜ்ஞாந பக்தியோகங்களும், அவதார ரஹஸ்யஜ்ஞாநம், புருஷோத்தம வித்யை, தேஶவாஸம், திருநாமஸங்கீர்த்தநம், திருவிளக்கெரிக்கை, திருமாலையெடுக்கை தொடக்கமான உபாய புத்த்யா செய்யுமவையும்**

(195) என்று விளக்கம் அருளிச்செய்துள்ளார். எம்பெருமானுடைய ஸர்வஸ்வாமித்வத்தையும் தன்னுடைய பகவத்-அத்யந்த-பாரதந்த்ரியத்தையும் அநுஸந்தித்துத் தன் ஸ்வரூபத்துக்கு அநுரூபம் அல்லாததும் விருத்தமானதுமான உபாயங்களை விட்டு, எம்பெருமானையே உபாயமாக உறுதிபூண்டு பற்றி ஆசார்யாபிமாநத்தில் ஒதுங்கி, சாதகபக்ஷி மழைநீரை எதிர்பார்ப்பதைப் போன்று எம்பெருமானுடைய அருளையே எதிர்நோக்கியிருக்கும் நிலையே பரமைகாந்திகளின் உபாயநிஷ்டையாகும்.

* என்னையும் என்னுடைமையையும் உன் சக்கரப்பொறியொற்றிக் கொண்டு நின்னருளே புரிந்திருந்தேன், இனி என் திருக்குறிப்பே * (பெரியாழ்வார் திருமொழி 5-4-1)

என்று பெரியாழ்வார் பரமைகாந்திகளின் நிஷ்டையைக் காட்டியருளுகிறுர். அந்த நிலையில் இருப்பதே நம் ஸ்வரூபத்துக்குச் சேர்ந்ததான உபாய நிஷ்டையாகும்.

ந ப$_3$ந்தே$_4$ா ந மோக்ஷ: தத$_2$ா ஜ்ஞாநபே$_4$ாகெ$_3$ள
    ந முக்தெள சிதே$_3$காவஶேஷோऽந்யபக்ஷ |
புமர்த்த$_2$த்வயோக$_3$ாத் மஹாநந்த$_3$யோக$_3$:
    விமுக்தெள தத$_3$ர்ஹ: க்ருதீ வைஷ்ணவோऽஹம் || 13

17. அத்வைதிகள் * நிர்விஶேஷ சிந்மாத்ர ப்ரஹ்மமே பரமார்த்தம்; மற்றவை அனைத்தும் மித்யா (பொய்); ஜீவாத்மாக்கள் ஸம்ஸாரத்தில் கர்மத்தினுல் கட்டுப்பட்டவர்கள்; அவர்கள் பரமாத்ம ஜ்ஞாநமாகிற கத்தியினுல் கர்ம பாசம் அறுபட்டு முக்தராகிறுர்கள்; அப்போது ஸ்வராட் (ஸ்வதந்த்ரமான ப்ரஹ்மமாகிறுர்கள் * என்று அறிவதெல்லாம் பொய்யான (வ்யாவஹாரிகமான) வேதாதி ஶாஸ்த்ராப்யாஸ குரு-உபதேஶாதிகளாலே ஏற்படுகிறது என்கிறுர்கள்.

acharya.org

இது சரியில்லை என்கிறார். பரமாநந்தம் பெறுவதே பருஷார்த்தம் அல்லவா? புருஷார்த்த லாபத்துக்குத்தானே அறிவுள்ள ஒவ்வொருவனும் முயற்சிக்கிறான்! குரு-உபதேஶாதிகள் பொய்யானாலும் அதிலிருந்து *நான்* என்கிற அஹமர்த்த விநாஶம் ஏற்பட்டபோதிலும் அதைக் காட்டிலும் வேறுபட்ட ஜ்ஞாந மாத்ரத்தை அடைய ஒருவனும் விரும்பி செயல் புரிய மாட்டான். *நான் உண்டு ; எனக்குப் பரமாநந்தம் உண்டு ; அதைப் பெற்று இன்புறுவதே மேலான மோக்ஷம்* என்று அதைப் பெறுவதில் உபாயத்தைக் கைக்கொண்டு பயன் பெற்றானன்றோ ஒரு ஸம்ஸாரி ஜீவாத்மா க்ருதி ஆகிறான். ஆக பரமாத்மாவை அடைந்து அவனை அநுபவித்து அவ்வநுபவத்தால் உண்டான ப்ரீதிவிஶேஷத்தால் ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வ அவஸ்தைகளிலும் உசிதமான கைங்கர்யங்களை செய்து வர்த்திப்பதே பரமபுருஷார்த்தம் என்று தேறுகிறது.

ததே$_3$வம் ஶ்ருதீநாம் மதம் வைஷ்ணவீயம்
மதம் ஸாரதோऽவர்ணயம் விஷ்ணு துஷ்ட்யை |
நிஜாந்தர் விப$_4$ாவ்யஸ்தி$_2$தஸ்யைதத$_3$ர்த்த$_2$ம்
த்வவித்$_3$யாऽநுகுர்யாத் பு$_4$ஜங்க$_3$ப்ரயாதம் || 14

18. ஸ்வாமி எம்பெருமானார் தமது பரம க்ருபையினால் ஸகல ஶாஸ்த்ர ஸமந்வயமான விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த , ஶ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய அர்த்தவிஶேஷங்களை இவ்வுலகில் நிலைநாட்டி நம்முடைய உஜ்ஜீவநத்துக்கு வழிவகுத்துள்ளார். பகவத்-பாகவத-ஆசார்ய கடாக்ஷமடியாக இந்த அர்த்தவிஶேஷங்களைப் பெற்று , மனதில் தரித்து , எப்போதும் அநுஸந்தித்துக் கொண்டிருப்பவனைக் கண்டு அவித்யையானது கருடனைக் கண்ட பாம்பு நழுவி ஓடி விடுவதைப் போன்று ஓடிவிடும் என்பது நிஶ்சயம்.

சந்த்$_3$ராக்$_3$நி வ்யோமநேத்ராங்கே வைக்ரமாப்$_3$தே$_3$ க்ருதிஸத்வியம் |
ஆநந்தே$_3$ மகரே புஷ்யே பூர்ணாயாம் பூர்ணதாமியாத் || 15

விக்ரம சகாப்தம் 2031ம் ஆண்டு ஆநந்த ஸம்வத்ஸரம் தை மாதம் புஷ்ய நக்ஷத்ரத்தோடு கூடிய மதி நிறைந்த நன்னாளில் இந்த க்ரந்தம் நிறைவு பெற்றது.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

acharya.org

ஸித்தித்ரயத்தின் உட்பொருள்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

மாநத்வம் ப$_4$க$_3$வந்-மதஸ்ய மஹத : பும்ஸஸ்தத$_2$ா நிர்ணய :
திஸ்ரஸ்ஸித்$_3$த$_4$ய ஆத்மஸம்வித$_3$கி$_2$லாதீ$_4$ஶாநதத்த்வாஶ்ரயா : |
கீ$_3$தார்த்த$_2$ஸ்ய ச ஸங்க்$_3$ரஹ : ஸ்துதியுக$_3$ம் ஸ்ரீஸ்ரீஶயோரித்யமூந்
யத்$_3$க்$_3$ரந்த$_2$ாநநுஸந்த$_3$தே$_4$ யதிபதிஸ்தம் யாமுநேயம் நும : ||

(ஆகம ப்ராமாண்யம் , மஹாபுருஷ நிர்ணயம் , ஆத்ம , ஈஶ்வர , ஸம்வித்ஸித்திகள் , கீதார்த்த ஸங்கரஹம் , சது : ஶ்லோகீ , ஸ்தோத்ரரத்நம் என்கிற க்ரந்தங்கள் எந்த ஆசார்யரால் அருளிச்செய்யப்பட்டதாக ஸ்ரீபாஷ்யகாரர் அநுஸந்திக்கிறரோ , பரமாசார்யராய் விளங்கும் அந்த ஸ்ரீஆளவந்தாரை துதிக்கின்றோம்)

இது ஸ்ரீகீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷையின் ஆரம்பத்தில் ஸ்ரீவேதாந்ததேஶிகன் அநுஸந்தித்த ஶ்லோகமாகும். தற்சமயம் நமக்குக் கிடைத்திருக்கும் நம் பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த க்ரந்தங்களில் முதன்மை பெற்று விளங்குபவை பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் அருளிச் செய்தவைகளே! ஸ்ரீமந்நாதமுநிகள் அருளிச்செய்த ந்யாய தத்த்வம் , யோகரஹஸ்யம் என்கிற க்ரந்தங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஸ்ரீஆளவந்தார் அருளிச்செய்துள்ள மஹாபுருஷ நிர்ணயமும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் பூர்வர்கள் இந்த க்ரந்தங்களில் கண்ட விஷயங்களை கையாண்டிருக்கிறர்கள் என்பது திண்ணம். ஆகமப்ராமாண்யம் ஸ்ரீபகவச்சாஸ்த்ரம் எனப்படும் ஸ்ரீபாஞ்சராத்ரத்தின் ப்ராமாண்யத்தை பஹுமுகமாக நிலைநாட்டுகிறது. வேதம்போலே ஸ்ரீபாஞ்சராத்ரமும் ப்ரபல ப்ரமாணம் என்று பரமாசார்யர் இதில் மூதலித்துப் போந்தார்.

ஸ்ரீபாஷ்யகாரர் உத்பத்த்யஸம்பவாதிகரணத்திலே(2-2-8) இதை அடியொற்றியே ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமப்ராமாண்யத்தை ஸ்ரீவ்யாஸ ஸித்தாந்தமாக நிர்ணயித்தருளினர். நம்மாழ்வாரால் மயர்வறமதிநலம் அருளப்பெற்றவரான ஸ்ரீமந்நாதமுநிகளின் உபதேஶ பரம்பராப்ராப்தமான ஸ்ரீகீதையின் அர்த்தங்களை ஸங்க்ரஹித்து கீதார்த்த ஸங்க்ரஹம் என்னும் க்ரந்தத்தை அருளிச் செய்தார் பரமாசார்யர். அதைத் தழுவியே நம் ஸ்வாமி எம்பெருமானர் *மாயன்அன்றுஐவர் தெய்வத்தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருள் தெரியப் பாரினில் சொன்னர்.. (இராமானுச நூற்றந்தாதி 68) சது : ஶ்லோகீ, ஸ்தோத்ரரத்நம் இவைகளை அடியொற்றியே ஸ்வாமி எம்பெருமானர் கத்யங்களை அருளிச்செய்தார்.

acharya.org

ஸித்தித்ரயத்தை ஆதாரமாகக் கொண்டே நம் ஸ்வாமி ஶ்ரீபாஷ்யத்தில் மஹாஸித்தாந்தத்திலும் மற்ற இடங்களிலும் அநேக அர்த்தவிஶேஷங்களை நிர்ணயித்தருளினார். ஜகதாசார்யரான எம்பெருமானாருக்கும் பரமாசார்யராய், விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபநத்திலே அவருக்கு வழிகாட்டியாய் விளங்கும் மஹாக்ரந்தங்களை அருளிச்செய்தவரான ஶ்ரீஆளவந்தாருடைய பெருமை வாசாம்-அகோசரம் என்பதை நாம் அறியலாம். இனி பெரியோர்களின் நியமநமடியாக ஸித்தித்ரயத்தின் உட்பொருளைச் சுருக்கமாகவும் ஸாரமாகவும் விண்ணப்பிக்கிறேன்.

ஸித்தி என்பது தத்த்வ நிர்ணயத்தைக் குறிக்கும். ஜீவாத்மா, பரமாத்மா, பகுத்தறிவதற்குரிய ஸாதநமான ப்ரமாண ஜ்ஞாநம் ஆகிய இம்மூன்றைப் பற்றிய உண்மைகளை நிர்ணயித்துத் தருவதால் ஆத்மஸித்தி, ஈஶ்வரஸித்தி, ஸம்வித்ஸித்தி என்று நூல்களுக்குத் திருநாமங்கள் அமைந்தன. இவற்றுள் முதலில் ஸம்வித்ஸித்தியையும், பிறகு ஆத்மஸித்தியையும், அதற்குப் பிறகு ஈஶ்வரஸித்தியையும் அருளிச்செய்தார் என்று ஊஹிக்க இடமுண்டு. ஆத்மஸித்தியில் ஸம்வித்ஸித்தியையும் ஈஶ்வரஸித்தியில ஆத்மஸித்தியையும் ப்ரஸ்தாபித்திருப்பதை நாம் காணலாம். ஸம்வித்ஸித்தியில் முதலிலும் நடுவிலும் கடைசியிலும் அநேக பாகங்கள் லுப்தமாயின. மற்ற இரு ஸித்திகளிலும் கடைசி பாகம் லுப்தம். மீமாம்ஸகரான குமாரிலபட்டரால் செய்யப்பட்ட ஶ்லோகவார்த்திகம் போலே ஸம்வித்ஸித்தியும் ஶ்லோகங்களாலேயே செய்யப்பட்டிருக்கிறது. மற்ற ஸித்திகள் இரண்டும் கத்யரூபமாய் அமைந்திருக்கின்றன.

ப்ரமாணங்களைக் கொண்டே பொருள்களின் உண்மைநிலையை அறியவேண்டும் என்பது நூல்களில் கண்ட விதியாகும். அதன்படி ஸம்வித்ஸித்தியில் ப்ரமாண நிஷ்கர்ஷத்தையும் மற்ற இரு ஸித்திகளில் ப்ரமேய நிஷ்கர்ஷத்தையும் செய்தருளுகிறார் எனவும் கொள்ளலாம். பரமவைதிகரான பரமாசார்யர் வேதத்தையே முக்ய ப்ரமாணமாகக் கொண்டவர். ஆயினும் குதர்க்க-வாதிகளை நிரஸிப்பதற்கு ஸத்தர்க்கங்களையே முக்ய கருவியாகக் கொண்டு ஸித்தித்ரயத்தில் புறச்சமயவாதிகளை வாதப்போரில் தோற்கடித்து அநாதியானதும் பரம வைதிகமானதுமான ஸித்தாந்தத்தை நிலைநாட்டியருளினார். எனவே ஸித்தித்ரயம் ஶ்ரீஆளவந்தாருடைய வெற்றிக்கொடி எனப் போற்றப்படுகிறது. ஆத்மஸித்தியின் ஆரம்பத்தில் பரமாசார்யர் க்ரந்தம் இயற்றப் போதுமான காரணத்தை —

விருத்$_3$த$_4$மதயோSநேகாஸ் ஸந்தயாத்ம பரமாத்மநோ:|
அதஸ் தத்பரிசுத்$_3$த$_4$யர்த்த$_2$ம் ஆத்மஸித்$_3$தி$_4$ர் விதீ$_4$யதே ||

(ஆத்மபரமாத்மாக்களுடைய தத்த்வஜ்ஞாநம் முக்திக்கு இன்றியமையாத ஸாதநம் என்று வேதமும் வேதார்த்தத்தை உணர்ந்த பெரியோர்களுடைய நூல்களும் பறைசாற்றுகின்றன.

acharya.org

இவ்விரு ஜ்ஞாநத்திலும் புறவாதிகளுடைய துர்வாதங்களால் தத்த்வத்தை உள்ளபடி அறிந்து உஜ்ஜீவிப்பதற்கு உறுப்பாக ஆத்மஸித்தி செய்யப்படுகிறது) என்று அருளிச்செய்கிறார்.

ஆத்மஸித்தியின் உட்பொருள்

நான் *நான்* என்று தனக்குத்தானே எப்போதும் தோற்றும் ஆத்மவிஷயத்திலே, *தேஹமே ஜீவன்* என்றும், *புலன்களே ஜீவன்* என்றும், *மனமே ஜீவன்* என்றும், *ப்ராணனே ஜீவன்* என்றும், *புத்தியே ஜீவன்* என்றும் சொல்கிற புறவாதிகளுடைய வாதங்களைக் கண்டித்து, *ஜீவாத்ம ஸ்வரூபம் இவற்றைக் காட்டிலும் வேறுபட்டதாய் இருக்கும்; அதுதான் ஜ்ஞாந-ஆஶ்ரயமாய், நித்யமாய், அணுவாய், அநேகமாய் இருக்கிறது; இப்படியிருக்கும் ஆத்மஸ்வரூபம் ஸ்வதந்த்ரம் அன்று; அது எப்போதும் பரமாத்மாவுக்கு ஶரீரமாய், பரதந்த்ரமாய் இருக்கும்* என்று ஆத்மஸ்வரூப யாதாத்ம்யத்தை நிஷ்கர்ஷிக்கிறார் ஆத்மஸித்தியில்.

தே$_3$ஹேந்த்$_3$ரிய மந: ப்ராண தீ$_4$ப்$_4$யோSந்யோSநந்யஸாத$_4$ந:|
நித்யோ வ்யாபீ ப்ரதிக்ஷேத்ரமாத்மா பி$_4$ந்ந: ஸ்வத: ஸுகீ$_2$ ||

(தேஹம் இந்த்ரியம் மனஸ் ப்ராணன் புத்தி ஆகியவற்றைக் காட்டிலும் ஆத்மா வேறானவன். இன்னொரு ஜ்ஞாநத்தால் அறியத் தேவையில்லாதபடி தானே *நான்* *நான்* என்று தோற்றக்கூடிய ஸ்வயம்ப்ரகாஶ வஸ்து. நித்யன். ஶரீரம் முழுவதும் தன்னுடைய ஜ்ஞாநத்தால் பரவி இருப்பவன். ஒவ்வொரு ஶரீரத்திலும் தனித்தனியாக இருப்பவன். இயற்கையில் ஸுகி யானவன்) என்கிற ஶ்லோகத்தில் ஆத்மாவின் உண்மையான தன்மையைச் சுருங்கச் சொல்லி, மேலே யுக்திகளாலே விளக்கியருளுகிறார். இந்த ஶ்லோகத்தில் இருக்கும் *வ்யாபீ* என்கிற பதத்திற்கு *எல்லா அசேதநங்களுக்குள்ளும் இருக்கத்தக்கவன்; அணுவைப் போன்று ஸூக்ஷ்மன்* என்று பொருள் உரைத்தார் ஸ்ரீபாஷ்யகாரர். *கரந்தசிலிடந்தொறும் இடம்திகழ்பொருள்தொறும்* (1-1-10) என்கிற நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்தியைக் கொண்டு இப்படி அருளிச்செய்தபடி. எனவே ஜீவாத்மா ஸ்வரூபத்தால் விபுவாய் இருப்பவன் என்று ப்ரமிக்க இடமில்லை.

தைத்திரீயோபநிஷத்தில் அந்நமய ப்ராணமய மநோமயங்களுக்கு அவ்வருகே ஶரீரம், ப்ராணன், மனம் இவற்றைக் காட்டிலும் வேறுபட்டிருக்கிற ஜீவாத்மாவை *விஜ்ஞாந மய:* என்று குறிப்பிட்டிருக்கிறது. *அறிவு நிறைந்தவன்* என்றபடி. உணர்வற்ற பொருள்களைக் காட்டிலும் ஆத்மாவுக்குண்டான வாசியை வேதபுருஷன் *விஜ்ஞாநமயன்*

acharya.org

என்னும் சொல்லால் காட்டினன். நம்மாழ்வார் —

சென்றுசென்றுபரம்பரமாய்(8-8-5)
*என் ஊனில்உயிரில்உணர்வினில்
நின்றவொன்றைஉணர்ந்தேனே*(8-8-4)

என்று இந்த ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தை அநுஸந்தித்தார். ஸ்ரீஆளவந்தார் ஆத்மஸித்தியில் இதனை நிலைநாட்டுகிறார்.

மாயாவாதிகள் *அறிவே ப்ரஹ்மம்; அதைத்தவிர வேறொரு பொருள் எதுவுமில்லை. ப்ரஹ்மம் அவித்யையால் லோகத்தில் காணப்படும் நாநாவித பதார்த்தங்களாகத் தோற்றுகிறது* என்கிறார்கள். இந்த வாதத்தை ஆத்மஸித்தியில் கண்டிக்கிறார். எங்ஙனேயென்னில், *நான் அறிகிறேன்* என்றே எல்லாரும் தங்களை அறிவுள்ளவர்களாக அநுபவிக்கிறார்கள். ஆகையால் இந்த மாயாவாதம் லோகாநுபவத்துக்கு முரண்படுகிறது. *ஜ்ஞாநாத்யேவாயம் புருஷ:* என்றும், *ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்*என்றும் அறிவுள்ளவர்களாகவே ஆத்மாவையும் பரமாத்மாவையும் வேதம் கூறுகிறது என்பதால் ஶாஸ்த்ர விரோதம் என்னும் தோஷமும் அத்வைதிகளுடைய பக்ஷத்திற்கு ஸித்திக்கிறது என்கிறார். ஜீவனும் ப்ரஹ்மமும் ஒன்று என்பதும் பொருந்தாது. ஜீவன் ஸம்ஸரிக்கக் கூடியவன். ப்ரஹ்மம் ஸம்ஸார ஸம்பந்தம் இல்லாதது. ப்ரஹ்மமே அவித்யையால் தன்னை ஸம்ஸாரியாக ப்ரமிக்கிறது என்கிற வாதம் பரிஹஸிக்கத்தக்கது என்கிறார்.

ஜீவாத்மாவின் நிலைநின்ற ஆகாரத்தை *ஸ்வத: ஸுகீ* என்று குறிப்பிடுகிறார். பகவத்குணாநுபவத்தைப் பண்ணி *உகந்து பணிசெய்து களித்திருப்பதுதான் ஆத்மாவின் உண்மையான நிலை. ஸம்ஸார ஸுகது:க்கங்கள் அநாதிகாலமாகப் பண்ணிய கர்மத்தினால் வருபவை. பகவானை ஶரணமடைந்து அவனுடைய அநுக்ரஹத்தினால் இவனுக்கு கர்மபந்தம் விடுபட்டால் *ஸ்வத: ஸுகீ* என்னும் நிலை ஶாஶ்வதமாக ஸித்திக்கும் என்று ஆத்மஸித்தியில் நிரூபிக்கிறார்.

ஸ்வாமி எம்பெருமானார் யஜ்ஞமூர்த்தி என்னும் மஹாமேதாவியான மாயாவாதியோடு வாதப்போர் நடத்துகையில் 17-வது நாள் வாதத்தின் இறுதியில் அவன் சொன்ன யுக்திகளுக்கு மேல் கோடி தோன்றாமல் திகைத்திருக்க, அன்றிரவு ஸ்வப்நத்தில் பேரருளாளப் பெருமாள் இவருக்கு ஆளவந்தார் ஆத்மஸித்தியில் செய்தருளிய மாயாவாத நிரஸந ப்ரகாரங்களை காட்டியருள, இவரும் தெளிந்தெழுந்து, ப்ராத:கால அநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, மிகவும் ஸந்துஷ்டராய் கம்பீரமாக வாதஸதஸ்ஸுக்கு எழுந்தருள, பேரருளாளனுடைய

acharya.org

அநுக்ரஹத்தைப் பரிபூர்ணமாகப் பெற்ற இவருடைய தேஜஸ்ஸுக்குத் தோற்று வாதம் புரியாமல் அந்த வாதி அவர் திருவடிகளிலே சடக்கென ஶரணம் அடைந்தான். நம் ஸ்வாமியும் மஹா மேதாவியான அவரைத் தமக்கு ஶிஷ்யனாக்கிக் கொண்டு, *அருளாளப்பெருமாள் எம்பெருமானார்* என்று அவருக்குத் திருநாமம் சாற்றி அவருடன் கூடியிருந்தே தர்ஶநத்தை நிர்வஹித்துக் கொண்டு போந்தார். குருபரம்பரையிலுள்ள இவ்வரலாற்றைச் சிந்தித்துப் பார்த்தால் விவேகிகளுக்கு ஶ்ரீஆளவந்தாருடைய ஶ்ரீஸூக்திகளின் வீறுடைமை நன்கு விளங்கும்.

ஈஶ்வர ஸித்தியின் உட்பொருள்

வேதத்தைப் ப்ரமாணமாக ஒத்துக்கொண்டும் வேதவேத்யனை பரமபுருஷனை ஒத்துக் கொள்ளாமல், *யாகாதி கர்மங்களே அபூர்வத்தை உண்டு பண்ணி அதன் வழியாக ஸ்வர்க்கம் முதலான பலங்களைத் தருகின்றன* என்று நிரீஶ்வர-வாதம் செய்யும் கர்மமீமாம்ஸகர் கூறும் கூற்றைத் தகர்த்து, *ப்ரளய காலத்தில் அழிந்து கிடந்த எல்லா லோகங்களையும் மறுபடியும் ஸ்ருஷ்டி காலத்தில் படைத்துக் காத்தருளும் ஸர்வேஶ்வரன் ஒருவன் உளன்* என்று ஶ்ருதி கூறநிற்கச் செய்தே நிரீஶ்வரவாதம் பண்ணும் இவர்களை ஆஸ்திக நாஸ்திகர்கள் என்கிறார். மேலும், *எவனுடைய திருவாராதநமாக யாகாதிகள் ஶாஸ்த்ரத்தினால் விதிக்கப்படுகின்றனவோ, யாகாதிகளால் ஆராதிக்கப்பட்ட எவனுடைய அநுக்ரஹத்தினாலேயே பலத்தை அவரவர் அடைகின்றனரோ, அந்தப் பரமன் இல்லாதபோது கர்மமும் கர்ம பலனும் ஸித்திக்காது* என்கிறார். மேலும்,

அழிந்து கிடந்த வஸ்துவுக்கு நாமரூபங்கள் உண்டாவதற்கும் ஒரு விதாதா வேணும். ஆகவே ஜகத்-ஸ்ரஷ்டாவாய், ஸர்வகர்மஸமாராத்யனாய், ஸர்வபலப்ரதனான பரமபுருஷனை ஶாஸ்த்ரம் காட்டும் வழியாலே அவஶ்யம் அங்கீகரித்தே ஆகவேண்டும் என்று யுக்திகளாலே நிரூபித்து, *கருமமும் கருமபலனுமாகிய காரணம் தன்னை* என்று ஆழ்வார் பேணின காரணமான பரம்பொருளை ஈஶ்வரஸித்தியில் நிலைநாட்டுகிறார் பரமாசார்யர். ஈஶ்வரஸித்தியின் இறுதியில்,

ஏகப்ரத$_4$ாநபுருஷம் விவாத$_3$ாத்$_4$யாஸிதம் ஜக$_3$த் |

சேதநாசேதநாத்மத்வாத் ஏகராஜகதே$_3$ஶவத் ||

என்னும் ஶ்லோகத்தில், *உபயவிபூதியிலும் உள்ள ஜீவராசிகளும் அதிகாரி வர்க்கமான வானவர்களும் ராஜாதிராஜனான ஶ்ரீமந்நாராயணனுடைய செங்கோலின் கீழ் இடரின்றி வாழ்கின்றனர்* என்னும் வேதாந்த ஸித்தாந்தத்தை ராஜ-ராஷ்ட்ர-த்ருஷ்டாந்தத்தினால் விளக்குகிறார். *வேதைகவேத்யன் பரமபுருஷன்* என்பதே இவர் திருவுள்ளம். ஆயினும்

acharya.org

வேதார்த்த நிர்ணய ஸஹகாரியான தர்க்கங்களையே ஈஶ்வர ஸித்தியில் முக்யமாகக் காட்டியருளுகிறார் .

ஸம்வித்ஸித்தியின் உட்பொருள்

ஸம்வித்ஸித்தியில் முக்யமாக கேவலாத்வைத வாதத்தை நிரஸநம் பண்ணி விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப் பரமாசார்யர் நிலைநாட்டுகிறார் . *ஸத்தான (உளதான) பொருள் ஒன்றே ; அநேகமில்லை* என்னும் வாதத்தையும் , *ஜ்ஞாநம்(அறிவு) ஒன்றே உள்ளது ; ஜ்ஞேயமும் (அறியப்படும் பொருளும்) ஜ்ஞாதாவும் (அறிகிறவனும்) இல்லை * என்னும் வாதத்தையும் கண்டித்து , *சித் , அசித் , ஈஶ்வரன் என்கிற மூன்றும் தத்த்வங்கள் (உண்மைப் பொருள்கள்) ; அப்படியே ஜ்ஞாநம் , ஜ்ஞேயம் , ஜ்ஞாதா என்கிற மூன்றும் உள்ளன * என்று நிரூபிக்கிறார்.

மேலும் *ஏகமேவாத்$_3$விதீயம்*(சாந்தோக்யம் 6-2-1) என்கிற ஶ்ருதி வசநத்துக்கு , *பரம் பொருளுக்கு குணம் , ரூபம் , ஐஶ்வர்யம் , ஒன்றுமில்லை* என்னும் அபத்தப் பொருளை உரைத்தனர் அத்வைதிகள் . அவர்கள் கூறும் கூற்றைத் தகர்த்து , *பரம்பொருளான எம்பெருமானுக்கு நற்குணங்களும் , திவ்யரூபங்களும் , வைபவங்களும் பலபலவுண்டு * என்று நிரூபிக்கிறார்.

ஸத்யம் ஜ்ஞாநம்-அநந்தம் ப்$_3$ரஹ்ம
(தை-ஆந 1-2)(விகாரம் அற்றிருப்பதால் ஸத்யமாகவும் , ஜ்ஞாநமாகவும் , அளவற்றதாய் இருப்பதால் அநந்தமாயும் இருக்கும் ப்ரஹ்மம்)

பராSஸ்ய ஶக்திர் விவிதை$_4$வ ஶ்ரூயதே ஸ்வாப$_4$ாவிகீ ஜ்ஞாநப$_3$லக்ரியா ச
[ஶ்வே-6] [இந்தப் பரமாத்மாவுக்குப் பலபடிப்பட்டதும் மேலானதுமான ஶக்தியும் இயற்கையான ஜ்ஞாநமும் பலமும் (ஸ்ருஷ்டித்தல் முதலான) கார்யங்களும் உண்டு என்று அறியப்படுகிறது]

*க$_3$ந்த$_4$ர்வாப்ஸரஸஸ் ஸித்$_3$த$_4$ாஸ் ஸகிந்நரமஹோரக$_3$ா : |
நாந்தம் கு$_3$ணாநாம் க$_3$ச்ச$_2$ந்தி தேநாநந்தே$_3$ாSயமுச்யதே ||
[கந்தர்வர்களும் , அப்ஸரஸ்ஸுகளும் , கிந்நரர்களுடனும் மஹாநாகங்களுடனும் கூடிய ஸித்தர்களும் (இவனுடைய) குணங்களின் எல்லையை அடைவதில்லை ; ஆகையால் இவன் *அநந்தன்* என்று சொல்லப்படுகிறான்]

இத்யாதி ப்ரமாண வசநங்களால் எம்பெருமான் எல்லையில்லாத நற்குணங்களையும் வைபவங்

acharya.org

களையும் உடையவன் என்று விளங்குகிறது. எம்பெருமான் ஒருவனே ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாய், தானே எல்லாருக்கும் ப்ரதாநனாய் இருக்கிறான் என்கிற பொருளே *ஏகமேவாத்$_3$விதீயம்* என்பதற்குப் பொருந்தின பொருளாகும்.

*ஏகே முக்$_2$யாந்யகேவலா: *

என்கிற கோஶத்தின்படி ப்ரதாநன் என்கிற அர்த்தத்தையே ஏக ஶப்தத்துக்கு இங்கு கொள்ளக் கடவது என்றும் காட்டியருளுகிறார். மேலும், **சோழமன்னன் ஒருவனே அத்விதீயனாக இப்போது உளன்* என்பதற்கு எப்படி *அவனே எல்லா மன்னர்களுக்கும் தலைவன்; அவனுக்கு ஸமாநமாகவும், அவனைக் காட்டிலும் உயர்ந்தவனாகவும் இப்போது மற்றொரு மன்னன் இல்லை* என்கிற பொருளையே கொள்கிறோமோ அப்படியே இங்கும் கொள்வது** என்று இவ்வர்த்தத்தை மூதலித்துக் கொடுத்தார்.

யத$_2$ா சோளந்ருப: ஸம்ராட$_3$த்$_3$வீதியோऽத்$_3$ய பூ$_4$தலே |
இதி தத்துல்யந்ருபதி - நிவாரணபரம் வச: ||
ந து தத்$_3$ப்$_4$ருத்ய - தத்புத்ரகளத்ராதி$_3$ நிஷேத$_4$கம் |
தத$_2$ா சுராமுர - நர - ப்$_3$ரஹ்ம - ப்$_3$ரஹ்மாண்ட கோடய: ||
க்லேஶ கர்ம விபாகாத்$_3$யை ரஸப்ருஷ்டஸ்யாகி$_2$லேஶிது: |
ஜ்ஞாநாதி$_3$ஷாட்$_3$கு$_3$ண்ய நிதே$_4$ரசிந்த்யவிப$_4$வஸ்ய தா: ||
விஷ்ணோர் விபூ$_4$தி மஹிம ஸமுத்$_3$ர த்$_3$ரப்ஸ விப்ருஷ: ||

என்னும் ஶ்லோகங்களினால் *அநந்தகோடி ப்ரம்மாண்டங்களும் அதற்கு உட்பட்ட ஸகல தேவாதி சேதநர்களும் எம்பெருமானுடைய விபூதியில் அடங்கியவை; ஸ்வதந்த்ரரமான மற்றொரு வஸ்து இல்லை* என்று நிரூபித்து

ப்ரஹ்மாத்ம நாத்மலாபோயம் ப்ரபஞ்சஶ் சித$_3$சிந்மய: |
இதி ப்ரமீயதே ப்$_3$ராஹ்மீ விபூ$_4$திர் ந நிஷித்$_4$யதே ||

என்று *அத்விதீய ஶ்ருதியினால் புருஷோத்தமனுடைய விபூதிக்கு ஒருவிதமான இடரும் இல்லை* என்பதைக் காட்டியருளுகிறார். இவ்வண்ணம் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்துக்கு அடிப்படையான கொள்கைகளை ஸம்வித்ஸித்தியில் நிலைநாட்டுகிறார்.

acharya.org

எண்பெருக்குஅந்நலத்து *
ஒண்பொருள் ஈறில *
வண்புகழ் நாரணன் *
திண்கழலசேரே (1-2-10)

கணக்கறுநலத்தனன் அந்தமிலாதியம்பகவன் (1-3-5)

*அமைவுடைஅமரரும் யாவையும்யாவரும்தானும்
அமைவுடை நாரணன்மாயையை அறிபவர்யாரே? (1-3-3)

காராயின காள நன்மேனியினன் நாராயணன் நங்கள் பிரானவனே
(9-3-1)

நீராய்நிலனாய்த் தீயாய்க்காலாய்நெடுவானாய்(6-9-1)
ஒத்தார்மிக்காரை இலையாய மாமாயா!(2-3-2)

இத்யாதியான ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை உட்கொண்டு *ஏகமேவாத்₃விதீயம்* என்கிற ஶ்ருதி வசநத்துக்குப் பொருத்தமான பொருளை விளக்கியருளுகிறார்.

வேதம் தமிழ் செய்த மாறனுகையாலே அவருடைய திவ்யஸூக்திகள் ஸம்ஸ்க்ருத வேத வாக்யார்த்தங்களை உட்கொண்ட த்ராவிட வேதவாக்யங்களாம். ஆகவே அவர் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு ஸம்ஸ்க்ருத வேதவாக்யங்களின் பொருளை நிர்ணயிப்பதில் குறையொன்றுமில்லை என்று தெளிந்திடுக.

முடிவுரை

இச்சிறு கட்டுரையில் மூன்று ஸித்திகளிலும் உள்ள முக்யமான சில விஷயங்களைக் கூடிய வரையில் விளக்கி இருக்கிறேன். நம் தர்ஶநத்துக்கு வேர்ப்பற்றான பரமாசார்யருடைய ஜ்ஞாநத்தின் பெருமையை இத்தால் உணரலாம். இவர் க்ரந்தங்களை அருளிச்செய்வதன் மூலம் நம்முடைய ஸித்தாந்தத்திற்குச் செய்திருக்கும் மஹோபகாரங்களையும் ஓரளவு இதில் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே இவருடைய ஜ்ஞாநப் பெருமையை உணர்ந்து உகக்கவும், இவர் செய்தருளிய உபகாரங்களை அறிந்து இவர் திறத்து க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்து உஜ்ஜீவநத்தைப் பெறவும் இந்தக் கட்டுரை ஒருவாறு உபயோகப்படும் என்று நம்புகிறேன்.

acharya.org

ஸ்ரீபாஷ்யஸாரம்

ஸ்ரீ உ வே திருநாங்கூர் P.B.K. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

ஸ்ரீவேதவ்யாஸர் அருளிச்செய்த ப்ரஹ்மஸூத்ரத்துக்கு ஸ்ரீராமாநுஜர் அருளிச்செய்த பாஷ்யம் *ஸ்ரீபாஷ்யம்* என்றே அழைக்கப்படுகிறது. ஶாரீரக மீமாம்ஸா ஶாஸ்த்ரமான ப்ரம்ஹ ஸூத்ரம் 545 ஸூத்ரங்கள் கொண்டது. இது உபநிஷத்துக்களிலிருந்து தத்த்வ-ஹித-புருஷார்த்த பரமான சில வாக்யங்களை விசாரித்து ஸதர்த்த நிர்ணயம் செய்கிறது. வேத வாக்யமொன்றை எடுத்து ஆராய்ந்து அதன் சரியான பொருளை நிர்ணயம் செய்வது *அதி-கரணம்* எனப்படும். 156 விஷயங்களை நிர்ணயம் செய்வதாய் 156 அதிகரணங்கள் கொண்ட ப்ரஹ்மஸூத்ரம் அத்யாயமொன்றுக்கு நான்கு பாதங்கள் என்ற கணக்கில் 4 அத்யாயங்களைக் கொண்டதாகும்.

ஒரு நூலுக்கு ஒரு பொருள் ப்ரதாநமாயிருக்கும். அப்பொருளை நிலைநிறுத்த மற்றப் பொருள்கள் நிரூபிக்கப்படும். ப்ரம்ஹஸூத்ரத்துக்கு ப்ரதாநமான ஒரு பொருள் *ஜகத்காரணமான ப்ரஹ்மம் மோக்ஷோபாயம்* என்பது. *ப்ரஹ்மம் ஜகத்காரணமே - ப்ரஹ்மமே ஜகத் காரணம்* என்பது நன்கு பொருந்தும் என்று நிரூபிக்கும் முதலத்யாயத்துக்கு *ஸமந்வய-அத்யாயம்* என்று பெயர். *ப்ரஹ்மம் ஜகத்காரணமே* என்பதை நிரூபிக்கிறது முதல் அத்யாயம் முதல் பாதம். *ப்ரஹ்மமே ஜகத்காரணம்* என்பதை நிரூபிக்கின்றன முதல் அத்யாயம் இரண்டாவது, மூன்றுவது, நான்காவது பாதங்கள்.

ப்ரஹ்மம் ஜகத்காரணம் என்பதை ஒரு வகையாலும் இல்லை செய்ய முடியாது என்று நிரூபித்து, ப்ரஹ்மத்துக்கு ஜகத்காரணத்வத்தை நிலைநிறுத்தும் இரண்டாமத்யாயத்துக்கு *அவிரோதாத்யாயம்* என்று பெயர். இரண்டாவது அத்யாயத்தின் முதல் இரண்டு பாதங்களில் ப்ரக்ருதியும் பரமாணுக்களும் ஜகத்காரணமாகலாம் என்னும் ஆக்ஷேபங்களை நிரஸிக்கிறுர் ஸ்ரீவேதவ்யாஸர். ஜகத்தில் ஆகாஶம் ஜீவன் முதலான நித்யமான பொருள்களும் இருப்பதால் அவை கார்யங்களாக ஆகமாட்டா என்பதால் அவற்றுக்கு ப்ரஹ்ம-கார்யத்வமும், ப்ரஹ்மத்துக்கு அவற்றின் காரணத்வமும் ஸம்பவியாது என்னும் ஆக்ஷேபங்களுக்கு *நித்யமான பொருள்களும் ஒருவகையால் ப்ரஹ்மகார்யமே என்று ஸமாதாநம் காட்டி ப்ரஹ்மத்துக்கு ஜகத்காரணத்வத்தை நிலைநாட்டுகிறுர் இரண்டாமத்யாயத்தின் மூன்று நான்கு பாதங்களில். ஆக ப்ரஹ்மஸூத்ரம் முதலிரண்டு அத்யாயங்களில் *ப்ரஹ்மம் ஜகத்காரணம்* என்று நிலை நிறுத்தப்படுகிறது.

மூன்றுவது அத்யாயத்திலே ஜகத்காரணமான ப்ரஹ்மம் மோக்ஷோபாயம் என்று நிலைநிறுத்தப் படுகிறது. தாபத்ரயத்தில் அகப்பட்டு ஸம்ஸாரத்தில் அடிக்கொதித்து அதிலிருந்து விடுபடத் துடிப்பவனும் முக்தியில் பகவத் ப்ராப்தியை விரும்புமவன் *முமுக்ஷு* எனப்படுகிறுன். அவன் அதற்காக ஜகத்காரணமான ப்ரஹ்மத்தை அன்போடு அநவரதம் த்யாநம் செய்ய வேண்டும் என்பதை *காரணம் து த்$_4$யேய: * என்னும் வேதாந்த வாக்யம் விதிக்கிறது.

acharya.org

பக்திக்கு விஷயமான ப்ரஹ்மம் தோஷங்களுக்கெல்லாம் எதிர்த்தட்டாய், திருக்கல்யாண குணங்களுக்கெல்லாம் இருப்பிடமாய், சேதநாசேதந விலக்ஷணமாய், ஶுபாஶ்ரயமான திவ்யமங்களவிக்ரஹமுடையதாய் முமுக்ஷுக்களால் விரும்பப்படுவதாகிறது. ஆகவே அதை விஷயமாகக் கொண்ட பக்தியும் விரும்பப்படுவதாகிறது. இவ்வாறு ப்ரஹ்மத்திடமும் ப்ரஹ்மோபாஸநமான பக்தியிலும் விருப்பம் ஏற்படவே உலக விஷயங்களில் வெறுப்பு தன்னடையே உண்டாகும்; ஆராவமுதான ப்ரஹ்மத்திடம் விருப்பம் தானே ஏற்படும். இவ்விரு வகையாலும் இவ்வுலகவிஷயங்களில் வைராக்யமும், ப்ரஹ்மத்திடம் ராகமும் உறுதிப்படும். ஆழ்வார்கள் இவ்விருவகையையும் தங்கள் பாசுரங்களில் அருளிச்செய்துள்ளார்கள்.

மாற்பால் மனம் சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு (மூன்றாம் திருவந்தாதி-14) என்று பேயாழ்வாரும்,

முந்துறஉரைக்கேன்விரைக்குழல்மடவார் கலவியைவிடுதடுமாறல்*
அந்தரமேழும்அலைகடலேழும்ஆய எம்மடிகள்தம்கோயில்*
சந்தொடுமணியும்அணிமயில்தழையும் தழுவிவந்துஅருவிகள்நிரந்து*
வந்திழிசாரல்மாலிருஞ்சோலை வணங்குதும்வாமடநெஞ்சே

(பெரியதிருமொழி 9.8.1) என்று திருமங்கையாழ்வாரும் அருளிச்செய்துள்ளனர்.

ஸம்ஸாரத்தில் வைராக்யமும் ப்ரஹ்மத்திடம் ராகமும் ஏற்பட ப்ரஹ்மஸூத்ரம் மூன்றாவது அத்யாயம் முதல் இரண்டு பாதங்களில் முறையே ஸம்ஸாரிகளின் தோஷங்களையும் ப்ரஹ்மத்தின் தோஷங்களுக்கு எதிர்த்தட்டாய் திருக்கல்யானகுணங்களுக்கு இருப்பிடமாய் இருக்கும் தன்மையையும் விசாரித்து நிர்ணயம் செய்கிறார் ஸ்ரீவேதவ்யாஸர். ஆகவே மூன்றாவது அத்யாயம் முதற்பாதத்துக்கு *வைராக்ய பாதம்* என்றும், இரண்டாவது பாதத்துக்கு *உபயலிங்கபாதம்* என்றும் பெயரிட்டனர் பெரியோர். ப்ரஹ்மோபாஸநம் ப்ரஹ்மப்ராப்திரூபமான மோக்ஷத்திற்கு ஸாதநமாக வேதாந்தங்களில் விதிக்கப்பட்டுள்ளது. ப்ரஹ்மோபாஸநமான ப்ரஹ்மவித்யை முப்பத்திரண்டு வகைப்படும். ஒரே வித்யை ஒன்றுக்கு மேற்பட்ட வேத ஶாகைகளில் கூறப்பட்டிருக்கும். ஒரு ஶாகையில் கூறப்படாத திருக்கல்யாணகுணங்களை மற்ற ஶாகைகளிலிருந்து அவ்வித்யையில் கூட்டிக்கொண்டு இப்படிப்பட்ட திருக்கல்யாணகுண விஶிஷ்டமாக ப்ரஹ்மத்தை உபாஸிக்க வேண்டும். குறிப்பிட்டு சில வித்யைகளில் கூறப்படும் திருக்கல்யாணகுணங்களோடேயே ப்ரஹ்மத்தை உபாஸிக்க வேண்டும். எந்த குணங்கள் அறியப்படாவிடில் ப்ரஹ்மமே அறியப்படமாட்டாதோ, அக்குணங்களோடு ப்ரஹ்மம் எல்லா வித்யைகளிலும் உபாஸிக்கப்படும். அவை ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், ஆநந்தத்வம், அமலத்வம் முதலானவை. இவ்விஷயங்களை விசாரித்து நிஶ்சயிக்கும் மூன்றாவது அத்யாயம் மூன்றாவது பாதத்துக்கு *குணோபஸம்ஹாரபாதம்* என்று பெயரிட்டு வழங்குவர் பெரியோர். மோக்ஷஸாதநங்களான ப்ரஹ்மோபாஸநங்களை விசாரிக்கும் இந்த

acharya.org

பாதத்தை உட்கொண்ட மூன்றுமத்யாயம் *ஸாதநாத்யாயம்* எனப்படும். ப்ரஹ்மோபாஸநம் தடைபடாதிருக்க பலத்தில் ஆசையின்றி பகவதாராதந ரூபமாக வேதவிஹிதமான - யாக - தாந - ஹோமாதி கர்மங்களை யதாஶக்தி செய்யவேண்டும். அவற்றுக்கு யோக்யதையை உண்டாக்கும் ஸந்த்யாவந்தநாதிகளையும் ஸதாசாரங்களையும் கைக்கொள்ள வேண்டும். பகவதாராதந ரூபமான கர்மங்கள் ப்ரஹ்மோபாஸநத்துக்குத் தடங்கலான பாபங்களைப் போக்குகின்றன.

த₄ர்மேண பாபமபநுத₃தி
(தை - நா - 63) (கர்மயோகத்தால் பாபத்தைப் போக்கடிக்கிறான்)

என்று உபநிஷத் இதைக் கூறுகிறது. இவ்வண்ணமாக பக்தியோகத்துக்கு அங்கமான கர்மயோக- அநுஷ்டானத்தை விசாரித்துத் தீர்மானிக்கும் மூன்றுமத்யாயம் நாலாம் பாதத்திற்கு *அங்க பாதம்* என்று பெயர்.

ஜகத்துக்கு த்ரிவித காரணமாய் எல்லா ப்ரஹ்மவித்யைகளிலும் உபாஸிக்கப்படுபவன் நாராயணனே என்பதை *லிங்கபூயஸ்த்வாதிகரணத்தில்* (3-3-19) நிஷ்கர்ஷித்த ஸ்ரீவேதவ்யாஸர் பலாதிகரணத்துக்கு முன் அதிகரணமான பராதிகரணத்தில் ஜகத்துக்கு த்ரிவித காரணமுமான ப்ரஹ்மமே பரம-ப்ராப்யம் என்பதை நிஷ்கர்ஷிக்கிறார். ப்ரஹ்மோபாஸநம் பகவதாராதந ரூபமாய் அவனுக்கு ப்ரீதியை உண்டாக்க, அவன் உபாஸகனுக்கு மோக்ஷத்தை அளிக்கிறான். தேவதாந்தர்யாமியான அவனே ஶாஸ்த்ர விஹித யாகாதி கர்மங்களைப் பலத்துக்காகச் செய்யும் ஐஹிகாமுஷ்மிக ஐஶ்வர்யார்த்திகளுக்கு அவற்றால் ப்ரீதி அடைந்தவனாய் அந்தந்த பலன்களை அளிக்கிறான். இது மூன்றாவது அத்யாயம் இரண்டாவது பாதம் எட்டாவது அதிகரணமான பலாதிகரணத்தில் விளக்கப்படுகிறது. இது பகவானுடைய ஔதார்ய குணம் இருக்கும்படியாகும். ப்ரஹ்மோபாஸநத்துக்கு அதற்கு விஷயமான பகவானே முக்யமாகையால் அவனே மூன்றாவது அத்யாயத்தில் ப்ரதாநமாக நிரூபிக்கப்படுபவனாகிறான். ஶாரீரக ஶாஸ்த்ரத்தில் பராதிகரண, பலாதிகரண, லிங்கபூயஸ்த்வாதிகரணங்கள் ஸாரமானவை.

ஸாதநாத்யாயத்துக்கு அடுத்ததான நான்காவது அத்யாயம் *பலாத்யாயம்* எனப்படும். அதன் முதல் பாதத்தில் முதல் ஆறு அதிகரணங்களில் ப்ரஹ்மவித்யா ஸ்வரூப விசாரம் செய்து மேல் ஐந்து அதிகரணங்களில் வித்யாபலமாக ப்ரஹ்மவித்யா நிஷ்டனுக்கு மோக்ஷ விரோதியான புண்யாபாபரூபகர்மங்கள் நீங்குவதை நிரூபிக்கிறார். பலாத்யாயத்தில் ஸாதநமான ப்ரஹ்மோபாஸநத்தை நிரூபிப்பதன் கருத்து - ப்ராப்யமான பகவானை விஷயமாகக் கொண்டதால் அதுவும் இனிதாய் அடையப்படுவதாகிறது - என்பதாகும். நான்காவது அத்யாயத்தின் முதல் பாதமானது - *ஆவ்ருத்திரஸக்ருதுபதே₃ஶாத்* (4-1-1) (மோக்ஷோபாயமான பகவானைப் பற்றிய அறிவானது பலமுறை சிந்திப்பதாகிற த்யாநமாய் இருக்கும் - உபநிஷத்துக்கள் அப்படி உபதேஶிக்கையால்) - என்று ஆரம்பிப்பதால் *ஆவ்ருத்தி பாதம்*

acharya.org

எனப்படுகிறது.

ப்ரஹ்மவித்யா நிஷ்டன் இப்பூத உடலிலிருந்து புறப்படும்போது ஊர்த்வநாடியான ஸூக்ஷ்மநாடியால் வெளிக்கிளம்புவதை நிரூபிக்கும் இரண்டாவது பாதம் *உத்க்ராந்தி பாதம்* எனப்படுகிறது.

ஸூக்ஷ்ம ஶரீரத்தோடு அர்ச்சிராதி கதியில் செல்லும்போது முக்தனை ஆங்காங்கே உபசரிக்க பகவானால் நியமிக்கப்பட்ட அர்ச்சிராதி தேவதா கணங்களை வரிசைப்படுத்தி நிரூபிக்கும் மூன்றாவது பாதம் *கதி பாதம்* எனப்படும்.

அர்ச்சிராதி வழியில் சென்று விரஜாநதியில் மூழ்கி ஸூக்ஷ்ம ஶரீரத்தையும் விட்டு அக்கரையேறி அமாநவனால் ஸ்பர்ஶிக்கப்பட்டு அப்ராக்ருத தேஹம் பெற்று மதிமுக மடந்தையர் அலங்கரிக்க முடியுடை வானவர் முறைமுறை எதிர்கொள்ள திருமாமணிமண்டபத்தில் ஶேஷபர்யங்கத்தில் பிராட்டிமாரோடு வீற்றிருக்கும் ஸ்ரீவைகுண்டநாதனைக் கிட்டி அவனால் குளிரக் கடாக்ஷிக்கப் பெற்று அவன் ப்ரேமத்தோடு அழைத்து அணைத்துத் திருவடியைத் தலையில் வைக்க அமுதவெள்ளத்தில் ஆழ்ந்தவனாய் ஸுகமேயிருப்பான் முக்தன் என்னும் முக்தி பலத்தை நிரூபிக்கும் நான்காவது பாதம் *ப்ராப்தி பாதம்* எனப்படும்.

ஆக இவ்வளவால் ப்ரஹ்மஸூத்ரத்தின் நான்கு அத்யாயங்களினால் அறியப்படும் ஒருசில விஷயங்கள் ஓரளவு சுருக்கமாக விளக்கப்பட்டன. ஶாரீரக ஶாஸ்த்ரத்தில் மூன்றாவது அத்யாயம் இரண்டாவது பாதம் கடைசி இரண்டு அதிகரணங்களான பராதிகரணமும் பலாதிகரணமும், மூன்றாவது பாதம் பத்தொன்பதாவது அதிகரணமான லிங்கபூயஸ்த்வாதிகரணமும் முக்யமானவை என்பதும் சுருக்கமாக விளக்கப்பட்டது.

ஈஶ்வரலீலா ஜகத்ஸ்ருஷ்டி:

[கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதப்பட்டு ஸ்ரீ உ வே PBK ஸ்ரீநிவாசார்ய ஸ்வாமியால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது]

வேதாந்தங்களில் கேட்டுப் பழக்கப்பட்ட விஷயம் *பரப்ரஹ்மமே உலக முழுமுதற் காரணமும் (உபாதாந காரணமும்) உலகைச் செய்யுமதுவும் (நிமித்த காரணமும்) ஆகும்* என்பது. அதில் *உலகைச் செய்யுமது* என்னும் விஷயத்தில் ஒரு ஐயம் உண்டாகிறது. *உலகைப் படைப்பது முதலான செயல்களால் ஈஶ்வரனுக்கு என்ன பயன்? அவன் எல்லா விருப்பங்களும் கைவரப் பெற்றவனன்றோ?* என்பது அந்த ஐயம்.

ஸ்ரீவேதவ்யாஸரால் இந்த ஸந்தேஹத்துக்கு பதில் கூறப்பட்டுள்ளது - *லோகவத் து லீலாகைவல்யம்* என்று. எல்லா விருப்பங்களும் கைகூடப் பெற்றவனும் அனைத்துலகையும் ஆளும் அரசனுக்கு பந்து விளையாடுவது முதலான செயல்களில் இயல்பாகவே (ஈடுபாடு) முயற்சி எப்படி ஏற்படுகிறதோ அப்படியே (பரிபூர்ணகாமனுன) ஸர்வேஶ்வரனுக்கும் உலகப் படைப்பு முதலான செயல்களில் இயல்பாகவே ஈடுபாடு (முயற்சி) ஏற்படுகிறது. எனவே *உலகப் படைப்பு ஈஶ்வர லீலை* ஆகிறது. வேதாந்த வாக்யங்களால் இவ்விஷயம் குறிப்பாகக் காட்டப்பட்டிருக்கிறது -

ஸ ஏகாகீ ந ரமேத ஸ த்$_3$விதீயமைச்ச$_2$த்

[அவன் (ஈஶ்வரன்) ஒருவனுயிருக்கின்றவனும் (ப்ரளய காலத்தில்) ஸந்தோஷம் அடைகிறுனல்லன், அவன் இரண்டாவதை விரும்பினுன்] என்றும்,

ஸோSகாமயத ப$_3$ஹுஸ்யாம்

[அவன் (ஈஶ்வரன்) *நானே பலவாக ஆவேன்* என ஸங்கல்பித்தான்]

என்றும் வேதாந்த வாக்யங்கள். *விளையாட்டு* என்னும் பொருளுடையதான *தி$_3$வு* என்னும் த$_4$ாதுவின் (வினைச்சொல்லின்) அடிப்படையில் உண்டான *தே$_3$வ:* (தேவன்) என்னும் சொல்லும் உலக கர்த்தாவான ஈஶ்வரனிடத்தில் *தே$_3$வாத்மஶக்திம்* (ஶ்வேதா) என்று வ்யவஹரிக்கப்பட்டு உள்ளதாகையாலும் உலகப்படைப்பு முதலான லீலா வ்யாபாரத்தில் முயற்சி உடையவன் தேவனுன நாராயணன் என்பது அறியப்படுகிறது.

உலகப் படைப்பு வ்யாபாரத்தால் ஸ்ரீமந்நாராயணன் நன்கு இன்பமுறுகிறுன் - லீலா ரஸம் அடைவதால் என்பது அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் *ஹ்ருஷீகேஶ:* என்னும் பகவந்நாமத்தின் பொருளை விவரிக்கும்போது (தெளிவாக) அறியப்படுகிறது.

க்ரீட$_3$யா ஹ்ருஷ்யதி வ்யக்தம் ஈஶஸ்ஸந் ஸ்ருஷ்டிரூபயா |
ஹ்ருஷீகேஶத்வமீஶஸ்ய தே$_3$வத்வம் சாஸ்ய தத் ஸ்பு$_2$டம் ||

(ஈஶனுய் - எல்லா விருப்பங்களும் கைகூடப் பெற்றவனுய் இருந்தும் உலக ஸ்ருஷ்டியான விளையாட்டால் நன்கு ஸந்தோஷமடைகிருன். ஆகவே ஈஶனுக்கு *ஹ்ருஷீகேஶன்* என்று திருநாமம் விளங்குகிறது. இவனுக்கு விளையாட்டுப் பொருளுடையதான *திவு* என்னும் தாதுவிலிருந்து உண்டான *தேவன்* என்னும் அத்திருநாமமும் தெளிவாய் விளங்குகிறது) என்று. *பகவானுக்கு ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரம் லீலே* என்னும் வேதார்த்தம் ஸ்ரீபராஶரர் முதலான தத்த்வஜ்ஞாநிகளால் தங்கள் க்ரந்தங்களில் தெளிவாக விவரிக்கப் பட்டிருக்கிறது -

க்ரீட$_3$தோ ப$_3$ாலகஸ்யேவ சேஷ்டாம் தஸ்ய நிஶாமய
(விளையாடும் சிறுவனுடைய சேஷ்டை போன்ற தேவனை அவனுடைய ஜகத்-ஸ்ருஷ்ட்யாதி சேஷ்டைகளைப் பார்)

*ஹரே விஹரஸி க்ரீட$_3$ாகந்துகைரிவ ஜந்துபி$_4$: *
(ஹரியே! விளையாட்டுக் கருவிகளான பந்து முதலானவை போன்ற இவ்வுலகிலுள்ள ஜீவராஶிகளான கருவிகளைக் கொண்டு விளையாடுகிருய்!)

க்$_3$ரீட$_3$ா ஹரேரிதம் ஸர்வம் க்ஷரமித்யவத$_4$ார்யதாம்
(அழியும் இவ்வுலகப் பொருள்கள் அனைத்தும் ஹரிக்கு விளையாட்டுக் கருவிகள் எனத் தெளியுங்கள்) என்று.

இனி *லீலா* என்பதன் லக்ஷணம் (சிறப்பான தன்மை) என்னவென்பதைப் பற்றிப் பார்ப்போம்.

ப்ரீதிவிஶேஷபூர்வக : ஸ்வயம்ப்ரியோ வ்யாபாரோ லீலா
(ப்ரீதி விஶேஷம் முன்னகத் தானே ப்ரியமான வ்யாபாரம் லீலே)

என்று லீலா லக்ஷணம் கூறப்பட்டது. *ப்ரீதிவிஶேஷம் முன்னக* என்றதால் பூர்ண காமனை அரசன் முதலானேர்களுக்கே தங்கள் ப்ரீதிக்குப் போக்குவீடாகச் செய்யும் செயலான பந்து விளையாடுவது முதலான லீலா வ்யாபாரம் இயல்பாய் அமைவது என விளங்குகிறது. பூர்ணகாமர்கள் அல்லாத எவர்கள் பந்து விளையாடுவது முதலானவற்றை விளையாட்டில் வெற்றி பெற்றுப் பந்தயப்பணம் முதலானவற்றைப் பெறுவதற்கு விருப்பப்பட்டுச் செய்கிருர் களோ, அவர்களின் அந்தப் பந்து விளையாட்டு முதலான செயல் முக்யமான லீலா ஶப்தப்

acharya.org

பொருளாகாது என்பதைக் குறிப்பதற்காக *ஸ்வயம் ப்ரிய: *என்று லக்ஷணத்தில் கூறப் பட்டது. ஸ்வயம் ப்ரியமாகை என்பது அந்த வ்யாபாரத்தால் உண்டாகும் பணம் பெறுதல் முதலான பயனில் விருப்பம் இல்லாது தற்காலத்தில் (அப்போதைக்காக) உண்டாகும் ரஸ விசேஷ அநுபவத்திலேயே நோக்காகச் செய்யும் செயல் என்னும் கருத்தை உடையது. இத்தால், *உலகில் ஸ்வயம் ப்ரியம் என்றால் அது ஸுகமோ அல்லது து:க்கம் நீங்கப் பெறுவதோ ஆகிய இரண்டில் ஒன்றாய் இருப்பதைக் காண்கிறோம். இவ்விரண்டும் அல்லாத விளையாடுபவனின் செயலான லீலையில் ஸ்வயம் ப்ரியமாகை ஸம்பவியாது - கூடாது* என்னும் ஐயம் நீங்குகிறது.

லீலா வ்யாபாரத்தால் அரசர் முதலானோர்க்கு தற்காலத்தில் (அப்போதைக்காக) ஆநந்த விசேஷம் உண்டாகிறதைக் காண்கிறோம். எத்தனை சபதம் செய்தாலும் இத்தை இல்லை செய்ய முடியாது. இத்தால் *ப்ரீதிவிசேஷம் முன்னாக உண்டாவதே லீலைச் செயல், அது ப்ரீதி ஜநகம் (ப்ரீதியை உண்டாக்குவது) அன்று* என்ற பிடிவாதப் பேச்சுக்கும் பதில் கூறப்பட்டதா யிற்று. *ஸர்வேச்வரனாய் தேவாதிதேவனான ஸ்ரீமந்நாராயணனுக்கு அரசர்களுக்குத் தற்கால ரஸஜநகமான பந்து விளையாட்டைப் போன்று ஜகத் ஸ்ருஷ்ட்யாதி விளையாட்டு தற்கால மாத்ர ரஸ (ஆனந்த) விசேஷத்தை உண்டாக்குகிறது* என்னும் இவ்விஷயம் ப்ரமாணங்களால் உறுதியாக - தெளிவாக அறியப்பட்டதுமாகும்.

** அப்படியானால் இந்த ஸ்ருஷ்ட்யாதிகளால் உண்டான ஆநந்த விசேஷம் முன்பு ஈச்வர னுக்கு இல்லாமையால் அவனுக்கு *அவாப்தஸமஸ்தகாமத்வம்* (விருப்பங்கள் அனைத்தும் கைகூடப் பெற்றமை) என்னும் குணம் இல்லாமற்போய் விடுமே?** என்று கேட்க வேண் டாம். அவன் எல்லா விருப்பங்களும் கைகூடப் பெற்றவன் என்பதற்கு *எப்போதும் தன் வசத்தில் கொண்டிருக்கிற எல்லா வகை போகம் (அநுபவம்) லீலை (விளையாட்டு) ஆகிய வற்றை உண்டாக்கும் ஸாமக்ரிகள் (கருவிகள்) நிறைந்திருக்கப் பெற்றவன்* என்பதே பொருள். *அதனால் அவ்வப்போது தன் விருப்பத்தாலேயே போக ஸாமக்ரியையோ லீலா ஸாமக்ரியையோ ஏற்று அந்தந்த ரஸவிசேஷத்தை அநுபவிக்கிறான் (ஆநந்த) ஸ்வரூபனாய் ஆநந்த ப்ரசுரனான ஈச்வரனான ஸ்ரீமந்நாராயணன்* என்னும் இவ்விஷயம் வேதாந்த ஸாராதிகளில் ஸ்ரீபாஷ்யகாரரால் நிரூபிக்கப்பட்டுள்ளது. *ஸ்ருஷ்டி ப$_2$லம் லீலை* என்ற

acharya.org

முன்னோர் வாக்கு லீலையான ஸ்ருஷ்டியிலுண்டான ஆநந்தத்தைக் குறிப்பதில் நோக்குடையது. * ஈம்வரலீலா ஜகத் ஸ்ருஷ்டி : * என்ற வாக்கும் தற்காலத்தில் ஆநந்த விமேஷ மாத்ரத்தை உத்தேம்யமாகக் கொண்ட வ்யாபாரமான லீலை என்பதைக் குறிப்பதில் நோக்குடையது.

* ஆப்த காமஸ்ய கா லீலா * (பரிபூர்ண காமனுக்கு லீலை ஏது?) என்ற மாண்டூக்ய காரிகா வசநமோவெனில் * ஜகத்ஸ்ருஷ்டி ரூப லீலா வ்யாபாரத்தாலுண்டான அப்போதைய ஆநந்த விமேஷத்திலும் வேறுபட்ட முன்பில்லாத புதிய வேறு பயன் பரிபூர்ண காமனுக்கு இல்லை * என்று கூறுவதில் நோக்குடையது என்பதை நாம் அறியலாம்.

* அப்போதைய ரஸவிமேஷத்தை விளைக்கும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி லீலா-வ்யாபாரத்தை உடைய வனை ஸ்ரீஹரியைப் பற்றி நான் துன்பம் அற்றவனானேன் * என்று பொருள்பட ஆழ்வார் திருவாய்மொழியில் (3-10-7) பாசுரமருளியது எம்பெருமானுக்கு ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரத்தால் உண்டான அப்போதைய ரஸமாத்ர அநுபவமுண்டு என்பதில் ப்ரமாணமாகும். ஜகத் ஸ்ருஷ்டி வ்யாபாரம் பகவானுக்கு லீலை என்பதை -

ப்ரளயஸமயஸுப்தம் ஸ்வம் மரீரைகதே₃மம்
வரத₃! சித₃சித₃ாக்₂யம் ஸ்வேச்ச₂யா விஸ்த்ருணந : |
க₂சிதமிவ கலாபம் சித்ரமாதத்ய தூ₄ந்வந்
அநுமிகி₂நி மிகீ₂வ க்ரீட₃ஸி ஸ்ரீஸமக்ஷம் ||

(வரந்தரும் பெருமாளான அரங்கனே! ப்ரளய காலத்தில் தன் மரீரத்தின் ஒரு பகுதியில் ஒடுங்கிச் செயலற்றிருக்கும் சேதநாசேதநங்களைத் தன் விருப்பத்தாலேயே தன் மரீரத்தினின்றும் வெளிப்படுத்தி விரிவாக்கக் கருதி ஆண்மயிலானது தனக்கு உகந்த விஷயமான பெண்மயிலை நோக்கி ஸந்தோஷத்துடன் தனது தோகையை விரித்து ஆடி விளையாடுவதைப் போன்று நீயும் பெரியபிராட்டியார் உகந்து நோக்கி அங்கீகரிக்கும்படி ஜகத்தை ஸ்ருஷ்டித்து விளையாடு கிறாய்!)

என்று ஸ்ரீபராமரபட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்திலே அருளிச்செய்துள்ளார்.

ஆக * ஈம்வர லீலா ஜகத் ஸ்ருஷ்டி : * என்பது நிரூபிக்கப்பட்டதாயிற்று.

acharya.org

முக்தி பல விவரணம்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஶாரீரக மீமாம்ஸா ஶாஸ்த்ரத்தில் ஸமந்வயாத்யாயம், அவிரோதாத்யாயம், ஸாதநாத்யாயம், பலாத்யாயம் என்று நான்கு அத்யாயங்கள் உள்ளன. அதில் நான்காவதான பலாத்யாயத்தில் முதற்பாதத்தில் ஸஞ்சித புண்யபாபங்களுக்கு விநாஶமும் (அழிவும்) உத்தராகங்களுக்கு அஶ்லேஷமும் (ஒட்டாமையும்)உபாஸகனுக்கு உபாஸ நத்தின் பலமாகச் சொல்லப்படுகின் றன. இரண்டாவதான உத்க்ராந்தி பாதத்தில் ஸ்தூல ஶரீரத்திலிருந்து உபாஸகன் புறப்படும் ப்ரகாரம் சொல்லப்படுகிறது. அதாவது உபாஸகன் ஸுஷும்நை என்னும் நாடியில் ப்ரவேஶித்து

ஶதம் சைகா ச ஹ்ருத$_3$யஸ்ய நாட்$_3$ய:

தாஸாம் மூர்த்த$_4$ாநமபி$_4$நிஸ்ஸ்ருதைகா |

தயோரத்$_4$வமாயந் அம்ருதத்வமேதி

விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே ப$_4$வந்தி ||

(கட 2-6-16) ஹ்ருதயத்துக்கு நூற்றொரு நாடிகள் உள்ளன. அவற்றுள் ஶிரஸ்ஸை நோக்கிச் செல்லுவதான ஸுஷும்நா நாடியின் மூலமாக மேலே செல்கிறவன் மோக்ஷமடைகிறான். மற்ற நாடிகள் பலவிதமாகக் குறுக்கே போகும் ஸம்ஸார மார்க்கங்களுக்குப் பயன்படுகின்றன) என்கிறபடியே மூர்த்தந்ய நாடி வழியாக ஶிரக்கபாலத்தைப் பேதித்துப் புறப்படும் ப்ரகாரம் கூறப்படுகிறது. ஹார்தனான பரமபுருஷனுடைய அநுக்ரஹத்தினால் இது ஏற்படுகிறது. இப்படிப் புறப்பட்டு அர்ச்சிராதி மார்க்கத்தாலே செல்கிற உபாஸகன் எம்பெருமானால் நியமிக் கப்பட்டுள்ள ஆதிவாஹிகர்களான தேவர்களால் விரஜாநதி வரையில் பஹுமாந பூர்வமாக ஆதரித்து அழைத்துச் செல்லப்படுகிறான் என்பது மூன்றாவதான கதி பாதத்தில் சொல்லப் படுகிறது. விரஜா நதியில் அவகாஹிப்பதால் ஸூக்ஷ்மஶரீரமும் கழிந்துவிடுகிறது. அமாநவ-கர-ஸ்பர்ஶத்தாலே வாஸநாரேணுவும் கழிந்து முக்தனாகிறான். இப்படி நான்காவது பாதத் தில் சொல்லப்படுகிற முக்தி பலாநுபவத்தை சிறிது விளக்கமாக விண்ணப்பிக்கிறேன்.

ஸம்பத்$_3$யாவிர்ப$_4$ாவாதி$_4$கரணம்

*ஏஷ ஸம்ப்ரஸாதே$_3$ாऽஸ்மாத் ஶரீராத் ஸமுத்த$_2$ாய பரம்

ஜ்யோதிருபஸம்பத்$_3$ய ஸ்வேந ரூபேணாபி$_4$நிஷ்பத்$_3$யதே*

[சாந் 8-12-2] [கீழ்ச் சொல்லியபடி உபாஸநம் செய்த இந்த ஜீவாத்மா இந்த ஶரீரத்திலிருந்து வெளிக்கிளம்பி (அர்ச்சிராதி கதியாலே பரமபதத்தில்) பரஞ்சோதியான நாராயணனை அடைந்து ஸ்வரூப மலர்ச்சி பெறுகிறான்]

acharya.org

என்று முக்தனுக்கு ஸ்வஸ்வரூப ஆவிர்ப்பாவம் சாந்தோக்யத்தில் ஓதப்பட்டிருக்கிறது. இந்த வாக்யமானது ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை விவரிக்கிற ப்ரஜாபதி வித்யா ப்ரகரணத்தில் -

ஏதம் த்வேவ தே பூ$_4$யோSநுவ்யாக்$_2$யாஸ்யாமி
[சாந் 8-11-3] [(முற்கூறிய தோஷம் இல்லாத) அந்த ஆத்மாவை உனக்கு மறுபடியும் உபதேஶிக்கிறேன்]

என்று முன்பு ஸம்ஸாரத்தில் உழன்ற ஜீவனே ஐந்மாந்தர ஸஹஸ்ர நற்றவப்பயனாக எம்பெருமானை அறிந்து ஆஶ்ரயித்து பக்திசெய்து முக்தனாய் எம்பெருமானை அநுபவித்து இன்புறும் படியை ப்ரஹ்மா இந்த்ரனைக் குறித்து உபதேஶிப்பதாக அமைந்துள்ளது. புண்யகர்மபலத்தால் தேவாதி ஶரீரத்தை அடையும்போது *ஸ்வேநரூபேண* என்று ஶ்ருதி கூறவில்லை. *ஸ்வம்* என்கிற ஶப்தம் தனக்கு அஸாதாரணமான தர்மத்தைக் குறிக்கும். ஜ்ஞாந ஸ்வரூபனான ஜீவாத்மாவானவன் *அஹம்* என்று எப்போதும் ப்ரகாஶித்தாலும் தர்மபூத ஜ்ஞாந ஸங்கோசத்தோடும் ஔபாதிக ஆகாரத்தோடும் கூடியே தோற்றுகிறான். அவித்யை, கர்மம், வாஸனை, ருசி, ப்ரக்ருதி ஸம்பந்தம் கழிந்த பின்பே ஜ்ஞாந ஸங்கோசம் இன்றி உள்ளபடியான தன்னுடைய அஸாதாரண ஆகாரங்களோடு விளங்குகிறான். இதுவே *ஸம்பத்$_3$யாவிர்ப$_4$ாவ: ஸ்வேநஶப்$_3$த$_3$ாத்* (ப்ரஹ்ம ஸூத்ரம் 4.4.1) என்கிற ஸூத்ரத்தின் பொருளாகும்.

** நிர்விஶேஷமாய் ஜ்ஞாநமாத்ரமாய் இருக்கும் ஆத்மா நித்யப்ரகாஶமாய் இருக்கும்; அவித்யையால் அதனுடைய ஸ்வரூபம் மறைந்து அவித்யை கழிந்த பின்பு ப்ரகாஶிக்கிறது* என்கிற அத்வைதமதம் சரியன்று; ப்ரகாஶ மாத்ரமான ஆத்மாவுக்கு மறைவு ஏற்பட்டால் ஆத்மாவே அழிந்துவிடும்; ஆத்மாவை ப்ரகாஶம் முதலிய தர்மங்களுடன் கூடியதாக ஒத்துக் கொள்ளும் பக்ஷத்தில்தான் *முக்தன் ஆவிர்பூத ஸ்வரூபனாகிறான்* என்கிற ஸூத்ரம் நன்கு பொருந்தும்** என்று அதிகரணஸாராவளியிலும் அதன் வ்யாக்யாநமான சிந்தாமணியிலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அவிப$_4$ாகே$_3$ந த்$_3$ருஷ்டத்வாதி$_4$கரணம்

ஸோSஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்$_3$ரஹ்மணா விபஶ்சிதா
(தை ஆந 1) (அந்த முக்தாத்மா ஸர்வஜ்ஞமான ப்ரஹ்மத்தோடுகூட எல்லா திருக்கல்யாண குணங்களையும் அநுபவிக்கிறான்) என்று முக்தனுக்கு பரப்ரஹ்மத்தோடு ஸாஹித்யத்தை (கூடியிருத்தலை) ஶ்ருதி ஓதுகிறது. ஶ்ருதியில் ஓதப்பட்ட ஸாம்யமும் ஸாஹித்யமும் ஜீவ-ஈஶ்வர-பேதத்தையே காட்டுகின்றன. உலகில் ஒருவனுக்கு மற்றொருவனோடேயே ஸாம்யம் சொல்லப்படும். ஆகையால் முக்தன் தன்னை எம்பெருமானைக் காட்டிலும் அந்யனாகவே

அநுபவிக்கிருன் என்று பூர்வபக்ஷம் ஏற்பட அதற்குப் பரிஹாரமாக *அவிப4ாகே3ந த்3ருஷ்டத்வாதி4கரணம்* அவதரித்திருக்கிறது.

முக்தனுக்கும் ஸர்வேச்வரனுக்கும் ஸ்வரூபத்தில் பேதம் இருந்தாலும், சரீர-சரீரி-பாவ-ஸம்பந்தத்தாலே அநந்யத்வமுண்டு. ஆகவே பேத(ஸ்வதந்த்ர) புத்தி இல்லாமல் அவிபக்தனுகவே எம்பெருமானை முக்தாத்மா அநுபவிக்கிருன். அப்ருதக்ஸித்த ஸம்பந்தம் காரணமாக *அஹம் ப்ரஹ்மாஸ்மி* (நான் ப்ரஹ்மமாகவே இருக்கிறேன்) என்பதற்கு *அஹம் ப்ரஹ்ம ப்ரகாரோஸ்மி* (நான் ப்ரஹ்மத்தை விட்டுப் பிரியாத ப்ரகாரமாய் இருக்கிறேன்) என்று பொருள் கொள்ளவேண்டும். ஸ்வதந்த்ர பேதம் கிடையாதாகையால் விபக்தனுக - ஸ்வதந்த்ரனுக தன்னை அநுபவிப்பது மோக்ஷமாகாது. முக்தனுக்கும் ஸர்வேச்வரனுக்கும் ப்ரபா-ப்ரபாவான்களைப்போலே அநந்யத்வம் உண்டு. ஸாஹித்யம் போக்த்ருத்வ ஸாஹித்யமன்று; போக்யமான கல்யாணகுணங்களோடேகூட எம்பெருமானை அநுபவிக்கிருன் என்று போக்ய ஸாஹித்யமே விவக்ஷிதம். முக்தன் எப்போதும் எம்பெருமானை விட்டுப் பிரியாத அடியனுய் அவனை அநுபவிக்கிருனே தவிர ஸ்வதந்த்ரனுக அநுபவிக்கவில்லை என்பது ஸித்தாந்தமாகும்.

ப்3ராஹ்மாதி4கரணம்

முக்தாத்மா தனக்கு அஸாதாரணமாய் ஸ்வாபாவிகமான ஆகாரத்துடன் விளங்குகிருன் என்று முதல் அதிகரணத்தில் (ஸம்பத்3யாவிர்ப4ாவாதி4கரணம்) நிரூபித்தார். உண்மையான ஆகாரம் எப்படிப்பட்டது என்பதை ப்ராஹ்மாதிகரணத்தில் விசாரிக்கிருர் ஸ்ரீவேதவ்யாஸர்.

ஏவமப்யுபந்யாஸாத் பூர்வப4ாவாத்-அவிரோத4ம் ப3ாத3ராயண: [ப்ர.ஸூ. 4.4.7] [ஏவம் அபி = ஔடு3லோமி சொன்னபடி ஜ்ஞாந மாத்ரமாய் இருப்பது ஜீவாத்மா என்று ஒப்புக்கொண்டாலும், அவிரோத4ம் = (ஸத்யகாமத்வம் முதலான குணங்கள் ஜீவாத்மாவிடம் இருப்பதாகக் கொள்வதில்) முரண்பாடு இன்மையை, ப3ாத3ராயண: = பாதராயணரான ஸூத்ரகாரர் எண்ணுகிருர். உபந்யாஸாத் = (*ய ஆத்மா அபஹதபாப்மா* என்று தொடங்கும் ப்ரஜாபதி வாக்யத்தில் இந்த எட்டு குணங்கள் ஜீவாத்மாவிடம் இருப்பதாக) உபந்யஸிக்கப்பட்டிருப்பதால், பூர்வப4ாவாத் = முன் (ஜைமிநி) சொன்ன எட்டு குணங்களும் ஜீவாத்மாவிடம் இருப்பதால்] என்று ஸூத்ரம். ஔடுலோமி என்னும் ஆசார்யர் *விஜ்ஞாந க4ந ஏவ* (ப்ருஹ 4-4-12) (ஜீவாத்மா முழுவதும் ஜ்ஞாந ஸ்வரூபமாகவே இருக்கிறது) என்கிற ச்ருதியின்படி ஜ்ஞாநமாத்ரமாய் இருக்கிருன் முக்தன் என்கிருர். ஜைமிநி என்னும் ஆசார்யர் -

*ய ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யு: விசோக: விஜிக4த்ஸ: அபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: *

acharya.org

(சாந்தோக்யம் 8-7-1) (இந்த ஜீவாத்மா பாபமற்றவன் ; கிழத்தனம் அற்றவன் ; மரணம் அற்றவன் ; வருத்தமற்றவன் ; பசியற்றவன் ; தாகமற்றவன் ; தடையற்ற விருப்பங்களை உடையவன் ; வீணாகாத ஸங்கல்பங்களை உடையவன்) என்கிற ஶ்ருதியின்படி அபஹதபாப்மத்வ ஸத்யகாமத்வாதி கல்யாணகுண விஶிஷ்டமாக முக்தனான ஆத்மா விளங்குகிறான் என்கிறார். ஸ்ரீவேதவ்யாஸ பகவான் கட்டடங்க ஜ்ஞாந ஸ்வரூபமாயிருக்கும் முக்தாத்மா அபஹதபாப்மத்வம் முதலான குணாஷ்டகத்துடனே விளங்குகிறான் என்கிறார். அதாவது விஜ்ஞாந கநத்வத்துக்கும் குணாஷ்டகத்துக்கும் விரோதமில்லை. கட்டடங்க ஜ்ஞாநாநந்த ஸ்வரூபனாய், அபஹதபாப்மத் வாதி குணாஷ்டக விஶிஷ்டனாய் விளங்கும் ஸர்வேஶ்வரன் -

நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி—
[முண்டக 3-1-3] [ஸம்ஸார ஸம்பந்தமற்றவனாய் (முக்தாத்மா பரமாத்மாவோடு) மேலான ஒற்றுமையை அடைகிறான்] என்றும், *தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே ஒக்க அருள் செய்வராதலால்* என்றும் சொல்லுகிறபடியே தம்மோடு ஒக்க அருள் செய்பவனாதலால் அழுக்குக் கழிந்த ரத்நம் போலே முக்தாத்மா நிரதிஶய ஜ்ஞாநக்கதிரை உடைய ரத்நமாகத் திகழ்கிறான் என்றபடி.

ஸங்கல்பாதி$_4$கரணம்

ஸ்ரீவைகுண்டநாதனோடு ஸாம்யத்தை அடைந்த முக்தாத்மா அவனுடைய லீலைக்கும் அநுபவத்துக்கும் அநுகூலமான பதார்த்தங்களைத் (தானே அப்ரதிஹத ஸங்கல்பனாகையால்) தன் ஸங்கல்பத்தாலேயே ஸ்ருஷ்டித்து பகவல்லீலாநுபவத்தில் தானும் பங்குகொண்டு திளைக்கிறான் என்று ஸங்கல்பாதிகரணத்தில் *ஸங்கல்பாதே$_3$வ தச்ச்$_2$ருதே:* என்னும் ஸூத்ரத்தில் (ப்ர.ஸூ. 4.4.8) நிரூபிக்கிறார் ஸ்ரீவேதவ்யாஸர். இவ்வதிகரணத்தில் *அத ஏவ சாநந்யாதி$_4$பதி:* [ப்ர.ஸூ. 4.4.9] [அத: ஏவ = இவ்வண்ணமாக முக்தன் ஸத்யஸங்கல்பனாக இருப்பதனாலேயே; அநந்யாதி$_4$பதி: ச = (அவன்) ஸர்வேஶ்வரனைத் தவிர வேறு எதற்கும் (கர்மம் முதலானவற்றுக்கு) வஶப்பட்டவன் அல்லன் (என்றும் விளங்குகிறது)] என்பது அடுத்த ஸூத்ரம். அயர்வறும் அமரர்களுக்கும் அதிபதியாக ஸர்வேஶ்வரன் எழுந்தருளி இருப்பதால், முக்தனுக்கும் அவனே அதிபதியாக விளங்குகிறபடியால் *அதஏவசாநதிபதி:* என்று சொல்லாமல் *அதஏவசாநந்யாதிபதி:* என்கிறார் ஸ்ரீவேதவ்யாஸர்.

அப$_4$ாவாதி$_4$கரணம்

*எம்பெருமான் தன்னைக் காட்டிலும் உயர்ந்த வேறு ரத்நமில்லாதபடி மிகவும் உயர்ந்த ரத்நம் போன்றவன். ஒருபோதும் அழுக்கு அடையாமல் இருக்கும் உயர்ந்த ரத்நம் போன்றவர்கள் நித்யஸூரிகள். எப்போதும் அழுக்கோடு கூடியிருக்கும் ரத்நம் போன்றவர்கள் ஸம்ஸாரிகள்.

acharya.org

அழுக்குக்கள் நிஶ்ஶேஷமாய் கழிந்துபோன பிறகு எப்போதும் ஶுத்தமாக விளங்கும் ரத்நம் போன்றவர்கள் முக்தாத்மாக்கள்* என்று அதிகரணசிந்தாமணியில விளக்கப்பட்டிருக்கிறது. உபாதிகளான அவித்யாதிகள் நிஶ்ஶேஷமாக கழிந்த பிறகு ஆவரணத்துக்கு ப்ரஸக்தி இல்லாமையால் எம்பெருமானை அடைந்த முக்தாத்மாவுக்குண்டான தர்மபூதஜ்ஞாந விகாஸம் எப்போதும் உள்ளது. அவன் எப்போதும் –

தத்$_3$ விஷ்ணோ: பரமம் பத$_3$ம் ஸதா$_3$ பஶ்யந்தி ஸூரய: |
தி$_3$வீவ சக்ஷுராததம் தத்$_3$ விப்ராஸோ விபந்யவோ
ஜாக்$_3$ருவாம்ஸஸ் ஸமிந்த$_4$தே விஷ்ணோர் யத் பரமம் பத$_3$ம் ||

[ருக் வேதம் - அஷ்டகம் 1-2-7] [ஸ்ரீவிஷ்ணுவினுடைய அந்த பரமபதத்தை அல்லது ஸ்வரூபத்தை) நித்யஸூரிகள் எப்போதும் பார்க்கிறார்கள். அப்பரமபதம் எல்லாவற்றையும் கண் போன்று ப்ரகாஶிக்கச் செய்பவனும் ஆகாஶத்தில் இருப்பவனுமான ஸூர்யனைப் போன்று விளங்குகிறது. அப்பரமபதத்தில் மேதாவிகளும் துதிப்பவர்களும் (பரிவாலே) விழிப்புடன் இருப்பவர்களுமான நித்யஸூரிகள் ப்ரகாஶிக்கின்றனர்]

என்கிறபடியே எம்பெருமானை அநுபவித்துக் கொண்டிருக்கிறான். வேண்டியபோது அவனுக்கு ஸகலவிதமான கைங்கர்யங்களைப் புரிவதற்குப் பாங்காக பல ஶரீரங்களையும் எடுத்துக்கொள்கிறான். *நின்தாளின் கீழ் வாழ்ச்சி* என்கிறபடியே ஸுகமாக வாழ்கிறான் என்பது அபாவாதிகரணத்தின் தேறின பொருளாகும். இந்த அதிகரணத்தில் முக்தனுக்கு ஶரீரம் உண்டா இல்லையா என்கிற விசாரம் ஏற்படுகிறது.

ப$_3$ாத$_3$ரி என்னும் மஹர்ஷி *ஶரீரம் இருந்தால் கர்மாநுபவமும் இருக்கும் என்பதால் கர்மஸம்பந்த-ரஹிதனான முக்தனுக்கு ஶரீரம் இருக்க ப்ரஸக்தியில்லை* என்கிறார். ஜைமிநி என்னும் மஹர்ஷியோ வேறுவிதமாகக் கருதுகிறார்.

ஸ ஏகதா$_4$ ப$_4$வதி த்ரிதா$_4$ ப$_4$வதி பஞ்சதா$_4$ ஸப்ததா$_4$

(சாந் 7-16-2)(அந்த முக்தாத்மா ஒருபடியாகிறான்; மூன்றுபடியாகிறான்; ஐந்துபடியாகிறான்; ஏழுபடியாகிறான்) என்று ஶ்ருதி ஓதுவதால் முக்தாத்மா எப்போதும் கர்ம ஸம்பந்தமில்லாத ஶரீரத்தோடு கூடியிருக்கிறான் என்கிறார் ஜைமிநி. மேலே –

*த்$_3$வாத$_3$ஶாஹவது$_3$ப$_4$யவித$_4$ம் ப$_3$ாத$_3$ராயணோऽத: *

[4-4-12] [அத: = ஸங்கல்பத்தினாலே, உப$_3$யவித$_3$ம் = (சில ஸமயங்களில்) ஶரீரத்தை உடையவனாகவும், (சில ஸமயங்களில்) ஶரீரம் இல்லாதவனாகவும் (முக்தன் இருக்கிறான்) என்று ப$_3$ாத$_3$ராயணர் (கருதுகிறார்). த்$_3$வாத$_3$ஶாஹவத் = (இருவிதமான விதிவாக்யங்களாலே) த்$_3$வாத$_3$ஶாஹம் என்னும் ஒரே யாகம் (ஸத்ரம் அஹீநம் என்று இருவிதமாக

acharya.org

ஆவதைப் போன்று)] என்று ஸித்தாந்தத்தை அருளிச்செய்கிறார் ஸ்ரீவேதவ்யாஸர். கைங்கர்யம் செய்வதற்கு ஶரீராதிகள் அவஶ்யம் வேணும். குணானுபவத்திற்கு ஶரீராதிகளின் அபேக்ஷை இல்லை என்பது அவருடைய திருவுள்ளம்.

ஸம்ஸாரிகளுடைய தர்மபூதஜ்ஞாநத்துக்கு கர்மாதீநமான ஸங்கோச விகாஸங்களுண்டு. அஸங்குசித ஜ்ஞாநனாகவும் ஶக்தனாகவும் இருக்கிற முக்தனுக்கு அநேக ஶரீர பரிக்ரஹத்துக்கு வேண்டிய ஜ்ஞாந வ்யாப்தி உண்டு. அவர்கள் ஒரு ஶரீரத்தில் இருந்து கொண்டே பல ஶரீரங்களில் வ்யாபிக்கலாம். ஸௌப$_4$ரி என்னும் மஹர்ஷி தம் தபோபலத்தால் ஒரு ஶரீரத்தில் இருந்து கொண்டே தம் தர்மபூதஜ்ஞாநத்தின் மூலம் 50 ஶரீரங்களில் பரவி இருந்தார். ஸம்ஸாரிகளுக்கு அநேக ஶரீர பரிக்ரஹம் கர்மாதீநமாக ஏற்படக்கூடும். முக்தாத்மாக்களுக்கு அநேக ஶரீர பரிக்ரஹம் இச்சாதீநம். ஸர்வவிஷயானுபவத்திற்குரித்தான தர்மபூதஜ்ஞாந வ்யாப்தி முக்தர்களுக்கு எப்போதும் உண்டு. முக்தர்களுக்கு தர்மபூதஜ்ஞாநம் விபுவாய் இருக்கும்.

வாலாக்$_3$ர ஶதப$_4$ாகஸ்ய ஶதத$_4$ா கல்பிதஸ்ய ச |
ப$_4$ாகே$_3$ா ஜீவ: ஸ விஜ்ஞேய: ஸ ச ஆநந்த$_3$ாய கல்பதே ||

[ஶ்வே 5-9] [நெல்லின் நுனியை நூறாக வேட்டி அதில் ஒன்றை எடுத்து நூறாக வெட்டினால் அதில் ஒன்றின் ஒரு பகுதி அளவே இருப்பவன் ஜீவாத்மா. இப்படி அணு மாத்ரமாய் இருக்கும் ஜீவாத்மா (முக்தி தஶையில்) தன் அறிவினால் எங்கும் வ்யாபிக்கிறவனாகிறான்] என்று வேதாந்தம் இந்த உண்மையை காட்டியருளுகிறது. இதைத்தான் —

ப்ரதீ$_3$பவத$_3$ாவேஶஸ் தத$_2$ாஹி த$_3$ர்ஶயதி

[4-4-15] [ப்ரதீ$_3$பவத் = விளக்கு (ஓரிடத்தில் இருந்தாலும் தன் ஒளியாலே பலவிடங்களில் பரவுவதைப்) போன்று, ஆவேஶ: = (ஓரிடத்தில் இருக்கும் ஜீவாத்மாவும் தன் ஒளியான தர்மபூதஜ்ஞாநத்தாலே பல அல்லது எல்லா ஶரீரங்களிலும்) வ்யாபித்திருக்கலாம். தத$_2$ா = அவ்வண்ணமாகவே த$_3$ர்ஶயதி ஹி = வேதவாக்யம் காட்டுகிறதன்றோ] என்று அருளிச்செய்கிறார் ஸ்ரீவேதவ்யாஸர்.

ஜக$_3$த்$_3$வ்யாபாரவர்ஜாதி$_4$கரணம்

நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி —

[முண்டக 3-1-3] [ஸம்ஸார ஸம்பந்தமற்றவனாய் (முக்தாத்மா பரமாத்மாவோடு) மேலான ஒற்றுமையை அடைகிறான்] என்கிறபடியே ஶாஸ்த்ரம் முக்தனுக்கு எம்பெருமானோடு பரம ஸாம்யத்தைச் சொல்லுகிறது. இத்தால் பராத்மாவைப் போன்று ஜகத் ஸ்ருஷ்ட்யாதி கர்த்ருத்வம் முக்தனுக்கும் உண்டு என்று ஐயம் எழுகிறது. இது நீங்கும்படி —

acharya.org

ஜக$_3$த்$_3$வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாத்-அஸந்நிஹிதத்வாச்ச
[4-4-17] [ஜக$_3$த்$_3$வ்யாபாரவர்ஜம் = (முக்தனுடைய ஐஶ்வர்யம்) உலகைப் படைப்பது முதலான பரம்பொருளுக்கேயுரிய செயல்களைத் தவிர்ந்ததுதான் ; ப்ரகரணாத் = (ப்ரஹ்ம லக்ஷணத்தைக் கூறும்) ப்ரகரணத்திலிருந்து (இது விளங்குகிறது) ; அஸந்நிஹிதத்வாத் ச = (உலகை நியமிப்பதைப் பேசும் இடங்களில் முக்தனுக்கு) ஸந்நிதி இல்லை என்பதாலும் (இது தேறுகிறது)] என்று அடுத்த அதிகரணத்தில் ஸ்ரீவேதவ்யாஸர் அருளிச்செய்கிறார்.

முக்தர்களுக்கும் உலகப்படைப்பு முதலானவற்றில் அந்வயம் இருக்குமானால் -
*ஜந்மாத்$_3$யஸ்ய யத: * [அஸ்ய = (கார்யரூபமான) இந்த உலகத்திற்கு, ஜந்மாதி$_3$ = ஆக்கல் அளித்தல் அழித்தல் என்னும் கார்யங்கள், யத: எதனிடமிருந்து உண்டாகின்றனவோ, (அதுவே ப்$_3$ரஹ்மம் என்று வேதாந்த வாக்யம் லக்ஷணம் உரைக்க முடியும்)] என்ற ஒரு ஸூத்ரம் கொண்ட ஜந்மாத்யதிகரணத்தில் அருளிச்செய்த ப்ரஹ்ம-லக்ஷணத்துக்கு அதி-வ்யாப்தி தோஷம் ஏற்படும். ஸர்வேஶ்வரனுக்குண்டான அஸாதாரண தர்மங்கள் நித்யமுக்தர்களுக்கு கிடையாது.

போ$_4$க$_3$மாத்ர ஸாம்ய லிங்கா$_3$ச்ச
[4-4-21] [போ$_4$க$_3$மாத்ர ஸாம்ய லிங்க$_3$ச்ச = (ப்ரஹ்மாநுபவமாகிற) போகமாத்ரத்தால் (முக்தனுக்கு ப்ரஹ்மத்தோடு) ஒற்றுமையைக் கூறும் காரணத்தாலும் (முக்தனுடைய செல்வம் ஜகத்-வ்யாபாரம் அற்றதே)] என்கிற ஸூத்ரத்தின்படி *எம்பெருமானுக்கும் நித்யமுக்தர்களுக்கும் ஆநந்தத்தில் தாரதம்யம் இல்லை* என்றே தேறுகிறது.

இனி இந்த அதிகரணத்துக்கும், இந்த பாதத்துக்கும், இந்த அத்யாயத்துக்கும், இந்த ஶாரீரக மீமாம்ஸா ஶாஸ்த்ரத்துக்கும் கடைசியாக அமைந்திருக்கும் ஸூத்ரத்தினுடைய அர்த்தத்தை நாம் அநுபவிக்க வேணும். இதுதான் –

அநாவ்ருத்திஶ்ஶப்$_3$த$_3$ாத$_3$நாவ்ருத்தி : ஶப்$_3$த$_3$ாத்
[4-4-22] [அநாவ்ருத்தி : = (முக்தன் ஸம்ஸாரத்திற்குத்) திரும்பி வருவதில்லை ; ஶப்தாத் = வேதவாக்யம் அப்படிக் கூறுகையால்]

என்னும் ஸூத்ரம். ஸர்வேஶ்வரன் ஸ்வதந்த்ரன் என்றாலும் அத்யந்த ப்ரியனாய் தனக்கு ஆத்ம ஸமாநமான ஸகாவாய் தன்னையடைந்த முக்தனை ஒருகாலமும் கைவிடான். அகர்மவஶ்யனாய் பகவதநுபவத்திலேயே ஊன்றியிருக்கும் முக்தனுக்கும் அவனுடைய அநுபவத்தை விட்டுவர ப்ரஸக்தியில்லை. ஆகையால் முக்தனுக்கு பகவதநுபவம் நித்யமானது. அவனுக்கு மறுபடியும் ஸம்ஸார ஸம்பந்தமில்லை என்று ஸூத்ரகாரர் மூதலித்தருளுகிறார். எம்பெருமானோடுகூட

acharya.org

நித்யமுக்தர்களில் யாராவது அநுயாத்ரையாக இவ்விபூதிக்கு வருவதுண்டு. லோக-அநுக்ரஹத்துக்காக எம்பெருமான் இவ்விபூதியில் திருவவதரிப்பதைப் போலவே இவர்களும் அவனுடைய ஸங்கல்பாதீநமாக சிற்சில ஸமயங்களில் தனியாகத் திருவவதரிப்பதுண்டு. இது கேவலம் க்ருபையடியாக ஏற்படுவதால் அடிக்கழஞ்சு பெறும்.

நிகமநம் :- அப்ராக்ருதமான பரமபதத்தில் ஸ்ரீவைகுண்டநாதனைக் கிட்டி *அந்தமில் பேரின்பத்தடியரோடு(திருவாய்மொழி 10-9-11)கூடியிருந்து *ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்ட சதிர்கண்டு* (திருவாய்மொழி 4-9-10) என்கிறபடியே திவ்ய தம்பதிகளை ஸேவித்து அநுபவித்து அவர்கள் திறத்தில் ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்-தோசிதமான கைங்கர்யங்களையும் செய்து கொண்டு வர்த்திப்பதே நம் ஸித்தாந்த ஸம்மதமான மோக்ஷமாகும். பகவதநுபவ கைங்கர்யமே *ப$_2$லம் ப்ராப்தே : * என்று சொல்லப்படுகிற முக்தி ப$_2$லமாகும்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

acharya.org

ஸ்ரீ மணவாளமாமுநிகள் - ஸ்ரீரங்கம்

acharya.org

ஸ்ரீமணவாளமாமுநிகள் வைபவம்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

1. அவதாரிகை

ஸம்ஸார நரகஹேதுவாய் இருக்கும் ஆஸுர ஸம்பத்தான காமக்ரோதலோபமதமாதி தோஷங்கள் அற்றவர்களாய், ஆசார்யாபிமாநபாத்ரபூதர்களாய், ஸர்வஜநஹிதைஷிகளாய் பரம புருஷார்த்தம் கைபுகுந்திருக்கும் நம் முன்னோர்களான மஹாபுருஷர்கள் எந்த ஆசார்ய ஸார்வபௌமருடைய ஸம்பந்தவிஶேஷத்தால் இந்த ஏற்றங்களைப் பெற்று இவ்வுலகினை வாழ்வித்துப் போந்தார்களோ, அந்த ஆசார்ய ஸார்வபௌமருடைய வைபவமஹார்ணவத்தில் சிறிய ஜ்ஞாநத்தனான அடியேனும் சிறிதளவு அவகாஹித்து ஆத்மநன்மையைப் பெற விழைகிறேன். கடல்சூழ்ந்த மண்ணுலகம் வாழ திருவவதரித்தருளிய ஸ்ரீமணவாளமாமுநிகளே அந்த ஆசார்ய ஸார்வபௌமர் என்பதை நாம் சொல்லவும் வேணுமோ?

2. திருவவதாரதிந வைபவம்

* பாதே$_2$ா ப$_4$ாவம்.... என்கிற ஶ்லோகத்தினால் மாமுநிகளின் திருவவதாரதிந வைபவத்தை நம் முன்னோர்கள் வெளியிட்டனர். ஸம்ஸ்க்ருதத்தில் கடபயாதி$_3$ க்ரமம் என்பது ஒன்றுண்டு. இதன்படி பாதே$_2$ாப$_4$ாவம் என்பதனால் 4471 என்கிற எண் கிடைக்கிறது. க$_3$தகல் யப்$_3$த$_3$ம் 4471 ஸாதாரண வருஷத்தில் துலாஶுக்ல சதுர்த்தி குருவாரத்தோடு கூடின திருமூலத்தில் மாமுநிகளுடைய திருவவதாரம். வருஷநாமம் மாமுநிகளுடைய திருவவதாரம் ஸர்வாத்ம ஸாதாரணம் (எல்லாச் சேதநர்களுக்கும் நன்மை பயப்பதில் பொதுவானது) என்பதைக் காட்டுகிறது. மாமுநிகளுடைய திருவவதார ஸம்பந்தத்தினால் திருமூலம் மேன்மை பெற்று விளங்குகிறது. திருமூலம் என்பது ஸர்வ ஶ்ரேயஸ்ஸுக்கும் (எல்லா ஆத்ம-நன்மைகளுக்கும்) காரணம் என்பதைக் காட்டுகிறது. இந்தத் திருநாளின் வைபவத்தை ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா வரவரமுநி ஶதகத்திலே -

யத$_3$வதரணமூலம் முக்திமூலம் ப்ரஜாநாம்
ஶட$_2$ரிபுமுநித்$_3$ருஷ்டாம்நாய ஸாம்ராஜ்யமூலம் |
கலிகலுஷஸமூலோந்மூலநே மூலமிந்தே$_4$
ஸ ப$_4$வது வரயோகீ$_3$ நஸ்ஸமஸ்தார்த்த$_2$மூலம் || 2

(எந்த - மாமுநிகளுடைய திருவவதார திருநக்ஷத்ரமான - திருமூலமானது உலகத்தாரான சேதநர்களுடைய மோக்ஷத்திற்கு மூலகாரணமாக அமைந்திருக்கிறதோ, எந்த திருமூல

acharya.org

நக்ஷத்ரமானது ஸ்ரீஶடகோபரான நம்மாழ்வாரால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட த்ராவிடவேதத்தை ப்ரமாண ஸாம்ராஜ்யத்தில் அபிஷிக்தமாக்குகைக்கு ஹேதுவாக விளங்குகிறதோ, எவர் கலிதோஷத்தை வேரோடு களைந்தெடுத்து எரிப்பதற்குக் காரணமாய் விளங்குகிறுரோ, அப்படிப்பட்ட ஸ்ரீமணவாளமாமுநிகள் தாஸபூதர்களான நம்முடைய ஸகல புருஷார்த்த ஸித்திக்கும் காரணமாக வேணும்!) என்று அருளிச்செய்தார். ஸ்ரீஎறும்பியப்பா வரவரமுநி ஶதகத்திலே -

யந்மூலமாஶ்வயுஜமாஸ்யவதாரமூலம்
காந்தோபயந்த்ருயமிந: கருணைகஸிந்தே$_4$ா: |
ஆஸீத$_3$ஸத்ஸு க$_3$ணிதஸ்ய மமாபி ஸத்தா -
மூலம் ததே$_3$வ ஜக$_3$தப்$_4$யுத$_3$யைகமூலம் ||

(100)(ஐப்பசி மாதத்தில் எந்த மூல நக்ஷத்ரமானது தயைக்கு ஒப்பற்ற கடல் போன்றவரான ஸ்ரீஅழகியமணவாளமாமுநிகளுடைய திருவவதாரத்திற்குக் காரணமாயிற்றே, அந்த மூல நக்ஷத்ரமே, ஸ்வரூப நாஶமடைந்தவர்களில் முதல்வனுக எண்ணப்பட்ட அடியேனுடையது வும், ஸ்வரூபஜ்ஞாநத்திற்குக் காரணமாய், உலகத்தின் மங்களத்திற்கு முக்ய காரணமாக வும் ஆயிற்று) என்றும்,

மூலம் ஶடாரிமுக$_2$ ஸூக்திவிவேசநாயா:
கூலம் கவேரது$_3$ஹிது: ஸமுபாக$_3$தஸ்ய |
ஆலம்ப$_3$நஸ்ய மம ஸௌம்யவரஸ்ய ஜந்ம -
மூலம் விப$_4$ாதி ஸதுலம் விதுலம் ச சித்ரம் ||

[101][நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களின் ஆராய்ச்சியே வடிவான சிறந்த வ்யாக்யாநத்துக்கு காரணமாய் காவேரீ நதியினுடைய கரையான ஸ்ரீரங்கநகரத்தை (ஸ்ரீவைகுண்டத்திலிருந்து வந்து) அடைந்து அடியேனுடைய (ஸம்ஸார ஸாகரத்தில் விழாமல் தடுக்கும்) பற்றுக்கோடான ஸ்ரீஅழகியமணவாளமாமுநிகளுடைய திருவவதார திருநக்ஷத்ர மாகிய திருமூலமானது துலா (ஐப்பசி) மாஸத்தோடு கூடியதாகவும் ஒப்பற்றதாகவும் இருந்து கொண்டு ஆத்மாக்களைக் காப்பாற்றுவதாக விளங்குகிறது] என்றும் இத்திருமூலத்தின் பெருமையை வெளியிட்டார்.

3. திருவவதார ரஹஸ்யம்

ஸ்ரீமணவாளமாமுநிகள் நம் ஸ்வாமி எம்பெருமானுருடைய அபராவதாரபூதர் என்பது அவர் காலத்திலேயே ப்ரஸித்தமாயிற்று. *ஸ்ரீமாந் ஸுந்த$_3$ர ஜாமாத்ருமுநி:

acharya.org

பர்யாயப$_4$ாஷ்யக்ருத்* என்று அண்ணாவும், *வரவரமுநி : ஸ்ரீமாந் ராமாநுஜோ ஜயது க்ஷிதௌ* என்று அப்பாவும் அருளிச் செய்தார்கள்.

ஸ்ரீவைகுண்டநாதனுடைய திவ்யாஜ்ஞையடியாக திருவநந்தாழ்வான் இக்கலியுகத்தில் இருநூறு வருஷங்கள் எழுந்தருளி இருந்து உபயவேதாந்த க்ரந்தங்களை ப்ரவர்த்திப்பித்துச் சேதநர்களை வாழ்வித்தருள ஸங்கல்பித்தான். முதலில் எம்பெருமானாராக திருவவதரித்து நூற்றிருபது வருஷங்கள் இவ்விபூதியை அலங்கரித்து ப்ரஸ்தாந-த்ரயத்தையும் ப்ரவர்த்திப்பித்துப் பிறகு ஸ்ரீவைகுண்டநாதனை ஸேவிக்க வேணும் என்னும் அவாவிலே திருநாட்டுக்கு எழுந்தருளினான். பிறகு அருளிச்செயல் ரஹஸ்யப்ரஸ்தாநங்களை பஹுமுகமாக ப்ரவர்த்திப்பிக்க ஸங்கல்பித்து ஸ்ரீமணவாளமாமுநிகளாய் திருவவதரித்தான். திருவவதார-ப்ரயோஜநம் தலைக்கட்டின உடனேயே தன்னுடைச் சோதியைச் சேர்ந்தனன். இதுவாயிற்று ஸ்ரீமணவாள மாமுநிகளுடைய திருவவதார ரஹஸ்யம். இவர் ஆதிஶேஷாவதாரவிஶேஷம் என்பதை வரவரமுநிஶதகத்தில் -

து$_3$க்$_3$தே$_4$ாத$_3$ந்வத்$_3$த$_4$வலமது$_4$ரம் ஶுத்$_3$த$_4$ஸத்த்வைகரூபம்
ரூபம் யஸ்யஸ்பு$_2$டயதிதராம் யம் ப$_2$ணீந்த்$_3$ராவதாரம் |
த்$_4$யாயந்தஸ்தம் வரவரமுநிம் கேऽபி த$_4$ந்யா மஹாந்த :
காலம் ஸர்வம் கலுஷரஹிதா ஹ்ருஷ்டசித்தா ஹரந்தி || 90

[பாற்கடலைப் போன்று வெண்மையையும் மாதுர்யத்தை உடையதாய் ரஜஸ் தமஸ் கலசாத ஶுத்தஸத்வத்தையே வடிவாகக் கொண்ட எந்த மாமுநிகளுடைய திருமேனியானது அவரைத் திருவநந்தாழ்வானுடைய திருவவதாரவிஶேஷமாகக் காட்டுகிறதோ - உத்தமநம்பி முதலான அந்தரங்கர்களுக்கு மாமுநிகள் தம்முடைய உண்மைநிலையில் - திருவநந்தாழ்வானாக - ஸேவை ஸாதித்தருளினார் என்பது ப்ரஸித்தம். அந்த மாமுநிகளை நித்யம் த்யாநம் செய்யும் சில பாக்ய ஶாலிகளான மஹான்கள் திருவுள்ளத்தில் கலக்கமற்றவர்களாய் ஸந்துஷ்டியை உடையவர்களாய் ஸுகமாகக் காலக்ஷேபம் பண்ணுகிறார்கள் (போதுபோக்குகிறார்கள்)] என்று அண்ணாவும்

நித்யம் பத்யு : பரிசரணதோ வர்ணதோ நிர்மலத்வாத்
வ்ருத்யா வாசா விபு$_3$த$_4$ஸரிதஶ்சாதுரீமுத்$_3$கி$_3$ரந்த்யா |
ஶேஷ : ஸ்ரீமாநிதி ரகு$_4$பதேரந்தரேணாபி வாணீம்
கோ நாம த்வாம் வரவரமுநே கோவிதே$_3$ா நாவக$_3$ந்தும் ||

(15) (மணவாளமாமுநிகளே! எவன்தான்
எப்போதும் ஸர்வஶேஷியான எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்வதைக் கொண்டும், திருமேனி நிறத்தில் உள்ள மாசற்ற வெண்மையைக் கொண்டும்,

acharya.org

தேவகங்கையினுடைய தடங்கலின்றி வேகமாகப் பெருகும் திறமையை வெளிப்படுத்து கின்ற திருவாக்குகளின் வ்யாபாரத்தைக் கொண்டும்
தேவரீரை கைங்கர்யார்த்திகளான செல்வங்களைப் பெற்ற ஆதிஶேஷன் என்று - அடியேனு டைய திருவாராதநப் பெருமாளான ஸ்ரீசக்ரவர்த்தி திருமகனுடைய திருவாக்கு இல்லாமற் போய்விட்டாலும் - அறிந்து கொள்வதற்கு வல்லவனாக மாட்டான்?) என்னும் ஶ்லோகத்தில் அப்பாவும் முதலித்தனர். வேதாந்தவாதாவளீகாரரான மைசூர் அநந்தாழ்வான் ஸ்வாமியும் -

ஶேஷ: ஶ்ரீமாந் நிக$_3$மமகுடீயுக்$_3$மரக்ஷாப்ரவ்ருத்த: |
ஸ்ரீமத்$_3$ராமாவரஜமுநிதாம் ரம்யஜாமாத்ருதாஞ்ச ||

(திருவநந்தாழ்வான் உபயவேதாந்தத்தினுடைய ரக்ஷணத்தின் பொருட்டு முதலில் எம்பெரு மானாராகவும், பிறகு ஸ்ரீமணவாளமாமுநிகளாகவும் திருவவதாரம் செய்தனன்)

என்று அருளிச்செய்தார். இவர் ஶேஷாவதாரமென்பது இன்னும் பல ப்ரமாணங்களாலும் ப்ரத்யக்ஷத்தாலும் ஸித்தித்தபடியால் விப்ரதிபத்திக்கு இடமில்லை. இப்படி எம்பெருமானா ருடைய அபராவதாரமாய் ஆதிஶேஷனுடைய சரமாவதாரமான மாமுநிகள் திறத்து ஸ்ரீராமாநுஜ ஸம்பந்தமுடையவர் அனைவருக்கும் ப்ரதிபத்தி பண்ணவடுக்கும். ப்ரதிபத்தியைப் பண்ணா விட்டாலும் இவ்விஷயத்தில் அத்வேஷமாவது அவஶ்யம் நடக்க வேணும். அவர்கள் நித்யம் அநுஸந்திப்பதற்காக அடியேனுடைய ஶ்லோகமொன்று இங்கே தரப்படுகிறது.

ஸ்ரீஶைலநாத$_2$ார்யக்ருபைகபாத்ரே
ரம்யோபயந்த்ராக்$_2$ய கு$_3$ரௌமுநீந்த்$_3$ரே |
யே ப$_4$க்திஹீநாஸ்து ஜநாஸ்த ஏதே
ஸ்ரீஶாப்ரியா: ஸ்யு: நஹி முக்திரேஷாம் ||

(திருமலையாழ்வாருடைய க்ருபைக்கு ஒரே பாத்ரமானவரான ஸ்ரீஅழகியமணவாளமாமுநிகள் என்னும் ஆசார்யரிடத்தில் பக்தியற்றவர்கள் ஸ்ரீமந் நாராயணனுக்கு ப்ரியமற்றவர்களாவர். அவர்களுக்கு முக்தி கிட்டாது)

4. யதிவர வரவரமுநிகளுக்குள்ள ஒற்றுமை

ஸ்ரீமணவாளமாமுநிகளுக்கும் ஸ்வாமி எம்பெருமானாருக்கும் உள்ள ஒற்றுமை நயத்தை -

ப$_4$ாஷ்யக்ருத்த்வா த$_3$ார்யபீட$_3$ஸ்த$_2$ாபநாந் நித்யவாஸத: |
ஸ்ரீரங்கே$_3$ ஸ்ரீரங்க$_3$ஸம்பத்$_3$வர்த$_4$நாத் தே$_3$ஶிகத்வத: ||
பத்யு: ஶ்ரிய: ஶேஷரூபத$_3$ர்ஶகத்வாத் யதித்வத: |
ப்ராவண்யாத்$_3$தி$_3$வ்ய தே$_3$ஶேஷு தத்கைங்கர்ய ப்ரவர்த்தநாத் ||

acharya.org

ரூபஸாம்யாச்ச லக்ஷ்மீஶாக்$_2$யாபிதாதுலவைப$_4$வாத் |
ஸ்ரீராமாநுஜ ரம்யோபயந்த்ரோ: ஸாம்யம் பரம் மதம் ||

என்னும் ஶ்லோகங்களால் அடியேன் ஸங்க்ரஹித்துள்ளேன். இவைகளின் விளக்கம் பின் வருமாறு :—

(1) எம்பெருமானார் (வேதார்த்த ஸங்க்ரஹம்) ஸ்ரீகீதாபாஷ்யம் ஸ்ரீபாஷ்யம் என்னும் பாஷ்ய க்ரந்தங்களையும், ஸ்ரீமணவாளமாமுநிகள் ஸ்ரீவசநபூஷணாதி ரஹஸ்யக்ரந்தங்களுக்கு வ்யாக்யாநமும் அருளிச்செய்தனர்.
(2) எம்பெருமானார் எழுபத்துநான்கு ஸிம்ஹாஸநத்தையும் மாமுநிகள் அஷ்டதிக்கஜாசார்ய பீடத்தையும் ஸ்தாபித்தனர்.
(3) திருவரங்கனுடைய திவ்யாஜ்ஞையடியாக இருவரும் கோயிலை நித்யவாஸமாகக் கொண்டிருந்தனர்.
(4) இருவரும் ஸ்ரீரங்கஸ்ரீயை வளர்த்தனர்.
(5) எம்பெருமானார் திருக்குறுங்குடிநம்பிக்கும் ஸ்ரீமணவாளமாமுநிகள் திருவரங்கச்செல்வனுக்கும் ஆசார்யரானார்கள்.
(6) ஸஹஸ்ரபணாமண்டல மண்டிதமான நிஜரூபத்தை இருவரும் காட்டியருளினார்கள்.
(7) பகவத்-பாகவத(ஆசார்ய)-அநுவர்த்தந விரோதியான ஸம்ஸார பந்தத்தை இருவரும் சடக்கென ஸந்யஸித்தனர்.
(8,9) உகந்தருளின நிலங்களில் அதிமாத்ர ஈடுபாடும், ஆங்காங்கே திருவாராதநாதிகள் குறையற நடக்கும்படி கட்டளையை ஏற்படுத்தினபடியும் இருவருக்கும் ஒக்கும்.
(10) இருவருடைய திருமேனிகளும் ஸமாந லக்ஷணங்களோடு கூடியதாய் விளங்கும்.

காஷாயஶோபி$_4$ கமநீய ஶிக$_2$ாநிவேஶம்
த$_3$ண்ட$_3$த்ரயோஜ்ஜ்வலகரம் விமலோபவீதம் |
உத்$_3$யத்$_3$தி$_3$நேஶநிப$_4$முல்லஸதூ$_3$ர்த்$_4$வபுண்ட்$_3$ரம்
ரூபம் தவாஸ்து யதிராஜ த்$_3$ருஶோர் மமாக்$_3$ரே ||

[யதிராஜரே! காஷாயத்தினால் ப்ரகாஶிப்பதும், அழகிய ஶிகையை உடையதும், த்ரிதண்டத்தால் விளங்கும் திருக்கையை உடையதும், பரிஶுத்தமான பூணூலை உடையதும், உதிக்கும் ஸூர்யனைப் போன்றதும், விளங்கா நிற்கும் (பன்னிரு) திருமண்காப்புகளை உடையதுமான தேவரீருடைய திருமேனி அடியேன் கண் முன்னே (எப்போதும்) ப்ரகாஶிக்கட்டும்!] என்னும் முக்தக ஶ்லோகம் இங்கு அநுஸந்தேயம்.

ராஜச்சீ$_2$தமயூக$_2$மண்ட$_3$லஶரஜ்ஜ்யோத்ஸ்நாஸநாபி$_4$த்$_3$யுதி :

acharya.org

காஷாயாம்ப$_3$ரத$_4$ாரிணீ கரலஸத்$_3$த$_3$ண்ட$_3$த்ரயீமண்டி$_3$தா |
ப$_2$ாலாத்$_3$யங்க$_3$ஸமுல்லஸத்ஸுவிமலஸ்நிக்$_3$தே$_4$ார்த்$_4$வபுண்ட்$_3$ரோஜ்ஜ்வலா
தீ$_3$வ்யந்த்யாத்மகு$_3$ணைஸ்ஸதா$_3$ா வரவராகாராऽஸ்து மே ப$_4$ாவநா || 91

(எவருடைய திருமேனியானது ப்ரகாஶிக்கிற சரத்கால சந்த்ரனுடைய காந்தியை உடையதோ, காஷாய வஸ்த்ரத்தைத் தரிக்கிறதோ, திருக்கையில் விளங்கும் த்ரிதண்டத்தாலே அழகாக விளங்குகிறதோ, நெற்றி முதலான பன்னிரண்டு ஸ்தாநங்களிலும் திகழ்கின்ற த்வாதஶ-ஊர்த்வ-புண்ட்ரங்களினுல் ப்ரகாஶிக்கிறதோ, ஆத்மகுணங்களை ப்ரகாஶிக்கச் செய்கிறதோ அந்த மணவாளமாமுநிகளுடைய திருமேனியை விஷயமாகக் கொண்ட த்யாநம் ஸித்திக்க வேணும்!) என்று மாமுநிகளின் வடிவழகை வர்ணிக்கும் ஶ்லோகத்தை அண்ணா ஶதகத்தில் ஸாதித்ததும் இங்கு அநுஸந்தேயம்.

(11). திவ்யதேஶத்து எம்பெருமான்களால் இருவருடைய வைபவங்களும் ப்ரகாஶிக்கப் பட்டன.

(12) ஸ்வாமி எம்பெருமானார் * ஒரு நாயகமாய் திருவாய்மொழியை திருநாரணனுக்கும், ஸ்ரீமணவாளமாமுநிகள் * தீர்ப்பாரையாமினி திருவாய்மொழியை ஸ்ரீராஜகோபாலனுக்கும் ஸமர்ப்பித்தனர்.

இன்னும் இப்படிப் பலபடிகளாலும் ஒற்றுமையை நிர்வஹிக்கலாம். எம்பெருமானாரில் மாமுநிகளுக்கு நெடுவாசியுமுண்டு. எம்பெருமானாருக்கு ஸித்தாந்த ஸ்தாபநத்திற்கு உறுப்பாகப் பரமதங்களை நிரஸிக்க வேண்டிய பணியும் சாலவுண்டு. மாமுநிகளோ பரமத நிரஸநத்தில் ஈடுபடாமல் அருளிச்செயல் காலக்ஷேபங்களையும் ரஹஸ்யக்ரந்த வ்யாக்யாநங்களை அருளிச்செய்வதையும் போதுபோக்காகக் கொண்டிருந்தார். சரமபர்வமான யதீந்த்ர ப்ராவண்யம் இவருக்குத் தன்னேற்றமாகும்.

5. தேஶிகோத்தமர்

ஶ்ருதி எம்பெருமானைக் கண்ணுக்கும் கண்ணுவான் என்னுமாபோலே ஸ்ரீஎறும்பியப்பா மாமுநிகளை தேஶிகர்களுக்கும் தேஶிகரென்ருர்.

ஞானமனுட்டானமிவை நன்ருகவே உடைய
னை * குருவையடைந்தக்கால் * மாநிலத்தீர்!
தேனர்கமலத் திருமாமகள் கொழுநன் *
தானேவைகுந்தம்தரும்

acharya.org

(61) என்று உபதேசரத்தினமாலையில் மாமுநிகளே ஸதாசார்ய ஸம்பந்தம் உள்ளவனுக்குத் திருமால் தானே வைகுந்தம் தருவன் என்று அருளிச்செய்கிறார். ஜ்ஞாநம் அநுஷ்டானம் இவை நன்றாகவே உடையவனாகையாவது — அந்திமோபாய நிஷ்டைக்கு உறுப்பான ஜ்ஞாந விஶேஷத்தையும் அதற்கு அநுகுணமான அநுஷ்டான ஸம்பத்தையும் உடையவனாய் இருக்கை. இவையிரண்டும் யதீந்த்ரப்ரவணரான மாமுநிகளிடத்தே புஷ்கலமாய் இருப்பதால் இவரே ஸதாசார்யர்களில் தலைவராவார். இவருடைய ஸம்பந்தம் உள்ளவனுக்கு மோக்ஷம் நிஶ்சயம் என்பதை -

மன்னுயிர்காளிங்கே மணவாளமாமுனிவன் *
பொன்னடியாஞ் செங்கமலப்போதுகளை * உன்னிச்
சிரத்தாலேதீண்டில் அமானவனும்நம்மை *
கரத்தாலேதீண்டல்கடன்

என்று ஸ்ரீஎறும்பியப்பா முதலித்துப் போந்தார்.

ஸ்ரீமணவாளமாமுநிகளுடைய ஆசார்யகுணபூர்த்தி முதலான வைபவங்களைத் திருவரங்கன் இவரிடத்தில் ஶிஷ்யனாய் பகவத்விஷயம் கேட்டு உகந்து ஸ்ரீஶைலேஶ தனியனையும் இட்டருளி வெளிப்படுத்தினான்.

பகவதவதாரங்களில் ஸ்ரீகண்ணபிரானுக்கும் ஆழ்வார்களில் திருமங்கைமன்னனுக்கும் உண்டான ஏற்றம் போலே ஆசார்யர்களில் மாமுநிகளுக்கும் ஏற்றம் விஞ்சியிருக்கும். ஆகையால் இவரே தேஶிகோத்தமர்.

6. குருபரம்பரா-பூர்த்தி

பெரியபெருமாள் முதலாகத் தொடர்ந்து வந்த நம்முடைய பூர்வாசார்ய குருபரம்பரை மாமுநிகளிடத்தில் வந்து பூர்ணமாயிற்று. மாமுநிகள் பர்யந்தமான இந்த குருபரம்பரையை பவிஷ்யத்-தர்ஶியான ஸ்ரீவேதாந்தாசார்யர் திருவுள்ளம் பற்றி யதிராஜஸப்ததியில் -

அமுநா தபநாதிஶாயிபூ$_4$ம்நா
யதிராஜேந நிப$_3$த்$_3$த$_4$நாயகஸ்ரீ: |
மஹதீ கு$_3$ருபங்க்திஹாரயஷ்டி:
விபு$_3$த$_4$ாநாம் ஹ்ருத$_3$யங்க$_3$மா விப$_4$ாதி ||

[15] [ஸூர்யனைக் காட்டிலும் அதிஶயிதமான (மேம்பட்ட) தேஜஸ்ஸை உடைய நம் ஸ்வாமி

எம்பெருமானாரை அழகு பொருந்திய நடுநாயக மணியாகக் கொண்ட மிக்க பெருமையை உடைய குருபரம்பரையாகிற ரத்ந ஹாரமானது வித்வான்களான பெரியோர்களின் மார்பை (திருவுள்ளத்தை) அடைந்து விளங்குகிறது]

என்கிற ஶ்லோகத்தில் இதை ஒரு ரத்நஹாரமாகவும், இதன் நடுநாயகம் நம் ஸ்வாமி எம்பெருமானார் என்றும் நிருபித்தருளினார். எம்பெருமானாராகிற நடுநாயக ரத்நத்திற்கு முன்னே எட்டாவது ரத்நம் திருமால்; பின்னே எட்டாவது ரத்நம் மாமுநிகள். இப்படி இந்த குருபரம்பராஹாரத்திற்கு ஸ்ரீயதிராஜர் நடுநாயகமாய் விளங்குகிறார் என்றபடி. *யஸ்மிந் பஞ்ச பஞ்ச ஜநா:* என்கிறவிடத்தில் கொள்கிற ந்யாயத்தை இங்கும் கொண்டு ஸ்ரீ-ஸ்ரீதரர்களை திவ்யதம்பதித்வ-ஆகாரத்தாலே ஒன்றாக எண்ணி நிர்வஹிக்கலாம். ஸ்ரீ-ஸ்ரீதரர்களைத் தனியாக எண்ணினாலும் ஒரு குறையும் இல்லை. எம்பெருமானாருக்குப்பின் ஸ்ரீபராஶர பட்டருடைய ஆசார்யரான ஸ்ரீகூரத்தாழ்வானையும் கூட்டி குருபரம்பரையை யதிராஜநாயகமாக நிர்வஹிக்க வேணும்.

7. விஶதவாக்ஶிகாமணி

நம் பூர்வாசார்யர்களில் *விஶதவாக்ஶிகாமணி* என்னும் விருது ஸ்ரீமணவாளமாமுநிகளுக்கே ஏற்பட்டது. ஆழ்ந்த பொருள்களையும் தெளிவாகவும் ஸுக்ரஹமாகவும் ஸரஸமாகவும் அருளிச்செய்யவல்ல ஆற்றலைப் பெற்றவர் என்றபடி. அப்ராமாணிகமாகவோ நிர்மூலமாகவோ அநபேக்ஷிதமாகவோ ஒரு விஷயத்தையும் அருளிச்செய்யார். இவர் அருளிச் செய்துள்ள வ்யாக்யாநங்கள் *இவற்றைக் கொண்டே வ்யாக்யாநத்தின் லக்ஷணம் இடப்பட்டதோ!* என்று வியந்து கொண்டாடும்படி விளங்குகின்றன. இவருடைய ஸ்ரீஸூக்திகள் ரஸகனமாய் - இனிமையே வடிவுகொண்டதாய் - இருக்கும். இவருடைய ஸ்ரீஸூக்திகளின் மாதுர்யாதிகுண வைபவங்களை ப்ரதிவாதிபயங்கரம் அண்ணா ஶதகத்தில் பல ஶ்லோகங்களால் அநுபவிக்கிறார். அவற்றுள் -

யத்$_3$வாணீம் மது$_4$ராமவாப்ய ஸுதி$_4$ய: ஸாகேத த$_4$ாமாத்யஜ:
மாயாஸங்க$_3$விதூ$_3$ரக$_3$ாம்ஶ்ச ஸுதராம் ஸந்த்யக்தகாஶ்யாஶ்ரயா:|
காஞ்ச்யாதி$_3$ஷ்வபி நி:ஸ்ப்ருஹாம்ஶ்ச ஸததம் ராமாநுஜைகாந்திந:
ராஜந்தே ஸ தநோது ஸுந்த$_3$ரவரோ யோகீ$_3$ஶ்வரோ நஶ்ஶுப$_4$ம் ||

(22)(எந்த மாமுநிகளுடைய மதுரமான ஸ்ரீஸூக்தியாகிற மதுரையைப் பற்றின விவேகிகள் உபாயாந்தரமான புண்யக்ஷேத்ர-வாஸத்திலும் உபேயாந்தரமான க்ருஹாதிகளிலும் ஆசையை விட்டு ராமாநுஜனிடத்தில் (கண்ணனிடத்திலும் எம்பெருமானாரிடத்திலும்) பக்தியை அடைந்து விளங்குகின்றனரோ, அந்த மாமுநிகளே நமக்கு எல்லா நன்மைகளையும் க்ருபை செய்தருள வேணும்) என்னும் ஶ்லோகம் இங்கே அநுஸந்தேயம்.

acharya.org

8. எல்லாம் மாமுநிகளே!

ஆசார்ய-க்ருத்யம், புருஷகார-க்ருத்யம், ஈஶ்வர-க்ருத்யம் அனைத்தும் ஸ்ரீமணவாளமாமுநிகளிடத்தில் பூர்ணமாய் இருக்கின்றன என்பதை ஸ்ரீஎறும்பியப்பா வரவரமுநிஶதகத்தில் -

ஸித்$_4$தே$_3$ாபாயஸ்த்வமிஹ ஸுலபே$_4$ா லம்ப$_4$யந் பூருஷார்த்த$_2$ாந்
அஜ்ஞாதாம்ஶ்ச ப்ரத$_2$யஸி புந: யத்ததோ தே$_3$ஶிகஸ்த்வம் |
தே$_3$வீ லக்ஷ்மீர்ப$_4$வஸி த$_3$யயா வத்ஸலத்வேந ச த்வம்
கோSஸௌ யஸ்த்வாம் வரவரமுநே மந்யதே நாத்மநீநம் ||

[14] [மணவாளமாமுநிகளே! மோக்ஷாதி புருஷார்த்தங்களை மனிதர்கள் அடையும்படி செய்பவராகக் கொண்டு எளிதாக (ப்ரயத்ந ஸாத்யமல்லாமல்) ஸித்தமான உபாயமாக ஆகின்றீர்! மேலும் ஸ்வஸ்வரூபாதிகளை அறியாதவர்களாய் அப்ரஸித்தரானவர்களை அவர்களுக்கு அறிவைத் தந்து ப்ரஸித்தர்களாக ஆக்குகின்றீர்! இத்தால் தேவரீர் ஆசார்யரும் ஆகின்றீர்! இன்னும் தேவரீர் பிறர் படும் துன்பத்தைக் கண்டு இரங்குதலாகிய தயையினாலும் குற்றத்தைக் குணமாகக் கொள்ளுதலாகிய வாத்ஸல்யத்தாலும் தேவனான பகவானுக்குப் பத்நியான பிராட்டியைப் போல் (புருஷகாரமாக) ஆகின்றீர்! ஆகையினால் எவன் (முற்கூறியபடி மூன்றும் ஆகின்ற) தேவரீரைத் தனக்கு ஹிதபூதராக நினைக்க மாட்டானோ அந்த ஆத்ம-த்ரோஹியானவன் யார்? (அறிவுள்ளவன் தேவரீரைத் தனக்கு வேண்டியவராகவே நினைத்திருப்பன் என்றபடி)]

என்னும் ஶ்லோகத்தில் அருளிச்செய்தார். ஆகவே மாமுநிகளே ஸகலவிதமான ப்ராப்யமும் ப்ராபகமும் என்று அத்யவஸித்திருந்தால் அவருடைய இன்னருளால் நமக்கொரு குறையும் வாராது என்பது திண்ணம். இந்த அத்யவஸாயத்தையும மாமுநிகளே நமக்குத் தந்தருள வேணும்!

9. நிகமநம்

மாமுநிகளின் வைபவம் அளத்தற்கரிது. அதில் ஏகதேஶத்தையே இங்கு விண்ணப்பித்தேன் அடியேன். இன்றைக்கு முன் அறுநூறுவதான ஸாதாரண வருஷத்தில் ஐப்பசியில் திருமூலத்தில் மாமுநிகள் திருவவதரித்தருளினர். மாமுநிகளுடைய அறுநூறுவது ஆண்டின் பூர்த்தியை முன்னிட்டு இப்போது நடக்கும் மஹோத்ஸவத்தில் அவருடைய வைபவத்தை அநுபவிக்கும்படியான வாய்ப்பு அவருடைய இன்னருளாலே நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆதலின் அவருடைய இன்னருளைப் போற்றுவதே நமது முதன்மையான கடமையாகும்.

ஸ ப$_4$வது வரயோகீ$_3$ நஸ் ஸமஸ்தார்த்த$_2$ மூலம்
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

acharya.org

திருவாய்மொழியும் கீதையும்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

(ஆழ்வார் திருநகரியில் ஸ்ரீராமாநுஜமிஷன் நடத்திய
மாறன் செந்தமிழ் மாநாட்டில் உபந்யஸித்தது)

ஒரு கண்ணில்லாதவனைக் காணன் என்றும் இரு கண்களையும் இழந்தவனைக் குருடன் என்றும் உலகத்தார் கூறுவர். ஸம்ஸ்க்ருத வேதாந்தமும் த்ராவிட வேதாந்தமும் ஸ்ரீவைஷ்ணவர்களான நமக்கு இன்றியமையாத இரு கண்களாகும். ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் *உபயவேதாந்தாசார்யர்களாக வழங்கப்படுகிறார்கள். அறிவுடையோர்களும் வேதாந்த தத்த்வார்த்தங்களை இவ்விரு கண்களைக் கொண்டே உள்ளபடி உணர்ந்து உய்ய வேணும். இவ்விரு வேதாந்தங்களில் ஸ்ரீமத்பகவத்கீதையானது ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தின் ஸாரமாகக் கொண்டாடப்படுகிறது. ஸ்ரீமத்பகவத்கீதைக்கும் ப்ரஹ்மஸூத்ர ப்ரபந்தத்துக்கும் மதாந்தர ஆசார்யர்களான ஆதிஶங்கரரும், ஆநந்ததீர்த்தரும் பாஷ்யமிட்டார்கள். ஆகிலும் நம் ஸ்வாமி எம்பெருமானார் இவைகளுக்கு இட்டருளிய பாஷ்யமே ஆழ்ந்த கருத்துக்களை விளக்குவதாயும் இன்சுவை மிக்கதாயும் அறிவுடையோர்களால் போற்றப்படுகிறது. ஸ்வாமி எம்பெருமானாருக்கு உபயவேதாந்தத்திலும் இருந்த ஆழ்ந்த ஜ்ஞாநம் இப்படி ஒப்புயர்வில்லாத உயர்ந்த பாஷ்யங்கள் தோன்றுவதற்கு ஒரு முக்ய காரணமாகும்.

வேதாந்தம் ப்ரஹ்மத்தை *நிர்க்கு$_3$ணம்* என்று கொண்டாடுகிறது. பகவான் தோஷங்கள் (கெட்ட குணங்கள்) அற்றவனாய் இருப்பதனாலே *நிர்க்கு$_3$ணன்* என்று கொண்டாடப் படுகிறான். ப்ரஹ்மஸூத்ர ப்ரபந்தத்திலே *அத$_2$ாதோ ப்$_3$ரஹ்ம ஜிஜ்ஞாஸா* என்று முதல் ஸூத்ரம். இதில் கூறப்படும் ப்ரஹ்ம-ஶப்த-வாச்யன் பரமாத்மாவே ஆவான்.

ப்$_3$ரஹ்ம ஶப்$_3$தே$_3$ந ச ஸ்வப$_4$ாவதோ நிரஸ்த நிகி$_2$ல தே$_3$ாஷ: அநவதி$_4$காதிஶய அஸங்க்$_2$யேய கல்யாணகு$_3$ணக$_3$ண: புருஷோத்தம: அபி$_4$தீ$_4$யதே

(ப்ரஹ்ம ஶப்தத்தாலே இயற்கையாகவே தோஷங்கள் (கெட்ட குணங்கள்) அற்றவனாய், (இயற்கையாகவே) எல்லையற்ற திருக்கல்யாண குணங்களுடைய கூட்டத்தை உடையவனான புருஷோத்தமன் சொல்லப்படுகிறான்)

என்று அருளிச்செய்கிறார் நம் ஸ்வாமி எம்பெருமானார். தம்முடைய க்ரந்தங்களில் பலவிடங்

acharya.org

களில் அவர் *ஸ்வாப$_4$ாவிக- அநவதி$_4$க-அதிசய-அஸங்க்$_2$யேய கல்யாணகு$_3$ணக$_3$ண: * என்று எம்பெருமானுக்கு விசேஷணமிடுவதை நாம் பார்க்கலாம். இதற்கு மூலம் நம்மாழ்வார் திருவாய்மொழி முதல் பாசுரம் முதலடியிலேயே நிர்க்குணப்ரஹ்மவாதிகளின் மிடற்றைப் பிடித்தாற் போலே *உயர்வற-உயர்நலம் உடையவன்* என்று அருளிச்செய்த தாகும். ஆசார்யஹ்ருதயத்தில் ஸ்ரீஅழகியமணவாளப்பெருமாள்நாயனர் -

இதுகொண்டு பாஷ்யகாரர் ஸூத்ர வாக்யங்கள் ஒருங்கவிடுவர்

என்று அருளிச்செய்கிறார் ப்ரஹ்மஸூத்ரங்களில் போலவே ஸ்ரீமத்பகவத்கீதையிலும் பலவிடங்களில் பாஷ்யம் அருளிச் செய்யும்போது நம் ஸ்வாமி எம்பெருமானார் மற்ற பாஷ்ய காரர்கள் உரைத்த பொருளைத் தழுவாமல் ரஸவத்தமான பல செம்மைப் பொருள்களை அருளிச் செய்கிறார். இதற்கு சான்றாக கீதையில் மூன்றிடங்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜக$_3$த: ப்ரப$_4$வ: ப்ரளயஸ்தத$_2$ா ||
(7-6) (நான் இந்த எல்லா உலகிற்கும் உத்பத்தி-ஸ்தாநமாகவும் லய-ஸ்தாநமாகவும் இருக் கிறேன்)

மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சித$_3$ஸ்தி த$_4$நஞ்ஜய |
(7-7)(அர்ஜுந! என்னைக் காட்டிலும் வேறுபட்டிருப்பவைகளில் ஒன்றுகூட மிகவும் மேலான தாய் இல்லை)

அர்ஜுந! வஸுதேவ புத்ரனான நானே எல்லா உலகங்களின் உத்பத்தி-லயங்களுக்குக் காரணமாயிருக்கிறேன்; ஆகையால் என்னைக் காட்டிலும் உயர்ந்தவன் வேறு ஒருவனும் இல்லை என்பது இதர பாஷ்யகாரர்கள் கூறிய பொருளாகும். இவ்விடத்தில் சீரிய வேறு ஒரு பொருளும் எம்பெருமானாரால் காட்டப்படுகிறது. இது *உயர்வற உயர்நலம் *எல்லை யில் ஞானத்தன் திருவாய்மொழிகளின் வாஸனையாலே அருளிச்செய்ததாகும். அதாவது, *ஜகத்காரணத்வத்தால் வந்த ஏற்றம் உனக்கே ஆகட்டும்! ஆயினும் ஒரோர் குணத்தாலாவது உன்னைக் காட்டிலும் மேம்பட்டவன் வேறொருவன் உளனோ?* என்று அர்ஜுனன் க்ருஷ்ணனைக் குறித்துக் கேட்க ஒருப்பட, அதற்கு உத்தரமாக, *மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சித$_3$ஸ்தி த$_4$நஞ்ஜய*(அர்ஜுந! என்னைக் காட்டிலும் வேறுபட்டிருப்பவைகளில் ஒன்று கூட மிகவும் மேலானதாய் இல்லை) என்று பகவான் கூறினதாகப் பொருள் கூறியிருப்பது மற்றொருவர் புத்திக்கு நிலமாகாதே!

acharya.org

ந தத₃ஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூ₄தம் சராசரம் ||
(10-39) (அசைவனவும் அசையாதனவுமான பொருள்களில் அந்தர்யாமியான என்னை விட்டுப் பிரிந்து இருக்கும் பொருள் ஒன்றுமே இல்லை)

நான் ஒருவனே ஸர்வப்ராணிகளின் ஹ்ருதயத்திலிருக்கும் ஜீவன் ; என்னைத்தவிர மற்றொரு உண்மைப்பொருள் இல்லை ; மற்ற அனைத்தும் பொய்யே என்பது இதற்கு ஆதிஶங்கரர் கூறிய பொருளாகும். நம் ஸ்வாமி எம்பெருமானாரோ இப்பொருளைத் தள்ளி *உயிரைப் பற்றியே உடலுக்கு ஸ்திதி என்பதைப் போன்று ஸகலசேதநாசேதநங்களும் அந்தராத்மாவான என்னைப் பற்றியே தரித்திருக்கின்றன ; ஆகையால் ஸ்வதந்த்ரமாய் என்னை ஒழியத் தனித்திருப்பதோர் பொருளில்லை* என்று பாஷ்யம் செய்தருளினார். ஸகல சேதநாசேதநங்களும் எம்பெருமானுக்கு அப்ருதக்ஸித்த விஶேஷணங்களாம். *ஸகல சேதநாசேதநங்களையும் விஶேஷணமாக உடைய ஸர்வேஶ்வரன் ஒருவனே மேம்பட்டவன்* என்ற விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை இந்த ஶ்லோகத்தின் வ்யாக்யாநத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறார். இது உபயவேதாந்தத்திலும் காணப்படும் அர்த்தமாகும்.

உடல்மிசை உயிரெனக் கரந்துஎங்கும் பரந்துளன்
(1-1-7) என்னும் ஆழ்வார் திருவாக்கு இங்கு அநுஸந்தேயம்.

ப₃ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்₃யதே |
வாஸுதே₃வஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது₃ர்லப₄ : ||
[7-19][பல புண்யப் பிறப்புகள் கழிந்தபின் பக்குவப்பட்ட ஜ்ஞாநத்தை அடைந்தவனான ஜ்ஞாநவான் (ஜ்ஞாநிகளிலும் மிகவும் மேம்பட்டவன்) *வாஸுதேவனே எனக்குப் பரம ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் தாரகம் போஷகம் போக்யம் முதலான எல்லாமாகவும் இருக்கிறான்* என்று எண்ணி என்னை ஶரணம் அடைகிறான். அவன் விஶாலமான நெஞ்சை உடையவனாவான். (அவன் இவ்வுலகில் எனக்கும்) மிகவும் கிடைத்தற்கரியவனாவான்]

இந்த ஶ்லோகத்துக்குப் பாஷ்யமிட்ட ஆதிஶங்கரர், **எல்லாம் பகவானொருவனே! அவனைத்தவிர மற்றோர் பொருள் இல்லை* என்கிற அத்வைதஜ்ஞாநம் உடையவனே ஜ்ஞாநி! இவனே கண்ணனால் போற்றப்படுகிறான்!** என்று பொருளுரைத்தார். இப்பொருள் ஶாஸ்த்ர விரோதம் ப்ரகரண விரோதம் என்னும் இரண்டு தோஷங்களையும் உடையது. சேதந அசேதநங்களைத் தனக்கு ஶேஷமாக, விபூதியாகப் பேசி விபூதிமானான ஸர்வேஶ்வரன் தானே

acharya.org

என்று க்ருஷ்ணனே அருளிச்செய்திருப்பதாலும், இவ்வர்த்தம் வேதாந்தங்களில் காணக் கிடைப்பதாலும் ஆதிஶங்கரருடைய அத்வைத பக்ஷம் ஶாஸ்த்ர விரோதமாகிறது. *வெவ்வேறாகத் தோற்றுகிறதெல்லாம் நானே! என்னைத் தவிர மற்றோர் பொருள் இல்லை* என்று கண்ணன் இங்கு சொல்கிறான் என்றால், அது இந்த ப்ரகரணத்துக்கும் பொருந்தாது. இங்கே பகவான் திருவுள்ளம் பற்றியருளிய ஜ்ஞாநவான் (பகவத் ப்ராப்தியாகிற மோக்ஷத்தில் இச்சையுடைய ஜ்ஞாநிகளைக் காட்டிலும் மிகவும் மேம்பட்டவனான அதிகாரி) யார் என்பதை

*யே ஜந்மகோடி ஸம்ஸித்$_3$த$_4$ா: தேஷாம் அந்தேऽத்ர ஸம்ஸ்தி$_2$தி: * (பௌஷ்கர ஸம்ஹிதை)(எவர்கள் கோடிக்கணக்கான புண்ய ஜந்மங்களில் ஜ்ஞாந ஸித்தி பெற்றவர்களோ அவர்களுக்கே கடைசியான ஜந்மத்தில் *பகவானே எல்லாம்* என்னும் பரிபக்வநிலை உண்டாகும்) என்னும் ஶாஸ்த்ர வசநமும்,

உண்ணுஞ்சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் (6-7-1)
சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய்தந்தையும் அவரே இனி ஆவாரே (5- 1-8)

முதலான ஆழ்வார் திவ்யஸூக்திகளும் நமக்குக் காட்டிக் கொடுக்கின்றன.

இப்படி கீதார்த்தங்கள் பலவும் ஆழ்வார் திவ்யஸூக்திகளுடன் சேர்த்து அநுபவிக்கும்படி அமைந்திருக்கின்றன. திருவாய்மொழியும் கீதையும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்கு இரு கண்கள் போலே இன்றியமையாதனவாம். ஆகையால் இவ்விரு க்ரந்தங்களையும் பேணி எல்லாரும் கற்றுணரும்படி செய்ய முயல்வது ஸ்ரீவைஷ்ணவ ஸமய வளர்ச்சிக்காகப் பாடு படும் தொண்டர்கள் ஆற்றக்கூடிய பணியாகும். இவ்விஷயத்தை ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்கள் அனைவரும் குறிக்கொண்டு முடிந்தவரையில் பணியாற்ற வேண்டுமென்பதே அடியேனுடைய வேண்டுகோள்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

acharya.org

பரத்வம்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ப$_4$க்தாம்ருதம் விஶ்வஜநாநுமோத$_3$நம்
ஸர்வார்த்த$_2$த$_3$ம் ஸ்ரீஶட$_2$கோபவாங்மயம் |
ஸஹஸ்ரஶாகே$_2$ாபநிஷத்ஸமாக$_3$மம்
நமாம்யஹம் த்$_3$ராவிடவேத$_3$ஸாக$_3$ரம் ||

(திருவாய்மொழித் தனியன்)(திருமாலடியார்களுக்கு அமுதமாய் இருப்பதும், லோகத்தாரை ஆநந்திப்பதும், அறியவேண்டிய அர்த்தங்களை அறிவிப்பதும், நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பட்டதும், ஆயிரம் கிளைகளையுடைய ஸாமவேதத்தின் கூட்டாக இருப்பதுமான தமிழ் வேதக்கடலை அடியேன் வணங்குகிறேன்)

வகுளாப$_4$ரணம் வந்தே$_3$ ஜக$_3$த$_3$ாப$_4$ரணம் முநிம் |
ய: ஶ்ருதேருத்தரம் ப$_4$ாக$_3$ம் சக்ரே த்$_3$ராவிடப$_4$ாஷயா ||

(பராங்குஶ-அஷ்டகம் 7)(எந்தவொரு ஆழ்வார் வேதத்தின் உத்தர பாகமாகிய வேதாந்தத்தைத் தமிழில் வெளியிட்டருளினரோ உலகுக்கெல்லாம் அலங்காரபூதரான அந்த நம்மாழ்வாரை வணங்குகிறேன்)

* திருமாலால் அருளப்பட்ட சடகோப(8-8-11)னால் அருளிச்செய்யப்பட்ட திருவாய்மொழி * த்$_3$ராவிட வேத$_3$ஸாக$_3$ரம் * என்றும் * பாலேய்தமிழர்இசைகாரர் பத்தர்பரவும்ஆயிரம் * (1-5-11) என்றும் போற்றப்படுகிறது. ஸாகரம் - ரத்நாகரம் என்று சொல்லப்படுகிறது. ஸ்ரீஶடகோப வாங்மயம் பரமார்த்த ரத்நாகரமானது.

* * மற்றெல்லாம் பேசிலும் * (பெரியதிருமொழி8-10-3) என்கிறபடியே அறியவேண்டும் அர்த்தமெல்லாம் இதுக்குள்ளே உண்டு * *, * அதாவது- அஞ்சர்த்தம் * (முமுக்ஷுப்படி 22, 23) என்கிறபடியே முமுக்ஷுக்களுக்கு அவஶ்யம் இருக்க வேண்டியது அர்த்தபஞ்சக ஜ்ஞாநம்.

ப்ராப்யஸ்ய ப்$_3$ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஶ்ச ப்ரத்யக$_3$ாத்மந: |
ப்ராப்த்யுபாயம் ப$_2$லம் ப்ராப்தேஸ் தத$_2$ா ப்ராப்திவிரோதி$_4$ச ||
வத$_3$ந்தி ஸகலா வேத$_3$ாஸ் ஸேதிஹாஸபுராணகா: |
முநயஶ்ச மஹாத்மாநோ வேத$_3$வேத$_3$ார்த்த$_2$வேதி$_3$ந: ||

acharya.org

(ஹாரீத ஸ்ம்ருதி 8-141)(அடையத்தக்க பரம்பொருளின் தன்மை, அடைபவனுன ஜீவாத்மாவின் தன்மை, அடையும் வழி, அடைந்து பெறும் பயன், அடைவதற்குத் தடை ஆகியவற்றை இதிஹாஸபுராணங்களோடுகூடிய எல்லா வேதங்களும் வேத-ஶப்தார்த்தங்களை அறியும் மஹாபுருஷர்களான முனிவர்களும் உரைக்கின்றனர்) என்னும் ஶாஸ்த்ர வசநம் அறிய வேண்டிய ஐந்து அர்த்தங்களைக் குறிக்கிறது. இவையே திருவாய்மொழியிலும் ப்ரதிபாதிக்கப் படுகின்றன என்பது வங்கிபுரத்துநம்பிகளுடைய நிர்வாஹம். பன்னீராயிரப்படியில் –

* ....*திருவாய்மொழியாகிற திவ்யப்ரபந்தம் -*

ஶ்ரீபதிஶ்சேதநஸ்யாஸ்ய ஹேதுத்வேந ஸமாஶ்ரித:|
அநிஷ்டஹாநி மிஷ்டஸ்ய ப்ராப்திஞ்ச குருதே ஸ்வயம் ||

*-என்று ஶ்ரிய: பதியானவன் சேதநனுக்கு உபாயத்வேந ஆஶ்ரிதனாய்க் கொண்டு அநிஷ்ட நிவ்ருத்தியையும் இஷ்டமான ஸ்வப்ராப்தியையும் தானே பண்ணிக் கொடுக்கும் என்று அநுயாயியான மஹாவாக்யார்த்தத்தை ப்ரதிபாதிக்கிறது...**

என்று வாதிகேஸரிஅழகியமணவாளஜீயர் நிர்வஹித்தருளுகிறுர். த்வயார்த்த விவரணம் திருவாய்மொழி என்று நம்பிள்ளை முதலான நம் பூர்வாசார்யர்கள் முக்யமாக நிர்வஹித்துப் போருவர்கள். ஆழ்வாரை *தீ$_3$ர்க்க$_4$ சிந்தயந்தீ* என்றும், திருவாய்மொழியை ஶ்ரீராமாயணம் போலே *தீ$_3$ர்க்க$_4$ஶரணாக$_3$தி* என்றும் நம் பூர்வர்கள் அருளிச்செய்வர். ஶ்ரீபிள்ளை லோகாசார்யர் ஸாரஸங்க்ரஹத்தில் மந்தரரத்நமான த்வயத்தில் உள்ள 6 பதங்களின் அர்த்தமாக -

1. ஶ்ரிய: பதித்வம் (அதனடியாக வரும் மேன்மைகள்)
2. நாராயணத்வம்
3. ஸர்வலோக ஶரண்யமான அவனுடைய சரணாரவிந்தயுகளம்
4. அதன் ப்ராபகத்வம்
5. தத்கோசரமாய் சேதநன் செய்யும் ப்ரார்த்தநா கர்ப்பமான விஸ்ரம்பமாகிற ஶரணாகதி
6. திவ்யதம்பதிகளுடைய நித்யகைங்கர்ய ப்ரதாநார்த்தமான நித்யஸம்பந்தம்
7. ஈஶ்வரனுடைய நிரதிஶய போக்யத்வம்
8. ஸர்வஸ்வாமித்வம்
9. நித்யகைங்கர்ய ப்ரார்த்தனை
10. கைங்கர்ய விரோதி நிவ்ருத்தி ப்ரார்த்தனை

என்னும் அர்த்தங்களை திருவாய்மொழியின் பத்துப் பத்துக்களும் முறையே விவரிக்கின்றன என்று காட்டியருளுகிறுர். அவர் திருத்தம்பியரான ஶ்ரீஅழகியமணவாளப்பெருமாள் நாயனுர் திருவாய்மொழியின் பத்து நூறுன பத்துப் பத்துக்களின் பொருளாக எம்பெருமானுடைய

acharya.org

1. பரத்வம்
2. காரணத்வம்
3. வ்யாபகத்வம்
4. நியந்த்ருத்வம்
5. காருணிகத்வம்
6. ஶரண்யத்வம்
7. ஶக்தத்வம்
8. ஸத்யகாமத்வம்
9. ஆபத்ஸகத்வம்
10. ஆர்த்திஹரத்வம்

என்னும் 10 திருக்கல்யாணகுணங்களை அருளிச்செய்கிறார். எல்லாப் பத்துக்களிலும் எல்லாத் திருக்கல்யாணகுணங்களும் ப்ரதிபாதிக்கப்பட்டிருந்தாலும் ஆழ்வாருக்கு ஒவ்வொரு பத்திலும் ஒவ்வொரு திருக்கல்யாணகுணத்திலே முக்ய நோக்கு என்று தாத்பர்யம். ஆக ஆழ்வார் முதற்பத்தில் பகவானுடைய பரத்வத்தை முக்யமாக அநுபவிக்கிறார் என்று தேறுகிறது.

ஆழ்வார், எம்பெருமானுடைய பரத்வத்தை *உயர்வற உயர்நலம் (1-2), *திண்ணன்வீடு (2-2), *அணைவதுஅரவணைமேல்(2-8), *ஒன்றும்தேவும்(4-10) என்கிற நான்கு திருவாய் மொழிகளில் அருளிச்செய்கிறார். அதிலும் பரத்வத்தில் பரத்வத்தை அருளிச்செய்கிறார் முதல் திருவாய்மொழியில்.

திருவாய்மொழி 1-1-1

உயர்வறவுயர்நலம் உடையவன் யவனவன்*
மயர்வறமதிநலம் அருளினன் யவனவன்*
அயர்வறுமமரர்கள் அதிபதி யவனவன்*
துயரறுசுடரடி தொழுதெழுஎன்மனனே*

முதல் பாசுரத்திலேயே *அயர்வறும் அமரர்கள் அதிபதி* (நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகன்) என்று எம்பெருமானுடைய பரத்வத்தை அநுபவிக்கிறார் ஆழ்வார். ஸர்வாதிகமான (எல்லாவற்றைக் காட்டிலும் மேம்பட்ட) பரம்பொருளுக்கு அஸாதாரணமான லக்ஷணம் அநவதிக-அதிஶய (அளவிடமுடியாதபடி எல்லையற்ற பெருமையையுடைய) அஸங்க்யேய (எண்ணற்ற) திருக்கல்யாணகுணங்களை உடையவனாயிருக்கை. அத்தை முதலிலே *உயர்வறஉயர்நலம் உடையவன்* என்று அருளிச்செய்கிறார். நித்யஸூரி-நிர்வாஹகத்வ-ரூபமான பரத்வத்தை முதலிலே சொல்லிப் பின்பு திருக்கல்யாணகுணங்களை சொல்லலாமாயிருக்கச் செய்தேயும்,

acharya.org

பரம்பொருளை *நிர்க்குணம்* என்று சொல்லும் மாயாவாதிகளின் மிடற்றைப் பிடித்தாப் போலே *நலமுடையவன்* என்று ஆழ்வார் அருளிச்செய்கிறார் என்று ஆழ்வான் ஈடுபட்டதாக ஐதிஹ்யம்.

**இத்திருவாய்மொழிக்கு(1-1) ஸங்க்ரஹமான முதற்பாட்டில் பரத்வ-ப்ரதாந-உபபாதகமான நிரவதிக கல்யாணகுணயோகத்தையும் நிர்ஹேதுக-உபகாரகத்வத்தையும் நித்யஸூரி நிர்வாஹகத்வத்தையும் திவ்யமங்களவிக்ரஹயோகத்தையும் உடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே நிரந்தர சேஷவ்ருத்தியைப் பண்ணு என்று தம் நெஞ்சை நியோகிக்கிறார்* என்று இப்பாசுரத்தின் ப்ரமேயத்தை ஸங்க்ரஹிக்கிறார் ஸ்ரீவாதிகேஸரிஅழகியமணவாளஜீயர்.

தஸ்ய உதி$_3$தி நாம (சாந்.2) என்கிறபடியே பகவானுக்கு *உத்* என்று ஒரு அஸாதாரணமான திருநாமம். *உயர்வற* என்று உகாரத்தில் தொடங்கி *உயர்ந்தே* என்று தகாரத்தில் முடித்ததனால் உத்கீத ஸாமத்துக்கு உட்பொருளாய், நிகிலஹேய ப்ரத்யநீகனாய், ஸ்வாபாவிகமான எண்ணிறந்த திருக்கல்யாணகுண விஶிஷ்டனாய் இருக்கும் மஹாபுருஷனே திருவாய்மொழியில் போற்றப்படும் பரதத்த்வம் என்று விளங்கா நின்றது. ஹேயப்ரத்யநீகமான இடத்தில் ஸகல திருக்கல்யாணகுணங்களும் தானாகவே கூடும்.

திருவாய்மொழி 1-1-2

மனனகமலமற மலர்மிசையெழுதரும்*
மனனுணர்வளவிலன் பொறியுணர்வவையிலன்*
இனனுணர்முழுநலம் எதிர்நிகழ்கழிவினும்*
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே

இந்த பாசுரத்தில் (இப்படி எல்லாவித தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாகவும் எல்லையில்லாத திருக்கல்யாணகுணங்களை உடையவனாகவும் இருக்கும்) அவன் சேதநாசேதநங்களைக் காட்டிலும் அத்யந்த விலக்ஷணன் என்று அவனுடைய மேன்மையை அருளிச்செய்கிறார் ஆழ்வார். சேதந-அசேதநங்களைக் காட்டிலும் பகவானுக்குண்டான வைலக்ஷண்யம் பலவாறாக இருக்க அவற்றில் இரண்டை ஆழ்வார் இங்கே திருவுள்ளம் பற்றியிருக்கிறார் என்பதை நாம் அறியலாம்.

மனன்-அகம்-மலம்-அற மலர்மிசை-எழுதரும் மனன்-உணர்-வளவிலன் என்று அருளிச்செய்கிறார் ஆழ்வார். (அஷ்டாங்க)யோக-அப்யாஸத்தினால் மனஸ்ஸின் அழுக்குகள் (காமக்ரோதாதிகள்)எல்லாம் நீங்கப்பெற்று பிறகு மலர்ந்து மேன்மேலே எழுகின்ற (உள் இந்த்ரியமாகிய) மனஸ்ஸினுடைய ஜ்ஞாநத்தாலே அளவிட்டு அறியப்படுகிற பரிஶுத்த ஜீவாத்ம-

ஸ்வரூபத்தைக் காட்டிலும் அளவிறந்திருக்கும் விலக்ஷணன் பகவான்.

** *ஆத்ம ஸ்வரூபம் தன்னோடொத்த ஆத்மாக்கள் உண்டாகையாலும் அணுவாகையாலும் *இப்படி இருக்கும்; இம்மாத்ரமாய் இருக்கும்* என்று பரிச்சேதித்து க்ரஹிக்கலாம்; அப்படி ஈஶ்வர ஸ்வரூபம் க்ரஹிக்கப் போகாதென்று*** என்று அரும்பதம்.

அத$_2$ாத ஆதே$_3$ஶோ நேதி நேதி ந ஸ்யேதஸ்மாதி$_3$தி நேத்யந்யத் பரமஸ்தி| அத$_2$ நாமதே$_4$யம் ஸத்யஸ்ய ஸத்யமிதி | ப்ராணா வை ஸத்யம் தேஷாமேஷ ஸத்யம் என்னும் ஒரு வாக்யம் ப்ருஹதாரண்யக உபநிஷத்திலே (4-3-6) காணப் படுகிறது. இந்த வாக்யத்துக்கு, **இதி ந* என்று சொல்லப்படும் இந்த ப்ரஹ்மத்தைக் காட்டிலும் (ரூப குணங்களால்) உயர்ந்த பொருள் வேறொன்றும் இல்லை. *ஸத்யத்திற்கும் ஸத்யம்* என்பது இந்த ப்ரஹ்மத்துக்குப் பெயர். ப்ராணன் எனப்படும் ஜீவாத்மாவானவன் ஆகாஶம் முதலான அசேதநப் பொருள்களுக்குண்டான ஸ்வரூப விகாரம் அற்றவனாகையாலே ஸத்யம் எனப்படுகிறான். இவனுக்கும் உண்டான ஸ்வபாவ விகாரம் அற்றதாய் இருப்பதனாலே ப்ரஹ்மம் ஸத்யஸ்ய ஸத்யம் எனப்படுகிறது** என்று அர்த்தம். *நேதி நேதி* என்பதற்கு *இவ்வளவு மாத்ரம் அல்லன்; இப்படிப்பட்ட பொருள் வேறு இல்லை* என்று அர்த்தம்.

ஆக இவ்வளவால், (1) அணுமாத்ரமான ஜீவாத்ம ஸ்வரூபம் மாநஸ-ஜ்ஞாந-கம்யமாய் இருக்கும்; விபுவான பரமாத்ம ஸ்வரூபம் மாநஸ-ஜ்ஞாந-கம்யமன்று என்று சேதநங்களைக் காட்டிலும் பரமசேதநனான பகவானுக்குண்டான வைலக்ஷண்யமும், (2) அசித்துக்குண்டான ஸ்வரூப-விகாரம் இல்லாமல் இருந்தாலும் (ஸம்ஸார தஶையில்) ஸ்வபாவத்தில் (கர்மாநு குணமாக தர்மபூதஜ்ஞாநத்தில் சுருக்கம் விரிவு என்னும் மாறுதல்களை) விகாரத்தை உடைய வன் ஜீவாத்மா; இப்படியல்லாமல் ஸ்வரூபம் ஸ்வபாவம் இரண்டிலுமே எப்போதும் ஒருபடிப் பட்டிருக்கையான பகவானுக்குண்டான வைலக்ஷண்யம் இங்கே விவக்ஷிதம்.

பாஹ்ய இந்த்ரியங்களால் அறியப்படுகிற அசேதநத்தைக் காட்டிலும் விலக்ஷணன் பகவான் என்பதை *பொறியுணர்வு அவையிலன்* என்று அருளிச்செய்கிறார்.

இனன் = இப்படி சேதநாசேதந விலக்ஷணனான பகவான் *உணர்முழுநலம்* = *ஜ்ஞாநாநந்த ஸ்வரூபன்* என்கிறார். *கட்டடங்க ஜ்ஞாநமுமாய் கட்டடங்க ஆநந்தமுமாய் இருக்கும்* என்றும், *அன்றிக்கே ஆநந்தமாகிறதும் ஜ்ஞாநவிஶேஷமாகையாலே ஆநந்தத் தைச் சொன்னபோதே ஜ்ஞாநத்தையும் சொல்லிற்றாய் வருமிறே* என்றும் ஈடு. வேதாந்தம் *ஆநந்தோ$_3$ ப்$_3$ரஹ்ம* என்றும் *ஆநந்த$_3$மய:* என்று அவனைக் கொண்டாடுகிறது. அவன் *ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயன்(திருவாய்மொழி 2-3-2) எனப்படுபவன்.

acharya.org

*நாமவன், *அவரவர், *நின்றனர் என்கிற மூன்று பாசுரங்களிலும் அவனுடைய பரத்வ குணங்களை ஆழ்வார் நன்கு அநுபவிக்கிறார்.

திருவாய்மொழி 1-1-7

திடவிசும்பெரிவளி நீர்நிலம்இவைமிசை*
படர்பொருள்முழுவதுமாய் அவையவைதொறும்*
உடல்மிசைஉயிரெனக் கரந்துஎங்கும்பரந்துளன்*
சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே

சேதநாசேதநாத்மகமான ஜகத்துக்கும் ஈஶ்வரனுக்கும் ஶரீராத்மபாவ ஸம்பந்தத்தைச் சொல்லும் இந்தப் பாசுரம் மிகவும் முக்யமானது. இவையுண்ட சுரன் = ப்ரளய தசையிலே இவற்றை ஸம்ஹரித்த ஸர்வேஶ்வரன்.

உளன் சுடர்மிகு சுருதியுள் என்கிறார் ஆழ்வார். அபௌருஷேயமாய் நித்யநிர்தோஷமாய் மிக்க தேஜஸ்ஸையுடையதாய் இருக்கும் வேதத்தால் அறியப்படுபவன் என்றபடி. ** *சுடர்மிகு சுருதியுள்* என்கையாலே நாராயணாநுவாகாதிகளில் சொல்லுகிற பரத்வம் லக்ஷ்மீ ஸம்பந்தம் இவையெல்லாவற்றையும் அங்கீகரித்தாகிறார்** என்று ஈடு.

திருவாய்மொழி 1-1-8

சுரரறிவருநிலை விண்முதல்முழுவதும்*
வரன் முதலாயவை முழுதுண்டபரபரன்*
புரமொருமூன்றெரித்து அமரர்க்கும்அறிவியந்து*
அரனயனென உலகழித்தமைத்துளனே

இந்தப் பாசுரத்தில் பரபரன் என்பது உயிரான பதம். ஸர்வஸம்ஹர்த்தாவாய் ஸர்வஸ்ரஷ்டாவாய் ஸர்வாந்தர்யாமியான ஸர்வேஶ்வரனே பரபரன் என்கிறார்.

அவை முழுதுண்ட = *யஸ்ய ப்$_3$ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே$_4$ ப$_4$வத ஓத$_3$ந:| ம்ருத்யுர்யஸ்யோபஸேசநம் | க இத்த$_2$ா வேத$_3$ யத்ர ஸ:||* (கட 1-2-25)(எவனுக்கு ப்ராஹ்மணரும் க்ஷத்ரியருமாகிற இரு வர்க்கமும் உணவாகுகின்றனரோ, யமன் எவனுக்கு

acharya.org

ஊறுகாய் ஆகிறுனே, அந்தப் பரம்பொருள் இப்படிப்பட்டதென்று எவன் அறிவான்?) என்கிற படியே ஸர்வேச்வரனே ஸர்வ-ஸம்ஹார-கர்த்தா ஆவான்.

பரபரன் = *பர : பராணும் பரம : பரமாத்மாத்ம ஸம்ஸ்தி₂த : | ரூபவர்ணதி₃ நிர்தே₃சா விசேஷண விவர்ஜித : ||*(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-2-10)(மேலானவற்றைக் காட்டிலும் மேலானவனும் தன்னைக் காட்டிலும் உயர்ந்தவர் இல்லாதவனும் தனக்குத்தானே ஆதாரமாய் இருப்பவனுமான பரமாத்மா ரூபம் நிறம் முதலியவை, நாமம் ஆகிய ப்ராக்ருத விசேஷணங்கள் அற்றவன்) என்கிறபடியே ப்ரஹ்மாதிகளுக்கும் பரனுகையாலே பராத்பரன் என்றபடி.

புரமொரு மூன்றெரித்து = ருத்ரனுக்கு அந்தர்யாமியாய்க் கொண்டு த்ரிபுர ஸம்ஹாரம் பண்ணியவன் ; *அமரர்க்கும் அறிவியந்து* = ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய் நின்று தேவர்களுக்கு வைதிக ஜ்ஞாநத்தை உபதேசித்தவன் ; *அரனயனென* = ஆயினும் த்ரிபுர ஸம்ஹாரம் பண்ணியவன் என்று ருத்ரனுக்கும், தேவர்களுக்கு வைதிக ஜ்ஞாநத்தைக் கொடுத்தவன் என்று ப்ரஹ்மாவுக்கும் ப்ரஸித்தியைக் கொடுத்தவன்.

உலகழித்து-அமைத்துளனே= *ப்ரஹ்மாவுக்கு அந்தர்யாமியாய் நின்று அண்டாந்தர்வர்த்திகளை ஸ்ருஷ்டித்தும், அவனுக்கு நிலமல்லாத ப்ராக்ருத (மூலப்ரக்ருதி) ஸ்ருஷ்டியை ஸ்வேந ரூபேண பண்ணியும், ருத்ரனுக்கு அந்தர்யாமியாய் நின்று அவனலே ஸம்ஹார்யமான அம்சத்தை ஸம்ஹரித்தும், அவனுக்கு நிலமல்லாத ப்ராக்ருத (மூலப்ரக்ருதி) ஸம்ஹாரத்தை ஸ்வேந ரூபேண பண்ணினுன் ஸர்வேச்வரனே* என்று ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யாநம்.

திருவாய்மொழி 1-1-10

பரந்ததண்பரவையுள் நீர்தொறும்பரந்துளன்*
பரந்தஅண்டமிதென நிலவிசும்பொழிவற*
கரந்தசிலிடந்தொறும் இடம்திகழ்பொருள்தொறும்*
கரந்தெங்கும்பரந்துளன் இவையுண்டகரனே

அணோரணீயாந் மஹதோ மஹீயாந் என்கிற ச்ருதி பரதத்த்வம் அணுக்களைக் காட்டிலும் பரம அணுவாய் மஹத்தான வஸ்துவைக் காட்டிலும் பரம மஹத்தாயிருக்கும் என்று ஓதா நின்றது. இந்தப் பாசுரத்தில் *கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்ட கரனே* என்று

அணுக்களிலும் அந்தர்யாமியாய் எங்கும் பரந்துளன் என்று அருளிச்செய்தார். இவ்விடத்தில், * விபுத்வத்தை அவனுக்குச் சொல்லி அணுத்வத்தை இவனுக்குச் சொல்லி இதுக்குள்ளே அவன் குறைவற வ்யாபித்திருக்கும் என்றால் அது கூடுமோவென்னில் - *இலையுண்ட கரனே * - சிறுவடிவைக் கொண்டு பெரியவற்றையெல்லாம் தன் வயிற்றில் வைத்தால்........ பின்னையும் அவ்வயிறே இடமுடைத்தாம்படி இருக்கவல்ல ஸர்வஶக்தி சிறியவற்றில் குறைவற இருக்க மாட்டானோ என்கிறார்* என்று ஈடு. *கரன்* = இப்படி ஶ்ருதப்ரமாண ஸித்தன் என்றபடி.

வரனவில் திறல்வலி அளிபொறையாய் நின்ற பரன் (திருவாய்மொழி 1.1.11) என்று நிகமப் பாசுரத்தில் அருளிச்செய்கிறார் ஆழ்வார். பஞ்சபூதங்களுக்கும் அஸாதாரணமான ஶப்தாதி குணங்களுக்கு நிர்வாஹகனும் பரனும் நிற்பவன் ஸர்வேஶ்வரன் என்றபடி. பரத்வத்தில் பரத்வத்தை முதற்பத்து முதல் திருவாய்மொழியில் ஆழ்வார் அருளிச்செய்த ப்ரகாரத்தை நம்பிள்ளை -

* முதற்பாட்டிலே கல்யாணகுணயோகத்தையும் நித்யவிபூதியோகத்தையும் விக்ரஹ வைலக்ஷண்யத்தையும் சொல்லி,

இரண்டாம் பாட்டிலே இவற்றுக்கு ஆஶ்ரயமான திவ்யாத்மஸ்வரூபம் சேதநாசேதநவிலக்ஷணம் என்று (சொல்லி),

மூன்றாம் பாட்டிலே நித்யவிபூதியோபாதி ததீயத்வ-ஆகாரத்தாலே அவனுக்கு அந்தரங்கமாய் தோற்றுகிற லீலாவிபூதியோகத்தை அநுபவித்தார்;

நாலாம் பாட்டிலே அந்த லீலாவிபூதியினுடைய ஸ்வரூபம் அவனதீநம் என்றார்;

அஞ்சாம் பாட்டிலே அதனுடைய ஸ்திதியும் அவனதீநை என்றார்;

ஆறாம் பாட்டிலே ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியும் பகவததீநம் என்றார்;

ஏழாம் பாட்டிலே ஶரீரஶரீரிகளுக்குண்டான லக்ஷணம் ஜகத்துக்கும் ஈஶ்வரனுக்கும் உண்டாகையாலே, இதுக்கும் அவனுக்கும் சொன்ன ஐக்யத்துக்கு நிபந்தநம் ஶரீராத்மபாவம் என்றார்;

எட்டாம் பாட்டிலே குத்ருஷ்டிகளை நிரஸித்தார்;

ஒன்பதாம் பாட்டிலே ஶூந்யவாதியை நிரஸித்தார்;

பத்தாம் பாட்டிலே வ்யாப்தி-ஸௌகர்யத்தை அருளிச்செய்தார்* என்று காட்டியருளுகிறார்.

உபக்ரம உபஸம்ஹாரம் (முதலும் முடிவும் ஒருபடியாய் இருப்பது), அப்யாஸம் (திருப்பித் திருப்பிப் படிப்பது), அபூர்வதை (புதிதாகச் சொல்லுவது), ப$_2$லம்(பயனுடையதாக இருப்பது), அர்த்தவாதம் (புகழ்வது), உபபத்தி (பொருத்தமுடையதாய் இருப்பது) என்று ஆறு விதமான தாத்பர்யலிங்கங்களை மீமாம்ஸகர்கள் நிரூபித்தார்கள். உபக்ரமத்தில் முதல் திருவாய்மொழியில் பரத்வ நிரூபண ப்ரகாரத்தை நிரூபித்தேன். உபஸம்ஹாரத்தில் முதற்பத்து

acharya.org

பத்தாம் திருவாய்மொழியிலும் *உம்பர்வானவர் ஆதியஞ்சோதியை* (1-10-9) என்று ஆதியஞ்சோதி உருவான பரதத்த்வத்தை அருளிச்செய்கிறார்.

முதற்பத்திற்கு பரத்வத்திலே நோக்கு என்பதற்கு *அப்யாஸம்* என்கிற அடையாளமும் உண்டு. *வளவேழுலகின் முதலாய வானோரிறையை*(1-5-1) *எப்பால் யவர்க்கும் நலத்தால் உயர்ந்துஉயர்ந்து அப்பாலவன்*(1-7-2) *எவையும் யவரும்தன்னுள்ளே ஆகியும்ஆக்கியும்காக்கும அவையுள்தனிமுதல் எம்மான்* (1-9-1) என்று முதற்பத்தில் அநேக இடங்களில் எம்பெருமானுடைய பரத்வத்தை அருளிச் செய்கிறார். இதுவே அப்யாஸமாவது.

யதோவா இமாநி பூ$_4$தாநி ஜாயந்தே | யேந ஜாதாநி ஜீவந்தி |
யத்ப்ரயந்தி-அபி$_4$ஸம்விஶந்தி| தத் ப்$_3$ரஹ்ம |
(தை ப்$_4$ருகு$_3$ - 1) (தேவன், மனிதன், பஶுபக்ஷிகள், புல்பூண்டுகள் என்னும் நான்கு வகையில் அமைந்துள்ள இந்த ப்ரபஞ்சத்தை எவன் ஆக்கி, அளித்து, அழித்து ரக்ஷிக்கின்றானோ, இந்த ஜீவன் வீடுபேறு பெறும் போது எவனைக் கிட்டிச் சேருகின்றானோ, அவனே மிகப்பெரியவன்)

என்று ஶாஸ்த்ரம் ஜகத்காரணத்வத்தை ப்ரஹ்ம லக்ஷணமாகத் தெரிவிக்கிறது. இதுவும் பரத்வ லக்ஷணமாகும்.

எம்பெருமான் ஆழ்வாருக்கு மயர்வறமதிநலமருளினான். மயர்வறமதிநலம் அருளினதுக்கு முன்பு *அஸந்நேவ ஸ ப$_4$வதி* (ஆநந்தவல்லி 6)(பரமாத்மாவைப் பற்றிய ஜ்ஞாநம் ஒருவனுக்கு இல்லை என்றால் அவன் இருந்தும் இல்லாதவனாகவே ஆவான்) என்கிற படியே ஆழ்வார் தம்மை அஸத்கல்பராக நினைத்திருந்தார். *யானே யென்னையறியகிலாதே யானேயெனதனதே* என்று அவர் இருந்தது அவருக்கு பகவான் மதிநலம் அருளுவதற்கு முன்னிருந்த நிலை. பகவான் மதிநலம் அருளின பிறகு, *ஸந்தமேநம் ததோ விது$_3$: *(ஆநந்தவல்லி 6)(பரமாத்மாவைப் பற்றிய ஜ்ஞாநம் உடையவனே உண்மையில் இருப்பவனாகிறான்) என்றும், *யானே நீ என்னுடைமையும் நீயே* என்றும் பிறந்த நிலையாம்.

ஆழ்வார் பரமக்ருபையினாலே லோகத்தாருடைய அநர்த்தம் கண்டு ஸஹிக்க முடியாத தன்மையை உடையவராய், பகவத்-விமுகரான அவர்கள் மதிநலம் பெற்று உஜ்ஜீவிக்கும்படி அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடி அவ்வருமறையின் பொருள்களை எல்லாம் ஸம்ஶய விபர்யயமற அருளிச்

acharya.org

செய்தார். ஆதலால் ஆழ்வாருடைய அருளே இவ்வுலகினில் மிக்கதாகும்.

*சார்ந்தஇருவல்வினைகளையும்சரித்து மாயப்பற்றறுத்து
தீர்ந்துதன்பால்மனம்வைக்கத்திருத்தி*

(1-5-10) என்கிறபடியே எம்பெருமானால் திருத்தப்பட்டு ஈறிலின்பத்திருவெள்ளத்தில் திளைத்த உள்ளத்தினரான இவ்வாழ்வார் சேதநர்களைத் திருத்தியபடியாவது :—

ஸம்ஸாரபந்த ஹேதுவான *நீர் நுமது*(1-2-3) என்கிற அஹங்கார மமகாரங்களை வேர்முதல் மாய்த்து இறைசேர்மின்!

ஸர்வஸ்மாத்பரன் *வண்புகழ் நாரணன்*(1-2-10). அவன் திருவடிகளை ஆஶ்ரயித்து அநுஸந்தானம் செய்வதற்குரிய மந்த்ரம் பெரியதிருமந்த்ரமே!

*எம்பெருமானை நம்மால் ஆஶ்ரயிக்க முடியுமோ? அவன் மிகப்பெரியவனன்றோ! * என்று அஞ்சவேண்டாம். அவன்
பத்துடையடியவர்க்கெளியவன் (1-3-1)
நிலைவரம்பிலபலபிறப்பாய் எளிவருமியல்வினன் (1-3-2)
கணக்கறுநலத்தனன் அந்தமிலாதியம்பகவன் (1-3-5)

அவனுடைய உணர்வுகொண்டுணர்ந்து - வணக்குடைத்தவநெறி வழிநின்று(1-3-5) - *இருபசையறுத்து*(1-3-7) அவனை வழிபடுங்கோள். அவனை வணங்கி வழிபட உத்யோகிக்கும்போதே பஜந-விரோதிகள் தானே அகன்றுபோகும்.

கழிமின்தொண்டீர்கள் கழித்து*
தொழுமின் அவனைத்தொழுதால்*
வழிநின்றவல்வினை மாள்வித்து*
அழிவின்றிஆக்கம் தருமே (1-6-8)

என்கிறார் ஆழ்வார். பகவானை வழிபடுவது வேப்பங்குடி நீர்போல் கசப்பாக இருக்குமென்று அகலவேண்டா. அமுதிலுமாற்ற இனியனு(1-6-6)யிருப்பதால் அவனைப் பற்றிய நினைவும் மிகவும் இனியதாக இருக்கும்.

acharya.org

நம் பிழையைக் கண்டு அஞ்சவேண்டா. *என்பிழைத்தாள்திருவடியின்தகவினுக்கு* (1-4-7) என்கிறபடியே அவனுடைய பொறை ப்ரஸித்தமானது.

அவனுடைய பெருமையையும் நம்முடைய சிறுமையையும் கண்டு அஞ்சவேண்டா. அவன் ஸுசீலன். நம்மை ஸ்வீகரிப்பதனாலேயே அவன் பெரும்புகழ் படைத்துள்ளனாகத் தன்னை நினைத்திருக்குமவன். அவன் மிகப் பெரியவன்.

நாம் ஆகிஞ்சனர்கள் (கைம்முதலற்றவர்கள்) நம்மால் அவனை ஆராதிக்க முடியாது என்று அஞ்சவேண்டா. ஆர்வத்தோடு நாம் ஸமர்ப்பிக்கும் அணுவளவான வஸ்துவையும் அவன் பெரும்பேறாகக் கொள்ளும் பரிபூர்ணனானவன்.

குடிலர்களான நம்மால் அவனை ஆச்ரயிக்க முடியுமோ என்று அஞ்ச வேண்டாம். அவன் நீர்புரை வண்ணன். நம் நினைவுக்குத் தகுந்தபடி தன்னையாக்கிக் கொண்டு நம்மோடு பழகக் கூடியவன். அவன் -

ஓடும்புள்ளேறி*
சூடும் தண்துழாய்*
நீடுநின்று அவை*
ஆடும் அம்மானே (1-8-1)

என்னும் பெருமை படைத்தவன். ஆகிலும் அவனை நம்மால் ஆச்ரயிக்க முடியுமோ?

ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோஜ்ஞாநஸமாதி$_4$பி$_4$: |
நராணாம் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே ப$_4$க்தி: ப்ரஜாயதே ||
(லக்$_4$வத்ரி ஸ்ம்ருதி -1) (ஆயிரக்கணக்கான பிறப்புகளில் கர்மஜ்ஞாநபக்தியோகங்களை அநுஷ்டித்துப் பாபம் நீங்கப்பெற்ற மனிதர்களுக்கு ஸ்ரீக்ருஷ்ணனிடத்தில் பக்தியானது உண்டாகிறது) என்றும்,

ப$_3$ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்$_3$யதே |
வாஸுதே$_3$வஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது$_3$ர்லப$_4$: ||
[கீதை 7-19] [பல ஜந்மங்களுக்குப்பின் ஜ்ஞாநியானவன் *வாஸுதேவனே (எனக்கு) எல்லாம்* என்று என்னை உபாஸிக்கிறான்; அப்படிப்பட்ட மஹாத்மா மிகவும் கிடைத்தற்கரியவன்]

acharya.org

என்றும் சொல்கிறபடியே *அநேக ஜந்மார்ஜிதமான புண்யத்திலன்றோ அது ஸித்திப்பது?* என்று அஞ்ச வேண்டாம். விமுகர்களுக்கு அதிதூரஸ்த்தனானாலும் ஆநுகூல்யமும் ஆபாலேமமும் உடையவர்களுக்கு பக்திக்கும் பரிகணனைக்கும் ஒக்க வருமவன்.

அவன் நம் அவஸ்த்தானுகுணமாக ஸாத்மிக்க ஸாத்மிக்க (பொறுக்கப் பொறுக்க) அநுபவிப்பிக்கவல்ல விரகன். ஆகையால் வண்புகழ் நாரணன் திருவடிகளைப் பற்றுவதே நலம். ஜகத்காரண வஸ்துவே பரம்பொருள். நாராயணனே பரனுவான். அவன் *திருமகளார் தனிக்கேள்வன்* (1-6-9) *பெருமையுடைய பிரான்* (1-6-9). அவன் *இருமைவினை கடிந்து* (1-6-9) அரும் பயனான மோக்ஷத்தையும் தருமவன். வேண்டிற்றெல்லாம் தரும் கோதில்வள்ளல் மணிவண்ணன்.

ஶ்ரிய: பதித்வமும், கருட வாஹநத்வமும், திருமுடியில் திருத்துழாய் வலயத்தைச் சூடுவதும், பெருமாநீள்படை ஆழிஶங்கங்களைத் தரிப்பதுவும் பரத்வ சிஹ்நங்களாகும்.

ஆக, முதற்பத்தில் ஆழ்வார் -

ஸ்வாதீ$_4$ந த்ரிவித$_4$ சேதநாசேதந ஸ்வரூப ஸ்தி$_2$தி ப்ரவ்ருத்தி பே$_4$த$_3$ம்

(ஸ்ரீரங்க கத்யம் 1) (நித்யர் முக்தர் பத்தர் என்று மூவகைப்பட்ட சேதநர்கள், ஶுத்தஸத்வம் மிஶ்ரஸத்வம் எனப்படும் மூலப்ரக்ருதியும் அதன் கார்யங்கள், ஸத்வஶூந்யம் எனப்படும் முக்குணமற்ற காலம் என்று மூவகைப்பட்ட அசேதநங்கள், மற்றும் இவற்றுக்கு ஸ்வரூப பேதம் ஸ்திதி பேதம் ப்ரவ்ருத்தி பேதம் என்று இருக்கும் மூவகைப்பட்ட வேறுபாடுகள் என்னும் இவை அனைத்தையும் தனக்கு அதீநமாக உடையவன்)

என்கிறபடியான பரத்வத்தைத் தாமும் அநுபவித்து நாமும் அநுபவிப்பதற்காக பரம க்ருபையினாலே உபதேஶித்தருளினார். நாரணன் திண்கழல்களைப் பற்றி வணங்கி வழிபடுவதே உய்யும்வகை என்பதே இந்த உபதேஶத்தின் ஸாராம்ஶமாகும்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

acharya.org

ஶாஸ்த்ர ஸாரம்

ஸ்ரீ உ. வே. P. B. K. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி

ஶாஸ்த்ரம் என்னும் சொல் வேதத்தைக் குறிக்கும். * ஶாஸநாத் ஶாஸ்த்ரம் * (ஶாஸநம் - ஆஜ்ஞை செய்கையாலே ஶாஸ்த்ரம் எனப்படுகிறது) என்கிறபடியே * இதைச்செய், இதைச் செய்யாதே * என்று உத்தரவிடுவதால் வேதம் * ஶாஸ்த்ரம் * எனப்படுகிறது. வேதத்தின் ஸாரப்பொருளைக் கூறும் வேதத்தின் முடிவிலான தலையாய பகுதி * வேதாந்தம் * * வேதஶிரஸ் * என வழங்கப் படுகிறது. * திருமந்த்ரம், த்வயம், சரமஶ்லோகம் * என்னும் ரஹஸ்யத்ரயம் வேதாந்த ஸாரமாகும். ரஹஸ்யத்ரயம் ஶாஸ்த்ர ஸாரம் என்றும் வழங்கப்படுகிறது.

ஓமித்யேகாக்ஷரம்| நம இதி த்₃வே அக்ஷரே| நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி| இத்யஷ்டாக்ஷரா ச₂ந்த₃ஸா க₃ாயத்ரீ சேதி||
(நாராயணோபநிஷத்)(* ஓம் * என்பது ஓர் அக்ஷரம்; * நம: * என்பது இரண்டு அக்ஷரங் கள்; * நாராயணாய * என்பது ஐந்து அக்ஷரங்கள்; இப்படி இந்த மந்த்ரமானது எட்டு அக்ஷரங் களைக் கொண்டதாகிறது; காயத்ரீ சந்தஸ்ஸையும் உடையதாகிறது) என்றும்

* ஓமித்யக்₃ரே வ்யாஹரேத் | நம இதி பஶ்சாத் | நாராயணாயேத்யுபரிஷ்டாத் ||
(நாராயணோபநிஷத்)(* ஓம் * என்று முதலில் சொல்லக்கடவன்; * நம: * என்று அடுத்த தாகவும், அதற்கு மேல் * நாராயணாய * என்றும் சொல்லக்கடவன்)

என்றும் திருமந்த்ரம் வேதத்தில் ஓதப்படுகிறது. த்வயம் கடவல்லியில ஓதப்படுகிறது. சரமஶ்லோகம் ஐந்தாவது வேதமான மஹாபாரதத்தின் உபநிஷத்(வேதாந்த) பாகமான ஸ்ரீமத் பகவத்கீதையின் முடிவில் (18வது அத்யாயம் 66வது ஶ்லோகம்) உள்ளது. இம்மூன்று ரஹஸ்யங்களும் சேர்ந்து ஶாஸ்த்ர ஸாரமாக அமைகின்றன.

ஸ்ரீவைகுண்டம் எனப்படும் பரமபதத்தில் ஸ்ரீவைகுண்டநாதனும் பெரியபிராட்டியாருமான சேர்த்தியில் தொண்டு செய்வதாகிற மேலான மோக்ஷஸாம்ராஜ்யத்தைப் பெற விரும்புமவன் ஒரு ஸதாசார்யனை ஆஶ்ரயித்து பஞ்சஸம்ஸ்காரம் பெற்று அவன் உபதேஶித்த இம்மூன்று ரஹஸ்யங்களையும் அர்த்தத்தோடு எப்போதும் அநுஸந்தித்துக் கொண்டிருக்க வேணும். அதிலும் நடுவிலுள்ள த்வயம் நம் பெரியோர்களால் மிகவும் ஆதரவோடு அநுஸந்திக்கப்படுகிறது. (அநுஸந்தித்தல் = நினைத்துக் கொண்டே இருப்பது)

முதலிலுள்ள திருமந்த்ரம் த்வயத்தின் அர்த்தத்தை சுருக்கிக் கூறுகிறது. மேலுள்ள சரம

acharya.org

ஶ்லோகம் த்வயார்த்தத்தை விவரிக்கிறது. இப்படி நடுநாயகமாய் *மந்த்ரரத்நம்* என்னும் சிறப்புப் பெயர் பெற்ற த்வயத்தையே நம் பூர்வாசார்யர்கள் அனைவரும் எப்போதும் பொருளோடு அநுஸந்தித்து வந்தார்கள். எம்பெருமானாரைப் பார்த்து நம்பெருமாள் –

*த்$_3$வயமர்த்த$_2$ாநுஸந்த$_4$ாநேந ஸஹ ஸத$_3$ா ஏவம் வக்தா
யாவச்ச$_2$ரீரபாதம் அத்ரைவ ஸ்ரீரங்கே$_3$ ஸுக$_2$மாஸ்ஸ்வ*

(ஶரணாகதி கத்யம்)(நீர் எப்போதும் த்வயத்தினுடைய அர்த்தாநுஸந்தாநத்தைப் பண்ணிக் கொண்டு அதுவே துணையாக ஸ்ரீரங்கத்திலே ஸுகமாக வர்த்திக் கொண்டு இரும்)

என்று அருளிச்செய்தான். எம்பெருமானாரும் அவ்வண்ணமே எழுந்தருளியிருந்தார். அவரே பிற்காலத்தில் ஸ்ரீமணவாளமாமுநிகளாய் திருவவதரித்த காலத்திலும் த்வயத்தைப் பொருளோடு அநுஸந்தித்துக் கொண்டு பேராநந்தத்தோடு எழுந்தருளி இருந்தார். இப்படி மாமுநிகள் இருந்த நிலையை எறும்பியப்பா –

மந்தரரத்நாநுஸந்த$_4$ாந ஸந்ததஸ்பு$_2$ரிதாத$_4$ரம் |
தத$_3$ர்த்த$_2$ தத்வ நித்$_4$யாந ஸந்நத்$_3$த$_4$புலகோத்$_3$க$_3$மம் ||

(பூர்வதிநசர்யா 9)(மந்த்ரங்களில் மிக உயர்ந்ததான த்வயத்தை மெல்ல உச்சரிப்பதனால் எப்போதும் சிறிதே அசைகிற உதடுகளை உடையவரும், அந்த த்வயமந்த்ரத்தின் அர்த்தத்தில் உள்ள உண்மைநிலையை நன்றாக த்யாநம் செய்வதனால் உண்டான மயிர்க்கூச்செறிதலை உடையவருமாகிய......) என்று அநுபவிக்கிறார்.

*ஸ்ரீமந் நாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே | ஸ்ரீமதே நாராயணாய நம: *
(ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளையே உபாயமாகப் பற்றுகிறேன்; ஸ்ரீமந் நாராயணனுக்கே கைங்கர்யம் செய்கிறேன்; எனக்காகவன்று)

என்பது த்வயமாகும். இதுவே ஶாஸ்த்ரஸாரம். பெரியபிராட்டியார் புருஷகாரமாக எம்பெருமானிடத்தில் ப்ரபத்தி (ஶரணாகதி)பண்ணியவன் ப்ரபந்நன் எனப்படுகிறான். இவனுக்கு *எம்பெருமானே உபேயம் (பேறு); அவனே உபாயம் (பேற்றை அடைவிப்பவன்) என்னும் உறுதியான ஜ்ஞாநம் பரமாவஶ்யகம். ஸதாசார்ய-அபிமாநமடியாக இந்த ஜ்ஞாநம் கைகூட வேணும். இத்தகைய ஜ்ஞாநத்தை உடையவன் பிறர் கூறும் போலியான யுக்திகளாலும் பிறர் நடத்தையாலும் மற்றொன்றாலும் கலங்கமாட்டான். அவன் தெளிவுற்ற சிந்தையனாய் விளங்குவான். எம்பெருமான் தன் இயல்பான பேரருளால் (நிர்ஹேதுக க்ருபையால்) தெளிவுற்று இந்நிலையில் உறுதியாக இருப்பவனுக்கு அவன் ப்ராண வியோகத்தை அடையும் காலத்தில்

acharya.org

அர்ச்சிராதி மார்க்கத்தைக் காட்டியருளுகிறான். பிறகு பரமபதத்தில் திருமாமணி மண்டபத்திலே தன் திருவடிக்கீழ்ச் சேர்த்து தன் அநுபவ கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைக் கொடுத்து இன்புறுகிறான்.

பகவான் நாம் உஜ்ஜீவநம் அடையும் பொருட்டு தன் இயல்பான பேரருளால் இவ்வுலகை ஸ்ருஷ்டிக்கிறான். ஶாஸ்த்ர ப்ரதாநம் பண்ணியருளுகிறான். பல திருவவதாரங்கள் செய்து தானே அநுஷ்டித்து (பின்பற்றி நடத்தல்) ஸதாசார்ய ஸமாஶ்ரயணம் வரை நம்மைச் சேர்ப்பித்து அதன் மூலம் நம்மைத் தன் திருவடிகளின் கீழ்ச் சேர்த்துத் தன் அநுபவ கைங்கர்யங்களைக் கொடுத்து தான் இன்புறுகிறான். அவன் இன்பத்துக்காகவே நமக்கு அவன் திறத்தில் உண்டான அநுபவ கைங்கர்யங்கள் அமைய வேணும். இவை அமைவது நம்முடைய இன்பத்துக்காக அன்று. நாம் ஶாஸ்த்ர ஸாரமான இந்த அறிவைப் பெற ரஹஸ்யத்ரயம் உதவுகிறது.

ப்ரபந்நஜந-கூடஸ்தரான நம்மாழ்வார் திருவாய்மொழியில் இந்த ஶாஸ்த்ரஸாரப் பொருளை (த்வயார்த்தத்தை) ப்ரகாஶிப்பித்தருளினார். ஆகவே திருவாய்மொழி நமக்கு த்வயமந்த்ரம் போல் எப்போதும் அநுஸந்திக்க வேண்டிய தமிழ் மறை முடியாகிறது. நம் பூர்வாசார்யர்கள் திருவாய்மொழியின் அநுபவமே போதுபோக்காக இருந்தனர். மாமுநிகள் மாறன் கலையை உணவாகவும் முன்னோர்மொழிகளின் அநுபவத்தையே போதுபோக்காகவும் பெற்றதை ஆர்த்திப்ரபந்தத்தில் அருளிச்செய்துள்ளார். அநத்யயந காலத்தில் திருவாய்மொழி அநுஸந்தாநம் இல்லாததால் அக்குறை தீர மாமுநிகள் ஸாரமாக திருவாய்மொழி நூற்றந்தாதியான தேனை நாம் அல்லும் பகலும் அநுபவிக்கும்படி அருளிச்செய்துள்ளார். ஆழ்வார் திருவாய்மொழி ஏழாம்பத்து ஐந்தாம் திருவாய்மொழியின் கடைசிப் பாசுரத்தில் —

தெளிவுற்றுவீவின்றிநின்றவர்க்கு இன்பக்கதிசெய்யும் *
தெளிவுற்றகண்ணனைத் தென்குருகூர்ச்சடகோபன்சொல் *
தெளிவுற்றவாயிரத்துள் இவைபத்தும்வல்லாரவர் *
தெளிவுற்றசிந்தையர் பாமருமூவுலகத்துள்ளே

என்று தெளிவுற்ற சிந்தையரான ப்ரபந்நரைக் குறிப்பிட்டு அவர்களுக்கு எம்பெருமான் அருளும் இன்பக் கதியை விளக்குகிறார். இங்கே கீழ்ச்சொன்னவைகளைத் தெளிவாக்கும் ஈடு வ்யாக்யாந பங்க்திகளை அநுபவிப்போம்.

[*தெளிவுற்று வீவின்றி நின்றவர்க்கு*] * ப்ராப்ய ப்ராபகங்கள் இரண்டும் அவனே * (ப்ராப்யம் = பயன் ; ப்ராபகம் = அதை அடைவிப்பது) என்று அத்யவஸித்து (உறுதிபூண்டு) பின்னை (பிறகு) நாட்டார் செயல்கள் கண்டாதல் (கண்டோ) யுக்த்யாபாஸங்கள் கண்டாதல் (கண்டோ)

acharya.org

பிற்காலியாதே நின்றவர்களுக்கு (உறுதி குலையாமல் இருப்பவர்களுக்கு)
[*இன்பக் கதி செய்யும்*] நிரதிஶயாநந்தயுக்தமான ப்ராப்யத்தைப் (பேரின்பவீட்டை) பண்ணிக் கொடுக்கும்
[*தெளிவுற்ற கண்ணனை*] இவன் தெளிய மாட்டாத இழவு தீர (அநாதிகாலமாய் இதை அறியாது உழல்கின்ற நம் இழவு தீர) இவனுக்கு நித்ய கைங்கர்யத்தைக் கொடுக்கையிலே தான் தெளிந்த படியே இருக்கும் க்ருஷ்ணனை *அஹம் ஸ்மராமி* (நான் நினைக்கிறேன்) (வராஹ சரம ஶ்லோகம்) என்னுமாப்போலே கண்ணனைப் பற்றி
[*தென்குருகூர்ச் சடகோபன் சொல்*] ஆழ்வார் அருளிய
[*தெளிவுற்ற வாயிரத்துள்*] அதிக்ருதாதிகாரமாய் (சிலரே ஓதத்தக்கதாய்) கூளமும் பலாப் பிசினும் போலே ஒன்றே (ஒன்றை) நிஷ்கர்ஷித்துப் பிரிக்கவொண்ணாதபடி இருக்கிற வேதார்த்தமானது ஸர்வாதிகாரமாய் ஸர்வ ஸம்ஶயங்களும் தீர்ந்து தெளிந்தது அவர் பக்கலிலே (ஆழ்வாரிடமிருந்து வந்தவாறே) அத்திருவாய்மொழியில்
[*இவை பத்தும்*] இந்தப் பத்துப்பாட்டும்
[*வல்லாரவர்*] ஓதவல்லரானவர்
[*தெளிவுற்ற சிந்தையர் பாமரு மூவுலகத்துள்ளே*] இவ்வாழ்வார் தம்மைப்போல (ஆழ்வாரைப் போலவே) தெளிவுற்ற நெஞ்சையுடையவராவார். (இவ்வுலகில் இருக்கும்போதே) இதில் கண்ணனது ஆஶ்ரிதர்களின் (அண்டினவர்களின்) ரக்ஷணத்தில் க்ருபா விஶேஷத்தை அறியலாம்.

ஸர்வஸுலபனான கண்ணன் மேலான உபாயோபேயமாய் இருக்கும்போது இதை அறியாது உலகினர் பல மதங்களைப் பற்றி வழி தடுமாறுகின்றனரே! என்று ஆழ்வார் ஆஶ்சர்யப்பட்டு அருளிய இத்திருவாய்மொழி உலகினரான நமக்கு நல்லுபதேஶமாய் அமைகிறது.

கற்றோர்கருதும் விசயங்களுக்கெல்லாம்*
பற்றும்விபவகுணப் பண்புகளை* — உற்றுணர்ந்து
மண்ணிலுள்ளோர்தம்மிழவை யாய்ந்துரைத்தமாறன்சொல்*
பண்ணில்இனிதான தமிழ்ப்பா

(திருவாய்மொழி நூற்றந்தாதி 65) என்று இத்திருவாய்மொழிக்கு மாமுநிகள் ஸங்க்ரஹ பாசுரம் அருளிச்செய்துள்ளார்.

மாறனடி பணிந்துய்ந்த ராமாநுஜர் திருவடி ஸம்பந்தம் பெற்ற ஶ்ரீவைஷ்ணவர்கள் இவ்வுலகில் ஆங்காங்குள்ள திவ்யதேஶங்களில் *ஶ்ரீமந் நாராயணனே உபாயோபேயம்* என்று தெளிந்து உறுதிபூண்டு இங்கிருக்கும் நாள்வரை பகவத்-பாகவத-ஆசார்ய குணாநுபவ கைங்-

acharya.org

கர்யமே போதுபோக்காகக் கொண்டு நமக்கெல்லாம் முன்னுதாரணமாக வாழ்ந்து வருகின்றனர். நாம் அவர்களை அண்டி அவர்கள் ஸம்பந்தத்தால் உய்ய வேண்டும். ஆழ்வார்கள் திவ்ய தேசங்களை அநுபவிக்கும்போது, *இப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பெருமானுக்கு மங்களாசாஸநபரராய் உகந்து நித்யவாஸம் செய்யும் திவ்யதேசம்* என்று மிகவும் ஈடுபட்டு அநுபவிக்கிறார்கள். நாமும் இரண்டொரு இடங்களை அநுபவிப்போம்!

சிரீவரமங்கை — வானமாமலை

தெள்ளியார்திருநான்மறைகள்வல்லார் மலிதண்சிரீவரமங்கை
யுள் * இருந்தஎந்தாய்! அருளாய்உய்யுமாறுஎனக்கே (தி.மொழி 5.7.9)

என்று வானமாமலை திவ்யதேசத்தை ஆழ்வார் அநுபவிக்கிறார். *வேத-தாத்பர்யம் கைவந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் உகந்து எழுந்தருளி இருக்கும் சிரீவரமங்கை திவ்யதேசத்தில் அவர்களோடு ஒக்க இருக்கிற என் நாதன் வானமாமலையாம் தெய்வநாயகன்* என்கிறார் ஆழ்வார். மிக்க வேதியர்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் *தெள்ளியார்* என்று சிறப்பிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குத் தெளிவாவது என்ன? என்றால் - தங்களைத் தாங்கள் ரக்ஷித்துக் கொள்வதைத் தவிர்ந்து ஶ்ரிய: பதியான தெய்வநாயகனே தங்களை ரக்ஷிப்பான் என்று உபாயத்தில் உறுதி பூண்டிருக்கை அவர்களுக்குண்டான தெளிவாகும் என்று வ்யாக்யாநம். (தெள்ளியார்) *தந்தாமுக்கும் சிலவுண்டேயாகிலும் அவற்றைப் பொகட்டு அவன் கைபார்த்திருக்குமவர்கள். இவர்கள் சைதந்யத்துக்கு (அறிவுக்கு) விநியோகம் (உபயோகம்) இதுவேயிறே* என்று ஈடு.

அஶோகவநிகையில் தனியிருப்பில் பிராட்டி தெளிவு போலேயும் ஆஶ்ரயண வேளையில் ஸ்ரீவிபீஷணாழ்வான் தெளிவு போலேயும் தெளிந்திருக்குமவர்கள் என்று சிரீவரமங்கை ஸ்ரீவைஷ்ணவர்களுடைய தெளிவுக்கு ஸ்ரீராமாயண புருஷர்கள் இருவரை த்ருஷ்டாந்தமாகக் காட்டியருளுகிறார் நம்பிள்ளை.

ராமஸ்ய வ்யவஸாயஜ்ஞா லக்ஷ்மணஸ்ய ச தீ$_4$மத:|
ந அத்யர்த்த$_2$ம் க்ஷுப்$_4$யதே தே$_3$வீ க$_3$ங்கே$_3$வ ஜலத$_3$ாக$_3$மே ||
(ஸுந்தரகாண்டம் 16-4)(புத்திமான்களான பெருமாளுடையவும் இளையபெருமாளுடையவும் திருவுள்ளக்கருத்தை உள்ளபடி அறிந்தவளான பிராட்டி மழைக்காலத்திலும் கலக்கமடையாத கங்கையைப் போன்று திருவுள்ளத்திலே கலக்கமில்லாமல் இருக்கிறாள்)

acharya.org

என்கிறபடியே ஸீதாபிராட்டியாரைப் போன்றவர்கள் சிறீவரமங்கைவாழ் ஸ்ரீவைஷ்ணவர்கள். பிராட்டி அசோகவனத்தில் * பெருமாள் இலங்கைக்கு வந்து பாணங்களால் இலங்கையை அழித்து என்னைச் சிறை மீட்டு அழைத்துப்போக வேண்டும் * என்று இருந்தாப்போலே இருக்குமவர்கள். இதுவொரு தெளிவு.

*இனி அடுத்தபடியாக * * ஸுக்$_3$ரீவம் தாம்ஶ்ச ஸம்ப்ரேக்ஷ்ய * என்கிறபடியே நலியா நின்றாலும் தாய் முகமே பார்த்துக் கிடக்கும் ப்ரஜையைப்போலே * வத்$_4$யதாம் * (கொல்லுங்கள்) என்கிற மஹாராஜரையும் (ஸுக்ரீவனையும்) அவரிலுங்கொடிய முதலிகளையும் வானர ஸேனைகளையும் அருகாகப் பார்த்துக் கொண்டிருந்தான் * ** என்று ஸ்ரீவிபீஷணாழ்வான் நிலையை வர்ணிக்கிறார் நம்பிள்ளை. இதுதன்னைச் சிறிது விவரிக்கிறேன்.

ஸ்ரீவிபீஷணாழ்வான் பெருமாளை ஶரணம் புகுர வந்து ஆகாஶத்தில் நிற்க, ஸ்ரீஸுக்ரீவ மஹாராஜர் முதலான வானரர்கள் கைகளில் மலையும் மரமும் கொண்டு பெருமாள் திறத்தில் தங்களுக்குண்டான பரிவாலே ஸ்ரீவிபீஷணாழ்வானைக் கொல்லத் தயாரானார்கள். அப்போது ஸ்ரீவிபீஷணாழ்வான், பெருமாளோடு தம்மைச் சேர்ப்பிக்கவல்ல இவர்களை முன்னிட்டே பெருமாளை அடையவேண்டும் என்று இவர்களை நோக்கிக் கொண்டிருந்த தெளிவை —

உவாச ச மஹாப்ராஜ்ஞ: ஸ்வரேண மஹதா மஹாந் |
ஸுக்$_3$ரீவம் தாம்ஶ்ச ஸம்ப்ரேக்ஷ்ய ஸ்வஸ்த$_2$ ஏவ விபீ$_4$ஷண: ||

(யுத்த காண்டம் 17-9) (பேரறிஞரும் மஹானுமான ஸ்ரீவிபீஷணாழ்வான் ஆகாஶத்தில் இருந்து கொண்டே ஸ்ரீஸுக்ரீவ மஹாராஜரையும் அந்த மற்ற முதலிகளையும் அழகியதாகப் பார்த்து பெருங்குரலால் சொன்னார்) என்று வர்ணிக்கிறார் ஸ்ரீவால்மீகி பகவான். மேலும்

வத்$_4$யதாம்-ஏஷ தீவ்ரேண த$_3$ண்டே$_3$ந ஸசிவை: ஸஹ |
ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்$_4$ராதா ஹ்யேஷ விபீ$_4$ஷண: ||

(யுத்தகாண்டம் 17-27)(இவனை கட்டிவிட்டு உதைத்தலோ, அல்லது மாரீசனைப் போலே வரும் காலத்தில் துன்பம் விளைவிக்கும்படி தொடுத்த அம்போடே விடுதலோ செய்யாமல் கொன்றே விடுவோம். அங்ஙனம் கொல்லும் போது, தேவரீரை நலிகைக்குக் கூட்டுப்படையாய் வந்த இந்த நால்வரையும் தலையறுத்து இவன் கையில் கொடுத்துப் பின்பு இவனைக் கொல்வோம். இவன் ராவணனுக்கு உடன்பிறந்தவனன்றோ?)

என்று ஸ்ரீஸுக்ரீவ மஹாராஜர் பெருமாளிடம் விண்ணப்பிக்க, பெருமாளும் மற்ற முதலிகளை கலந்து ஆலோசித்துப் பிறகு தமது திருவுள்ளக்கருத்தைத் தெரிவித்து ஸ்ரீவிபீஷணாழ்வானை

acharya.org

அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளச் சிறிது காலதாமதம் ஏற்பட்ட போதிலும் அவர் தம் திருவுள்ளத்திலே கலக்கமில்லாமல் இருந்தார். ஆக ஸீதாபிராட்டி உபாயத்தில் உறுதியுடன் இருந்தாள். ஸ்ரீவிபீஷணாழ்வான் பகவானிடத்தில் தம்மைச் சேர்ப்பார் விஷயத்தில் விஶ்வாஸத்துடன் இருந்தார். இவர்களைப் போன்று தெளிவு பெற்றவர்களே *தெள்ளியார்* என்று விளக்கம் அநுக்ரஹிக்கிறார் நம்பிள்ளை. இப்படி திருநான்மறைகள் வல்லார் (வேத-தாத்பர்யம் கைவந்த ஸ்ரீவைஷ்ணவர்கள்) மலிந்திருக்கும் திவ்யதேஶம் சிரீவரமங்கை — வானமாமலை என்பது ஆழ்வார் அநுபவம்.

மற்றொரு திவ்யதேஶாநுபவம் — திருமோகூர்

திருமோகூர் திவ்யதேஶத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகாளமேகப் பெருமாளுடைய திருவடி நிழலாகிற பொய்கை தவிர மற்ற எதற்கும் ஸம்ஸாரதாபத்தை ஆற்றும் ஆற்றல் இல்லை என்று ஆழ்வார் திருமோகூர் திவ்யதேஶாநுபவம் பண்ணும்போது பேசுகிறார்.

நலங்கொள் நான்மறைவாணர்கள்வாழ் திருமோகூர் (திருவாய்மொழி 10.1.2) வேத-தாத்பர்யம் கைவந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் இனிது வாழும் திவ்யதேஶம் திருமோகூர் என்று அநுபவிக்கிறார். ஆந்ருஶம்ஸ்யமே (கருணையே) பரமதர்மம் என்னும் வேத-தாத்பர்யம் கைபுகுந்தவர்கள் நலங்கொள் நான்மறைவாணர்கள். வேதத்துக்கு வ்யாஸ பதம் நிர்வஹிப்பவர்கள். எம்பெருமானுக்கும்கூட ஆஶ்ரிதஸம்ரக்ஷணமே பரமதர்மம் என்று ஓதுவிக்கும்படி வேதார்த்தம் கைவந்திருக்குமவர்கள் அவ்வூரில் வாழ்வே உத்தேஶ்யமாகக் கொண்ட ஸ்ரீவைஷ்ணவர்கள். அவர்கள் வாழும் தேஶத்தை எம்பெருமானும் மிகவுகந்து நித்யவாஸம் செய்கிறான். அவ்வூரிலே ஆஶ்ரயிக்கச் சென்றாரை * *அஸ்மாபி$_4$ஸ்துல்யோ ப$_4$வது* (நம்மோடு ஸமமானவர்களாக ஆகட்டும்) என்னுமவர்கள்* * என்று ஈடு.

இப்படி எம்பெருமானே ப்ராப்யமும் ப்ராபகமும் என்று தெளிந்த சிந்தையர் வாழும் இடமான திவ்யதேஶமே நமக்கெல்லாம் வாழ்விடமாக வேணும்.

நாம் ஸதாசார்ய ஸமாஶ்ரயணம் மூலம் ரஹஸ்யத்ரய உபதேஶம் பெற்று ஶாஸ்த்ர ஸாரப் பொருளை உள்ளபடி உணர்ந்து இவ்வுலகில் இருக்கும் நாள் பகவத்-பாகவத-ஆசார்ய கைங்கர்யங்களை முடிந்தவரை செய்துகொண்டு வாழ்வதையே பயனாகக் கொள்ளவேண்டும். இதுவே ஶாஸ்த்ர ஸாரம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

acharya.org

தத்த்வத்ரய விவேகம்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அறியவேண்டியவை பல உள. அவற்றுள் தத்த்வத்ரயத்தைப் பற்றி முதலிலே அறிய வேணும். அதாவது, சித் = அறிவுள்ள ஜீவர்கள் ; அசித் = அறிவில்லாத ஜடப்பொருள் ; ஈஶ்வரன் = சித்தான ஆத்மாக்களையும் அசித்தான ஜடப்பொருள்களையும் உள்ளும் புறமும் வ்யாபித்து நின்று அவற்றை நியமிக்கும் ஸர்வேஶ்வரன். இவனே விஷ்ணு, வாஸுதேவன், நாராயணன் என்கிற பெயர்களால் போற்றப்படுகின்றான். இவனே ஸர்வாந்தர்யாமி - ஸர்வபூதாந்தராத்மா. இவனுடைய இச்சை இல்லாமல் ஒரு அணுவும் அசையாது.

ஶ்வேதாஶ்வர உபநிஷத்தில் *போ$_4$க்தா போ$_4$க்$_3$யம் ப்ரேரிதாரம் ச மத்வா* என்று இம்மூன்று தத்த்வங்களும் ஓதப்பட்டிருக்கின்றன. தத்த்வமாவது உண்மைப் பொருள். அத்வைதிகள் *ப்ரஹ்மம் ஒன்றே ஸத்யமானது ; மற்றவை எல்லாம் பொய்* என்கிறார்கள். எல்லாம் பொய்யானால் உலக வாழ்க்கையே ஒழுங்காக நடைபெறாது. சித், அசித், ஈஶ்வரன் என்கிற மூன்று தத்த்வங்களையும் நாம் அவஶ்யம் ஒப்புக்கொள்ள வேண்டும். மாயை எனப்படும் ப்ரக்ருதியின் கார்யமான பஞ்சபூதங்களும் பஞ்சபூதகார்யங்களான பதார்த்தங்களும் போக்யம் எனப்படுகின்றன. இந்த போக்ய பதார்த்தங்களை அநுபவிப்பவன் போக்தாவான ஜீவாத்மா. இவற்றை கட்டளையிடுபவன் ஸர்வேஶ்வரன். உலக வாழ்க்கையில் நாம் போக்ய பதார்த்தங்களையும் இவற்றை அநுபவிக்கின்ற போக்தாவான ஜீவராசிகளையும் பார்த்து வருகிறோம். இவற்றையெல்லாம் ஆட்டிவைத்து ஆட்கொள்பவனான எல்லாம் வல்ல பகவானை நாம் கண்ணால் பார்க்க முடியாது. ஶாஸ்த்ரத்தைக் கொண்டே நாம் பகவானைப் பற்றி அறிய வேண்டும். எல்லாவற்றிலும் மேம்பட்டதான மிகப்பெரிய ஸக்தி வாய்ந்த வஸ்து ஒன்று உள்ளது என்பதை எல்லா மதத்தினரும் ஒப்புக்கொள்கிறார்கள். வெவ்வேறு நாமங்களால் அந்த தெய்வத்தைக் குறிப்பிடுகிறார்கள். ஸ்ரீவைஷ்ணவர்களான நாம் *மஹா விஷ்ணு* *வாஸுதேவன்* *நாராயணன்* என்றும் திருநாமங்களால் அந்த பரதேவதையை போற்றுகிறோம்.

நாராயணாய வித்$_3$மஹே வாஸுதே$_3$வாய தீ$_4$மஹி
தந்நோ விஷ்ணு ப்ரசோத$_3$யாத்

[நாராயணனை அடைய விரும்புகிறோம் ; (அதன் பொருட்டு)வாஸுதேவனான அவனை உபாஸிக்கிறோம் ; அந்த உபாஸநத்தை விஷ்ணுவானவர் வளரச் செய்யட்டும்!]

என்னும் விஷ்ணு காயத்ரியானது *விஷ்ணு : *, *வாஸுதேவ : *, *நாராயண : * என்னும் திருநாமங்களோடு கூடியது. இவை மூன்றும் வ்யாபகங்கள். அதாவது பகவானுடைய

acharya.org

எங்கும் பரந்துள்ள தன்மையைக் குறிப்பவை.

ஈஶா வாஸ்யமித$_3$ம் ஸர்வம் யத்கிஞ்ச ஜக$_3$த்யாம் ஜக$_3$த்

(ஈஶாவாஸ்யோபநிஷத் - 1) என்னும் ஶ்ருதியில் ஸர்வேஶ்வரன் எல்லா வஸ்துக்களிலும் தான் இருந்து கொண்டு எல்லாவற்றையும் தனக்குள் இருக்கச் செய்கிறுன் என்று ஓதப் படுகிறது.

*யச்ச கிஞ்சித் ஜக$_3$த்யஸ்மிந் த்$_3$ருஶ்யதே ஶ்ரூயதேऽபி வா
அந்தர்ப$_3$ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி$_2$த:*

என்கிற வேதவாக்யம் பரம்பொருளான நாராயணன் இவ்வுலகில் காண்பனவும் கேட்பனவு மான எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறமும் வ்யாபித்து நிற்கிருன் என்று ஓதுகிறது.

அந்த: ப்ரவிஷ்ட: சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா

என்கிற ஶ்ருதி எல்லாவற்றிலும் உள்ளே புகுந்து எல்லாவற்றையும் நியமிக்கிருன் (ஏவு கிருன்) என்று கூறுகிறது. ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வார் -

திடவிசும் பெரிவளி நீர்நிலம்இவைமிசை*
படர்பொருள்முழுவதுமாய் அவையவைதொறும்*
உடல்மிசைஉயிரெனக் கரந்துஎங்கும்பரந்துளன்*
சுடர்மிகுசுருதியுள் இவையுண்டசுரனே

பரந்ததண்பரவையுள நீர்தொறும்பரந்துளன்*
பரந்தஅண்டமிதென நிலவிசும்பொழிவற*
கரந்தசிலிடந்தொறும் இடம்திகழ்பொருள்தொறும்*
கரந்தெங்கும்பரந்துளன் இவையுண்டகரனே

(1-1-7, 10) என்னும் பாசுரங்களில் இவ்வர்த்தங்களை அருளிச்செய்கிருர்.

அசேதநமான போக்ய பதார்த்தங்களுக்கும் சேதநமான போக்தாக்களுக்கும் ஸர்வேஶ்வரன் வ்யாபகனுகவும தாரகனுகவும நியந்தாவாகவும ஸ்வாமியாகவும் இருக்கிறுன். சேதந-அசேதநங்கள் ஸர்வேஶ்வரனுக்கு வ்யாப்யமாகவும் தார்யமாகவும நியாம்யமாகவும் சொத்தா கவும் இருக்கின்றன. சேதநாசேதநங்கள் ஸர்வேஶ்வரனுக்கு உடலாகவும் ஸர்வேஶ்வரன் இவற்றுக்கு உயிராகவும் இருக்கிருன். இத்தால் உயிரில்லாமல் உடலுக்கு நிலையில்லாதாப்

acharya.org

போலே ஸர்வேச்வரனை ஒழிய சேதநாசேதநங்களுக்கு நிலையில்லை என்று தேறுகிறது. இதையே திருமழிசைப்பிரான் -

நானுன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே! நீ யென்னையன்றியிலை

(நான்முகன் திருவந்தாதி - 7) என்று அருளிச்செய்கிறார். ஆகையால் சேதநாசேதநங்களை தனக்கு உடைமையாகக் கொண்டவன் நாராயணன் ஒருவனே *ஒத்தார் மிக்காரை யிலையாய மாமாய(திருவாய்மொழி 2-3-2)னன பரம்பொருள். வேதாந்த ஸித்தமான இவ்வர்த்தத்தை நன்கு நிலைநாட்டினார் நம் ஸ்வாமி எம்பெருமானார். மனிசர்க்கும் தேவர்க்கும் தேவனாய் தேவாதிராஜனான பேரருளாளனும் *அஹமேவ பரதத்த்வம்* என்று அருளிச்செய்தான்.

இப்படி சித் அசித் ஈச்வரன் என்கிற மூன்று தத்த்வங்களைப் பற்றி அறிவதனால் ஏற்படக்கூடிய நன்மை நாம் நம் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்து கொள்வதேயாகும். ஸ்வரூபஜ்ஞாநம் இல்லாமல் இருப்பதனால்தான் நாம் அநாதிகாலமாக ஸம்ஸாரிகளாய் *மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து (திருவாய்மொழி 2-6-8) கஷ்டப்படுகிறோம்.

அநாத்மந்யாத்மபு$_3$த்$_3$தி$_4$ர் யா சாஸ்வே ஸ்வமிதி யா மதி:|
ஸம்ஸாரதருஸம்பூ$_4$திபீ$_3$ஜமேதத் த்$_3$விதா$_4$ ஸ்தி$_2$தம் ||

(ஸ்ரீவிஷ்ணுபுராணம்6-7-11)[ஆத்மாவல்லாத தேஹத்தில் ஆத்மா என்னும் புத்தியும் தனது அல்லாத வஸ்துவில் தன்னுடையது என்னும் புத்தியும் ஸம்ஸாரமாகிய (விஷ) வ்ருக்ஷத்தின் வ்ருத்திக்கு இருவகையாய் இருக்கும் விதையாகும்]

என்கிறபடியே தேஹத்தை ஆத்மாவாகவும் தேஹாநுபந்திகளான பதார்த்தங்களை *என்னுடையது* என்றும் அபிமாநிக்கிறோம். இதை அஹங்கார மமகாரங்கள் என்கிறார்கள். இதுவே ஸம்ஸாரத்திற்கு மூலகாரணமாகும். தேஹாத்ம-விவேகம் ஏற்பட்டால் தேஹாத்மாபிமாநமும் அதன் கார்யமான மமதாபிமாநமும் தொலையும். ஆனாலும் *நான் ஸ்வதந்த்ரன்* என்கிற ஸ்வாதந்த்ர்ய அபிமாநமோ அல்லது ஸர்வேச்வரனைத்தவிர பிறருக்கு அடிமையானவன் என்கிற அந்ய-சேஷத்வ-அபிமாநமோ தொடரும். இதுவும் ஸம்ஸாரஹேதுவாகும். இது தொலைவதற்காக ஜீவேச்வர ஜ்ஞாநம் பிறக்க வேண்டும். ஜீவேச்வர ஜ்ஞாநம் பிறக்கவே *தேஹாதிகளைக் காட்டிலும் மிகவும் வேறுபட்டவனாய் ஸ்வயம்ப்ரகாச ஸ்வரூபனாய் ஜ்ஞாந ஆநந்தாதி குணங்களையுடைய நான் ஸ்வதந்த்ரனுமன்று; பிறர்களுக்கு அடிமையும் அன்று; ஸர்வஸ்வாமியாய் ஸர்வநியந்தாவாய் இருக்கிற ஸர்வேச்வரனான ஸ்ரீமந்நாராயணனுக்கே அடிமைப்பட்டவன்* என்கிற ஜ்ஞாநம் உண்டாகக்கடவது. இப்படிப்பட்ட ஜ்ஞாநத்தை உடைய

acharya.org

முமுக்ஷுவே மோக்ஷத்திற்கு அதிகாரியாகிறான். அன்னபுகழ்முடும்பை அண்ணலுலகாசிரியன் - * முமுக்ஷுவான சேதநனுக்கு மோக்ஷமுண்டாம்போது தத்த்வத்ரய ஜ்ஞாநமுண்டாக வேணும் * என்று அருளிச்செய்திருப்பதை இங்கே அநுஸந்திக்க வேண்டும்.

மேலும் நம்முடைய ஸ்வரூபத்தை நாம் உள்ளபடி அறிந்தால்தான் நமக்கு நல்லது எது, தீயது எது என்பதை பகுத்தறிந்து தீயதை விட்டு நல்லதை பற்றி நன்மை பெறலாம். இப்போது நமக்கிருக்கும் நிலை கர்ம பந்தத்தால் ஏற்பட்டது. அதனால்தான் நாம் ஸம்ஸாரத்தில் பலவித இன்னல்களை அநுபவிக்க வேண்டியிருக்கிறது. ஸ்வரூபத்தை உள்ளபடி அறியாத அஜ்ஞாநத்தால் உண்டான கர்மங்களின் பயனாகவே நமக்கு அநாதிகாலமாக ப்ராக்ருத பதார்த்தங்களில் பற்றுதல் ஏற்பட்டிருக்கிறது. ஶாஸ்த்ரார்த்தங்களை உள்ளபடி உணர்ந்திருக்கும் நம் பூர்வாசார்யர்களுடைய வசநங்களைக் கொண்டு நாம் நம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி உணர வேண்டும். நாம் பகவானுக்கு அடிமைகளாய் இருக்க வேண்டியவர்கள். பகவானும் பாகவதர்களும் நமக்கு ஸகலவித பந்துவாய் க்ஷேமத்தையே பண்ணிக் கொண்டு போருவர்கள். ஆகையால் பகவானையும் பாகவதர்களையும் நம்முடைய மேலான நன்மையைக் கருதி நாம் பற்ற வேணும். பாகவதர்களைப் புருஷகாரமாகக் கொண்டு பகவானைப் பற்றினால் பேரின்பம் ஸித்திக்கும். இப்படி த்யாஜ்ய-உபாதேய-ஜ்ஞாநம் பிறக்கைக்கு தத்த்வத்ரயத்தையும் உள்ளபடி அறியவேணும்.

வீடுமின்முற்றவும் *
வீடுசெய்து * உம்முயிர்
வீடுடையானிடை *
வீடுசெய்ம்மினே

(1-2-1) என்று நம்மாழ்வார் நமக்கு உய்யும வகையை அருளிச் செய்துள்ளார். ஸ்ரீவைஷ்ணவர்களான நமக்கு தத்த்வத்ரயத்தையும் அறிந்து நம்மாழ்வார் உபதேஶித்தபடி நம்முயிரை எல்லாம் வல்ல ஸர்வேஶ்வரன் திருவடிகளில் வீடுசெய்து விடுவதே மேலான நன்மையாகும்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

acharya.org

அஷ்டாக்ஷர ஸம்ஸித்தியின் பலன்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஓம் நமோ நாராயணாய என்னும் மந்த்ரம் *திருவஷ்டாக்ஷரம்* என்றும், *பெரிய திருமந்த்ரம்* என்றும் நமதாசார்களால் போற்றப்படுகிறது. பொதுவாக எல்லா மந்த்ரங்களுக்கும் புரஶ்சரணமுண்டு. புரஶ்சரணத்தால் மந்த்ரஸித்தியைப் பெற்று பலர் பலனை அடைகிறார்கள். புரஶ்சரணமாவது ஜபம், ஹோமம், தர்ப்பணம், மார்ஜநம், ததீயாராதநம் என்று ஐந்து அங்கங்களை உடையதாயிருக்கும். திருமந்த்ரத்துக்கும் புரஶ்சரணம் உண்டு. மந்த்ரத்தை லக்ஷக்கணக்கான முறைகள் ஜபிப்பதனால் உண்டாகும் ஸித்தியே மந்த்ர ஸித்தி. இம்முறையில் அஷ்டாக்ஷர ஸித்தியடைந்து ஒருவன் வேண்டிய பயன்களைப் பெறலாம்.

இனி அஷ்டாக்ஷர ஸம்ஸித்தியின் நிலையையும் அதன் பலனையும் கூறுகிறேன். மந்த்ரார்த்தத்தை நன்றாக அறிந்து கொண்டு அதை எப்போதும் அநுஸந்திப்பதும் அதில் நிஷ்டையை உடையவனாய் இருப்பதும் ஸம்ஸித்தியாகும். நம் பூர்வாசார்யர்கள் மந்த்ர புரஶ்சரணம் செய்யாமல் மந்த்ரார்த்தத்தையே எப்போதும் அநுஸந்தித்துக் கொண்டிருப்பர்கள். இதை லோககுரு முமுக்ஷுப்படியில் (25) *வாசகத்திற்காட்டில் வாச்யத்திலே ஊன்றுகைக்கு அடி, ஈஶ்வரனே உபாயோபேயமென்று நினைத்திருக்கை* என்று அருளிச்செய்கிறார்

ஓரொரு திருநாமமே ஆயிரமுகமாயருள் செய்யும் பேராயிரமுடைய பிரான் ஸ்ரீமந்நாராயணனே! *பேரும்ஓராயிரம் பிறபலவுடையஎம்பெருமான்* (திருவாய்மொழி 1-3-4) என்றும் *பேராயிரமுடைய பேராளன்* (பெரியதிருமொழி 8-1-6) என்றும், *நாமம்பலவுமுடை நாரணநம்பி* (பெரியதிருமொழி 10-8-4) என்றும் ஆழ்வார்கள் அருளிச்செய்துள்ளனர். அநந்தமான அவனுடைய ஸ்வரூபரூபகுணசேஷ்டிதங்களைப் பற்றி வரும் திருநாமங்களும் அநந்தமாய் இருக்கும். *அநந்தா வை ப$_4$க$_3$வந்மந்த்ரா: * (தை-ப்ராஹ்மணம்) (பகவானைச் சொல்லும் மந்த்ரங்கள் எண்ணற்றவை) என்று ப்ரமாணம். வ்யாபக மந்த்ரங்கள் என்றும் அவ்யாபக மந்த்ரங்கள் என்றும் இருவகையாக இவற்றைப் பிரிக்கலாம். இவைகளில் அவ்யாபக மந்த்ரங்களைக் காட்டிலும் வ்யாபக மந்த்ரங்கள் மிக உயர்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன.

நாராயணாய வித்$_3$மஹே வாஸுதே$_3$வாய தீ$_4$மஹி
தந்நோ விஷ்ணு ப்ரசோத$_3$யாத்
[நாராயணனை அடைய விரும்புகிறோம்; (அதன் பொருட்டு)வாஸுதேவனான அவனை உபாஸிக்கிறோம்; அந்த உபாஸநத்தை விஷ்ணுவானவர் வளரச் செய்யட்டும்!] என்னும் விஷ்ணு காயத்ரியானது *விஷ்ணு: *, *வாஸுதேவ: *, *நாராயண: * என்னும் திருநாமங்களோடு கூடியது. இவை மூன்றும் வ்யாபகங்கள். அதாவது பகவானுடைய எங்கும் பரந்துள்ள தன்மையைக் குறிப்பவை. இதில் மற்றையிரண்டைக் காட்டிலும் பெரிய திருமந்த்

acharya.org

ரமே மிகவும் உயர்ந்தது. மற்ற இரண்டுக்கும் அபிஷ்ட பரிக்ரஹமும் அபூர்த்தியும் உண்டு. *இத்தை வேதங்களும் ருஷிகளும் ஆசார்யர்களும் விரும்பினார்கள்* (முமுக்ஷுப்படி 13) என்று பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்கிறார். இத்தை *அஷ்டாக்ஷர ப்ரஹ்மவித்யை* என்பர்கள். இத்தை ஸச்சிஷ்யனுக்கு உபதேசிக்கிற ஆசார்யனே ஸதாசார்யன். ஆசார்ய பதத்திற்கு முக்யமான பொருளும் அவனே! *மந்த்ரத்திலும், மந்த்ரத்துக்கு உள்ளீடான வஸ்துவிலும் மந்த்ரப்ரதனான ஆசார்யன் பக்கலிலும் ப்ரேமம் கனக்க உண்டானால் கார்யகரமாவது* (முமுக்ஷுப்படி-4) என்கிறபடியே இம்மந்த்ரம் எல்லா ஸாபேக்ஷிதங்களையும் கொடுக்கும்.

ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்க்க$_3$ாத்$_3$யம் பாரலௌகிகம் |
கைவல்யம் ப$_4$க$_3$வந்தஞ்ச மந்த்ரோயம் ஸாத$_4$யிஷ்யதி ||

[வ்ருத்தஹாரீத ஸ்ம்ருதி 6-50] [இவ்வுலகச் செல்வத்தையும் ஸ்வர்கம் முதலான மறுமைச் செல்வத்தையும் ஆத்மாநுபவமாகிற கைவல்யத்தையும் பகவதநுபவத்தையும் (அதையதை விரும்புவார்க்கு) இந்த மந்த்ரம் ஸாதித்துக் கொடுக்கும்] என்று நின்றதிறே! திருமங்கையாழ்வார்

குலந்தரும்செல்வம்தந்திடும் அடியார்படுதுயராயினவெல்லாம்*
நிலந்தரஞ்செய்யும்நீள்விசும்பருளும் அருளொடுபெருநிலமளிக்கும்*
வலந்தரும்மற்றுந்தந்திடும் பெற்றதாயினும்ஆயினசெய்யும்*
நலந்தருஞ்சொல்லைநான்கண்டுகொண்டேன் நாராயணாவென்னும்நாமம்

(பெரியதிருமொழி 1-1-9) என்கிற பாசுரத்தில் இதன் ஸகல பலப்ரதத்வத்தை அருளிச் செய்துள்ளார். இவர்தான் ஸாக்ஷாத் எம்பெருமானிடமே அர்த்தத்தோடு திருமந்த்ரத்தை உபதேசம் பெற்றவர். இவர்தான் திருமந்த்ரத்தின் மத்யம-பதப்-பொருளான பாகவத சேஷத்வத்தையே *மற்றெல்லாம்பேசிலும் நின்திருவெட்டெழுத்தும் கற்று - நான் - உற்றதும் உன்னடியார்க்கடிமை* (8-10-3) என்று ஸாரதமப் பொருளாகக் கொண்டார். நம்மாழ்வாரும் *வீடுமின் முற்றவும்* (திருவாய்மொழி 1-2-1) *வண்புகழ் நாரணன் திண்கழல்சேரே* (1-2-10) என்று த்யாஜ்யமானவைகளை விட்டு *உம்முயிர் வீடுடையானிடை வீடுசெய்ம்மினே* (1-2-1) (திருநாரணன் தாள்களையே சேமமாகப் பற்றி உஜ்ஜீவியுங்கோள்) என்று உபதேசித்தருளினார். ஆகவே நமதாசார்யர்கள் பெரியதிருமந்த்ரத்தையே ப்ரதாநமாக உபதேசித்துப் போருகிறார்கள். திருமந்த்ரத்தின் விவரணம் த்வயம். த்வயத்தின் விவரணம் சரமஶ்லோகம். ஸம்ஸாரி சேதநன் ரஹஸ்யத்ரயத்தையும ஸதாசார்ய உபதேஶமாகப் பெற்று அதன் அர்த்தஅநுஸந்தாநத்தால் உஜ்ஜீவிக்க வேணும் என்பது ஶாஸ்த்ரஸாரத்தின் கருத்தாகும். இனி அஷ்டாக்ஷர ஸம்ஸித்தியின் பொருளை விவரிக்கிறேன். ஸ்ரீமணவாளமாமுநிகள் யதிராஜ விம்ஶதியில்(5) -

அஷ்டாக்ஷராக்$_2$ய-மநுராஜ-பத$_3$த்ரயார்த்த$_2$-நிஷ்ட$_2$ாம்
மமாத்ர விதராத்$_3$ய யதீந்த்$_3$ரநாத$_2$ |

ஶிஷ்டாக்$_3$ரக$_3$ண்ய-ஜநஸேவ்ய-ப$_4$வத்பத$_3$ாப்$_3$ஜே
ஹ்ருஷ்டாऽஸ்து நித்யமநுபூ$_4$ய மமாஸ்ய பு$_3$த்$_3$தி$_4$: ||

என்று திருமந்த்ரத்தில் இருக்கும் மூன்று பதங்களின் அர்த்தங்களில் தமக்கு நிஷ்டையைத் தந்தருளவேணும் என்று எம்பெருமானார் ஸந்நிதியில் ப்ரார்த்திக்கிறார். திருமந்த்ரத்தின் முதற்பதமான ப்ரணவத்தின் அர்த்தமான பகவதநந்யார்ஹ ஶேஷத்வத்தையும் (இதரர்களுக்காக அல்லாமல் பரமபுருஷனுக்கே அடிமைப்பட்டவனாக இருப்பது), மத்யம பதம் காட்டும் *எம்பெருமானே தஞ்சம்* என்கிற அர்த்தத்தில் அத்யவஸாயத்தையும் (த்ருடபுத்தி-ஆழ்ந்த நம்பிக்கையையும்), கடைசி பதம் அறிவிக்கும் *பகவத்-கைங்கர்யத்திலேயே எப்போதும் ஈடுபட்டிருக்க வேணும்* என்கிற ப்ராப்ய நிஷ்டையையும் எம்பெருமானார் தந்தருள வேணும் என்கிறார். இப்படிப்பட்ட நிஷ்டையை உடையவர்களே அஷ்டாக்ஷர ஸம்ஸித்தர்கள். நம் ஆழ்வார்களும், நம் ஆசார்யர்களும் அஷ்டாக்ஷர ஸம்ஸித்தர்களே! *ஸ்ரீகூரத்தாழ்வான் ஸ்ரீமுதலியாண்டான் முதலான ஶிஷ்டர்களால் ஸேவிக்கப்படும் தேவரீர் திருவடித்தாமரைகளில் அடியேனுடைய புத்தி நித்யம் ஸந்தோஷமுள்ளதாக இருக்க வேண்டும்* என்று எம்பெருமானாரிடம் மாமுநிகள் ப்ரார்த்தித்தபடி. அஷ்டாக்ஷர ஸம்ஸித்தர்களின் பெருமையை-

யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்$_3$தே$_4$ா மஹாப$_4$ாகே$_3$ா மஹீயதே |
ந தத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி$_4$து$_3$ர்பி$_4$க்ஷதஸ்கரா : ||

(அஷ்டாக்ஷர ப்ரஹ்மவித்யை என்றும் சொல்லப்படும் நாரதீய கல்பம் 1-20)(அஷ்டாக்ஷர ஸம்ஸித்தி அடைந்த மஹான் எங்கு பூஜிக்கப்படுகிறானோ அங்கு பஞ்சம், வ்யாதி, திருட்டுப் பயம் முதலியவை ஸஞ்சரிப்பதில்லை) என்று ஶாஸ்த்ரம் சொல்கிறது. இதில் ஶரீரத்தைப் பற்றி வரும் வ்யாத்யாதிகள் சொல்லப்படுகின்றன. ஆத்மாவைப் பற்றி வரும் வ்யாதியானது ஶப்தாதி விஷயங்களின் அநுபவத்தில் ஏற்படும் ருசியாகும். உபகோஸலன் என்கிறவன் அநர்த்தகரமான விஷயகாமத்தையே ஆத்மாவுக்கு வ்யாதி என்றான் - *வ்யாதி$_4$பி$_4$: பரிபூர்ணோஸ்மி* என்று. பகவதநுபவ கைங்கர்யங்களிலேயே ப்ரவணனான அஷ்டாக்ஷர ஸம்ஸித்தனான அதிகாரிக்கு ஶரீரத்தைப் பற்றிய விஷயாநுபவருசி ஏற்பட ப்ரஸக்தியேயில்லை. தன்னைத்தானே ரக்ஷித்துக் கொள்வதற்கு ப்ரயத்நம் செய்வதுதான் ஆத்மாவைப் பற்றிய துர்பிக்ஷம் என்பது. அதிலும் மோக்ஷத்திற்கு எம்பெருமான் திருவடிகளைத் தஞ்சமாகக் கொள்ளாதே, *நானே எனக்கு மோக்ஷோபாயத்தை ஸாதித்துக் கொள்கிறேன்* என்று முயல்வது மிகவும் துர்பிக்ஷமாகும். இது ஒருநாளும் கைகூடாது. துர்பிக்ஷத்தினால் ஆத்ம-நாஶமே ஸம்பவிக்கும். மத்யம-பதத்தில் சொன்னபடி எம்பெருமானையே தஞ்சமாகப் பற்றி இருக்கிற அஷ்டாக்ஷர ஸம்ஸித்தனுக்கு துர்பிக்ஷத்துக்கு ப்ரஸக்தியே இல்லை. அஜ்ஞனாய் அஶக்தனாய் அப்ராப்தனாய் ஈஶ்வரனையே உபாயமாகப் பற்றியிருக்கிற சேதநனுக்கு ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தனாய் ப்ராப்தனாய் சேதநனை ரக்ஷிக்கக் கடமைப்பட்டவனுமான பகவானே எல்லா விரோதிகளையும் போக்கி எல்லா அபேக்ஷிதங்களையும் பண்ணிக் கொடுப்பவனாகையாலே இவ்வதிகாரிக்கு

acharya.org

எல்லாம் கைகூடும். ஆகவே இவனுக்குத் துர்பிக்ஷமில்லை. ஸர்வேச்வரனுக்குத் தன்னை சேஷமாக (அடிமையாக) நினையாமல் தன்னை ஸ்வதந்த்ரனாக நினைக்கையாகிற ஆத்மாபஹாரம் பகவதநந்யார்ஹ சேஷமாகத் தன்னை நினைத்திருக்கிற அஷ்டாக்ஷர ஸம்ஸித்தனுக்கு கிடையாது.

யோऽந்யத$_2$ா ஸந்தமாத்மாநம்-அந்யத$_2$ா ப்ரதிபத்$_3$யதே |
கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா ||

(மஹாபாரதம் ஆதி-74-28)(பகவானுக்கு அடிமைப்பட்டிருக்கும் ஆத்மாவை தனக்கு வசப் பட்டதாக எவன் அறிகிறானோ ஆத்மாவைத் திருடும் அவனால் என்ன பாவந்தான் செய்யப்பட வில்லை!) என்று ப்ரமாண வசநம். எம்பெருமானுக்கே உரிய சொத்தான தன்னை, தனக்கே உரிய சொத்தாக நினைப்பதுதான் ஆத்மாவின் களவு. இதற்கு எம்பெருமான் கொடுக்கிற தண்டனைதான் ஸம்ஸாரமாகிற சிறைவாஸம்.

நீர்நுமதென்றிவை *
வேர்முதல்மாய்த்து * இறை
சேர்மின் உயிர்க்கு * அதன்
நேர்நிறையில்லே

(1-2-3) என்றபடியே அஹங்கார மமகாரங்கள் நீங்கி * நான் எம்பெருமானுக்கே அடிமை * என்னும் நிஷ்டை ஏற்பட்டால்தான் ஸம்ஸாரச் சிறையிலிருந்து விடுபட முடியும். இப்படி அஷ்டாக்ஷர ஸம்ஸித்தர்களான மஹாயோகிகளின் பெருமை பேசப்படுகிறது. அஷ்டாக்ஷர ஸம்ஸித்தர்களான நமதாசார்யர்கள் தம்மை சரணமாகப் பற்றின சேதநர்களையும் தம்மைப் போலவே பண்ணியருள்வர்கள். திருப்பாவையில் * ஓங்கியுலகளந்த........ பாசுர வ்யாக்யாந அவதாரிகையில் - * * *யத்ராஷ்டாக்ஷர ஸம்ஸித்$_3$த$_4$:* * இத்யாதி யாலே ஒருத்தனைச் சொல்லக்கடவது ஆனபின்பு இவர்கள் இத்தனை பேர் இருந்தால் நாடு வாழச் சொல்லவேண்டாவிறே* * என்று ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்கிறார். ஆகவே, * தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து .... நீங்காத செல்வம் நிறைந்து * என்னும் பலச்ருதி இங்கு மிகவும் பொருந்தும்.

மற்றும்ஓர்தெய்வம்உளதென்று இருப்பாரோடு
உற்றிலேன் * உற்றதும் உன்னடியார்க்கடிமை *
மற்றெல்லாம்பேசிலும் நின்திருவெட்டெழுத்தும்
கற்று * நான் கண்ணபுரத்துறையம்மானே *

(பெரியதிருமொழி 8-10-3) என்று பாசுரம் பாடியருளிய அஷ்டாக்ஷர ஸம்ஸித்தரான கலியன் தம் அடியார்களையும் தம்மைப் போலவேயாகும்படி க்ருபை செய்தருளுகிறார்.

acharya.org

ஸௌஶீல்யம்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஶீலம் ஹி நாம மஹதோ மந்தை$_3$: ஸஹ
நீரந்த்$_4$ரேண ஸம்ஶ்லேஷ ஸ்வப$_4$ாவத்வம் |
தஸ்ய ச ப்ரயோஜநாந்தரௌபயிகத்வாப$_4$ாவாத் ஸௌஶீல்யம் |
[ஶரணாகதி கத்யம் 5வது சூர்ணையின் ஶ்ருதப்ரகாஶிகா வ்யாக்யாநம்] [பெரியவன் தாழ்ந்தவர்களோடு ஒருநீராகக் கலந்துப் பரிமாறும் (பழகும்) தன்மை ஶீலமாகும். அப்படிக் கலந்து பரிமாறும் போது வேறுபயன் கருதாமை (இப்படிப்பட்ட பெருமை தன் திருவுள்ளத்திலே படாதிருக்கை) ஸௌஶீல்யம் எனப்படும்]

*** ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் த$_3$ஶரத$_2$ாத்மஜம்** என்னுமாப் *போலே*** என்று பகவானுடைய ஶீல-குணம் இருக்கும்படியைக் காட்டியருளுகிறார் ஸ்ரீபெரியவாச்சான்பிள்ளை.

> *** ஸௌஶீல்யமாவது — (1) உபயவிபூதி யோகத்தாலும் பெரியபிராட்டியாரோட்டைச் சேர்த்தியாலும் நிரங்குஶமாய் இருக்கிற ஈஶ்வரனுடைய மேன்மையையும் தங்கள் சிறுமையையும் பார்த்து *அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான்? யான் ஆர்?* (திருவாய்மொழி 5-1-7) என்று பிற்காலியாதபடி எல்லாரோடும் ஒக்க மேல்விழுந்து புரையறக் கலக்கையும்,*
> *(2) அது தன் பேறாக இருக்கையும்,*
> *(3) எதிர்த்தலையில் அபேக்ஷையின்றியிலே இருக்கக் கலக்கையும் ***

(முமுக்ஷுப்படி - 137 வ்யாக்யாநம்) என்று அருளிச்செய்கிறார் ஸ்ரீமணவாளமாமுநிகள். நான்முகன், ஶிவபெருமான் முதலானோராலும் அறியமுடியாத பெருமைகளையுடைய திருமால் எங்கே? இருள்தருமாஞாலத்திலே ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே விழுந்து உழல்கின்ற நாம் எங்கே? என்று எம்பெருமானுடைய பெருமையையும் நம்முடைய சிறுமையையும் அநுஸந்தித்தால் அவனை அணுகவும் கூசும் நம்மால் அவனை ஆஶ்ரயிக்க முடியாது.

வைகுண்டே$_2$ து பரே லோகே ஶ்ரியா ஸார்த்த$_4$ம் ஜக$_3$த்பதி : |
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா ப$_4$க்தைர் ப$_4$ாக$_3$வதைஸ்ஸஹ ||
(ஶைவபுராணம்) (மேலான உலகமான ஸ்ரீவைகுண்டத்தில் ஜகத்பதியும் நினைக்கமுடியாத ஸ்வரூபத்தை உடையவனுமான ஸ்ரீவிஷ்ணு, குணாநுபவ-நிஷ்டர்களான பக்தர்களுடனும்

acharya.org

கைங்கர்ய-நிஷ்டர்களான பாகவதர்களுடனும் கூடியவனாய் ஸ்ரீதேவியுடன்கூடி எழுந்தருளி இருக்கிறான்) என்றும் ,

வீற்றிருந்துஏழுலகும் தனிக்கோல்செல்ல (திருவாய்மொழி 4-5-1) என்றும்,

*தேவிமாராவார்திருமகள்பூமிஏவமற்றமரர் ஆட்செய்வார்
மேவியஉலகம்மூன்றவையாட்சி* (திருவாய்மொழி 8-1-1)

என்றும் சொல்லுகிறபடியே ஸ்ரீவைகுண்டத்தில் நித்யமுக்தர்கள் பரிசர்யை (கைங்கர்யம்) செய்ய ஸ்ரீபூமிநீளாநாயகனாய் உபயவிபூதியை (நித்யவிபூதி லீலாவிபூதி)யும் செங்கோல் நடத்துகிற ஸர்வேஶ்வரன் இவ்விருள்தருமாஞாலத்திலே திருவவதரித்து நிற்கிற நிலையிலே அவனுடைய ஶீலகுணம் நன்கு ப்ரகாஶிக்கிறது. ஶரணாகதி பண்ண ஒருப்பட்ட சேதநரோடு எம்பெருமான் தன்னுடைய ஶீலகுணத்தால் ஒருநீராய்க் கலந்து நிற்கிறபடியால்தான் நம்மால் அவனை ஆஶ்ரயிக்க முடிகிறது. இத்தைத் திருவுள்ளம் பற்றியே *ஶீலகுணம் ஆஶ்ரயிக்கக் காரணமாகிறது* என்று ஆசார்யர்கள் அருளிச்செய்கிறார்கள். குறிப்பாக ஸ்ரீகூரத்தாழ்வான்

ஶீல: க ஏஷ தவ ஹந்தத$_3$யைகஸிந்தோ$_4$

க்ஷுத்$_3$ரே ப்ருத$_2$க்$_3$ஜநபதே$_3$ ஜக$_3$த$_3$ண்ட$_3$மத்$_4$யே |

க்ஷோதீ$_3$யஸோபி ஹி ஜநஸ்ய க்ருதே க்ருதீ த்வம்

அத்ராவதீர்ய நநு லோசந கே$_3$ாசரோ பூ$_4$: ||

(அதிமாநுஷஸ்தவம் -10) என்னும் ஶ்லோகத்தில் இவ்விஷயத்தை அருளிச்செய்கிறார். ஸ்ரீராமாவதாரத்தில் பகவானுடைய இந்தத் திருக்கல்யாணகுணம் மிகவும் விளங்கா நின்றது. ராவண வதத்திற்குப் பிறகு ப்ரஹ்மா, ஶிவன், இந்த்ரன் முதலானவர் வந்து பெருமாளைக் குறித்து —

*கர்த்தா ஸர்வஸ்ய லோகஸ்ய ஶ்ரேஷ்டோ ஜ்ஞாநவதாம் வர: *
(யுத்த காண்டம் 120-6) (ஸ்ரீராமபிரானே! நீயே எல்லா உலகங்களுக்கும் காரணம் ஆவாய்! நீயே அறிஞர்களுள் மிகச் சிறந்தவனாய் எங்கும் பரந்துள்ளவன்!)

*ப$_4$வாந் நாராயணோ தே$_3$வ: ஸ்ரீமாந் சக்ராயுதே$_4$ா விபு$_4$: *
(யுத்த காண்டம் 120-13) (தேவரீரே திருவுள்ளவனாய் சக்ரதாரியாய் ஸர்வவ்யாபியான நாராயணன் என்னும் தேவன்!)

*ஶரண்யம் ஶரணம் ச த்வாமாஹுர் தி$_3$வ்யா மஹர்ஷய: *
(யுத்த காண்டம் 120-18) (சிறந்த ஜ்ஞாநவான்களான மஹர்ஷிகள் உன்னையே உபாய மாகவும் அடையப்படும் பலனாகவும் கூறுகின்றனர்)

acharya.org

*த்வம் த்ரயாணாம் ஹி லோகாநாம் ஆதி$_3$கர்த்தா ஸ்வயம் ப்ரபு$_4$: *
(யுத்த காண்டம் 120-19) (ஸ்ரீராமபிரானே! நீயே இந்த மூன்று லோகங்களையும் படைத்த முதல் காரணமாய் அனைவரிலும் மேம்பட்டவனாய் விளங்குபவன்!)
ஜக$_3$த் ஸர்வம் ஶரீரம் தே
(யுத்த காண்டம் 120-26) (இந்த உலகம் முழுவதும் உனக்கு ஶரீரமாய் உள்ளது) என்றெல்லாம் ஸ்தோத்ரம் பண்ணும் ப்ரகரணத்தில் —

அப்$_3$ரவீத் த்ரித$_3$ஶஶ்ரேஷ்டாந் ராமோ த$_4$ர்மப்$_4$ருதாம் வர: |
ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் த$_3$ஶரத$_2$ாத்மஜம் ||

(யுத்தகாண்டம் 120-11)(*நான் என்னை மநுஷ்யனாகவும், தஶரதன் பிள்ளை ராமனாகவும் நினைக்கிறேன்* என்று தர்மவான்களில் மேலான பெருமாள் தேவஶ்ரேஷ்டர்களைக் குறித்துச் சொன்னார். பெருமாள் இப்படி அருளிச்செய்தது நீர்மை (ஶீலம்)யினாலேயேயாகும். கங்கைக் கரையில்,

கு$_3$ஹேந ஸஹிதோ ராமோ லக்ஷ்மணேந ச ஸீதயா
(பாலகாண்டம் 1-30)(ஸ்ரீராமபிரான் குஹனோடும் லக்ஷ்மணனோடும் ஸீதையோடும் கூடிய வரானார்) என்கிறபடியே குஹனோடு தோழமை கொண்டதும், ருஶ்யமுக பர்வதத்தில் ஸுக்ரீவனோடு தோழமை கொண்டதும் எம்பெருமானின் ஶீலகுணத்திற்கு எடுத்துக்காட்டு. ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் கோபபாலகர்களுடனும், கோபிமார்களுடனும் ஒருநீராகக் கலந்து பரிமாறினதும் எம்பெருமானின் ஶீலகுணத்தையே நிலைநாட்டுவதாகும். கோவர்த்தந கிரியை ஏழு நாட்கள் எடுத்து நின்ற செயற்கரிய செயலைச் செய்த கண்ணபிரானைக் குறித்து கோபர்கள் *நீ ஆயர்புத்ரன் அல்லன்; தேவனோ, யக்ஷனோ, கந்தர்வனோ நீ யார்?* என்று அதிஶங்கை பண்ண, கண்ணபிரான் கோபர்களைப் பார்த்து,

நாஹம் தே$_3$வோ ந க$_3$ந்த$_4$ர்வோ ந யக்ஷோ ந ச தா$_3$நவ: |
அஹம் வோ ப$_3$ாந்த$_4$வோ ஜாதோ நைதச்சிந்த்யமிதோந்யதா$_2$ ||

(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5-13-12)(நான் தேவனல்லேன்; கந்தர்வனும் அல்லேன்; யக்ஷனும் அல்லேன்; அஸுரனும் அல்லேன்; நான் உங்களுக்கு உறவினனாகப் பிறந்திருக்கிறேன்; என் பிறப்பு இதைத்தவிர வேறுவிதமாக உங்களால் - நினைக்கத்தக்கதன்று) என்று அருளிச்செய்தான். இத்தாலும் கண்ணபிரானுடைய ஶீலகுணம் நன்கு விளங்குகிறது.

ஶ்ரிய: பதியான ஸர்வேஶ்வரனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்றவர் நம்மாழ்வார். அவர் தம் திருவுள்ளத்திலே பகவத்குணங்களை அநுபவிக்கிறார். அப்போது அவருக்கு நேராக

acharya.org

பகவானோடு கூடவேணும் என்கிற ஆசை பிறக்கிறது. அது கிட்டாமையால் அவருடைய குணானுபவத்திற்கு ஒரு கலக்கம் ஏற்படுகிறது. நாயகனோடு கலந்து பிரிந்த நாயகியின் தன்மையை அடைந்த அவர் *அஞ்சிறைய மடநாராய் (1-4) என்னும் திருவாய்மொழியில் எம்பெருமானை அழைத்துவர பறவை முதலியவற்றைத் தூதுவிடுகிறார். எம்பெருமான் தூதர் வாயிலாக இவருடைய அவஸ்தையை அறிந்து அடுத்ததான *வளவேழுலகில் (1-5) தன்னுடைய ஸீலகுணத்தாலே இவரோடு கலக்க நேரில் வந்து ஸேவை ஸாதிக்கிறான். எம்பெருமானுடைய பெருமையையும் தன்னுடைய சிறுமையையும் அநுஸந்தித்து பின்வாங்குகிற ஆழ்வாரைத் தன் ஸீலகுணத்துக்கு இலக்காக்குகிறான் பகவான். தான் வஸிஷ்ட சண்டாள விபாகமற எல்லார் தலைகளிலும் தன் திருவடிகளை வைத்து காடும் மேடுமான உலகை அளந்து கொண்டபடியை இவருக்குக் காட்டித் தருகிறான். *ஆழ்வாரே! நீர் ஏன் அகலுகிறீர்? உம்முடைய கூட்டுறவே நமக்கு தேஜஸ் பயக்கும்* என்று சொல்லி தன்னுடைய ஸீலகுணத்தினால் இவரை சேர்த்துக்கொண்டான். மாமுநிகள் திருவாய்மொழி நூற்றந்தாதியில் (5) -

வளம்மிக்கமால்பெருமை மண்ணுயிரின்தண்மை*
உளமுற்று அங்கூடுருவவோர்ந்து* — தளர்வுற்று
நீங்கநினைமாறனைமால் நீடிலகுசீலத்தால்*
பாங்குடனே சேர்த்தான்பரிந்து

என்று இதை அருளிச்செய்தார். மேலும் ஆழ்வார் *பண்டைநாளாலே என்னும் (9-2) திருவாய்மொழியில் தம்முடைய விருப்பங்களை எம்பெருமானிடம் விண்ணப்பிக்க அவனும் தன்னுடைய நாராயண நாமத்தின் பொருளான எல்லா உறவுமுறைகளையும் ஆழ்வார்க்குக் காட்டிக் கொடுத்து, *ஆழ்வீர்! உமக்கு ஒரு குறையுமில்லை; நாம் உம்முடைய எல்லா அபேக்ஷிதங்களையும நன்றாகத் தலைக்கட்டிக் கொடுக்கிறோம்* என்று அருளிச்செய்ய, ஆழ்வாரும் அவனுடைய இப்படிப்பட்ட ஸீலகுணத்தில் ஈடுபட்டு எப்போதும் அத்தையே சிந்தித்துப் பேசிப்போந்தார். ஆழ்வாருடைய இந்நிலையை மாமுநிகள், *ஓராநீர் வேண்டினவை உள்ளதெல்லாம் செய்கின்றேன் நாராயணனன்றோ நானென்று பேருறவைக் காட்ட அவன் ஸீலத்தில்கால்தாழ்ந்தமாறன்* (83) என்று நூற்றந்தாதியில் அருளிச்செய்தார்.

குணம் என்கிற சொல் பொதுவாக எல்லா நற்குணங்களுக்கும் வாசகமாய் இருக்கச் செய்தேயும் இச்சொல்லால் எம்பெருமானின் ஸீலகுணத்தையே முக்யமாக நம் பூர்வர்கள் குறிப்பிடுகிறார்கள். எப்போதும் உள்ளம் கனிந்து பக்தர்களால் அநுஸந்திக்கப்படுகிறதைப் பற்றி ஸீலகுணமே *குணம்* என்ற சொல்லுக்கு ஏற்ற பொருளாகும். எம்பெருமானுடைய ஸீலகுணத்தை அநுஸந்தித்து நாம் அவனை ஆஸ்ரயிக்க ஒருப்படுவது நன்று என்பது தேறின பொருளாகும்.

acharya.org

வாத்ஸல்யம்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஶ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

ஶ்ரீகத்யத்தில் எம்பெருமானுர் அருளிச்செய்த கட்டளைப்படி ஸௌஶீல்யத்துக்கு அடுத்ததான வாத்ஸல்யத்தை பற்றிச் சிறிது அநுபவிப்போம். குணம் ஒன்றும் இன்றிக்கே குற்றங்களையே புரிந்திருக்கும் நாம் அஞ்சாமல் பகவானைக் கிட்டி ஆஶ்ரயிப்பதற்கு அவனுடைய வாத்ஸல்யம் இன்றியமையாத திருக்கல்யாணகுணமாகும். ஆஶ்ரயண ஸௌகர்யத்துக்கு உறுப்பான நான்கு திருக்கல்யாணகுணங்களிலும் முந்துறமுன்னம் இதையே ஆழ்வார் *நிகரில் புகழாய்* (6-10-10) என்று அநுபவிக்கிறுர். அந்தர்யாமியின் குணமான வாத்ஸல்யம் திருவேங்கடமுடையான் திறத்து விளங்கா நிற்கிறது. *நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கண் பாசம் வைத்த பரஞ்சுடர் சோதிக்கே* (3-3-4) என்று ஆழ்வார் அருளிச்செய் கிறுர். பாசமாவது ஸ்நேஹம் - அன்பு.

அன்று ஈண்ட கன்றின்பால் தாய்ப்பஶுவுக்குண்டான பாசத்தை வாத்ஸல்யம் என்று குறிப் பிடுவர்கள். தாய்ப்பஶுவானது அழுக்கோடு கூடின கன்றை ஆதரித்துப் பற்றுவது கன்றின் பால் உள்ள ஸ்நேஹத்தாலேயாம். இப்படிப்பட்ட ஸ்நேஹத்தை வாத்ஸல்ய ஶப்தம் குறிப்பிடு கிறது. ஸ்நேஹமடியாகவே வஸ்துவிலுள்ள தோஷத்தைக் காணுமல் இருப்பதும், கண்ட தோஷத்தை குணமாக போக்யமாகக் கொள்வதுமாம். இத்தைக்கொண்டே தோஷ-அதர்ஶித்வம் வாத்ஸல்யம் என்றும், தோஷபோக்யத்வம் வாத்ஸல்யம் என்றும் அவ்வோவிடங்களில் கூறப் படுகிறது. ஸ்நேஹத்தின் கார்யமாய் வருவதை வரம்பு கட்டித் தடுக்க முடியாது. ஆகவே *தோஷ-அதர்ஶித்வமே வாத்ஸல்யம்; தோஷபோக்யத்வமன்று* என்று கூறும் கூற்று ஏற்கத் தக்கதன்று. திருமாலான ஸர்வேஶ்வரனுக்கு ஸகல சேதநர்களிடமும் வாத்ஸல்யமுண்டு. ப்ரபந்நர்கள் விஷயத்தில் அது அதிஶயித்திருக்கும். திருமங்கைமன்னன் *உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்தாமரைக்கண்ணு* என்று அருளிச்செய்கிறுர். ஶ்ரீராமாயணத்தில் பிராட்டி வெளியிட்ட பெருமாளுடைய திருக்கல்யாணகுணங்களில் வாத்ஸல்யம் முக்யமாகும்.

மித்ரமௌபயிகம் கர்த்தும் ராம: ஸ்த$_2$ாநம் பரீப்ஸதா |
வத$_4$ம் சாநிச்ச$_2$தா கே$_4$ாரம் த்வயாஸௌ புருஷர்ஷப$_4$: ||
விதி$_3$த : ஸ ஹி த$_4$ர்மஜ்ஞ : ஶரணாக$_3$தவத்ஸல : |
தேந மைத்ரீ ப$_4$வது தே யதி$_3$ ஜீவிதும்-இச்சஸி ||
ப்ரஸாத$_3$யஸ்வ த்வம் சைநம் ஶரணாக$_3$தவத்ஸலம் |
மாம் சாஸ்மை ப்ரயதோ பூ$_4$த்வா நிர்யாதயிதும்-அர்ஹஸி ||

[ஸுந்தர காண்டம் 21-19, 20, 21] [நீ உயிரோடு வாழ விரும்பினுல் ஶ்ரீராமனுடன் தோழமை

acharya.org

கொள்! பெருமான் புருஷோத்தமர்; தர்மம் அறிந்தவர்; தன்னை ஶரணம் அடைந்தவர்களிடம் உள்ள தோஷங்களைக் கணிசித்து பார்க்க மாட்டார்; (இந்த இடத்திலே வாத்ஸல்ய ஶப்தத்துக்கு தோஷ-அதர்ஶித்வம் என்பது மாமுநிகளுடைய நிர்வாஹம்) கோரமான வதத்தைத் தவிர்த்து குறைவற்ற வாழ்வை வேண்டுபவளானால் உன்னாலே இவருடன் நட்புக் கொள்ள ஒரு உபாயம் உண்டு. இந்த்ரியத்தை அடக்கியவளாய் என்னை அவரிடத்தில் சேர்ப்பித்து அவரை மகிழச் செய்வாயாக!] என்று பிராட்டியின் உபதேஶம். *புருஷகாரத்துக்கும், உபாயத்துக்கும் வைபவமாவது - தோஷத்தையும், குணஹாநியையும் கண்டு உபேக்ஷியாத அளவன்றிக்கே, அங்கீகாரத்துக்கு அவை தன்னையே பச்சையாக்குகை* (15) என்று ஸ்ரீவசநபூஷணத்தில் பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்கிறார். தோஷத்தை பச்சை (காணிக்கை)யாகக் கொள்வது வாத்ஸல்ய கார்யம். பிராட்டி ராக்ஷஸிகளின் அபராதத்தையே பற்றுசாகக் கொண்டாள்.

ததஸ் ஸா ஹ்ரீமதீ ப$_{3}$ாலா ப$_{4}$ர்த்துர் விஜயஹர்ஷிதா |
அவோசத் யதி$_{3}$ தத் தத்$_{2}$யம் ப$_{4}$வேயம் ஶரணம் ஹி வ: ||
(ஸுந்தர காண்டம் 58-90) (லஜ்ஜை நிரம்பியவளாய் கணவனுடைய ஜயத்தைக் கேட்டு ஆநந்தமடைந்தவளான பிராட்டி *அக்கனவு உண்மையானால் நான் உங்களுக்கு அடைக்கலமாகிறேன்* என்று சொன்னாள்) என்று ஸ்ரீராமாயணம். விபீஷண ஶரணாகதி ப்ரகரணத்தில்

மித்ரப$_{4}$ாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கத$_{2}$ஞ்சந |
தே$_{3}$ாஷோ யத்$_{3}$யபி தஸ்ய ஸ்யாத் ஸதாம்-ஏதத்$_{3}$-அக$_{3}$ர்ஹிதம் ||
(யுத்த காண்டம் 18-3) (நண்பனின் ப$_{4}$ாவத்துடன் வந்தடைந்த இவனை ஒருபடியாலும் கைவிடும் இஷ்டமே இல்லை. இவனுக்கு தோஷம் இருந்தாலும் இருக்கட்டும்! இவனைக் கைக்கொள்வது நல்லோர்களுக்கு இகழத்தக்கதன்று) என்று பெருமான் அருளிச்செய்தார்.

இங்கே *பகவான் தோஷத்தை போக்யமாகக் கொண்டால் தெரிந்து வைத்தே குற்றங்களைச் செய்யலாமே!* என்றொரு ஶங்கை தோன்றும். அதற்கு பரிஹாரமாவது — ப்ரபந்நனான அதிகாரி புத்திபூர்வமாகக் குற்றம் செய்ய மாட்டான். தவறுதலாக வரும் குற்றங்களை எம்பெருமான் ஆஶ்ரித-பக்ஷபாதத்தால் குற்றமாகக் காணமாட்டான். இதைத்தான் ஸஹஸ்ரநாமத்தில் *அவிஜ்ஞாதா* என்கிற திருநாமம் கூறுகிறது. முன்பு அபராதங்களைப் பண்ணியிருந்தாலும் ஒருவன் எம்பெருமான் திருவடிகளில் ஶரணாகதி பண்ணினால் பகவான் குற்றம் கண்டு உபேக்ஷிக்காமல் அவனை அங்கீகரித்து அருள்புரிவன். இதைத்தான் — *நாயினேன் செய்த குற்றம் நற்றமாகவேகொள் ஞாலநாதனே* (திருச்சந்தவிருத்தம் - 111) என்று திருமழிசைப்பிரான் அருளிச்செய்கிறார். *குன்றனைய குற்றஞ் செயினும் குணங்கொள்ளும்* (முதல் திருவந்தாதி 41) என்று பொய்கையாழ்வார் எம்பெருமானுக்கு ஆஶ்ரிதர் விஷயத்தில் உள்ள வாத்ஸல்யத்தை காட்டியருளுகிறார்.

acharya.org

*தன்னடியார்திறத்தகத்துத் தாமரையாளாகிலும்சிதகுரைக்குமேல்
என்னடியார்அதுசெய்யார் செய்தாரேல்நன்றுசெய்தாரென்பர்போலும்*

(4-9-2) என்று அருளிச்செய்கிறார் பெரியாழ்வார். திருமார்பில் திகழ்கின்ற பிராட்டி ஆஶ்ரிதரை ரக்ஷிக்கும் விஷயத்தில் எம்பெருமான் திண்ணியனாய் இருக்கிறானா என்பதை பரீக்ஷிக்கும் பொருட்டு அடியார்களுடைய குற்றங்குறைகளை கூறுவளாம். அப்பரீக்ஷையில் எம்பெருமான் *என்னடியார் குற்றம் செய்யார்; செய்தாலும் நன்றே செய்தவராகிறார்* என்று பதில் சொல்லித் தேறிவிடுகிறான் என்று கருத்து. தன்னை ஶரணமடையும் சேதநனுடைய குற்றத்தை ஶரணாகத வத்ஸலனான திருமால் குணமாகவே கொண்டு அங்கீகரித்தருள்வன். ஆகையால் பகவத்விஷயத்தில் ஆபிமுக்யம் பிறந்து ஶரணாகதி செய்ய ஒருப்பட்ட சேதநன் தன் குற்றத்தை அநுஸந்தித்து அஞ்சி பிற்காலிக்க வேண்டாம் என்று தேறுகின்றது. இப்படி குற்றத்தைக் குணமாகக் கொண்டால் குற்றத்துக்கு அநுகுணமாக ஸர்வேஶ்வரன் தண்டிப்பன் என்கிற ஶாஸ்த்ர மர்யாதை குலையாதோவெனில் - விமுகனான சேதநன் விஷயத்தில் ஈஶ்வரன் தண்டதரனாகையாலே ஶாஸ்த்ர மர்யாதை குலையாது. எம்பெருமான் உகந்தருளின நிலங்களில் நம்போல்வார் குற்றங்குறைகளைக் கண்டும் நமக்கு நன்மைகளையே பண்ணிக் கொண்டு உகப்புடன் எழுந்தருளியிருக்கும் இருப்பே அவனுடைய வாத்ஸல்ய குணத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

ஸ்ரீபிள்ளைலோகாசார்யர், *இவையெல்லாம் நமக்கு நம்பெருமாள் பக்கலில் காணலாம். திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும், வைத்து அஞ்சல் என்ற கையும், கவித்த முடியும், முகமும் முறுவலும், ஆஸநபத்மத்தில் அழுந்தின திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்குத் தஞ்சம்* (முமுக்ஷுப்படி 141,142) என்று அருளிச்செய்கிறார். திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்கள் ஆஶ்ரிதருடைய கார்யத்தைச் செய்து தலைகட்டுவதற்கு உறுப்பான ஜ்ஞாநஶக்த்யாதிகளுக்கு ப்ரகாஶகம்; வைத்து அஞ்சல் என்ற அபயஹஸ்தம் அஞ்சாமல் ஆஶ்ரயிப்பதற்கு உறுப்பான வாத்ஸல்யத்திற்கு ப்ரகாஶகம்; கவித்தமுடி நம் கார்யம் செய்யும் என்று துணிகைக்கு உறுப்பான ஸ்வாமித்வத்திற்கு ப்ரகாஶகம்; முகமும் முறுவலும் ஸௌஶீல்ய ப்ரகாஶகம்; ஆஸநபத்மத்தில் அழுந்தின திருவடிகள் கண்டு பற்றுகைக்கு உறுப்பான ஸௌலப்யத்தைக் காட்டிக் கொடுக்கின்றன.

இவ்வண்ணம் உகந்தருளின நிலங்களான திவ்யதேஶங்களில் எம்பெருமான் ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணனாக விளங்குகிறபடியால் அவனை ஆஶ்ரயிப்பவர்களுக்கு ஒரு குறையும் வராது. மாறாக அவர்களுக்கு எல்லா அபிமதங்களும் கைகூடும் என்பது திண்ணம். ஆகவே சடக்கென அவன் துயரறு சுடரடிகளைப் பற்றி உய்வதே அறிவின் பயனாகும்.

ஆழ்வார் எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்

acharya.org

ஸ்தோத்ர ப்ரஸ்தாநம்

ந்யாய வேதாந்த ஶிரோமணி வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே திருநாங்கூர்
ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி

(அநந்த ஸந்தேஶ் என்ற பம்பாய் பநஸ்வாடி ஸ்ரீவேங்கடேஶ தேவஸ்தானப் பத்ரிகையில் 1977ம் வருஷம் நவம்பர் மாதம் மலர் 6-6ல் ஹிந்தியில் வெளியிடப்பட்டது) தமிழாக்கம் - ஸ்வாமியின ஜ்யேஷ்ட குமாரர் ஸ்ரீ உ வே ப்ர ப ராமானுஜாசார்யர்)

ப்ரஸ்தாநம் என்பதற்கு ப்ரவேஶம் அல்லது அந்வயிப்பது என்று பொருள். வைதிக மதங்களில் உபநிஷத்துக்கள் ஸ்ரீமத்பகவத்கீதை ப்ரஹ்மஸூத்ரம் என்னும் மூன்றும் ப்ரஸ்தாந-த்ரயம் என்று ப்ரஸித்தி பெற்றுள்ளன. ஸ்ரீராமாநுஜர் வேதார்த்த ஸங்க்ரஹம் என்கிற க்ரந்தத்தில் உபநிஷத்துக்களின் ஸாரார்த்தங்களை விஶதமாக நிரூபணம் செய்து இதனடியாக உபநிஷத் ப்ரஸ்தாநத்தை ப்ரகாஶிப்பித்தருளினார். ஸ்ரீமத்பகவத்கீதைக்கு கீதாபாஷ்யமும் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ஸ்ரீபாஷ்யம் வேதாந்த ஸாரம் வேதாந்த தீபம் என்னும் க்ரந்தங்களையும் அநுக்ரஹித்து அதன் வாயிலாக மேலும் உபநிஷத்துக்களின் ஸாரார்த்தங்களை விஸ்தரமாக நிரூபணம் பண்ணியருளினார்.

ஸ்வாமி எம்பெருமானாரின் ஸஹ்ருதயத்வம் (முமுக்ஷுக்கள் உபநிஷத்துக்களின் அர்த்தங்களை உள்ளபடி அறிந்து உணர்ந்து உஜ்ஜீவநம் அடையும் பொருட்டு உபகாரம் செய்யும் தன்மை) வாசாம்-அகோசரம். ஶாங்கரபாஷ்யத்தில் உபநிஷத்துக்களின் ப்ரதிபதார்த்தம் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதில் எந்தந்த இடங்களில் அர்த்தங்கள் தவறுகக் காண்பிக்கப்பட்டுள்ளனவோ அந்தந்த இடங்களில் சரியான அர்த்தங்களையும் ஸ்வாமி ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களில் தெளிவாக எடுத்துக் காட்டியருளி இருக்கிறார். மேலும் ஸ்ரீபாஷ்யத்தில் அதிகரணங்களின் விஷய வாக்யங்களுக்கு வ்யாக்யாநம் அருளிச்செய்திருக்கிறார். நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அவதரித்த ஸ்ரீரங்கராமாநுஜமுநி என்கிற மஹான் ஸ்ரீபாஷ்யம், ஶ்ருதப்ரகாஶிகை, தத்வடீகை முதலான க்ரந்தங்களைக் கொண்டு உபநிஷத்துக்களுக்கு வ்யாக்யாநம் செய்தருளினார்.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திலே திவ்யப்ரபந்தப்ரஸ்தாநம், ரஹஸ்யப்ரஸ்தாநம், ஸ்தோத்ர ப்ரஸ்தாநம் என்று மேலும் ஒரு ப்ரஸ்தாந த்ரயம் முக்யமாகக் கொள்ளப்படுகிறது. ஸ்வாமி எம்பெருமானார் தாம் புத்ரராக அபிமானித்த திருக்குருகைப்பிரான்பிள்ளான் மூலம் திருவாய் மொழிக்கு ஆறுயிரப்படி வ்யாக்யாநத்தை அவதரிப்பித்தருளினார். இதன் வாயிலாக திவ்ய ப்ரபந்த ப்ரஸ்தாநத்திற்கு நல்வழி வகுத்தருளினார். ஸ்ரீகூரத்தாழ்வானுடைய திருக்குமாரரான ஸ்ரீபராஶரபட்டர் *அஷ்டஶ்லோகீ* என்ற அத்புதமான க்ரந்தத்தை அருளிச்செய்து ரஹஸ்ய ப்ரஸ்தாநத்துக்கு வழிவகுத்தார். நம்பிள்ளை, நஞ்ஜீயர், வடக்குத்திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளைலோகாசார்யர், திருவாய்மொழிப்பிள்ளை, வேதாந்த தேஶிகன், மணவாளமாமுநிகள் ஆகிய பூர்வாசார்யர்கள் தங்களுடைய க்ரந்தங்களாலும்

acharya.org

உபதேசங்களாலும் இந்த ப்ரஸ்தாநங்களை நன்கு வளர்த்தார்கள். இவற்றில் தெளிந்த ஜ்ஞாநம் படைத்தவர்களே *உபயவேதாந்த ப்ரவர்த்தகாசார்யர்கள்* என்று வழங்கப் படுகிறார்கள்.

திவ்யப்ரபந்தங்களில் வேதவேதாந்தங்களின் அர்த்தங்களே நிரம்பியுள்ளன. ஸ்ரீமத்பகவத் கீதையிலும் வேதாந்தத்தின் பரம ஸாரபூதமான அர்த்தங்களே நிரம்பியுள்ளன. வேதாந்தத்தின் உபப்ரும்ஹணமாகிலும் கீதையானது *கீதோபநிஷத்* என்று வழங்கப்படுவதைப் போன்று, வேதாந்தத்துக்கு உபப்ரும்ஹணமாய் இருந்தபோதிலும் திவ்யப்ரபந்தங்கள் *த்ராவிட வேதம்* என்றும் *த்ரமிடோபநிஷத்* என்றும் போற்றப்படுகின்றன. ஸ்ரிய: பதியான ஸர்வேஶ்வரனுடைய ஸ்வரூபம், ரூபம், திருக்கல்யாணகுணங்கள், விபூதிகள், ஐஶ்வர்யம், திவ்யசேஷ்டிதங்கள், இவற்றுக்கு வாசகமான திருநாமங்கள் ஆகிய இவற்றின் நிரூபணமே ஶ்ருதியின் நோக்கமாகும். திவ்யப்ரபந்தங்களுக்கும் இதுவே நோக்கமாகும்.

ஸ்வாத$_3$யந்நிஹ ஸர்வேஷாம் த்ரய்யந்தார்த்த$_2$ம் ஸுது$_3$ர்க்$_3$ரஹம் |
ஸ்தோத்ரயாமாஸ யோகீ$_3$ந்த்$_3$ரஸ் தம் வந்தே$_3$ யாமுநாஹ்வயம் ||
(அறியவரிதான வேதாந்தார்த்தத்தை அனைவருக்கும் ரஸிக்கச் செய்துகொண்டு ஸ்தோத்ரம் செய்தருளிய யாமுநமுநியைத் துதிக்கிறேன்) என்று பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் தனியன் இருக்கும்படி. சது:ஶ்லோகீ, ஸ்தோத்ரரத்நம் ஆகிய ஸ்தோத்ர க்ரந்தங்களை அருளிச் செய்து ஸ்தோத்ர ப்ரஸ்தாநத்தை பிறப்பித்தருளிய பெருமையை உடையவர் இவர். இது ஸ்ரீகூரத்தாழ்வான் ஸ்ரீபராஶரபட்டர் ஸ்ரீவேதாந்தாசார்யர் ஸ்ரீமணவாளமாமுநிகள் முதலான நமதாசார்யர்களால் மேலும் வளர்ச்சியும் நல்வளமும் பெற்றுத் திகழ்ந்தது.

ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி
கவயோ யத்$_3$யந்யதீ$_3$யாந் கு$_3$ணாந்
அந்யத்ர த்வஸதோऽதி$_4$ரோப்ய
ப$_2$ணிதி: ? ஸா தர்ஹி வந்த்$_3$யா த்வயி |
ஸம்யக் ஸத்யகு$_3$ணாபி$_4$வர்ணநமதே$_2$ா
ப்$_3$ரூயு: ? கத$_2$ம் தாத்$_3$ருஶீ
வாக்$_3$ வாசஸ்பதிநாऽபி ஶக்யரசநா
த்வத்ஸத்$_3$கு$_3$ணார்ணோநிதெ$_4$ள ||

[ஸ்ரீஸ்தவம் - 3] [ஸ்தோத்ரம் என்று கவிகள் எதைச் சொல்கிறார்கள்? ஒருவனுடைய குணங்களை அவைகள் இல்லாத மற்றொருவனிடத்தில் ஏறிட்டுச் சொல்வதே (ஸ்தோத்ரம்) என்றால்

acharya.org

அதைப்போன்ற ஸ்தோத்ரம் உன் விஷயத்தில் முடியாது ; இருக்கிற குணங்களை நன்ருக வர்ணிப்பதே (ஸ்தோத்ரம்) என்ருல் உன்னுடைய திருக்கல்யாணகுணக்கடல் விஷயத்தில் ப்ருஹஸ்பதியாலும் அப்படிப்பட்ட ஸ்தோத்ரத்தை எப்படிச் செய்ய முடியும்?] என்று ஸ்ரீகூரத்தாழ்வான் அருளிச்செய்கிருர். * பூ$_4$தார்த்தே$_2$ கதமா ஸ்துதி : * (உண்மையாக உள்ள விஷயத்தில் ஸ்துதி எப்படி முடியும்?) என்றபடி. பின் ஸ்தோத்ரமாவது என்ன? அதையும் அவரே அடுத்த ஶ்லோகத்தில் -

யே வாசாம் மநஸாம் ச து$_3$ர்க்$_3$ரஹதயா க்$_2$யாதா கு$_3$ணா : தாவகா :
தாநேவ ப்ரதி ஸாம்பு$_3$ஜிஹ்வம்-உதி$_3$தா ஹை மாமிகா ப$_4$ாரதீ |
ஹாஸ்யம் தத் து ந மந்மஹே ந ஹி சகோர்யேகாऽகி$_2$லாம் சந்த்$_3$ரிகாம்
நாலம் பாதுமிதி ப்ரக்$_3$ருஹ்ய ரஸநாம்-ஆஸீத ஸத்யாம் த்ருஷி ||

(ஸ்ரீஸ்தவம் - 4) (பெரியபிராட்டியாரே! தேவரீருடைய எந்த திருக்கல்யாணகுணங்கள் வாக்குக்கும் மனஸ்ஸுக்கும் எட்டாதவை என்று ப்ரஸித்தியை பெற்றிருக்கின்றனவோ, அந்த திருக்கல்யாணகுணங்கள் விஷயமாகவே அடியேனுடைய வாக்கானது ரஸம் ஊறின நாக்குடன் கிளர்ந்து விட்டது! இப்படி ஏற்பட்டதை பரிஹாஸத்துக்கு விஷயமாக நினைக்க மாட்டோம். ஏனென்ருல் சகோர பறவையின் விடாய் உள்ள பேடையானது அத்தால் நிலவின் பனித்துளிகள் எல்லாவற்றையும் உட்கொள்ள முடியாது என்பதற்காக நாக்கை அடக்கிக் கொண்டு வெறுமனே இருக்காது அல்லவா?) என்று குறிப்பால் உணர்த்துகிருர். இத்தால் ஒருவன் தன்னுடைய புத்தி, ஶக்தி, ருசி இவற்றுக்கேற்ப குணவானிடம் காணப்படும் குணங்களை புகழ்ந்து பாடுவதே ஸ்துதி என்ருகிறது. ஸ்ரீஆளவந்தார் -

யத்$_3$வா ஶ்ரமாவதி$_4$ யத$_2$ாமதி வாப்யஶக்த :
ஸ்தௌம்யேவமேவ க$_2$லு தேபி ஸதா$_3$ ஸ்துவந்த : |
வேதா$_3$ஶ்சதுர்முக$_2$முக$_2$ாஶ்ச மஹார்ணவாந்த :
கோ மஜ்ஜதோரணுகுலாசலயோர்விஶேஷ : ||

(ஸ்தோத்ர ரத்நம் - 8) (அல்லது ஶக்தியற்ற நான் களைப்பு உண்டாகும் வரையிலாவது புத்திக்குத் தெரிந்த வரையிலாவது ஸ்தோத்ரம் செய்கிறேன் ; எப்போதும் ஸ்தோத்ரம் செய்யும் அந்த வேதங்களும் ப்ரஹ்மா முதலானவர்களும் இப்படியன்ருே ஸ்தோத்ரம் செய்கிருர்கள்! பெரிய கடலின் உள்ளே முழுகிப் போகிற சிறிய அணுவுக்கும் பெரிய குலபர்வதத்துக்கும் என்ன வ்யத்யாஸம்?) என்கிருர். ஸ்ரீபராஶரபட்டரும் ஸ்ரீகுணரத்நகோஶத்தில் (6) -

acharya.org

ஸ்தோதாரம் தமுஶந்தி தே$_3$வி! கவயோ
யோ விஸ்த்ருணீதே கு$_3$ணாந்
ஸ்தோதவ்யஸ்ய ததம்ஶ தே ஸ்துதிது$_4$ரா
மய்யேவ விஶ்ராம்யதி |
யஸ்மாத$_3$ஸ்மத$_3$மர்ஷணீயப$_2$ணிதி -
ஸ்வீகாரதஸ் தே கு$_3$ணா:
க்ஷாந்த்யௌத$_3$ார்யத$_3$யாத$_3$யோ ப$_4$க$_3$வதி!
ஸ்வாம் ப்ரஶ்நுவீரந் ப்ரத$_2$ாம் ||

என்று அருளிச்செய்துள்ளார்.

யதாமதி யதாஶக்தி பிராட்டியுடன் கூடிய எம்பெருமானுடைய வைபவங்களை வர்ணித்துப் பாடுவதே ஸ்துதியாகும். இத்தால் பகவான் ப்ரஸந்நனுகிருன்.

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் *ஸ்தவ்ய: ஸ்தவப்ரிய: * (ஸ்தோத்ரம் செய்யத் தக்கவன்; ஸ்துதியை விரும்புகிறவன்) என்னும் திருநாமங்கள் பகவானைக் குறித்து அநுஸந்திக்கப்படுகின்றன. வாஸ்தவமாக ஸ்தோத்ரம் செய்யப்படுவதற்கு யோக்யமானவன் எம்பெருமான் ஒருவனே! இவன் ஒருவனே இயற்கையாகவே எல்லா தோஷங்களுக்கு எதிர்த் தட்டாகவும், அநந்தகல்யாணகுணநிதியாகவும் விளங்குகிருன்! மேலும் ஸ்தோத்ரம் பண்ணு பவர்களுக்கு அவர்கள் விரும்பும் எல்லாப் பலன்களையும் கொடுக்க வல்லவனுகவும் அவன் ஒருவனே திகழ்கிருன்! *ஸர்வ லாப$_4$ாய கேஶவ: * என்றும், *ஸகல ப$_2$லப்ரதே$_3$ாஹி விஷ்ணு: * என்றும் மஹர்ஷிகள் அறுதியிட்டனர். விஷ்ணுபத்நி யான பிராட்டியும் ஸ்தவ்ய வஸ்துவாய் ஸ்தோதாக்களின் ஸகல அபேக்ஷிதங்களையும் பரிபூர்ண மாக நிறைவேற்றியருள வல்லவள். எம்பெருமானுடைய ஸம்பந்தத்தினுல் ஆசார்யர்களும் பாகவதோத்தமர்களும் ஸ்தவ்யராகிருர்கள்.

எம்பெருமானை ஸ்தோத்ரத்தினுலன்றி மற்ற உபாயங்களால் எளிதில் மகிழ்விக்க இயலாது. பூர்வாசார்யர்கள் அருளிச்செய்துள்ள ஸ்தோத்ர க்ரந்தங்கள் எம்பெருமானை ஸ்துதி செய்வதற்கு மட்டுமின்றி அவனுடைய குணுநுபவத்துக்கும் முக்ய ஸாதநமாய் அமைகின்றன. இந்த ஸ்தோத்ரங்களைக் கொண்டு அவனை ஸ்துதி செய்தால் அவன் மிகவும் ப்ரஸந்நனுகிருன்; நாம் விரும்பிய பலன்களைத் தந்தருளுகிருன். ஆகையால் நம் அனைவருக்குமே ஸ்தோத்ர க்ரந்தங்கள் உத்தேஶ்யமாகின்றன.

acharya.org

நம் ஸ்வாமியின் அமுதமொழிகள்

(தொகுத்தளிப்பவர் — Dr. P. B. ராமாநுஜன்
ஸ்வாமியின் ஜ்யேஷ்ட திருக்குமாரர்)

முன்னுரை :— 1979வது வருஷம் நம் ஶிஷ்யஸபையின் வெள்ளிவிழா ஆண்டாகும். இந்த வருஷத்தின் மற்றொரு சிறப்பம்ஶமாக, வித்வத்வரிஷ்டராயும் ஶமதமாதி குணநிதியாயும் எழுந்தருளியிருந்த நம் திருமாளிகை பெரியஸ்வாமி கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ வே ப்ரதிவாதி-பயங்கரம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் 101வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் 11-8-79 அன்று தொடங்கியது. அந்த நன்நாளில் ஸ்வாமியின் திருக்குமாரர்களாய் திருமாளிகையில் ஆசார்யபீடத்தை அலங்கரித்த வித்யாபூஷணம் ஸ்ரீ உ. வே. ப்ரதிவாதி-பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமியும், ஸ்ரீ உ வே ப்ரதிவாதி-பயங்கரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும் எழுந்தருளியிருந்து மஹோத்ஸவத்தை ஆரம்பித்து வைத்தார்கள். உபயவேதாந்த வித்வான்களான பல மஹநீயர்கள் எழுந்தருளியிருந்து உபந்யாஸங்களை நிகழ்த்தினர்கள்.

ஸ்ரீ உ வே மஹாவித்வான் ராமக்ருஷ்ணய்யங்கார் ஸ்வாமி பஞ்சஸம்ஸ்காரத்தின் முக்யத்வம், ஆசார்ய-ஶிஷ்ய-லக்ஷணங்கள், ஆசார்ய-நிஷ்டையின் ஏற்றம் முதலான விஷயங்களைப் பற்றி உபந்யஸித்தருளினர்.

ஸ்ரீ உ வே ப்ரதிவாதி-பயங்கரம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ஸ்ரீராமாயணத்தின் விஶேஷார்த்தங்கள் பலவற்றை ஸாதித்து, அதில் ஸாரதமமாகத் தேறும் பொருள் ஶபரியின் ஒப்புயர்வற்ற ஆசார்யநிஷ்டையே என்பதை விவரித்தருளினர்.

வித்யாபூஷணம் ஸ்ரீ உ வே ப்ரதிவாதி-பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி பல கடினமான ஸம்ப்ரதாய ஸாரார்த்தங்களை தமக்கே உரிய எளிய இனிய நடையில் ஸாதித்தருளினர். அன்று ஸ்வாமி ஸாதித்த அமுதமொழிகள் அனைவருக்கும் நித்யாநுஸந்தேயமாக விளங்க வேண்டியவையாக அமைந்திருந்தபடியால் அவற்றிலிருந்து சிலவற்றை (ஒலிப்பதிவு செய்த கேஸட்டைக் கேட்டு க்ரஹித்துக் கொண்டவரை) ஈண்டு விண்ணப்பிக்கிறேன்.

மங்களாஶாஸநமே பரமபுருஷார்த்தம் என்பது ஶாஸ்த்ர ஸம்ப்ரதாய ஸித்தமான உண்மையாகும். ஆசார்யன் ஶிஷ்யனுக்குச் செய்தருளும் உபதேஶத்துக்கு ப்ரயோஜநம் அவனை மங்களாஶாஸந பரனாக ஆக்குவதே என்பது நம்முடைய ஸித்தாந்தம். யாருக்கு மங்களங்களை விரும்புவது? என்றால் - பகவத் பாகவதாசார்ய மங்களாஶாஸந கைங்கர்யத்தையே நமக்கு பரம புருஷார்த்தமாய் நம் பூர்வர்கள் காட்டிக் கொடுத்தனர். நாம் அநவரதம் அநுஸந்திக்க வேண்டிய ஶ்லோகம் ஒன்று உண்டு. இதுதான் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் அருளிச்செய்த -

ப்ராமாணம் ச ப்ரமேயம் ச ப்ரமாதாரஶ்ச ஸாத்விகா: |
ஜயந்து க்ஷபிதாரிஷ்டம் ஸஹ ஸர்வத்ர ஸர்வதா ||

acharya.org

என்னும் ஶ்லோகமாகும். ப்ரமேயமாகிறவன் பரம்பொருளான ஸ்ரீமந்நாராயணன். பரதத்த்வ மான அவனை உள்ளபடி அறிவதற்கு ப்ரமாணமாக அமைந்தவை வேதமும் ஆழ்வார்களுடைய ஸ்ரீஸூக்திகளுமேயாம், ப்ரமாணங்களின் உண்மையான பொருளைப் பல திவ்ய க்ரந்தங்கள் மற்றும் உபதேஶங்கள் வாயிலாக தெளிவுபடுத்தி நாம் எம்பெருமானை அடைந்து உய்யும் வகையை காட்டித்தந்த பரம காருணிகர்களான நம் பூர்வாசார்யர்களே ப்ரமாதாக்களாவர்கள்.

பெரியபெருமாளை தொடக்கமாகவும் ஸ்வாமி எம்பெருமானாரை நடுநாயகமாகவும் ஸ்ரீமணவாள மாமுநிகளை ஈறாகவும் உடைய மிகவுயர்ந்த பூர்வாசார்ய பரம்பரை நம்முடையது. நம்மாழ்வாருக்கு மந்த்ரோபதேஶம் செய்தருளியவர் ஸ்ரீஸேனைமுதலியார். அவருக்கு மந்த்ரோபதேஶம் செய்தருளியவள் ஸ்ரீரங்கநாச்சியார். இங்கு பிராட்டியான ஒரு பெண்பிள்ளையிடம் மந்த்ர உபதேஶத்தைப் பெறுவதன் ஔசித்யத்தை சிலர் ஶங்கிப்பதுண்டு. ஆனால் ஸாக்ஷாத் பகவானுன தன் கொழுநனின் நியமநத்தால் செய்தருளியதால் பொருந்தும் என்று உணர வேண்டும். பிராட்டியின் மேன்மையைக் கொண்டே வடதேஶத்தில் நம் ஸம்ப்ரதாயத்தை ஸ்ரீஸம்ப்ரதாயம் என்று வ்யவஹரிப்பர்கள்.

ஸ்வாமி எம்பெருமானார் தமது பரம க்ருபையால் அநாதியான, பரம வைதிகமான இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை அசைக்க முடியாமல் நிலைநாட்டினார். இதுகொண்டே *எம்பெருமானார் தரிசனமென்றே இதற்கு நம்பெருமாள் பெயரிட்டு நாட்டி வைத்தார்* என்று ஸ்ரீமணவாளமாமுநிகள் அருளிச்செய்தார். த்வைதம், அத்வைதம் என்றால் எளிதில் புரிகிறதென்றும், ஆனால் விஶிஷ்டாத்வைதம் என்றால் என்னவென்பது எளிதில் புரிவதில்லை என்றும் பலர் சொல்கிறார்கள். நமது ஸித்தாந்தத்தின்படி சித், அசித், ஈஶ்வரன் என்று மூன்று தத்த்வங்கள். இவற்றை *தத்த்வத்ரயம்* என்று குறிப்பிடுகிறோம். இதில் சித், அசித் என்பவை சேதந, அசேதந தத்த்வங்கள். ஈஶ்வரன் இந்த சேதநாசேதந தத்த்வங்களிலிருந்து வேறுபட்டு விளங்குபவன். அவன் இவைகளைத் தனக்கு ஶரீரமாகக் கொண்டு தான் ஶரீரியாய் இருப்பவன். ஶரீரம் என்றால் என்ன?

> *யஸ்ய சேதநஸ்ய யத்$_3$த்$_3$ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்த்தே$_2$ நியந்தும், த$_4$ாரயதும் ச ஶக்யம், தச்சே$_2$ஷதைக ஸ்வரூபஞ்ச, தத் தஸ்ய ஶரீரம்* (ஸ்ரீபாஷ்யம் 2-1-4)
>
> [எந்த சேதநனுக்கு எந்த த்ரவ்யம் தான் இருக்கும் வரையில் அந்த சேதநனுடைய பயனுக்காக அவனால் நியமிக்கவும், தரிக்கவும் தக்கதாய் இருக்கிறதோ, அவனுக்கு ஶேஷமாய் இருப்பதையே இயல்பாகக் கொண்டதாகவும் இருக்கிறதோ, அந்த த்ரவ்யம் அந்த சேதநனுக்கு ஶரீரமாகும்]

என்று ஶரீர லக்ஷணத்தை நம் ஸ்வாமி எம்பெருமானார் அருளிச்செய்கிறார். சேதநாசேதநாத்-

acharya.org

மகமான ஜகத்துக்கும் பகவானுக்கும் உண்டான இந்த ஶரீர-ஶரீரி-பாவ-ஸம்பந்தமே விஶிஷ்-டாத்வைத ஸித்தாந்தத்தின் உயிர்நாடியான அர்த்தமாகும்.

பரமகாருணிகரான நம் ஸ்வாமி எம்பெருமானார் திருவடிகளைப் பற்றியவர்களுக்கு கிடைக்கும் பேறுகளைத் திருவரங்கத்தமுதனார் (32)

பொருந்தியதேசும் பொறையும்திறலும் புகழும்நல்ல
திருந்தியஞானமும் செல்வமும்சேரும்* செறுகலியால்
வருந்தியஞாலத்தைவண்மையினால்* வந்தெடுத்தளித்த
அருந்தவன்* எங்களிராமானுசனை யடைபவர்க்கே

என்று அருளிச்செய்கிறார். இதில் முக்யமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய ஜ்ஞானமாவது என்ன? நல்ல ஜ்ஞானமாவது என்ன? நல்ல திருந்திய ஜ்ஞானமாவது என்ன? லோகத்தில் லௌகிக வ்யவஹாரங்களுக்காகவும் வ்யாபாரங்களுக்காகவும் நாம் ஸம்பாதித்துக் கொள்வது ஜ்ஞானமாகாது. ஶாஸ்த்ர ஜ்ஞானமே உண்மையான ஜ்ஞானமாகும். ஒரு ஸதாசார்யனை அநுவர்த்தித்து அவனுடைய அநுக்ரஹத்தால் ஸம்பாதிக்கப்படும் ரஹஸ்யத்ரய ஜ்ஞானமே நல்ல திருந்திய ஜ்ஞானமாகும். இந்த நல்ல திருந்திய ஜ்ஞானமே எம்பெருமானார் கடாக்ஷத்தால் நாம் உஜ்ஜீவிக்க வழிவகுக்கும். ஸதாசார்ய லக்ஷணத்தை ஸ்ரீமணவாளமாமுநிகள் உபதேசரத்தினமாலையில் (61) -

ஞானமனுட்டானமிவை நன்றாகவேயுடைய
னான* குருவையடைந்தக்கால்* மாநிலத்தீர்
தேனார்கமலத் திருமாமகள்கொழுநன்*
தானே வைகுந்தம்தரும்

என்று அருளிச்செய்கிறார்.

நல்ல திருந்திய ஜ்ஞானத்தையும் ஶமதமாதி ஆத்மகுணங்களுடன் கூடிய நல்ல அநுஷ்டான ஸம்பத்தையும் பெற்ற நல்லாசிரியனே ஸதாசார்யன். இத்தகைய ஆசார்யனை ஆஶ்ரயித்து கண்ணன் கீதையில் பணித்த -

தத்$_3$வித்$_3$தி$_4$ ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா |
உபதே$_3$க்ஷ்யந்தி தே ஜ்ஞானம் ஜ்ஞாநிந: தத்த்வத$_3$ர்ஶிந: ||
(கீதை 4- 34)[நான் கூறிய அந்த ஆத்மஜ்ஞானத்தைப் பற்றி ஜ்ஞாநிகளை நமஸ்கரித்தும்

acharya.org

அவர்களுக்குக் கைங்கர்யம் புரிந்தும் சூழ்ந்து நின்று நன்றாகக் கேள்விகள் கேட்டும் நீ அறிந்து கொள்வாயக! ஆத்மஸ்வரூபத்தை ஸாக்ஷாத்கரித்த அந்த ஜ்ஞாநிகள் (உன்னால் ஸேவிக்கப்பட்டவர்களாய் உண்மையை உணர்வதற்காகக் கேள்வி கேட்கிற உனது நிலை வைத் தெரிந்து கொண்டு உகந்து) உனக்கு அந்த ஆத்மஜ்ஞாநத்தை உபதேசிப்பர்கள்] என்கிறபடியே அவருடைய திருவடிகளிலே பணிவிடைகள் செய்து நல்ல திருந்திய ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும். ஆசார்ய கைங்கர்யமே நமக்கு உத்தேச்யம். இதுவே நமக்கு ஸகலவித மங்களங்களையும தலைசிறந்த சேமநல்வீடான பெரும்பேற்றையும் தரும்.

இன்று 101வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் கண்டருளும் அடியோங்களுடைய தகப்பனாரும் ஆசார்யருமான ஸ்ரீ உ வே க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமி மஹாவித்வானாகவும் சமதமாதி குணங்களுக்கு எடுத்துக்காட்டாகவும் ஸதாசார்யனாகவும் திகழ்ந்தவர். தலைசிறந்த வித்வானாக விளங்கினாலும் உலகில் வித்வான்களிடையே காணப்படும் படாடோபமோ, புகழ்ச்சியை விரும்பும் தன்மையோ அவரை சிறிதும் அண்டவில்லை. அவர் ஆசார்யலக்ஷணபூர்ணராகவும் பரம ஸௌலப்யத்தை உடையவராகவும் எழுந்தருளியிருந்தார். திருவல்லிக்கேணியில் கீதாசார்யனான ஸ்ரீபார்த்தஸாரதியின் திருவடிவாரத்தில் கொண்டாடப்படும் இந்த வைபவம் அவனுடைய க்ருபாகடாக்ஷத்தால் நிர்விக்நமாக நிறைவு பெறவேண்டும் என்றும், மேலும் நம் சிஷ்ய ஸபை அந்த ஸதாசார்யனின் அநுக்ரஹத்தால் சீரும் சிறப்புமாய் வளர்ந்து விளங்க வேண்டும் என்றும் ஆசாஸிக்கிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

acharya.org

ஸ்ரீ உ.வே. ப்ர. ப. வித்யாபூஷணம் ஸ்வாமி தம் திருத்தம்பியாருடன்

acharya.org

நல்ல பதத்தால் மனை வாழ்ந்த கொண்ட பெண்டிர் மக்களுடன் நம் ஸ்ரீ உ.வே. ப்ர. ப. வித்யாபூஷணம் ஸ்வாமி

acharya.org

ஸ்ரீ சிந்தனைக்கினியானுடன் குமுதவல்லி நாச்சியார்
ஸமேத திருமங்கையாழ்வார் - திருநகரி

acharya.org

ப்ர.ப.அண்ணா (திருநாங்கூர்)

acharya.org